# வீறுகவியரசர்
# முடியரசன் கவிதைகள்

## பொருண்மை வகைத் தொகுப்பு
## (தமிழம்)

தொகுப்பாசிரியர்
பாரி முடியரசன்

# உள்ளுறை

பக்கம்


பதிப்புரை
முன்னுரை
தமிழும்
1. இயற்கைத் தாய்
2. மொழியுணர்ச்சி
3. அவளும் நானும்
4. துயில் கலைந்தது
5. தமிழ்தான் என்பேர்
6. துறைதோறும் தமிழே
7. உறுதி கொள்வீர்
8. எந்நாளோ?
9. காவலும் களவும்
10. அமிழ்தம் கசக்குமோ?
11. உயிர் வெல்லமோ?
12. தமிழில் பாடு!
13. தயக்கம் ஏன்?
14. வாய் நோகுமோ?
15. சங்க இலக்கியம்
16. விந்தையடா விந்தை
17. எங்கள் நாடு
18. மறவர் நாடு
19. தமிழகம் தாழ்ந்ததேன்?
20. தமிழர் வாழ்வு!
21. முன்னையர் வாழ்வு
22. தாயகம் காப்போம்
23. வாழ்க தாயகம்
24. நாட்டுப்பண்
25. நாட்டு வாழ்த்து
26. ஆடுவோம் பாடுவோம்
27. வெண்ணிலவே கண்வளராய்!
28. எண்ணம்
29. யாதும் ஊரே
30. தமிழ் வாழ்வு
31. திராவிட நாட்டின் வளம்
32. பாரதியார்
33. பொங்கிக் கிளர்ந்தது வீரம்
34. காட்டிக் கொடுக்கலாமோ?
35. ஒற்றுமையா? ஒருமைப்பாடா?
36. நாளைய நாடு
37. எழுதுங்கள் புதுக்கவிதை
38. நெஞ்சத் துடிப்பு
39. ஓதிக்கெட்டவன்
40. ஈழம் சிவந்தது
41. தென்னாட்டுக் கலைகள்
42. நமது வீரம்
43. ஊர்வலக் காட்சி
44. கம்ப நாட்டில்
45. பாவேந்தர் வழங்கிய கொடை
46. பாரதி பொழிந்த மழை
47. புறமும் அகமும்
48. ஏனோ?
49. தமிழினத்தின் தனித்தலைவர்
50. தன்மானப் புத்தகத்தை மூடமாட்டோம்
51. புத்துலகச் சிற்பி
52. இனத் தலைவர்
53. தட்டி எழுப்பினார்
54. சங்கே முழங்கு
55. ஒன்றா? இரண்டா?
56. தமிழ்காத்த தலைவர்
57. எழுத்தும் பேச்சும்
58. தாய்மொழிக் காவலர்

59. திரும்பிப் பார்
60. தமிழர் திருநாள்
61. தமிழின வரலாறு
62. இன்றைய நாடு
63. தமிழக அரசு
64. ஒருமைப் பாடு
65. ஒற்றுமை உருப்படுமா?
66. ஒற்றுமையும் ஒருமையும்
67. எங்கே தமிழன்?
68. தமிழனா? இந்தியனா?
69. கண்ணீர்ப் பொ.ங்கல்
70. தீப்பொறி
71. நீர்ப் பானை ஓட்டையானால்
72. மூன்று தமிழ் தோன்றியது
73. தமிழ் காப்போம்
74. கனன்றெழுக!
75. உயிர் கொடுப்போம்
76. சாவுக்கும் அஞ்சோம்
77. வாகை கொள்வோம்
78. இனி விடோம்
79. மாவீரர் பலருண்டு
80. தமிழோடிணைந்தாய்!
81. தமிழே வெல்லும்
82. செல்லடி செல்லடி இந்திப்பெண்ணே
83. ஒன்றே நினைப்பீர்!
84. பிரிந்து போ
85. சட்டம் செய்க
86. பொய்த்த வாய்மொழி போதும்
87. விடை கொடு தாயே
88. முழங்கட்டும் போர்ப்பறை
89. வாளேந்தி வா மகனே
90. போர் தொடுப்பாய்
91. போருக்கு வா
92. வாகை சூடு
93. வெறி வேண்டும்
94. அந்த நாள் வந்தே தீரும்
95. வாழ்வா சாவா?
96. தாய் மொழிப் பற்று
97. உறங்குந் தமிழ் மகன்
98. தமிழர் போக்கு
99. என்று தணியும்...?
100. எக்காலம்?
101. தமிழனா நீ?
102. சமயத்தில் நட்ட தமிழ்
103. கோவிலுக்குள் கொடுமை
104. திரும்பி விட்டேன்
105. நகைதரு செயல்
106. எது கவிதை?
107. ஆணா? பெண்ணா?
108. ஐக்கூ அடிமை
109. அதன் பெயர் என்ன?
110. கற்றோரை வேண்டுகிறேன்
111. பட்டஞ் சூட்டுக
112. தமிழ்ச் சான்றோரைப் போற்றுக!
113. வாழ்க முச்சங்கம்
114. தமிழின் செம்மை
115. தமிழில் மறுமலர்ச்சி
116. 'பூங்கொடி' காப்பியத்திலிருந்து சிலவரிகள்
117. 'ஊன்றுகோல்' காப்பியத்திலிருந்து சிலவரிகள்
118. 'இளம்பெருவழுதி' காப்பியத்திலிருந்து சிலவரிகள்
**வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை**
**வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு**
**பாரி முடியரசன் பற்றி**

# தமிழம்

[வீறுகவியரசர் முடியரசனார் 'தமிழ் மொழி—இனம்—நாடு' பற்றிப் பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. இயற்கைத் தாய்
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

**('இயற்கை' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 11 எண்சீர் விருத்தங்களிலிருந்து, 2 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கு இடம் பெற்றுள்ளன)**

தென்றலெனும் தொட்டிலிலே எனைக்கிடத்தித்
  தேன்நுகர மலர்கள் தோறும்
சென்றிருந்து தமிழ்பாடும் வண்டொலியால்
  செவிகுளிரத் தாலே தாலோ
என்றினிய தாலாட்டித் துயிற்றிடுவாள்;
  எழுந்தழுதால் ஆறு காட்டிக்
குன்றிருந்து வீழருவி, கடல்காட்டிக்
  கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி. 1

படித்திடுக எனச்சொல்லிக் குயிலினங்கள்
  பசுங்கிளிகள் இவற்றைத் தந்தாள்;
பிடித்தவற்றைப் பார்க்கையிலோர் அறங்கண்டேன்;
  'பேசுமொழி சொந்த மேயாம்
அடுத்தவற்றின் குரலல்ல நீயுமுன்றன்
  அனைமொழியால் பேசு! பாடு!!
தடுப்பவர்யார்?' என்றனஅவ் வேடுகள்தாம்
  தாயேதாய் மொழியே வாழ்க! 2

## 2. மொழியுணர்ச்சி
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர்விருத்தம்

இலைபொறுக்கும் நாயுடன்தன் திறமை காட்டி
  எச்சிலுணும் மனிதனெனும் உருவங் கண்டும்,
குலைநடுங்கப் பெண்ணினத்தை அடிமை யாக்கும்

கொடுமையினைக் கண்மூடிப் பழக்கந் தன்னை
நிலைநிறுத்தப் பாடுபடும் நிலைமை கண்டும்,
நேர்மைபகுத் துணரறிவு கல்வி இல்லா
நிலையிருக்கக் கண்டிருந்தும் உணர்ச்சி காணா
நெஞ்சத்தார் மிக்குவரும் நாளில் இங்கு 1

மொழியுணர்ச்சி பாடுகென்றீர்! உணர்ச்சி கூர்ந்து
மொழியுங்கால் பிழைபொறுத்துச் சிந்தித் தாய்ந்தால்
பழியுணர்ச்சி தோன்றாது; வருவோன் செல்வோன்
பழிக்கின்றான் நம்மொழியை செவிம டுத்தும்
எழுமுணர்ச்சி கண்டோமா? வடக்கு வேந்தன்
இழித்துரைத்தான் தமிழரசை எனுஞ்சொற் கேட்டு
முழுமூச்சோ டெதிர்த்தானே அவன்கு லத்து
முளைத்துவரும் காளைகள்நாம் வெட்கம் வெட்கம் 2

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்று விட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணு கின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி? ஆட்சி மன்றில்
பாங்குடன்வீற் றிருக்குமொழி தமிழே என்று
பகர்நாளில் மொழியுணர்ச்சி தானே தோன்றும்;
ஈங்கதற்கா என்செய்யப் போகின் றீர்நீர்?
இளைஞரினி விழித்தெழுந்தால் விடிவு தோன்றும் 3

ஆந்திரமும் கன்னடமும் சென்று வந்தேன்
அங்கெல்லாம் மொழியுணர்ச்சி விளங்கக் கண்டேன்
மாந்தரெனத் திரிகின்றோம் உணர்ச்சி யற்று,
வந்தவர்க்கும் போனவர்க்கும் பல்லைக் காட்டிச்
சாந்துணையும் காக்கைபிடித் தலைந்து சென்று,
சாப்பாடே குறிக்கோளாய் மொழியைத் தாழ்த்தி
வாழ்ந்திருக்க நினைக்கின்றோம்; படையெ டுத்து
வந்தமொழி வாழவழி செய்து தந்தோம் 4

பிறமொழியை வெறுக்கின்றேன் என்று சொல்லிப்
பிழையாகக் கருதாதீர்! தமிழை யிங்கு
மறுவறநன் குணர்ந்ததற்பின் பயில்க என்பேன்;
மனைவியைமற் றொருவன்பால் அடகு வைத்துத்
துறவறமேற் கொளலாமோ? தாய்த வித்துத்
துடித்திருக்க அறஞ்செய்ய முனைதல் நன்றோ?
கறவையிடம் பால்கறந்து கன்றுக் கின்றிக்
கதறிவிழக் கடவுளென்று சிந்தல் நன்றோ? 5

மறுமலர்ச்சி எனும்பேரால் தமிழின் பண்பை
மாய்க்கின்றோம்; மொழியிருக்கப் 'பாஷை' என்போம்,
பெறுமகிழ்ச்சி 'சந்தோஷம்' ஆகும்; வேட்டி
'வேஷ்டி' எனப் பெயர்மாறும்; பதற்றம் என்னோம்
மறுமொழிபோல் பதஷ்டமெனக் குதிப்போம்; தண்ணீர்
ஜலமாகும்; மறைக்காடு 'வேதா ரண்யப்'
பிறமொழியாய் மாறிவிடும்; மொழியு ணர்ச்சி
பிழைத்திருக்க இடமுண்டோ? புதைத்து விட்டோம் 6

வணக்கமெனச் சொல்பவரைக் கட்சி சார்த்தி
வாட்டுகிறோம்; "தாய்மொழியைப் புதைத்து விட்டுப்
பிணக்கல்லில் வரவேற்பு நல்கல் வேண்டேன்
பிறமொழியின் அடிமைகளே" என்று சொன்ன
குணக்குன்றாம் நம்காந்தி எந்தக் கட்சி?
குறிக்கோளா வங்கமொழி வளர்ப்பான் வேண்டிப்
பிணக்கின்றிப் பலநூல்கள் தந்த தாகூர்
பேணினரே மொழியுணர்ச்சி எந்தக் கட்சி? 7

தமிழ்மொழியை உயர்தனிச்செம் மொழியாம் என்று
தகுமுறையில் ஆராய்ந்து முடிவு சொன்ன
தமிழ்மகனார் பரிதிமாற் கலைஞன் என்று
தமிழ்மொழியிற் பெயர்கொண்டார் எந்தக் கட்சி?

அமுதமெனத் தாய்மொழியைப் போற்றும் நாடு
வீழ்ந்ததில்லை அதைத்தூற்றி வாழ்ந்த நாடும்
தமதறிவிற் கண்டதில்லை என்று ரைத்த
தமிழாசான் முத்துசிவன் எந்தக் கட்சி? 8

மணவினையில் தமிழுண்டா? பயின்றார் தம்முள்
வாய்ப்பேச்சில் தமிழுண்டா? மாண்ட பின்னர்
பிணவினையில் தமிழுண்டா? ஆவ ணத்தில்
பிழையோடு தமிழுண்டு; கோவில் சென்றால்
கணகணவென் றொலியுண்டு; தமிழைக் கேட்கக்
கடவுளரும் கூசிடுவர்; அந்தோ! அந்தோ!
அணுவளவும் மொழியுணர்ச்சி இல்லா நாட்டில்
ஆத்திகரே இறையுணர்ச்சி வளர்வ தெங்கே? 9

உடுக்கின்றார் உண்கின்றார் உயர்வுங் கொள்வார்
ஒப்பற்ற தமிழ்மொழியால்; நன்றி இன்றிக்
கெடுக்கின்றார் அதன்வளர்ச்சி நேரில் சில்லோர்;
கேண்மையொடு வளர்ந்திடுவோம் என்றுசில்லோர்
கொடுக்கின்றார் நஞ்சுதனைக் கூசா திந்தக்
கொடுமைகளை நீக்கிடவே ஆவி தானும்
விடுக்கின்றோம் தாய்மொழிக்கே என்று சொல்லி
வீறுற்று நிமிர்ந்தெழுவீர் தமிழ்நாட் டீரே! 10

தமிழ்காக்கப் போர்செய்ய உணர்வு வேண்டும்
தமிழ்கொன்று வாழ்கின்ற கயமை வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்யப் புலிகள் வேண்டும்
தடுமாறி ஓடிவிடும் எலிகள் வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்யச் சிங்கம் வேண்டும்
தாளமிடும் ஓலமிடும் நரிகள் வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்ய மானம் வேண்டும்
தாலமுத்து நடராசன் துணிவு வேண்டும் 11

## 3. அவளும் நானும்
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

பொங்கிவரும் நிலவொளியில் மலர்ந்து நிற்கும்
பூத்தோய்ந்து வருதென்றல் உடலை நீவ
சங்கொளிதோய் மாடத்துத் தங்கி இன்பம்
தருகுடும்ப விளக்கெடுத்துச் சுவைத்தி ருந்தேன்;
மங்கையவள் என்குடும்ப விளக்காம் நல்ல
மனைவிவந்து 'யார்உரைத்த திந்நூல்?' என்றாள்
எங்கவிபா ரதிதாசன் என்றேன்; 'அத்தான்!
எனக்கவரை ஒருசிறிதும் பிடிக்கா' தென்றாள் 1

உயர்கவிஞன் உணர்ச்சிமிக்கான் புரட்சிப் பாடல்
உரைக்கின்றான் தமிழமிழ்து படைத்துக் காக்கும்
செயலினையே புரிகின்றான் இருந்தும் ஏனோ?
வெறுக்கின்றாய்? செவ்விதழாய்! என்றேன்; அன்னாள்
'மயல்புரியும் மங்கைதந்த இன்பம் என்றன்
மாதமிழுக் கீடில்லை என்று சொன்னால்
வயிறெரிய மாட்டாதோ? பெண்கள் கூட்டம்
வாழ்த்திடுமோ? விட்டுவிடும் கவிஞர் பேச்சை' 2

என்றுரைத்தாள்; பெண்மயிலே! தமிழில் ஊறும்
இன்பநிலை கண்டவர்கள் இந்த ஒன்றே
நன்றென்பர்; நான்கூட அப்ப டித்தான்
நடையழகி! நானுன்னை மணந்து கொண்ட
அன்றுன்பால் அழகிளமை நிறையக் கண்டேன்
ஆண்பிள்ளை ஒன்றுபெற்று விட்ட பின்னர்
இன்றுளதோ அவ்விளமை? ஆத லாலுன்

இன்பத்தும் சிறுகுறைவு காணல் உண்மை 3

மனிதரினம் முதன்முதலில் பேசக் கற்ற
மாண்புயர்செந் தமிழணங்கோ என்றால், இன்பம்
கனிதெலுங்கு மலையாளம் துளுவம் இன்னும்
கன்னடமாம் எனுமக்கள் நான்கு பெற்றும்
தனியிளமை குன்றவிலை தளர்வும் இல்லை
தலைச்சிந்தா மணிசிலம்பு மேக லைப்பூண்
நனியழகு பொலிவுபெற மனத்தை ஈர்க்க
நடக்கின்றாள் சிரிக்கின்றாள் அந்த நங்கை 4

ஆதலினால் தமிழின்பம் உயர்ந்த தென்றார்
அதற்கவரை வெறுத்துவிடல் அழகோ! என்றன்
மாதரசே எனவுரைத்தேன், 'போங்க ளத்தான்
மறைமொழியால் கேலிஉரைக் கின்றீர்!' என்றாள்;
காதலியே கேலியில்லை தமிழ்சு வைத்தால்
கவலைஎலாம் பறக்குதடி! தளர்ச்சி நோயும்
ஏதடி?என் இன்னமுதே! என்றன் உள்ளம்
இன்பத்துள் மூழ்குதடி! என்று சொன்னேன்; 5

'இலக்கணமாம் உலைக்கூடத் திருத்தி விட்டுத்
தனித்தமிழாம் இன்மொழியாம் என்று சொல்வீர்
கலைச்சங்க நூலென்பீர்! இரும்பாற் செய்த
கடலைகளே அவையெல்லாம்; தமிழை இந்த
நிலைக்காக்கி விட்டீரிங் கெப்ப டித்தான்
நிலைத்திடுமோ உமதுதமிழ்?' என்று கேட்டுக்
கலக்கிவிட்டாள் என்மனைவி; அன்புப் பேதாய்!
கண்டபடி உளறிவிட்டாய்! ஒன்று கேட்பாய்! 6

வயலுக்கு வரப்பொன்றும் வேண்டா மென்றால்
வளக்கரைகள் ஆற்றுக்கு வேண்டா மென்றால்
இயல்மொழிக்கும் இலக்கணமே வேண்டாம் பெண்ணே!
இயலறிவும் மொழியறிவும் இல்லார் சொல்லும்
மயல்உரையை நம்பாதே! மொழியைக் காக்கும்
வரம்பிலையேல் எம்மொழியும் அழிந்து போகும்
கயல்விழியே! சங்கத்து நூல்கள் எல்லாம்
கண்டதுபோல் வல்லிரும்புக் கடலை என்றாய்! 7

புரைபட்டுப் போகுதடி என்றன் உள்ளம்
பொல்லாத சொல்லினைத்தான் சொல்லி விட்டாய்!
நரைபட்டுப் பல்லிழந்தோன் முறுக்குத் தின்றால்
நலமென்றா சொல்லிடுவான்? இரும்பாம் என்பான்;
குறைபட்ட அரைகுறைகள் உணரும் ஆற்றல்
இன்மையினால் கூறுவதைக் கேட்டு விட்டு
நிறைவுற்ற புலவோரைச் சங்க நூலை
நிறுத்துரைக்கும் இலக்கணத்தைப் பழித்தல் நன்றோ? 8

'வானொலியில் நேற்றொருவர் பேசக் கேட்டேன்
வந்தசில ஐயங்கள் நும்பால் சொன்னேன்
தேனொழுகும் மொழிபுகல்வீர் என்றி ருந்தேன்
திட்டுகின்றீர் மன்னியுங்கள் அத்தான்!' என்றாள்;
நானெதுவும் திட்டவிலை, தமிழால் வாழ்வோர்
நன்றிகொன்று திரிவதைத்தான் ஒப்ப வில்லை;
ஏனொதுக்கம்? இப்படிவா! எனக்கை பற்றி,
எழுகின்ற ஐயங்கள் புகல்க என்றேன் 9

'கேட்கின்றேன் என்மீது சினங்கொள் ளாதீர்?
கிளர்மூச்சும் உடல்பொருளும் தமிழே, வாழும்
நாட்பொழுதும் தமிழ்மொழிக்கே' என்று சொல்வீர்?
நன்றுநன்று; நாம்மணந்த திருநாள் தன்னில்
கேட்கவில்லை தமிழ்ஒலியே எதையோ கேட்டோம்
கிடக்கட்டும் நாம்வணங்கும் கோவி லுள்ளே
கேட்கிறதா அவ்வொலிதான்? பிள்ளை பெற்றோம்
கிறுக்கரைப்போல் பிறமொழியில் பெயரும் வைத்தோம் 10

இந்நிலைதான் போகட்டும் இந்த நாட்டில்
எங்கிருந்தோ வந்தமொழி நம்மை ஆளல்
நன்னிலைஎன் றெண்ணிவிட்டோம் உணர்வும் அற்றோம்
நலம்பெறுமா உருப்படுமா தமிழ்தான்?' என்றாள்;
என்னுளத்தே சுருக்கென்று தைத்த(து) ஆம்ஆம்
எழுச்சியுரை முழக்குகிறோம் செயலிற் காட்ட
முன்வருதல் சிறிதுமிலை அந்தோ! என்று
முணுமுணுத்தேன் பேசவில்லை வெட்கம்! வெட்கம்! 11

கொஞ்சுமொழி வஞ்சி! எனைத் திருத்தி விட்டாய்
கூறுவதைச் செயலுக்குக் கொணர்வேன்; நம்பால்
தஞ்சமென வந்தவரின் சூழ்ச்சி யாலே
தமிழ்வழங்காக் கோவிலுள்ளே தலையைக் காட்டேன்
எஞ்சியுள குழந்தைக்குத் தமிழ்ப்பேர் வைப்பேன்
இப்படியே என்வீட்டைத் தமிழ்வீ டாக்க
வஞ்சினமும் கொள்கின்றேன் என்று சொன்னேன்,
வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்; ஏன்சி ரித்தாய்? 12

என்றேன்நான்; 'கோவிலுக்குப் போகா விட்டால்
இனியதமிழ் எழுச்சிபெற்று விடுமா என்ன?
நன்றத்தான்! தமிழ்நாடும் கோவில் மன்றும்
நாதியற்ற சொத்தா?உம் சொந்த மன்றோ?
வென்றந்த உரிமைபெற வீரம் இல்லை?
ஏனத்தான் வீண்பேச்சு? போதும் போதும்!'
என்றுரைத்தாள்; தோழர்களே! உம்பாற் சொன்னேன்
என்செய்யப் போகின்றீர்? ஆய்ந்து சொல்லும்! 13

## 4. துயில் கலைந்தது

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

பாண்டியர்க் குரித்தெனப் பாடும் பெருமை
பூண்டிடும் நல்ல பூம்புனல் வையைக்
கரைமிசை அமர்ந்தேன், கற்றவர் இருவர்
உரைபல நிகழ்த்தினர் உறுபயன் தருமெனச்
செவிகொடுத் திருந்தேன்; சிவநெறிச் செல்வர்
நவையறு தமிழ்நயம் நவிலத் தொடங்கினர்;
"ஓதிய மொழிகள் பலவுளும் உயர்ந்திடும்
ஆதி சிவன்தரும் அருமைத் தமிழை
ஏட்டில் எழுதி எரிதனில் இட்டோம்
பாட்டின் ஓலை பசுமையோ டிருந்தது;
விரைபுனல் ஆற்றில் விடுத்தனம் அதனை;
கரையவர் வியந்திடத் திரைபிளந் தெதிர்த்து
நீந்தும் மீனென நீள்கரை சேர்ந்தது;
வேந்தனும் கண்டனன்; விளைபுகழ்த் தமிழின்
பெருமையை விளக்கும் பெற்றியன் றோ?"என
"அருமை! அருமை!" என்றனர் அருகர்;
"நீவிர் புகன்ற நெருப்பிலும் நீரிலும்
பாவுடன் தமிழைப் பாங்குடன் எழுதி
இட்டோம் நாங்களும் எரிந்தன அழிந்தன!
சிட்டரே தமிழின் சிறுமையைப் பாரீர்!"
சமணர் இங்ஙனம் சாற்றினர்; "உங்கள்
சமயச் சிறுமையைச் சாற்றுவததுவே
தமிழின் குறைவெனல் சரியிலை" எனமன
அமைதி குலைந்திட அறைந்தனர் சைவர்;
"இருப்பினும் அழிந்தவை இன்தமிழ்ப் பாட்டே
நட்டமும் நமக்"கென நவின்றனர் சமணர்;
"ஆமாம் உண்மை அறிந்திலோம் முன்னாள்
சமயப் போரிற் சாய்த்தனம் பலநூல்
கட்சி சமயம் கடந்தது தாய்மொழி

எச்சார் பினர்க்கும் இருந்திடத் தகுவது
மொழியுணர் வொன்றே, முன்னுதல் வேண்டும்''
என்றனர்; மற்றவர் ''இவ்வுணர் வந்நாள்
ஒன்றிடின் உயரிய நூலெலாம் நிலைக்கும்
கூத்தும் இசையும் கூறிய நூல்கள்
வேத்தவை விரும்பிட விறல்படப் பாடிய
கருவூ லங்கள் எத்தனை காண்கிலேம்!
எங்கே எங்கே எம்முடைச் செல்வம்?
இனவுணர் வின்றி இடையில் வந்தவை
மனமதில் நிலைத்தல் மாண்பிலை'' என்றனர்;
பள்ளி எழுச்சி பாடினள் பாவை
துள்ளி எழுந்தேன் துயிலுங் கலைந்ததே!

## 5. தமிழ்தான் என்பேர்

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

தேனினும் இனிய என்றன்
    தெளிதமிழ் தாழ்ந்த தேனோ?
மீன்புலி வில்லால் காத்த
    வேந்தர்தம் மரபில் வந்தோர்
ஊனின்நல் உயிரின் மானம்
    உயர்வெனுங் குறிக்கோள் கொண்டோர்
ஏனினும் ஊமை போல
    இருக்கின்றார் என்ற எண்ணம் 1

உள்ளத்தைக் கொள்ளை கொள்ள
    உடலினை நீவி இன்ப
வெள்ளத்தில் தென்றல் தள்ளி
    மெல்லெனச் செல்லத் திங்கள்
கள்ளனை நிகர்த்து மேகக்
    காவினுள் நுழைந்து செல்ல
நள்ளிராப் போதில் தூக்கம்
    நண்ணிடக் கனவிற் சென்றேன் 2

சென்றஎன் முன்ஓர் நங்கை
    செயல்மறந் தழுதல் கண்டு
கன்றின முகத்தாய்! ஏனோ
    கலங்கிய விழியோ டிங்கே
நின்றிடு கின்றாய்? அம்மா!
    நிலைஎனக் குரைப்பாய் நீயார்?
என்றலும் அவளும் ஒப்பி
    இயம்பினள் கண்ணீர் வார 3

''வேங்கடம் குமரி நாப்பண்
    வெற்றியின் கொடிப றக்க
யாங்கணும் பகையே யின்றி
    யான்அர சோச்சி வந்தேன்
தீங்கென எவருஞ் செய்யின்
    தீயென வெகுண்டெ ழுந்து
பாங்குடன் வேந்தர் காக்கப்
    புலவர்கள் பாட வாழ்ந்தேன் 4

மலைகடல் ஆறு வானம்
    மாலையில் கதிரோன் காட்சி
அலைவுறும் மேகம் காதல்
    அகப்பொருள் அஞ்சா வீரம்
கலைமதி என்னும் இன்ன
    காசினி இயற்கை எல்லாம்
நிலைபுகழ்ப் பாட லாக்கி
    நின்றடி பணிய வாழ்ந்தேன் 5

இவ்வணம் வாழ்ந்த என்னை
    ஏளனப் பொருளா வைத்தார்
உய்வகை உண்டோ என்ற
    நினைவெனை உறுத்த லாலே
செய்வகை யின்றிக் கண்ணீர்
    சிந்தினேன் தமிழ்தான் என்பேர்
வெவ்வினை மாக்கள் என்ன
    விளைப்பரோ அறியேன்'' என்றாள் 6

''அரசியல் மன்றில் ஏற,
    ஆண்டவன் திருமுன் நிற்க
உரிமையோ சற்று மில்லேன்
    உணர்வொரு சிறிது மின்றி
வருபவள் தனக்கே வாழ்வு
    வழங்கினர் என்றன் மக்கள்
எரிஎனக் குமுற நெஞ்சம்
    ஏங்கினேன்'' என்றாள் அன்னை 7

## 6. துறைதோறும் தமிழே காண்பீர்!

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

பொறுப்பற்றுக் கிடந்தார், முன்னாள்
    புகுந்தபுன் மொழிகட் கெல்லாம்
விருப்புற்றுத் தாழ்ந்து நின்று
    வேலையில் அமர்தல் ஒன்றே
குறிக்கொண்டு வாழ்ந்தார், தாய்க்குக்
    கொடுமைகள் செய்து வந்தார்,
வெறுப்புற்று நின்றா ரெல்லாம்
    விழைந்தனர் தமிழை இந்நாள் 1

தாய்மொழிப் பற்று நெஞ்சில்
    தளிர்த்ததா என்றால் இல்லை
ஆய்முறை அறிஞ ரெல்லாம்
    அன்புடன் அறைந்த நாளில்
வாய்புகாச் சொல்லால் வைதே
    வயிற்றினை வளர்த்தார்; அந்தத்
தூயவர் முதலில் நின்று
    தொழுதகை காட்டு கின்றார் 2

ஆட்சியில் தமிழாம் என்றே
    அரசினர் ஒருசொல் சொன்னார்;
காட்சியைக் 'காஷி' என்னும்
    கயவரும் தொழுது நின்றார்;
மாட்சிமை என்று சொல்லி
    மயங்கிடேல் தமிழ நாட்டீர்!
தோட்சுமை இறங்க வில்லை
    தொழுதகை அனைத்தும் நன்றோ? 3

அரியணை தமிழுக் கென்றே
    அரசினர் புகன்றா ரேனும்
புரிமொழி என்று சொல்லிப்
    பிறமொழி புகுத்தல் காணின்
சரிஎன ஒப்பேல்! தக்க
    சான்றவர் புலத்தால் ஆய்ந்த
முறையினால் கலைச்சொல் ஆக்க
    முனைந்திடச் செய்தல் வேண்டும் 4

அரியணை ஏற்றி வைத்த
    அரசுக்கு நன்றி சொல்லித்

திருமண நிகழ்ச்சி யாவும்
    தெளிதமிழ் கேட்கச் செய்வீர்!
இறைமுனும் தமிழே கேட்க
    இணைந்துநீர் தொண்டு செய்வீர்!
துறைதொறும் தமிழே காணின்
    தூய்தமிழ் ஆட்சி என்போம் 5

## 7. உறுதி கொள்வீர்

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

முதலோடு முடிவில்லாப் பெருமை, நான்கு
    மொழிபெற்றும் மூப்பில்லா இளமைத் தன்மை,
அதனோடு மிகுமினிமை காலஞ் சொல்ல
    அமையாத பழந்தொன்மை, தனித்தி யங்கி
உதவுநிலை, வளர்பண்பும் எளிமை, யாவும்
    உயர்தனிச்செந் தமிழுக்கே உண்டாம்; மேலும்
புதுமைபெற முடிசூடி அரசு தாங்கப்
    புலவரெலாம் இளைஞரெலாம் உறுதி கொள்வீர்! 1

தெலுங்குமொழி பிறமொழிகள் உயர்தல் காண்பார்
    தேன்மொழியாம் தமிழ்மொழியை வாழ்க என்றால்
கலங்குகின்றார் ஒருசிலர்தாம்; உயிரா போகும்?
    கலங்கற்க! தமிழ்வாழ்ந்தால் யாரும் வாழ்வர்;
புலங்கெட்டுப் போகாதீர்! ஆட்சி செய்யப்
    புன்மொழிகள் வேண்டாதீர்! தமிழின் மானம்
நலங்கெட்டுப் போவதுவோ? தமிழே இந்த
    நாடாள வேண்டுமென உறுதி கொள்வீர்! 2

## 8. எந்நாளோ?

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

மனையாளை இல்லிருத்தி மாலை ஓர்நாள்
    மனஅமைதி பெறஎண்ணிச் சென்றேன்; நல்ல
''சினிமா''என் றுரைத்தார்கள்; அதனால் நானும்
    சிறிதெண்ணி உட்புகுந்தேன்; தொடங்கி னார்கள்
மனநிலையை முகக்குறிப்பால் உணர்த்தும் அந்த
    மங்கையைப்போல் நடிப்புலகில் கண்ட தில்லை!
அனநடையும் அவள்குரலும் படப்பி டிப்பும்
    அத்தனையும் புகழ்ந்தார்கள் ஆங்கி ருந்தோர் 1

கலையுண்டு நடிப்புண்டு நடன முண்டு
    கண்கவரும் அழகுண்டு; நெஞ்சை அள்ளும்
நிலையில்லை பேச்சொன்றும் புரிய வில்லை
    நினைப்பெல்லாம் எங்கெங்கோ சென்ற தங்குச்
சிலைஎன்ன இருந்தஎனை மணியின் ஓசை
    செவிபுகுந்து கிளப்பிற்று வீடு சென்றேன்;
''தலைவலி''என் றுரைத்தேன்நான்; ''என்னை விட்டுத்
    தனியாகச் சென்றீரே வேண்டும்'' என்றாள் 2

இல்லையடி! புரியாத மொழிப்ப டத்தை
    இனிதெனநான் பார்த்ததனால் வந்த நோவு!
நல்லஇயல் தமிழ்மொழியின் நிலையை எண்ணின்
    நைந்துருகிப் போகுதடி எனது நெஞ்சம்;
சொல்லரிய தாய்மொழியைப் பிழைகள் நீக்கிச்
    சொல்லறியா எழுதறியாத் தமிழர் நாட்டில்

புல்லறிவால் பிறமொழியர் படத்தை ஏனோ
புகுத்துகிறார்? என்னென்பேன் அவர்தம் போக்கை 3

படம்பிடிக்கும் கூட்டத்தார் தகிடு தத்தம்
பண்ணுகிறார்; அறிவிருக்க அன்னார் மூளை
இடங்கொடுக்கும் நாளென்றோ? கலையும் வாழ்வும்
இணைந்திருக்கும் படங்காணும் நாள்தான் என்றோ?
மடமையினைத் தொலையாரோ? என்றேன்; பேச்சு
மடைதிறந்து விட்டீரோ? உறங்கும் நேரம்
கடமையினைச் செய்திடுவீர்! என்றாள்; தூக்கம்
கண்கவ்வ அவளென்னைக் கவ்விக் கொண்டாள். 4

## 9. காவலும் களவும்

நேரிசை ஆசிரியப்பா

வணக்கம் நண்பா வா என, அவனும்
வணக்கம் கூறி, ''வாடிய நிலையில்
கவலை நோக்கும் கலங்கிய கண்ணும்
சிவணிய தென்னை? செப்புதி'' என்றனன்;
இருளகல் வைகறை ஒன்மனை அழுகுரல்
விரவிடப் பதறி விரைந்தெனை எழுப்பினள்
துள்ளி எழுந்தேன் ''தொலைந்தது சொத்தெலாம்
அள்ளிப் போயினன் திருடன் ஐயகோ''
என்றென் றிறைந்தனள்; என்மனம் சுழன்ற(து)
இன்றோ நேற்றோ என்உழைப் பதனால்
வந்த பொருளோ? வாழ்ந்தஎன் முன்னோர்
தந்த பொருளாம் தரணியில் அவர்தம்
தாளாண் மைக்கொரு சின்னம்! மலைநிகர்
தோளால் காத்தருள் தூயநற் பொருளாம்!
அந்தோ அந்தோ அதனை இழந்தேன்
எனநான் உரைத்தேன்; எள்ளி நகைத்தவன்
'முனம்நீ நம்நகர்க் காப்பகம் முந்துற
ஓடி உரையா திருந்தனை ஊமையாய்!
முன்னோர் சொத்தென முணுமுணுக் கின்றனை
முன்னோர் சொத்தாம் முத்தமிழ் நாட்டின்
எல்லைகள் போயின ஏன்எனக் கேட்டிலை!
இல்லை உரிமை எனஎண் ணினையோ?
பகலிற் கொள்ளை பாராய்! உலகம்
நகுதற் பொருட்டோ நற்றமிழ் மகனே!
மொழியும் நாடும் முன்னோர் சொத்தாம்
அழியா வண்ணம் அவர்வழி வந்தோர்
காத்தல் வேண்டும்; காக்கும் உரிமை
மூத்தஇம் மண்ணில் முளைத்தோர் யார்க்கும்
உண்டென உணரின் ஒழியும் தீமை
பண்டைய நிலைமை பாரில் வாய்க்கும்;
நிற்கஎன் தோழா! வாயிலில் நின்நாய்
நிற்க எவ்வணம் நிகழ்ந்தது திருட்டு?
மொழிக' என்றுமொழிந்தனன் நண்பன்;
ஒழிகஅந் நாயே ஒழிகஅந் நாயே
நன்றி மறந்தது நன்றி கொன்றது
காட்டிக் கொடுக்கும் கயமை மிகுந்தது
வீட்டின் ஒருபுறம் விரும்பும் உணவைப்
போட்டுளார் திருடர் புசித்தது நாய்தான்
கடமை மறந்தது களவும் நிகழ்ந்த(து)
உடைமை யிழந்தேன் எனநான் உரைத்தேன்;
''நாயினைத் திட்டினை நம்மவர் பண்பும்
ஆயின் அன்னதே! அதற்கென் செய்குவை?
பதவி யுணர்வைப் பார்த்ததும் குழைந்து
சதமென எண்ணிச் சார்ந்து திருடர்க்கு
வழிவகை செய்வர் பழிஎன நாணார்

இழிதொழில் புரிந்தும் ஏற்றம் பெறுவர்
தாயைப் பழிப்பவர் தருக்குடன் நிற்பர்
நாடும் மொழியும் நமதென எண்ணார்
ஆடி வருமவர் அடியிணை வருடிச்
சூடி மகிழ்வர் சொல்லவும் வெட்கம்
தீ நாய்த் துணையால் திருடர் கவர்ந்தது
தோளால் காத்த சொத்தெனப் புகன்றனை
வாளால் காத்த நாட்டினை வருவோர்
கவர்ந்திட இங்கே காவல் புரிந்திடும்
அவர்மதி என்னே! என்னே!'
என்றுரை கூறி ஏகினன் அவனே

---

**பாடற்குறிப்பு:–** தமிழக எல்லைகள் பறிபோன போது பாடிய பாடல்.

## 10. அமிழ்தம் கசக்குமோ?

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

தமிழ் வாழ்க என்று சொன்னால்
குடிமூழ்கிப் போகுமோ? இங்குத்
–தமிழ்

தொடுப்பு

அமிழ்தம் கசக்குமோ? தென்றல் கொதிக்குமோ?
அலறுகிறீர்! கதறுகிறீர்! உமக்கிது அடுக்குமோ?
–தமிழ்

முடிப்பு

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் உண்டீர்!
ஆயினும் அந்தோ நன்றியைக் கொன்றீர்!
தாயினும் மேலாம் தமிழ்மொழி வாழ்ந்தால்
தாக்குமோ? உம்மைச் சாய்க்குமோ? எங்கள்
–தமிழ்

துறைதொறும் துறைதொறும் வளர்வழி சொன்னால்
துடிக்கிறீர்! கண்ணீர் வடிக்கிறீர்! மேலும்
மறைவாகச் சூழ்ச்சிகள் செய்கிறீர் இந்நாள்
மாதமிழுக் காக்கங்கள் தேடுவதும் எந்நாள்?
–தமிழ்

## 11. உயிர் வெல்லமோ?

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

மொழிவளம் பெற முயல்வாய் – தமிழ்
முதலிடம் பெறின் நீ உயர்வாய் உயர்வாய்
–மொழி

தொடுப்பு

விழியினும் மேலென விரும்பிட வேண்டும்
வெறுத்திடும் செயலினை ஒழித்திடல் வேண்டும்
–மொழி

முடிப்பு

இயல்இசை கூத்தெலாம் இலங்கிடக் கூடுவாய்
எதிர்ப்பொன்று கண்டால் எழுந்ததைச் சாடுவாய்
முயல்வந் தெதிர்த்தால் முரண்புலி அஞ்சுமோ?
முத்தமிழ்ப் பகைவரைச் சரண்புக நெஞ்சமோ?

—மொழி

கயல்புலி வில்லால் காத்தனர் வேந்தர்
கண்டவர் நுழைவால் கவிழ்ந்தனர் மாந்தர்
அயலவர் ஆட்சி விளைத்திடும் கேட்டை
அகற்றிட இங்கே அமைத்திடு பாட்டை

—மொழி

மானம்உனக் கிலையோ? மனம்வைத்தால் பகைமலையோ?
மறவர்குலம் இலையோ? மனம் என்ன சிலையோ?
ஈனம்நமக் கல்லவோ? இழித்துலகம் சொல்லவோ?
இந்த உயிர் வெல்லமோ? வீரமர பல்லமோ?

—மொழி

## 12 தமிழில் பாடு!

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

பாடுவ தென்றால் தமிழினில் பாடு
பாவையே உளமகிழ் வோடு!

—பாடு

தொடுப்பு

வாடிடும் என்மன வேதனை தீர்ந்திட
வாழ்வு மலர்ந்திட அன்பு நிறைந்திடப்

—பாடு

முடிப்பு

வையம் பெற்றது தமிழ்மொழியாம் — அதன்
வழி வழி வந்தன பிறமொழியாம்
ஐயம் இல்லை உண்மையிதாம் — கண்ணே
அருமைத் தமிழே நமதுயிராம்

—பாடு

இடுக்கண் வருங்கால் சிரித்திடுவாய் — மன
இழுக்கெனும் மாசுகள் துடைத்திடுவாய்
வடுக்கள் நீங்கிட வாழ்ந்திடலாம் — என
வள்ளுவன் சொன்னதைப் பாடிடுவாய்

—பாடு

நன்மைகள் செய்ய முயன்றிடுவாய் — இன்றேல்
நலிவுகள் செய்திட முனையாதே
என்னும் மேலோர் அறவுரையை — நல்ல
எழிலொடு காதலை வீரமதைப்

—பாடு

## 13. தயக்கம் ஏன்?

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

ஆண்டவன் வெறுத்தாரோ? — தமிழை
அன்பர்கள் தாம் மறுத்தாரோ?

—ஆண்டவன்

தொடுப்பு

வேண்டிய எண்ணங்கள் விளம்பிடத் தாய்மொழி
விடுத்தொரு பிறமொழி விழைவது முறையோ?

—ஆண்டவன்

முடிப்பு

நெஞ்சை உருக்கும் திருவா சகநூல்

நினைக்க இனிக்கும் தேவா ரங்கள்
அஞ்சலி செய்திட உதவா என்றால்
அந்தநல் ஆத்திகம் வேண்டாம் இங்கே
—ஆண்டவன்

இந்தநன் னாட்டார் எடுத்தது கோவில்
இருப்பதும் அருச்சகர் தமிழகக் காவில்
வந்திடும் மொழிக்கோ வளர்ந்திடும் வாழ்வு
வாழ்ந்தநம் மொழிக்கோ வந்தது தாழ்வு
—ஆண்டவன்

தமிழைக் கோவிலுள் தடுத்திடும் பகையைத்
தவிடெனப் பொடியெனச் செய்திடல் வேண்டும்
தமிழன் என்றொரு இனமுண் டாயின்
தயங்குவ தேனோ? எழுவீர்! எழுவீர்!
—ஆண்டவன்

நாமிடும் சோற்றினை ஒருநாள் உண்ட
நாயும் நன்றியை மறவா தன்றோ?
பூமியில் தோன்றிய நாள்முதல் உண்டோர்
புன்மைகள் செய்திட முனைவதும் நன்றோ?
—ஆண்டவன்

## 14. வாய் நோகுமோ?

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

வணக்கம் என்று சொன்னால் வாய் நோகுமோ? ஐயா
வந்தவர்க்குத்தான் அது தாழ்வாகுமோ?
—வணக்கம்

தொடுப்பு

கணக்கின்றி வந்தவந்த மொழிக்கெல்லாம் பணிகின்றோம்
கனிவான மொழியான தமிழாலே துணிவாக
—வணக்கம்

முடிப்பு

பிறமாந்தர் அவர்மொழியே பேசுகின்றார்
பிழையாக இங்கேதான் ஏசுகின்றார்
மறவேந்தர் காத்தமொழி பேசுதற்கு
மனமின்றி அறிவின்றிக் கூசுகின்றார்
—வணக்கம்

எங்கெங்கும் காணாத காட்சி ஐயா
இன்னுமிதை வளரவிடின் வீழ்ச்சி ஐயா
அங்கங்குத் தாய்மொழியின் ஆட்சி ஐயா
ஆண்டாண்டு ஆண்டமொழி தாழ்ச்சி ஐயா
—வணக்கம்

## 15. சங்க இலக்கியம்

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

சாற்றி வளர்ந்திடுவாய் — நம்
சங்க இலக்கியப் பெருமையெலா மிங்குச்
—சாற்றி

தொடுப்பு

போற்றி வளர்த்திடும் பொறுப்பினை ஏற்று
மாற்றலர் தூற்றிடும் கூற்றினை மாற்று
—சாற்றி

முடிப்பு

காதலும் வீரமும் கண்ணெனக் கூறும்
கற்பவர் நெஞ்சினில் பெருமிதம் சேரும்
தீதெனும் அடிமைச் சிறுமைகள் மாறும்
தெளிவுடன் அறிவும் சிந்தனை கூறும்
—சாற்றி

சாதி சமயச் சழக்குகள் இல்லை
சகலரும் உறவினர் என்பதோர் சொல்லை
ஓதிய அறநூல் சங்கத்துச் செல்வம்
உயிரெனக் காப்பதால் பகையைநாம் வெல்வம்
—சாற்றி

கனிதரு வாழைத் தோட்டம தென்பார்
கம்பரும் பிறரும் அதன்வழி என்பார்
நனிமிகு மகிழ்ச்சி மனமதில் ஆடும்
நலிவுகள் தளர்வுகள் நம்மைவிட் டோடும்
—சாற்றி

அகம்புறம் கலியுடன் நற்றினை சேரர்
அடல்பகர் பத்தொடு ஐங்குறு நூறு
தகும்பரி பாடல் குறுந்தொகை எட்டு
தண்டமிழ்க் காப்பியம் இவைஎலாம் தொட்டுச்
—சாற்றி

## 16. விந்தையடா விந்தை
**(நூல்:—காவியப் பாவை)**

மாநிலந் தன்னில் நடத்தி வரும் — விந்தை
மானிடர் செய்கையைச் சாற்றுகின்றேன்
ஏனிவர் இவ்வணம் ஆற்றுகின்றார் — என
எண்ணித் துணிந்துசொல் ஓர் முடிவு 1

செத்த பிணத்தைப் புதைத்து வைத்த — குழி
சென்றங்கு மீண்டுங் கிளறுகின்றார்
பித்தரைப் போலப் பிதற்றுகின்றார் — இனிப்
பேசாப் பிணத்தின் முன் பேசுகின்றார் 2

தோண்டி எடுத்திடும் மேனிதனில் — படி
தூசி துடைத்துடன் பூமுடித்து
வேண்டிய பூசை செலுத்துகின்றார் — இந்த
விந்தையை யாதென் றுரைத்திடுவேன் 3

சூட்டு புகழுரை எத்தனை தான் — அட!
சொல்லுக் கடங்காமல் மிக்கதடா!
ஏட்டில் எழுதிய போற்றிகளும் — ஒரு
எண்ணிக்கை காட்டத் தொலையுமதோ? 4

ஆயிரம் ஆயிரம் கொட்டுகின்றார் — அணி
ஆடை பல செய்து பூட்டுகின்றார்
கோயிலைப் போற்பல மாளிகைகள் — கட்டிக்
கொள்ளையாம் மானியம் கூட்டுகின்றார் 5

விந்தையடா இது விந்தையடா — என
வேறெரு திக்கில் விரைந்து சென்றேன்
சிந்தனை அற்றவர் அங்கிருந்து — புரி
செய்கையைக் கண்டுளம் நொந்ததடா 6

கண்ணொளி மங்கிய காட்சியினான் — பிறை
கண்டது போலொரு கூனுடையான்
எண்ணிய எண்ணம் விளம்புதற்கே — ஒரு
ஏதுவிலான் திக்கு வாயுடையான் 7

நின்று நடந்திடக் கால்களிலான் – அவன்
நிற்பது வோஒரு கோலின்துணை
ஒன்றிய கோலினைப் பற்றுதற்கோ – கையில்
உற்றவிரல்களும் முற்றுமிலான் 8

இத்துணைப் பண்புகள் கொண்டவனை – நலம்
ஏற்றிட ஊசிகள் போடுகின்றார்
சித்த மருத்துவம் செய்யினுமே – அவன்
சீரிய வாழ்வினைக் காண்பதுண்டோ 9

ஆணிப்பொன் னாடையும் போர்த்துகின்றார் – நல்ல
ஆட்சிப் பொறுப்பையும் நல்குகின்றார்
காணிக்கை எத்தனை கொட்டுகின்றார் – இந்தக்
காட்சியைக் காணக்கண் கூசிநின்றேன் 10

உள்ளம் உருக்கிடும் ஓர்குரல்தான் – செவி
உற்றதும் சட்டென நான் திரும்பக்
கள்ளமில் லாஒரு ஏழைமகன் – பசி
காட்டும் முகத்துடன் நின்றிருந்தான் 11

கட்டுதற் கோர்துணி அற்றவனாம் – கையில்
காசு பணங்களும் அற்றவனாம்
திட்டி விரட்டினர் அன்னவனை – அவன்
தேம்பிக் கிடப்பதைக் கண்டு நின்றேன் 12

தங்க உடல்நலம் கொண்டவன்தான் – அவன்
தங்க இடமின்றிச் சுற்றுகின்றான்
எங்கும் புறக்கணிப் பானதடா – சிங்க
ஏறு வளங்குன்றிப் போனதடா! 13

ஆவி உடல்வளம் அத்தனையும் – பெறும்
ஆண்மகன் இப்படித் தேய்ந்திடவே
பாவி மடம்படு மானிடர்கள் – நஞ்சு
பாய்ச்சுதல் கண்டுளம் வெந்ததடா! 14

செத்த மொழிக்கிங்கு சீர்வரிசை – ஒரு
செம்மை பெறாமொழிக் கேற்றமிங்கே
பெற்ற மொழிக்கொரு காவலில்லை – என்ற
பெற்றியை நெஞ்சம் நினைந்ததடா! 15

## 17. எங்கள் நாடு

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

எங்கள் நாடு வாழ்க வாழ்கவே
வளர்கலை மேவும் அறிஞர்கள் சூழும் –எங்கள்

முடிப்பு

தனக்கென்று வாழாத நல்லவனைப் பெண்மையிங்குத்
தலைநிமிர உழைத்தவனை எங்கேசென் றாலுந்தன்
மனத்துள்ள கருத்தினையே சொல்பவனை மற்றவரை
மதிப்பவனைக் கலியாண சுந்தரனைத் தருநாடு

நூலோடும் ஏடுகளைச் செல்லோடி அழிக்காமல்
நுழைந்தோடித் தேடியருள் சாமிநாதன் வளர்நாடு
பாலோடு துளிநஞ்சு கலந்தாலும் தீமைஎனப்
பகர்ந்தவனைத் தமிழியக்க மறைமலையைப் பெறுநாடு

சிறுபிள்ளை உள்ளங்கள் சீர்திருந்த வேண்டிநலம்
சேர்கவிகள் பொழிமுகிலாம் கவிமணியின் தவநாடு

வரும்வெள்ளை மாந்தருக்குப் பணிவதில்லை என்றுகவி
வாகைகொளும் பாரதியும் பரம்பரையும் விளைநாடு

இருள்சூழ்ந்து மருள்சூழ்ந்து சமுதாயம் இருட்டறையில்
எதுவுண்மை பொய்யென்றே அறியாமல் தூங்குகையில்
இருள்கீழ்ந்து வெளிக்கிளம்பும் ஞாயிறென அறிவொளியை
ஈந்துவந்த ஈவேராப் பெரியாரின் திருநாடு

இசைவாணர் கலைவாணர் விஞ்ஞானப் பெருமக்கள்
எழுத்தாளர் பெரும்புலவர் கவிவாணர் நாடுய்ய
வசையில்லா வழிகாட்டும் பேரறிஞர் தமிழ்காக்க
வரிந்துகட்டி முன்னிற்கும் புலிக்கூட்டம் மிகுநாடு

## 18. மறவர் நாடு

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

பகைவென்று புகழ்கொண்ட
பழநாடு நிதம் வாழ்கவே
—பகை

முடிப்பு

வாளோடு வாள்மோதும் போரென்ற மொழிகேட்டு
மகிழ்வோடு தோள்வீங்கும் மாவீரர் வளர்நாடு
தோளோடு வாள்வீழ்ந்து பகைமாயப் போராடும்
துணிவாளர் பகைபணியிற் கனிவாளர் நிறைநாடு

விழுப்புண்ணை மேலாக விழைகின்ற ஒருநாடு
வேல்வரினும் இமையாத வீரமிகு தமிழ்நாடு
புழுக்கூட்டம் எனப்பகையை அழித்தொழித்துப் பெயர்கின்ற
புதல்வனுக்குப் பாலூட்டி வளர்த்ததிருத் தாய்நாடு

தூங்குகிற வேங்கையினை இடருகிற குருடனெனத்
தொலைவார்கள் எமைஇகழ்வோர் என்றெதிரும் மறநாடு
பூங்குழலி பிறநாட்டுப் பகையறுக்க ஒருமகனைப்
போருக்குப் போவென்று வேலீயும் தாய்நாடு

## 19. தமிழகம் தாழ்ந்ததேன்?

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

தமிழகமே – நம்நாடு
தாழ்நிலை எய்திய தெதனாலோ?
—தமிழகமே

தொடுப்பு

அமிழ்தெனும் தமிழ்மொழி காத்தனர் வேந்தர்
அருஞ்செயல் புரிந்தனர் வாழ்ந்தனர் மாந்தர்
—தமிழகமே

முடிப்பு

முரசொலி கேட்டால் மூண்டெழுவார் – போரில்
முதுகிடப் புறப்பகை கண்டிடுவார்
அரசரும் புலவரும் இணைந்திருந்தார் – இங்கே
அகப்பகை எவ்விதம் புகுந்ததுவோ?
—தமிழகமே

தென்றல் தவழ்ந்திடும் தமிழகமே – இன்று

தேய்ந்திடக் கண்டிரோம் என்றெழுந்தார்
நன்றிது செய்தனர் எனமகிழ்ந்தோம் – ஆனால்
நாய்க்குணம் புகுந்தது பாசறையில்!

–தமிழகமே

விடுதலை என்றொரு சொல்கேட்டோம் – நாட்டில்
வீரமும் மானமும் உண்டென்றோம்
கெடுதலைப் புரிந்திடும் வினையாளர் – நாடு
கீழ்நிலை எய்திடச் செய்கின்றார்

–தமிழகமே

## 20. தமிழர் வாழ்வு!

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

வாழ்வினைப் பாராய் நீ – தமிழர்
வாழ்வினைப் பாராய் நீ

–வாழ்வினை

தொடுப்பு

தாழ்வினை ஏற்றார் தமிழினைப் போற்றார்
தம்மவர் ஆட்சியை அழித்திடும் கூற்றார்

–வாழ்வினை

முடிப்பு

அலைகடல் கடந்து பலபல நாடு
அனைத்துமே சென்று பட்டனர் பாடு
கலைபல கண்டோர் நிலையினைக் கண்டு
கலங்குதென் உள்ளம் கவலையே கொண்டு

–வாழ்வினை

## 21. முன்னையர் வாழ்வு

**(நூல்:–காவியப் பாவை)**

வாணிகம் செய்தநம் முன்னையர் கண்டநல்
வாழ்வினைக் கூறுவன் கேட்டிடுவீர்
தோணிகள் ஓட்டினர் சூழ்கடல் சுற்றினர்
சூட்டினர் நம்புகழ் நாட்டினரே 1

ஆழ்கடல் ஆயினும் சூழ்புயல் ஆயினும்
அஞ்சில ராகிய நெஞ்சினராய்க்
கீழ்கடல் மேல்கடல் யாவினும் ஓடினர்
கிட்டும் நிதிக்குவை விஞ்சினரே 2

தெற்குக் கடல்தனில் கொற்கைத் துறைதனில்
தேடிக் கிடைத்தநன் முத்துக்களை
விற்கத் திசைதொறும் சென்றனர் பொற்குவை
வேண்டிய மட்டுங் குவித்தனரே 3

மீனக் கொடியுடன் காணப் படுங்கலம்
மேலைக் கடல்தனில் ஓடிவரும்
மானப் புலிக்கொடி விற்கொடி ஏந்திய
வங்கங்கள் தென்கடல் கூடிவரும் 4

மெல்லிய நற்றுகில் பட்டுடை பொன்மணி
மேவிப் படர்தரு செம்பவழ
வல்லியும் நல்லகில் ஆரமும் ஆதிய
வாரிக் கொடுத்தது நம்புவியே 5

ஆழ்கடற் சாவகம் புட்பகம் சீனமும்
ஆதி யவனம் கடாரமுடன்
ஈழம் முதலன தேயமெ லாமிவர்
ஏகினர் தோணியில் வீரமுடன் 6

இவ்வகை வாழ்ந்தனர் என்னின மாந்தர்கள்
என்றதும் என்னுளம் பொங்கியதே
அவ்வியல் தேய்ந்தனர் இன்றவர் என்றதும்
ஆவென் றுயிர்த்துளம் மங்கியதே 7

## 22. தாயகம் காப்போம்

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

பாதை தெரிவது பார் பார் — அந்தப்
பாதையில் எதிர்ப்பவர் யார் யார்?
—பாதை

தொடுப்பு

தாதையர் ஆண்ட தாயகம் காத்திடத்
தாரணி யாளும் உரிமையை மீட்டிடப்
—பாதை

முடிப்பு

வஞ்சகர் செயல்கள் வாழ்ந்ததும் இல்லை
வாய்மைகள் என்றும் மாய்ந்ததும் இல்லை
நஞ்சினும் கொடியோர் நன்றியைக் கொன்றோர்
நடத்திடும் நாடகம் இனிமேல் இல்லை
—பாதை

இழந்ததை மீட்போம் இருப்பதைக் காப்போம்
எதிரிகள் செய்திடும் சூழ்ச்சியை மாய்ப்போம்
விழுந்தவர் எழுந்தார் விழித்தனர் மாந்தர்
வீணரின் செயல்களை வேரொடு சாய்ப்போம்
—பாதை

## 23. வாழ்க தாயகம்

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

வாழ்க தாயகம் — அம்மா
வாழ்க நீயகம் — வாழ்க

முடிப்பு

உயிர்நீ உடல்நீ உளம்நீ வளம்நீ
பயிர்நீ பயன்நீ பயன்தரு பொருள்நீ
வெயில்நீ மழைநீ விழிநீ மணிநீ
பயில்தரு சுவைநீ பழகிய மொழிநீ

வெளிநீ வளிநீ புனல்நீ அனல்நீ
விளைவுறு நிலம்நீ விதைநீ முளைநீ
ஒளிநீ வயல்நீ உயர்வுறு மலைநீ
அளிநீ தொழில்நீ அளவில கலைநீ

பிறந்தோம் தவழ்ந்தோம் பிணைந்தோம் நடந்தோம்
திரிந்தோம் மகிழ்ந்தோம் திருவாழ் மடியில்
சிறந்தோம் பயின்றோம் சிரித்தோம் வளர்ந்தோம்

நிறைந்தோம் உயர்ந்தோம் நினைவோம் உனையே

## 24. நாட்டுப்பண்
(நூல்:–காவியப் பாவை)

(சனகண இசையிற் பாடுக)

உயிருடல் பொருள்திரு நாடெனும் நினைவே
ஓங்கிட வேண்டுவம் நாமே

துஞ்சாது நின்று குலையாம லிந்நாட்டைத்
தோழமை கொண்டுல காள்வோம்

நெஞ்சு கெடாவகை உரமாய் நின்றால்
நிற்பவர் எதிரில் உளரோ?

படைபலம் நாமே பாரீர்!
தடைகளை நீக்கிட வாரீர்!

நாமே தமிழுல காள்வோம்!

புகழ்வளர் நம்முயர் தாயக நினைவே
போற்றுவம் போற்றுவம் நாமே

நலமே மிகவே பெறவே
பலபல நல மிக வே

## 25. நாட்டு வாழ்த்து
(நூல்:–காவியப் பாவை)

வாழ்க தமிழகம் வாழ்க தமிழகம்
வாழ்க தமிழகமே!
சூழ்கடல் மூன்றொடு வேங்கடம் எல்லையாய்த்
தோன்றுக தாயகமே! 1

நல்லவர் ஆட்சியில் தங்கி வளர்ந்திடும்
நாடு செழித்திடவே!
அல்லவை நீங்கிட நாட்டினிற் செந்தமிழ்
ஆட்சி தழைத் திடவே 2

வான முகட்டினைத் தொட்டு நிமிர்ந்திடும்
மாமலைத் தாயகமே
கானம் இசைத்திடும் பேரரு வித்திரள்
காட்டி மிளிர்த்திடுமே! 3

ஓடிய ஆறுகள் மெல்லிய கால்களை
ஊன்றிய ஊர்களெல்லாம்
கூடிய செந்நெலின் ஆடிய பைங்கதிர்
கோலம் விளைத்திடுமே! 4

தெண்கடல் முத்தொடு சேர்ந்து படர்ந்திடும்
செம்பவளக் கொடியும்
மண்ணதில் தங்கமும் வல்லிரும் பின்னன
வாழ்ந்திடும் தாயகமே! 5

கல்வி வளர்ந்திடப் பண்பு செழித்திடக்
கற்றவர் வாழியவே!
செல்வ மிகுந்திட எங்களின் தாயகம்

சீருடன் வாழியவே! 6

## 26. ஆடுவோம் பாடுவோம்
(நூல்:–காவியப் பாவை)

கொஞ்சு மொழிபேசும் மங்கையரே இங்குக்
கூடி மகிழ்ந்துநாம் ஆடிடுவோம் – இனிப்
பஞ்சமெ லாமொழிந் தின்பமே பொங்கிடப்
பாற்பொங்கல் பற்றியே பாடிடுவோம் 1

சர்க்கரைப் பொங்கலும் வெண்ணிறப் பொங்கலும்
சாற்றுக் கரும்புடன் சேர்த்துவைத்து – வாழை
நற்கனி பற்பல உண்டு மகிழ்ந்திட
நாம்படைப் போமடி காதலர்க்கு 2

பாளை விரித்திடும் தென்னைம ரக்காவின்
பக்கத்திலே மக்கள் கூட்டத்திலே – நாளை
காளை தழுவிடும் காதலர் வீரத்தைக்
கண்டு மகிழ்ந்துநாம் பாடிடுவோம் 3

அண்ணன்மார் தம்பிமார் ஐயாவும் சேர்நதுண்ண
ஆக்கிப் படைக்கின்றோம் அன்புப்பொங்கல் – உண்டு
பண்ணிசைப் பாரவர் பாட்டினுக் கேற்பவே
பாவைய ரேமகிழ்ந் தாடிடுவோம் 4

வீட்டுக்குள் ளேதிரு நாட்டுக்குள் ளேபகை
ஓட்டிடுவோம் அன்பு காட்டிடுவோம் – இதைக்
கேட்டு மகிழ்ந்திட வந்தது தைப்பொங்கல்
கேடுகள் நீங்கிடப் பாடிடுவோம் 5

வாழ்க தமிழினம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வான்மழையே – எங்கும்
வாழ்க மகிழ்வன்பு வாழிய நானிலம்
வாழ்த்துவம் வாழ்த்துவம் மங்கையரே! 6

## 27. வெண்ணிலவே கண்வளராய்!
(நூல்:–காவியப் பாவை)

கடைந்தெடுத்த பொற்சிலையே கண்காணும் தேவே
நடந்துவரும் வெண்ணிலவே நாண்மலரே கண்வளராய்

வீட்டுப் பெரியோர் விளைத்துவரும் என்துயரை
ஓட்டப் பிறந்தவனே உத்தமனே கண்வளராய்

புலர்காலை வீசுகின்ற பூங்காற்றே நின்றன்
மலர்விழிகள் நீர்சிந்த மனம்பொறுக்க வல்லேனோ

பசியால் அழுதாயோ பாலகனே கண்கள்
கசியாதே அன்போடு கலந்துபால் நான்தருவேன்

நிலத்தில் எழுஞ்சுடரே நித்திலமே என்கலியை
விலக்கப் பிறந்தவனே வீட்டிற் கணிகலமே

உழைப்பார் நிலையுணர்ந்தோ ஒண்டவந்தோர் இங்கே
களைப்பாறித் தீங்கிழைக்கும் கயமைக் குணங்கண்டோ

தமிழ்வளர ஏதும் தடங்கல் வருமென்றோ
இமைமூட மனமின்றி இருக்கின்றாய் என்கண்ணே

மடங்கல் உரங்காட்டும் மாமல்லர் காத்திடுவார்
தடங்கல் வாராது தம்பிநீ கண்வளராய்

பழிப்புரைகள் வந்தணையப் பார்த்திருக்க மாட்டார்கள்
விழித்துவிட்டார் உன்னாட்டார் வீணாக அஞ்சாதே

பன்மொழிகள் கற்றுணர்ந்த பண்புடையார் வாழ்வதனால்
புன்மையிங்கு நேராது பூஞ்சிட்டே கண்வளராய்

நம்நாட்டைச் சீரழிக்கும் நாலுவகைச் சாதிகளை
வெந்காட்டச் செய்த விறலோனே கண்வளராய்

ஆளும் மொழிஒன்றே அதுவும் தமிழென்றே
நாளும் சொலும்என்றன் நாயகன்றன் மார்பகமும்

பாட்டன் தடங்தோளும் பாய்ந்து விளையாடி
வேட்டைக் களமாக்கும் வீரனே கண்வளராய்

நாட்டைக் கெடுக்கும் நயவஞ்சப் போக்குக்குச்
சாட்டை அடிகொடுக்கச் சார்ந்தவனே கண்வளராய்

செஞ்சொற் சிலம்பிருக்கச் செம்மைக் குறளிருக்க
அஞ்சற் கிடமில்லை ஐயன்மார் தேடிவைத்த

சங்கத்துச் செல்வங்கள் சாந்துணையும் போதுமடா
வங்கத்துச் சென்றோடி வாணிகம் செய்வதுபோல்

பாரெல்லாம் சென்று பரப்பிடுவாய் நின்மொழியை
ஊரெல்லாம் ஓடி ஒலிஎழுப்ப வேண்டுமடா

ஆண்ட இனத்தாரை ஆட்சிக்குக் கொண்டுவர
வேண்டு மெனக்கருதும் விழைவுடனே நீவாழ்வாய்

அறம்நாட்ட வந்தவனே ஆணவம்சேர் மாற்றார்க்கு
மறம்காட்ட வந்தவனே மாமணியே கண்வளராய்

## 28. எண்ணம்
**(நூல்:—கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

விண்கோள்கள் போலுமிளங் கவிஞர் கூட்டம்
விளக்கமுற ஒளிநல்கும் [1]பரிதி யே! எம்
கண்போலும் தமிழ்காக்கும் மறவர் ஏறே!
கவிதையினால் உளங்கவர்ந்த கள்வா! இந்த
மண்மீது நல்லறமே புரிந்து வாழும்
வள்ளல்தரும் கல்லூரி பயில்வீர்! நல்ல
பண்பூறக் கல்விதரும் பெரியீர்! ஈண்டிப்
பாவரங்கில் அணிசெய்வீர்! வணக்கம் கொள்க 1

**பழைய எண்ணங்கள்**

*பகைதவிர்ந்து நண்புற்று மெல்ல வந்து
பலசொல்லி இரப்பாரேல் உயிரும் ஈவேன்
[2]மிகைவிஞ்சி என்வலிமை இகழ்வா ராயின்
வேங்கையினை இடர்குருடர் ஆவர்; யானை
அகல்காலிற் படுமுளைபோற் பொன்றச் செய்வேன்;
அழித்திலனேல் என்மாலை, பொருளை [3]நச்சி
நகுமகளிர் [4]முயக்கிடையே குழைக என்றான்
நலங்கிள்ளி; பிறர்மனையை நோக்கா எண்ணம் 2

*புலவர்பெருஞ் சித்திரனார் வறுமை போக்கப்

புரவலர்பாற் பலபரிசில் பெற்று வந்து
குலமனையாள் கைக்கொடுத்து, [5]நயந்தோர் யார்க்கும்
கூடிமகிழ் உறவினர்க்கும் பிறர்க்கும் நல்கி,
நலம்நுகர நாளைக்குத் தேவை என்று
நயவாமல், என்னொடுஞ்[6]சூ ழாமல், நல்கிச்
செலவழித்து மகிழ்வோம்நாம் எனப்பு கன்றார்;
செல்வத்துப் பயனீதல் காட்டும் எண்ணம் 3

விருந்தயரும் பெருங்களிப்பால் வடக்கில் வாழ்வோர்
விளைவறியார் தென்புலத்து வேந்தர் வீரம்
கோளரிபோல் வெகுண்டெழுந்து தமிழர் ஆற்றல்
புரிந்துகொளச் செய்தான்அச் சேரன்; யாரும்
புகழ்மிக்க தமிழினத்தைப் பழித்து ரைத்தால்
எரிந்தெழுதல் தமிழனுக்குக் கடமை யாகும்
என்கின்ற இனப்பற்றைக் காட்டும் எண்ணம் 4

தன்பால்வந் திரந்தோனுக் கில்லை என்னான்
தலைதந்தான் ஒருகுமணன்; பாடல் கேட்கும்
அன்பார்வம் தலைதூக்க அரிய நெல்லிக்
கனியொன்றை அதியனுமோர் அவ்வைக் கீந்தான்;
வன்பாலை [7]நடந்தயர்ந்தோன் முரசம் வைத்து
வணங்குகட்டில் எனஅறியா துறங்க, [8]வேந்தன்
அன்பாக அருகிருந்து கவரி வீசி
அகமகிழ்ந்தான்; தமிழறிந்து மதிக்கு மெண்ணம் 5

பசிவருத்தக் குமணன்பால் பரிசில் கேட்கும்
பாவலனோர் களிற்றின்மேல் மன்னர் நாணி
ஒசிதரநான் [9]செம்மாந்து செலவி ழைந்தே
உன்பாலுற் றேனென்றான்; அஞ்சி யின்பால்
[10]நசையின்றிப் பொருளீயின் பெறுதல் ஏலேன்
[11]நான்பரிசில் வணிகனலேன் என்றான்; [12]மற்றோன்,
பசியுறினும் அரசன்போற் செம்மல் உண்டு
பாவலர்க்கும் என்றான்;தன் மான எண்ணம் 6

**உயர் எண்ணங்கள்**
என்னாட்டிற் பிறர்க்கடிமை செய்யேன், ஏய்ப்போர்க்
கிடமில்லை, செல்வத்தைக் கொள்ளை கொண்டு
தின்பார்க்கும் இடம்ஈயேன் என்றெ ழுந்தார்,
திமிர்அரசு கொடுஞ்சிறைக்குள் அடைத்தும் அஞ்சார்,
பின்னீர்க்கும் தீண்டாமை ஒழிக என்றார்,
பிளவுதரும் மதவெறியை ஒழிக்கக் காந்தி
தன்னாட்டு மதவெறியன் குண்டு தாங்கிச்
சாய்ந்ததொரு செயற்கரிய தியாக எண்ணம் 7

[$]வெள்ளத்தால் வீடிழந்து பொருளி ழந்து
வெந்துழலும் மாந்தருக்குத் துன்பம் போக்க
மெள்ளத்தான் ஓரறிக்கை விடுத்து விட்டு
மெத்தையின்மேற் புரளாமல் மனம்ப தைத்துத்
துள்ளித்தான் பறந்தோடி நடந்து நீந்தித்
துயருற்றுக் கண்கலங்கித் தொண்டு செய்தார்
உள்ளத்தாற் பெருமனிதர் காம ராசர்
உயரமைச்சர் மக்களைத்தாம் காக்கும் எண்ணம் 8

# தென்னாட்டைத் [13]தொன்றுமுதிர் காலங் கண்ட
தேன்மொழியை அவ்வினத்தை இழித்துப் பேசின்
[14]வெங்காட்டச் செய்திடுவேன் எனச்சி னந்து
[15]விறல்மிகுக்கும் செயல்செய்தார், சிறையும் சென்றார்
இந்நாட்டிற் சாதிமுறை ஒழிக என்றார்,
இகழ்வுரையும் கல்லடியும் பெற்றாரேனும்
முன்னோக்கிச் செல்கின்றார், உரமே மிக்கார்,
மூடமதி இருள்[16]செகுக்குங் கதிரே போல்வார். 9

#உடல்பழுத்தும் நரைமுதிர்ந்து நடந்து செல்ல
ஊற்றுக்கோல் துணைகொண்டும் தளரா நெஞ்சர்,
மடம்படுத்த பழமைஎலாம் வேர றுந்து
மடமடெனச் சாய்ந்தொழியத் தமிழர் வாழும்
இடமெல்லாம் புயல்வீசப் புரட்சி செய்தார்,
இளைஞர்படை அறிஞர்படை பெருகக் கண்டார்,
திடங்கொண்ட நம்பெரியார் அரிய செய்தார்,
திருவிடத்தின் மன்னரெனும் உரிமை எண்ணம்; 10

புந்திக்குப் பொருந்தாத கொள்கை மாய்க்கப்
புரட்சிசெயும் நல்லறிஞர், தீய சொற்கள்
தந்தவர்க்கும் நாணும்வகை நன்மை செய்வார்,
[17]தண்டாத சொல்லருவி, கலையின் தேக்கம்,
செந்தமிழ நாட்டுக்கு வாழ்நாள் எல்லாம்
சேவைசெய்வார், காஞ்சிநகர் தந்த செம்மல்,
பந்தமுடன் அண்ணாஎன் றழைக்கப் பெற்றார்
படும்பாடு நம்நாடு தழைக்கும் எண்ணம். 11

**வேண்டா எண்ணங்கள்**

நன்றியுணர் வுள்ளதென உலகம் போற்றும்
நல்லுணர்வு கொண்டிருந்தும் எச்சில் உண்டி
ஒன்றுபெறத் தன்னினத்தைப் பகைக்கும் நாய்போல்
உயர்பதவி பெறுதற்கே தன்னி னத்தைக்
கொன்றுகுழி தோண்டுவது வேண்டா எண்ணம்;
கொடும்பழிகள் செய்திருந்தும் உடைகள் மாற்றி
வென்றிபெற உலகோரை ஏய்த்து வாழ்ந்து
விளையாடித் திரிவதுவும் வேண்டா எண்ணம்; 12

ஒருகுலமே உண்டெனஇவ் வுலகுக் கோதும்
உயர்நாட்டிற் சாதிமுறை வேண்டா எண்ணம்;
தெருவோடு போவாரைக் கேலி செய்யும்
சிறுபுத்தி நல்லவர்க்கு வேண்டா எண்ணம்;
திருவுயர அறிவுயர வாழ்தல் கண்டு
தேய்ந்துமனம் புழுங்குதலும் வேண்டா எண்ணம்;
சிறுவயிறு கழுவுதற்கு மானம் விட்டுச்
சீரிழந்து வால்பிடித்தல் வேண்டா எண்ணம்; 13

**வேண்டிய எண்ணங்கள்**

எண்ணுதற்கு மனம்வேண்டும், எண்ணிப் பின்னர்
எடுத்துரைக்கும் உரம் வேண்டும், இதனைச் செய்ய
நண்ணுபவர்க் கிடங்கொடுக்க வேண்டும், அன்றி
நலிவுதரத் தடைசெய்ய எண்ணல் நன்றோ?
கண்ணெதற்குக் காட்சிகளைக் காண அன்றோ?
காணாமற் கண்மூட விழைதல் நன்றோ?
உண்ணுதற்குப் பயனில்லா உண்டி ஏனோ?
உரிமைநல்கல் ஆள்வோர்க்கு வேண்டும் எண்ணம்; 14

நாளைக்கு மாணவரே நாட்டை ஆள்வோர்
நம்கையில் எதிர்காலம் உளதே என்று
நாளுக்கு நாளுணர்ந்து கடமை ஆற்றும்
நல்லுணர்வே ஆசாற்கு வேண்டும் எண்ணம்;
வேளைக்கு வந்திருந்து காலம் பேணி
வினையின்மேற் கருத்தூன்றி ஆசாற் போற்றிக்
கேளிக்கை விடுத்தொழித்து மாண்பை ஆக்கக்
கிளர்ந்தெழுதல் மாணவர்க்கு வேண்டும் எண்ணம் 15

துன்புறுவோர் நிலைகாணின் துடித்துச் சென்று
தோள்தந்து துயர்துடைக்கும் எண்ணம் வேண்டும்;
அன்பொன்றே நிறைகின்ற எண்ணம் வேண்டும்;
அரிவையர்க்கும் உரிமைதரும் எண்ணம் வேண்டும்;
என்பெறினும் நடுநிலைமை வழுவா எண்ணம்
எல்லோர்க்கும் இனியசொலிப் பணியும் எண்ணம்
முன்பிருந்த நன்றியுணர் வெண்ணம் வேண்டும்;
மொழிந்தஇவை நாகரிக எண்ணம் என்பர். 16

கல்லூரிக் கல்விசொலத் தமிழே வேண்டும்
  கலைச்சொற்கள் தமிழ்மொழியில் ஆக்கல் வேண்டும்
மெல்லோசைத் தமிழிசையே முழங்க வேண்டும்
  மேலுயர்ந்த கோவிலுளும் தமிழே வேண்டும்
வல்லூறாய் வருமொழிகள் இங்கு வேண்டா
  வடவருக்குத் தாள்பிடித்துப் பதவி ஏற்கும்
நல்லோரே நும்தாயை இகழ்ந்து கூறேல்!
  நம்நாடு தமிழ்நாடென் றாதல் வேண்டும் 17

அரசிருக்கை தமிழ்மொழிக்கே நல்க வேண்டும்
  ஆள்வோரும் இதையுணர வேண்டும் ஈது
தரிசுநிலம் அன்றெமக்கும் உணர்ச்சி யுண்டு
  தமிழ்மொழிக்கே உயிரீயும் இளைஞர் உண்டு
பரவிவரும் தென்றலென இனிது சொல்வோ
  படியாமற் புறக்கணித்தால் வெகுள்வோம் போரின்
முரசொலியே கேட்குமென உரைப்ப தெல்லாம்
  முடியரசர் வளர்த்ததமிழ் வாழும் எண்ணம். 18

---

**பாடற்குறிப்பு:–** 31–12–1955 அன்று காரைக்குடி அழகப்பா கல்லூரிக் கவியரங்கில் 'நாகரிகம்–எண்ணம்' என்ற தலைப்பில், **பாவேந்தர் பாரதிதாசன்** தலைமையில் பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–**

**இப்பாடல்கள் புறநானூற்றுப் பாடற் கருத்து.

1..பரிதி –கவியரங்கத் தலைவர் **பாரதிதாசன்.** 2.மிகை விஞ்சி – தருக்குற்று. 3.நச்சி – விரும்பி. 4.முயக்கு – கலவி. 5.நயந்தோர் – விரும்பியவர்கள். 6.சூழாமல் – கேட்காமல். 7.முரசு கட்டிலில் உறங்கியவர் – மோசி கீரனார். 8.கவரி வீசிய வேந்தன் – சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. 9.செம்மாந்து – பெருமிதங்கொண்டு. 10.நசை – விருப்பம். 11.களிற்றின்மேல் செம்மாந்து செலவிழைந்தவரும் பரிசில் வாணிகன் அல்லேன் என்றவரும் பெருஞ்சித்திரனார். 12.அரசன் போற் செம்மல் உண்டு என்றவர் கோவூர் கிழார். செம்மல் – பெருமிதம்.

$அப்போதைய இராமநாதபுர மாவட்டத்தில் புயலடித்த பொழுது முதலமைச்சராக இருந்த காமராசர் நேரிற் சென்று உதவியதை இப்பாடல் குறிக்கிறது.

## இவ்விரு பாடல்களும் தந்தை பெரியாரைக் குறிக்கின்றன.

13.தொன்றுமுதிர் – பழமை மிகுந்த. 14.வெங்காட்ட – புறமுதுகிட.

15.விறல்மிகுக்கும் – வலிமை மிகுந்த. 16.செகுக்கும் – அழிக்கும். 17.தண்டாத – குறையாத.

## 29. யாதும் ஊரே யாவரும் கேளிர்

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

வெண்கலிப்பா

**வணக்கம்**

[1]செந்தமிழ்க்குக் காவலரே சிதம்பரநா தப்பெரியீர்!
பைந்தமிழின் பாடலுக்கோர் [2]பரம்பரையைத் தந்தவரே!

இந்தக் கவியரங்கில் எழுந்தருளுங் கவிமணிகாள்!
வந்து செவிமடுப்பீர்! வணங்கிக் கவிசொல்வேன்:

**சுவை பிறந்தது**

ஓங்கும் மலைக்குகையில் உயர்ந்த மரக்கிளையில்
ஆங்காங்கே தனிமனிதன் ஆர்ப்பரித்து வாழ்ந்திருந்தான்

கூட்டு வாழ்வறியான் கொல்லும் வினையுடையான்
காட்டு வாழ்வறிவான் காணும் விலங்கினத்தை

வேட்டைத் தொழில்புரிந்து வேகாத் தசையுண்பான்,
காட்டு நெருப்பிடையே கருகிக் கிடந்தவொரு

ஆட்டின் தசைசுவைத்தான் அடடா! சுவைகண்டு
போட்டுப் பொசுக்கிப் புசிப்பதுவே தொழலானான்;

**மொழி பிறந்தது**

வனவிலங்கை ஓர்நாள் வளர்நெருப்பிற் சுடுங்காலை

அனல்சிறிது தாக்கியதால் ‘ஆஊ’ என் றலறிவிட்டான்

உள்ளத் துடிப்பை உணர்த்தும் ஒலிக்குறிப்பைத்
தெள்ளத் தெளிந்துணர்ந்தான் தீசுட்ட அந்நாளில்;

பக்கத்துக் காடுறைவோன் பலநாள் வருதலிலான்
புக்கான் ஒருநாள் புதுமனிதன் வரவுணர்ந்து

உள்ளத் தெழுமகிழ்ச்சி உந்தத் தலையசைத்து
மெள்ளத்தன் வாயிதழை ‘வா’வென் றசைத்துவிட்டான்;

மற்றொருநாள் வேறொருவன் மனம்வருந்தச் செயல்செய்தான்
உற்றெழுந்த சீற்றம் உந்துதலால் உள்ளுணர்ச்சி

சுற்றிச் சுழன்று சூடேறிப் ‘போ’வெனுஞ்சொல்
பட்டுத் தெறித்ததுகாண் பதறும் அவனுதட்டில்;

இவ்வண்ணம் ஓரெழுத்தால் இயலும் மொழிகண்டான்
செவ்வியநன் மொழிஎன்று செப்பும் முறையாகத்

தொகைவகையில் விரிவாக்கித் தொல்பழமைக் காலத்தே
வகைசெய்தான்; அம்மொழியே வளர்தமிழாக் காண்கின்றோம்

**தமிழ் காட்டும் உலகம்**
தனிமுதலாம் அந்தத் தமிழ்காட்டும் நல்லுலகு
[3]துனிமிகுத்த நாடெல்லாம் தொழுதேத்தும் வழிகாட்டி;

யாதும்நம் ஊரேயாம் யாவரும்நம் கேளிரென்ற
தீதில்லா இவ்வுலகைத் தெளிதமிழே காட்டிற்றுப்

போருலக வெறியர்க்குப் புத்திவர நெறிகாட்டி
ஒருலக வழிகாட்டும் உயர்மொழிதான் எங்கள்தமிழ்

என்னும்போ துடல்சிலிர்க்கும் எலும்பெல்லாம் நெக்குருகும்
உன்னும் உளங்குதிக்கும் உடலெல்லாம் தான்குதிக்கும்

இன்னும்நாம் அவ்வுலகை ஏறிட்டும் பார்த்திலமே
என்னும்போ துளம்வருந்தி இரங்கலலால் என்செய்வோம்?

இனியேனும் அவ்வுலகை இங்காக்க முற்படுவோம்
முனியாமல் அவ்வுலக முழுப்பொருளும் காண்போம்நாம்:

***யாதும் ஊரே**
யாதும்நம் ஊரென்றால் [4]ஏதிலர்தம் நாடெல்லாம்
சூதுமுறை செய்து சுருட்டி விழுங்குவதா?

யாதும்நம் ஊரென்றால் ஏதிலர்க்கு நம்நாட்டைச்
சூதுநெறி யறியாமல் சுருட்டிக் கொடுப்பதுவா?

அன்றதுதான் பேதைமையாம்; அவ்வவர்க்கு மொழியுண்டு
தொன்றுதொட்ட பண்புண்டு சொல்வதற்கு நாடுண்டாம்

இவ்விவற்றால் பகையின்றி எதிர்ப்பின்றிப் பிறவற்றை
வவ்வும் மனமின்றி வாழும் நெறியறிந்து

நட்புறவால் உளமொன்றி நடப்பதுவே அதன்பொருளாம்
பெட்புற்றுத் தமிழ்காட்டும் இவ்வுலகைப் பேணுவம்நாம்;

**யாவரும் கேளிர்**
அனைவரும்நம் கேளிர்என்ற அம்மொழியும் அப்படியே,
இனம்பலவாய் வாழ்ந்தாலும் இறுமாந்து பகைகொண்டு

விலங்கினத்தின் கீழினமாய் விளையாடித் திரியாமல்

குலங்கருதி மேலென்றுங் கீழென்றுங் குறியாமல்

அவ்வவர்தம் நெறிபோற்றி அன்பொன்றே குறியென்று
செவ்வியநன் மனங்காத்துச் செயலறமும் மிகக்காத்துத்

தோழமையால் ஒன்றாகித் தூய்மையொடு உறவாகி
வாழ விழைகஎன வகுத்ததுவே அதன்பொருளாம்

சாதிச் சழக்குண்டு சமயப் பிணக்குண்டு
மோதிப் பகைக்க முரண்பட்ட [5]அனைத்துண்டு

கீழான இக்குணத்தில் கேளிர் எனுமெண்ணம்
பாழாம் நிலையன்றிப் பண்படுமோ நீர்சொல்லும்!

பேரறிவு படைத்தோம்நாம் பேசுகிறோம்! பகுத்துணரும்
ஓரறிவு தனையிழந்தோம் உயிர்க்கின்றோம் அந்தந்தோ!

ஊர்காத்தும் நகர்காத்தும் உயர்நாடு தனைக்காத்தும்
பார்காத்தும் யாதும் ஊர்ப் பண்புணர்ந்து மிகக்காத்தும்

தற்காத்து தமிழினமுங் காத்துலகங் கேளிர்என்ற
சொற்காத்தும் [6]நல்லறிஞர் சூழ்துணையால் நாம்வாழ்வோம்;

**தைத்திருநாள்**
வளைத்த இருள்கிழித்து [7]வாடைப் பனிநீங்க
முளைத்த [8]இளம்பரிதி முகங்கண்டு வணங்கிடுவோம்

குழைத்தெடுத்த பொங்கலுண்டு குலவிக் களித்திடுவோம்
உழைப்பின் பயன்தருநாள் ஊரெல்லாம் புதுக்கும்நாள்

தைத்திருநாள் இத்திருநாள் தமிழ்காட்டும் நல்லுலகில்
வைத்துமனம் வாழ்வோம் மகிழ்ந்து.

---

**பாடற்குறிப்பு:–** 14–1–1957 அன்று, திருச்சி வானொலி நிலையக் கவியரங்கில், ‘தமிழ் காட்டும் நல்லுலகு–யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற தலைப்பில் பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–**
1.செந்தமிழ்க் காவலர் – அரங்கத் தலைவர் அ.சிதம்பரநாதனார்.
2.பரம்பரையைத தந்தவர் – அன்று கவியரங்கிற் கலந்து கொண்ட பாவேந்தர் பாரதிதாசனார். 3.துனி – பகைமை.
*தமிழன் என்றோர் இனமுண்டு, தமிழ்நாடென்றொரு நாடுண்டு என்று நாம் உரைத்தால், சிலர், ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று கூறிய தமிழன் இவ்வாறு குறுகிய நோக்கங் கொண்டு, பிரித்துப் பேசலாமா? என்று நம்மை மடக்கப் பார்ப்பர் – அவர்கட்கு நல்ல விளக்கந் தருகிறது இப்பாடல்.

4.ஏதிலர் – அயலவர். 5.அனைத்துண்டு – அனைத்தும் உண்டு என்பதிலுள்ள உம்மை தொக்கது. 6.நல்லறிஞர். 7.வாடை, 8.இளம்பரிதி என்னுஞ் சொற்களின் குறிப்பை உணர்ந்து கொள்க.

## 30. தமிழ் வாழ்வு
**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

தமிழ்பழுத்த சான்றோரும் மன்னர் தாமும்
  சங்கத்தால் தமிழாய்ந்த கூடல் தன்னில்
தமிழ்வளர்க்கும் எழுத்தாளர் மன்றத் துள்ளோர்,
  சாற்றினிமைக் கவிபுனையும் கவிஞர் கூட்டம்,
தமிழ்த்துணையே கடவுள்துணை என்றி றைஞ்சும்
  [1]தவமுனிவர், [2]நாவலராம் எங்கள் தோழர்,
தமிழ்திளைக்கும் மதுரைநகர்ச் சான்றோர் மாதர்
  அனைவர்க்குந் தலைதாழ்த்தி வணங்கு கின்றேன் 1

**நம்நாடு**
*தென்பொதிய மலைப்பிறந்து முல்லை தோய்ந்து

தெருவெல்லாம் மணம்பரப்பும் தென்றல் நாடு;
தொன்மைமிகு கடல்மூழ்கிக் குளித்தெ டுத்துத்
தூயமணி முத்தாரம் அணியும் நாடு;
வன்மைகொடு எவர்வரினும் போர்வாள் தாங்கி
வாகையுடன் முரசொலியை முழக்கும் நாடு;
மென்மைமிகு தமிழ்எழிலை வளர்க்கும் மன்றம்
மேலோங்கும் நம்நாடு தமிழ்நாடு 2

**இன்றைய நிலை**
இந்நாட்டைத் திராவிடநா டென்றுஞ் சொல்வர்
இயல்புடைய நல்லறிஞர்; இந்த நாட்டில்
முன்கூட்டி மூத்தகுடி தமிழர் என்போர்
நாகரிக முதிர்ச்சியினில் வாழ்ந்த நல்லோர்
இன்பூட்டும் தமிழ்வாழ்வைப் பாடுங் காலை
இதயத்தால் பூரித்தேன்; ஆனால் இன்று
பின்பாட்டுப் பாடுகிற தமிழன் வாழ்வைப்
பேசுதற்கும் நாணுகின்றேன் கூசு கின்றேன் 3

**இருவேறு வாழ்வு**
உயிர்பெரிதா**?** உன்மானம் பெரிதா**?** என்றால்
உயிர்சிறிது மானந்தான் பெரிதே என்பான்;
உயிர்கொடுத்தும் தன்மானம் ஒன்றே காப்பான்
ஒருவாழ்வே தமிழ்வாழ்வு; குறளின் வாழ்வு;
துயர்வருமேல் மானத்தை விலையாக் கூறித்
துணிமணிகள் உணவுவகை நிறையப் பெற்று
வயிறுவளர்க் குந்தொழிலால் உயிரைப் பேணி
வாழ்வதுவா தமிழ்வாழ்வு**?** மனுவின் வாழ்வு 4

தன்னினத்தின் ஒருமகனைத் தமிழன் தன்னைத்
தருக்குடையான் பிறநாட்டான் இழித்து ரைத்தால்
என்னினத்தை இகழ்ந்தவனை விட்டு வையேன்
என்றெழுந்த மறவாழ்வே தமிழ வாழ்வு;
தன்னலத்தைத் தனிப்புகழைப் பணத்தைக் காசைத்
தக்கபடி காப்பதற்குச் சூழ்ச்சி செய்து
தன்னினத்தை மாற்றார்க்குக் காட்டிக் காலைத்
தாங்குவதோ தமிழ்வாழ்வு**?** ஈன வாழ்வு; 5

ஒருகடவுள் ஒருசாதி என்ற பாங்கில்
ஓரினமாய், அயலவரும் உறவாய் நண்பாய்ப்
பெருமையுடன் தமிழ்மொழியை நாட்டைப் பேணிப்
பீடுபெற வாழ்வதுவே தமிழ வாழ்வு;
பெருகுதொகைக் கடவுளரும், உயர்வு தாழ்வு
பிறவியினால் பேசுகின்ற எண்ணில் சாதிக்
குறுமனமும், பேதைமையும் அடிமைப் பண்பும்
கொள்வதுவோ தமிழ்வாழ்வு**?** கொடுமை வாழ்வு 6

**எது தமிழ் வாழ்வு**
நம்பெயரில் தமிழிருத்தல், ஆடல் பாடல்
நாம்காணும் நிழற்படங்கள் தமிழைக் காட்டல்,
செம்மையுறு திருமணத்தில் தமிழை ஓதல்,
செய்தித்தாள் நற்றமிழை எழுதிக் காட்டல்,
நம்மினத்தார் உழைப்பிலுருப் பெற்ற கோவில்
நல்லதமிழ்ப் பாட்டொலியே முழங்கச் செய்தல்,
நம்பிள்ளை பயில்கல்வி தமிழாய் நிற்றல்,
நாடெல்லாம் தமிழாயின் தமிழ வாழ்வு 7

எத்துணையர் தமிழ்ப்பெயரைத் தாங்கி யுள்ளார்**?**
எவரேனும் ஓரிருவர் தமிழ்ப்பேர் சொன்னால்
பித்தரென ஏசுவதும் கட்சி சார்த்தித்
தி.மு.க. என்றிகழ்ந்தும் பேசல் கண்டோம்;
முத்தமிழும் தி.மு.க. சொத்தா என்ன**?**
[$]முளைத்தபிற கட்சிகளில் தமிழர் இல்லை**?**
கொத்தடிமை மனப்போக்கால் அயன்மொ ழிக்கே
கும்பிட்டுத் திரிவதுவோ தமிழ வாழ்வு**?** 8

**தமிழ் உண்டா?**

வானொலியில் இசையரங்கில் தமிழ்தான் உண்டா?
வளங்கொழிக்கும் நிழற்படத்தின் பேச்சில் பாட்டில்
தேனமிழ்தத் தமிழுண்டா? பழிக்கக் கண்டோம்;
தெளிவின்றி ஒன்றிரண்டு தமிழைச் சொல்லும்;
ஏனென்று கேட்பதற்குத் தமிழர் உண்டா?
எடுத்துரைப்பார்க்(கு) அத்துறையில் இடமே யில்லை!
[3]கானின்ற அத்திப்பூ பூத்தாற் போலக்
காண்கின்றோம் ஒன்றிரண்டு தமிழ்ப்ப டங்கள் 9

வாழ்த்தொலிகள் மிகுகின்ற திரும ணத்தில்
வடமொழியாம் செத்தமொழி சுமந்து செல்லும்
[4]காழ்ப்புமிகும் மொழிப்பகைவர் புலம்பல் நன்றோ?
கண்கெட்டுத் திரிவதுவோ? வேற்றி னத்தைத்
தாழ்த்துகிறேன் எனக்கருதேல்; அவ்வி னத்தார்
தமிழ்த்தலைவர் தலைமைகொள மணங்கொள் வாரோ?
தாழ்த்துவது நாமல்லேம்; நம்மி னத்தைத்
தாழ்த்துகிறார்; தாழ்வதுவோ தமிழ வாழ்வு? 10

செய்தித்தாள் நடத்திவரும் திருக்கூட் டத்தார்
செய்துவரும் மொழிக்கொலையை நினைத்தால் நெஞ்சம்
[5]வெய்துயிர்த்துச் சாவதன்றி வழியே யில்லை;
வேண்டுமெனக் கொலைசெய்யும் இதழ்கள் தம்மைக்
கொய்தெறிய மனமின்றி நாமே காசு
கொடுத்தவற்றை வளர்க்கின்றோம்; துணிந்தெ ழுந்து
செய்யதமிழ் இதழ்நடத்த வருவோர்க் காணின்
சிரித்தொதுக்கி விடுவதுவோ தமிழ வாழ்வு? 11

**தமிழும் கடவுளும்**

சிவபெருமான் மனைவியுடன் முருகன் என்னும்
சிறுவனையும் உடன்கொண்டு மதுரை நாட்டில்
உவகையொடு தமிழ்மொழியின் சுவையைக் கூடி
உண்ணுதற்கே அவதரித்தார் என்பர் சைவர்;
தவமுனியாம் திருமழிசை பாடல் கேட்டுத்
தண்டமிழின் பின்சென்றான் திருமால் என்பர்;
இவரெல்லாம் சமயத்தில் தமிழைக் கூட்டி
இனிதாகப் பேசிடுவார் ஏற்றங் கொள்வார் 12

கோவிலுக்குள் தமிழ்மொழியைப் புகுத்தல் காணின்
கொதித்தெழுவார் மேற்படியார்; முதலில் நின்று
தேவனுக்குத் தமிழ்சொல்லல் தீமை என்பார்:
தேவருக்குப் [6]பாடையுண்டு அதைவி டுத்துச்
சீவனிலாத் தமிழ்சொன்னால் செத்தோம் என்பார்;
சிவன்மாலும் செத்தொழிவார் என்பார் அந்தோ!
கூவுகிற இக்குரற்குச் செவிகொ டுத்துக்
குலைவதுவோ தமிழ்வாழ்வு? ஆய்ந்து சொல்வீர்! 13

**அரசியல் மொழியில்**

பொதுமொழியாம் எனும்பேரால் வளமே யில்லாப்
புதுமொழியைச் சிறுமொழியைப் பள்ளி தோறும்
புதுவழியில் புகுத்துகின்றார் இந்த நாட்டில்!
புன்மொழியின் அடிமைகளாய்ப் புத்தி கெட்டுக்
கதியற்றுப் போவதுவோ தமிழர் எல்லாம்?
கையற்றுப் போவதுவோ தமிழின் செல்வம்?
மதுநிகர்த்த செந்தமிழின் தூய்மை எல்லாம்
மாய்வதுவும் தேய்வதுமோ தமிழ வாழ்வு? 14

**எல்லைக்கோட்டில்**

கயலொடுவில் புலிக்கொடியை இமயக் கோட்டில்
கட்டிஅதன் எல்லைவரை தமிழர் ஆண்டு
வியனுலகில் புகழ்நாட்டி வீர வாழ்வில்
வியப்பூட்டி வாழ்ந்ததுவே தமிழ வாழ்வு;

அயலவர்க்கு வேங்கடத்தைப் பறிகொ டுத்தும்
ஆண்மையொடு வாய்வீரம் பேசி நின்று
செயலற்றுத் தேவிகுளப் பகுதி தந்து
தேம்புவதே இன்றுள்ள தமிழ வாழ்வு 15

**இலக்கியத் துறையில்**

பாண்டியநன் னாட்டகத்துச் சங்கங் கண்டு
பாவேந்தர் கோவேந்தர் ஒன்று கூடி
ஈண்டுபுகழ்த் தமிழாய்ந்து மொழியைப் பேணி
இலக்கியங்கள் படைத்ததுமுன் தமிழ வாழ்வு;
கூண்டிலுறு மொழியாக்கிக் கொடுமை செய்து
குறைமதியர் காவலராய்க் கூடி நின்று
வேண்டியதை இலக்கியமென் றெழுதிக் கொட்டி
விளம்புவதே இன்றுள்ள தமிழ வாழ்வு 16

**போர்த்துறையில்**

கைவேலைக் களிற்றின்மேற் பாய்ச்சி நின்று
கடுகிவரும் வேழத்தை எதிர்க்க வேண்டி
மெய்வேலைப் பறித்தெடுத்து நகைத்து நின்று
மேவாரை வென்றதுதான் தமிழ வாழ்வு;
மெய்வீரன் ஒருவனுடன் எதிரில் நிற்க
மிகநடுங்கி மரங்களிடை மறைந்து நின்று
பொய்வீரங் காட்டுகிற புன்மை யெல்லாம்
புகழ்மிக்க தமிழ்வாழ்வோ? வேறு வாழ்வாம் 17

**கற்பு நெறியில்**

ஐவருக்குப் பத்தினியாய் இருந்துங் கூட
அயலான்மேல் ஆசையுள தென்று ரைத்த
மைவிளைக்கும் கண்ணுடையாள் கற்பின் போக்கு
மாண்புடைய தமிழ்வாழ்வா? வெட்கம் வெட்கம்!
கைவிளைத்த பொருளெல்லாம் பரத்தைக் காக்கிக்
கணவனவட் பிரிந்திருந்தும் தனது நெஞ்சில்
மொய்விளைக்கும் நிறைகாத்து வாழ்ந்த எங்கள்
முன்னையவள் கற்பன்றோ தமிழ வாழ்வு! 18

கொலையுண்டான் காதலன்தான் என்ற செய்தி
கூர்வேலாய்த் தைத்தலுமே செல்வ மெல்லாம்
நிலையுண்ட அறச்செயலுக் காக்கித் தூய
நெறிநின்றாள் மாதவித்தாய்! விஞ்சு காம
வலையுண்ட இந்திரனைத் தழுவி நின்ற
வடிவழகி அகலிகையும் மேன்மை பெற்றாள்,
துலைகொண்ட கோல்போல ஆய்ந்து காணின்
தூயதமிழ் வாழ்வுதனைத் தெரிந்து கொள்வீர் 19

**ஒருமை கொள்க!**

அரசியற்கும் பொருளியற்கும் சாதி கட்கும்
அப்படியே மொழியியற்கும் ஒவ்வோர் கட்சி
பரவிவரக் காண்கின்றோம், ஒன்றுக் கொன்று
பலங்கொண்டு தாக்குவதும் காணு கின்றோம்
விரவியிவை வளருவதால் தமிழர் வாழ்வில்
விளைபயன்தான் ஒன்றுண்டோ? அனைத்துங் கூடி
ஒருநிலையாய் ஓரமைப்பாய் இயங்கக் கண்டால்
உளதாகும் தமிழ்வாழ்வு; இன்றேல் தாழ்வே 20

**காட்டுக வீரம்!**

வேலெடுத்துப் போர்தொடுத்த வீரம் எங்கே?
வெங்குருதி வாளெங்கே? தோள்கள் எங்கே?
கோலெடுத்த பேரெல்லாம் ஆள வந்தார்
கொட்டாவி விட்டபடி தூங்கு கின்றாய்!
மாலுடுத்த தமிழ்மகனே! மானம் எங்கே?
மயங்காதே விழி! எழு! பார்! உலகை நோக்கு!
கால்பிடித்து வாழ்வதுவோ தமிழ வாழ்வு?
கானத்துப் புலிப்போத்தே வீரங் காட்டு! 21

**பாடற்குறிப்பு:–** 28–9–1958 அன்று, மதுரை எழுத்தாளர் மன்றக் கவியரங்கில் பாடப்பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–**

1. தவ முனிவர் – அரங்கில் இருந்த குன்றக்குடி அடிகளார்.
2. நாவலர் – அரங்கில் இருந்த திரு. நாவலர் நெடுஞ்செழியன்.

*முல்லை, தென்றல், முத்தாரம், போர்வாள், முரசொலி, எழில், மன்றம், நம்நாடு, தமிழ்நாடு என்னும் இதழ்களின் பெயர்களும் தோன்றப் பாடியது. $முளைத்த பிற கட்சிகளில் தமிழர் இல்லை என்பது வினாவும் விடையுமாக அமைந்துள நயம் காண்க. 3. கான் நின்ற – காட்டில் நின்ற. 4. காழ்ப்பு – முற்றிய. 5. வெய்துயிர்த்து – பெருமூச்சு விட்டு. 6. பாடை – பாஷை என்பதன் திரிபு.

## 31. திராவிடநாட்டின் வளம்

(நூல்:–கவியரங்கில் முடியரசன்)

கலிவெண்பா

நீலக் கடலில் நிமிர்ந்தெழும்பும் பேரலைகள்
கோலத் தமிழ்கேட்கக் கூடிவரும் நீள்கரையில்

காணுந் திருநகராம் காரைக்கால் மூதூரில்
பேணும் படியமைந்த பேரரங்க மாநாட்டில்

முத்தமிழாம் தேன்பருக முன்னித் திரண்டெழுந்தே
இத்திடலில் மொய்க்கும் இருபாலீர்! என்வணக்கம்

ஆரியப் போர்கடக்க ஆர்க்கும் [1]நெடுஞ்செழிய!
வீரியப் போர்தொடுக்கும் வெற்றித் திராவிடர்காள்!

நாட்டின் வளமெல்லாம் நாடித் தொகுத்தெடுத்துப்
பாட்டின் வளத்தாற் படைக்கின்றேன் இவ்வரங்கில்

எல்லை வளம்
கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே இவ்வுலகில்
முற்றோன்றி மூத்த குடியுடைய தொன்மையதாய்;

கையால் கருத்துரைத்த காலங் கடந்தேகப்
பையவே நாவசைத்த பாங்கில் நடைபயின்று,

பண்பாடிக் கூத்தாடிப் பாரெங்கும் சென்றோடிப்
பண்பாடு காட்டிப் பயிற்றுவிக்கும் தாயகமாய்த்,

தெற்கில் குமரியொடு சேரா வடதிசையில்
நிற்கும் ஒருவிந்தம் நீள்கடல்கள் கீழ்மேலாய்,

எந்நாளும் மாறா இயல்பமைந்த எல்லையதாய்,
இந்நான்கின் எல்லை யிடைவிரிந்த நீள்பரப்பாய்க்,

கன்னடமாய் ஆந்திரமாய்க் கண்குளிரும் கேரளமாய்
இன்னவற்றின் தாயாய் இலங்கும் தமிழகமாய்க்,

கூடும் திராவிடமாய்க் கோலோச்சும் தென்னகமே
நாடி வருகின்ற நம்நாடு பொன்னாடு;

புனல் வளம்
நாடா வளத்ததுவாய் நாடி வருவோர்க்குக்
கோடா மனத்தால் கொடுக்கும் இயல்புடைத்தாய்த்,

தள்ளா விளைவயலில் தாளாற்றும் ஏருழவர்
கொள்ளா துழைத்துக் குவிக்கும் வளத்ததுவாய்,

வான மழைநீரும் வற்றாத ஊற்றகமும்
கான மலையுதித்துக் காக்கின்ற ஆறுகளும்

ஆயபுனல் மூன்றாலும் ஆக்கும் பெரும்பொருளால்
தேயமெலாம் வேட்கின்ற சீர்மைத் தகைமைத்தாய்,

வள்ளுவம் காட்டும் வளமெல்லாம் தன்னகத்துக்
கொள்ளும் திருநாடே கூட்டாட்சித் தென்னாடு;

குறிஞ்சி வளம்
நீளும் தொடர்மலைகள், நெஞ்சம் கவருமெழில்
ஆளும் உயர்மலைகள், கோடை அனல்போக்கும்

வண்ணக் குளிர்மலைகள், வாய்க்கும் பழமலைகள்,
எண்ணக் குறையாமல் எத்துணையோ ஈங்குண்டு;

தென்னாட்டார் வீரம் தெரியாமல் போர்தொடுத்து
[2]வெந்காட்டி மாற்றுருவில் ஓடிமறை வீரரைப்போல்

ஓங்கும் மலைமேல் உராயும் முகிற்கூட்டம்
தேங்கிக் குளிர்தாக்கத் தேய்ந்தே உருமாறி,

நீராகி, ஆறாகி நிற்காமல் ஓடிஒரு
பேராழி யுள்மறையும் பெற்றிமையும் ஈங்கிருக்கும்;

உச்சி மலைவெடிப்பின் உள்ளிருந்து போந்துபல
பச்சிலைகள் தண்மலர்கள் பற்றிக் கொடுவந்து

தத்தித் தவழ்ந்து தடைசெய்யும் பாறைகளைக்
குத்திப் பிளந்து குதித்தோடி மேலிருந்து

தார்முரசம் என்னத் தடதடவென் றார்த்திரங்கிக்
கார்முழக்கம் அஞ்சக் கடுகிவரும் பேரருவிக்

கூட்டம் பலவுண்டு; கூடி முகிலினங்கள்
காட்டகத்து மேய்வனபோல் காணும் களிறீட்டம்;

தேக்கும் அகிலும் திரண்டுருண்ட சந்தனமும்
காக்கும் குளிர்தென்றல் கார மிளகுடனே

ஏலம் இவைபோன்ற எஞ்சா வளஞ்சுரந்து
காலம் முழுவதும் களிப்பிக்கும் நம்நாடு;

முல்லை வளம்
கூர்த்துக் கிளைத்தெழுந்த கொம்புடைய கொல்லேற்றைச்
சேர்த்துப் பிடித்துத் திணறவைக்கும் காளையர்கள்

வீரவிளை யாட்டால் விரும்பும் குலமகளைச்
சேர மணமுடிக்கும் செம்புலத்துக் காடெல்லாம்,

இல்லை எனவுரையா தீத்துவக்கும் வள்ளலைப்போல்
முல்லை முறுவலித்து மொய்க்கும் சுரும்புகளுக்

கின்சுவைத்தேன் உண்பித் தினிதிருக்கும் முல்லைநிலம்
புன்செய்ப் பயிர்வளங்கள் பூரிக்கும் கானகத்துக்

[3]கோவலர்தம் செவ்வாய்க் குழலோசை கேட்டவுடன்
ஆவலுடன் ஓடிவரும் ஆனிரைகள் சேர்நாடு;

மருத வளம்
சேற்றில் உழுது சிறுநெல் விதைதூவி
நாற்றுப் பிடுங்கி நடுகாலில் நட்டுக்

களையெடுத்து நீர்பாய்ச்சிக் காப்பதனால் நன்கு
விளைகழனிச் செந்நெல் வியனுலகைக் காக்குமகம்;

செங்கரும்புச் சாறெல்லாம் சேர்ந்தோடிப் பக்கத்துப்
பொங்கிவரும் வாழைமரப் பாத்தி புகுவதனால்

காய்க்குங் குலையில் கரும்பினிமை தானேறும்;
வாய்க்குங் கமுகினங்கள் வானுயர்ந்த தென்னைஎன

எண்ணும் படிவளரும்; எவ்விடத்துஞ் சோலைவளம்,
உண்ணும் பழமரங்கள் ஊரெல்லாம் தோன்றுதலால்

காணும் இடமெல்லாம் கண்குளிரும் காட்சியதாய்த்
தோணும் மருதவளம் சூழ்ந்திருக்கும் இந்நாடு;

நெய்தல் வளம்
முப்பாலும் ஆழியுண்டு மூழ்கியதன் உட்சென்றால்
தப்பாமல் முத்துண்டு சார்ந்த பவழமுண்

டாறு சுவையுள் அரிய சுவையாகக்
கூறுமுயர் உப்புக் கொழிக்கும் அளமுண்டு;

நாடெல்லாம் சுற்றி நலங்கொழிக்கும் வாணிகத்தால்
ஏடெல்லாம் ஏத்த எழிற்கலங்கள் ஓட்டுதற்

கேற்ற துறைமுகங்கள் எத்துணையோ ஈங்குண்டு;
போற்றும் படியாய்ப் புவியிற் பெரும்பரப்பாய்

ஓதுங் கடற்கரைகள் ஒன்றிரண்டாம் அன்னவற்றுள்
ஈதும் ஒருகரையென் றெண்ணத் தலைநகரில்

சேருங்கரையுண்டு செந்தமிழர் நாகரிகம்
கூறுங் துறைமுகங்கள் கூடிக் கிடப்பதுண்டு;

நெய்தல் வளத்தால் நெடுநாளாச் செல்வமழை
பெய்யும் பெருநாடு பேணும் திருநாடு;

கனிப்பொருள் வளம்
தென்னாடு பொன்னாடாய்ச் செல்வ வளங்கொழிக்க
இந்நாடு நெய்வேலி என்னுமூர் பெற்றுளது

மண்ணுக்குள் பொன்விளைத்து மாண்புயர்ந்த தென்னாட்டில்
எண்ணெய்க்கும் நல்ல இரும்புக்கும் பங்குண்(டு)

அணுவாற்றல் செய்யும் அரும்பொருளும் உண்டு
நுணுகின் கனிப்பொருள்கள் நூறுண்டு நம்நாட்டில்;

வள நாடு
ஆற்றுப் புனலும் அருகாது பொங்கிவரும்
ஊற்றுப் புனலும் உவந்தூட்டும் நீர்நாடு

கற்புவளம் வீரவளம் காட்டுதற்குக் கண்ணகியின்
பொற்புருவம் அஃதொன்றே போதுமன்றோ? மேலான

ஓவியமும் கட்டடமும் ஓங்குபுகழ்ச் சிற்பமுடன்
காவியமும் காட்டும் கலைவளங்கள் சேர்நாடு

சோற்றுவளம் ஆற்றுவளம் சொல்லரிய கல்விவளம்
மாற்றுயர்ந்த தங்கவளம் மாசில்லா முத்துவளம்

எல்லைவளம் மக்கள்வளம் இவ்வளவும் பெற்றுயர்ந்து
தொல்லுலகில் மூத்துத் துளிர்க்குந் திருநாடாம்;

ஏன் தாழ்ந்தது?
இந்த வளநாட்டார் ஏழைகளாய்க் கூலிகளாய்
நொந்து பிறநாடு நோக்கிப் புகுவதுமேன்?

நாட்டு வளமெல்லாம் மாற்றான் சுரண்டிநமை
ஒட்டாண்டி யாக்கி ஒடுக்கியதா லன்றோ?

மடக்கும்பிடிப்பகற்றி வாழ்வோமேல் இங்குக்
கிடைக்கும் வளமெல்லாம் கேடின்றி நாம்பெறுவோம்;

வாகைசூட வாரீர்!
நாட்டுக்கு வேண்டும் நலம்பெற்ற நம்நாட்டை
வேட்டைக் களமாக்கும் வேற்றுப் புலத்தார்க்குத்

தாள்பணிந்து மாளாதீர்! தாவிப் புறப்படுவீர்!
வாழ்விழந்து போகாமல் வாகை பெறவாரீர்!

தன்னாட்சி பெற்றுத் தனியரசாய் வாழ்ந்திடுவோம்
பன்னாட்டுப் பேரவையில் பங்குபெற்று வாழ்வோம்நாம்

வந்த சிறுமொழிகள் வாழ வழிவகுக்கும்
சந்ததிகள் நம்நாட்டில் சேராமல் செய்திடுவோம்

கோழைகளாய் மோழைகளாய்க் கூன்விழுந்த நெஞ்சினராய்
ஏழைகளாய் வாழ இனியும் கருதாமல்

கூடித் திரண்டெழுவீர்! கொட்டிடுக போர்முரசம்
நாடித் திருநாட்டில் நம்மாட்சி நாட்டிடுவோம்

வாழ்க திருநாடு வாழ்க நமதுரிமை
வாழ்கநம் நாட்டின் வளம். 128

---

**பாடற்குறிப்பு:--** 28--9--1958 அன்று, மதுரை எழுத்தாளர் மன்றக் கவியரங்கில் பாடப்பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:--**
1.அரங்கிலிருந்த நாவலர் நெடுஞ்செழியன்.
2. வெந்காட்டி -- புறங்காட்டி. 3. கோவலர் -- ஆயர்.

## 32. பாரதியார்

**(நூல்:--கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

**தமிழ் வாழ்த்து**

கவிதைஎனுங் காதலிபால் உன்னைப் பெற்றேன்
  கண்ணம்மா! தமிழ்மகளே! முத்த மிட்டேன்
கவிவெறியோ கள்வெறியோ அறிய கில்லேன்
  கனவுலகில் பறக்கின்றேன் தரையில் நில்லேன்;
செவிபொருந்தும் விழிகண்ணீர் சிந்தக் காணின்
  செங்குருதி பீறிட்டென் னெஞ்சிற் கொட்டும்
புவிபுகழும் நீகலங்கப் பார்த்து நில்லேன்
  போர்தொடுப்பேன் உனைக்காப்பேன் வாழ்த்தி நிற்பேன் 1

கலிவெண்பா

**முன்னுரை**

நாடி வருவோர்க்கு நற்கல்வி ஊட்டுதற்குக்
கூடி வருமுணர்வால் கோவில் இடமெல்லாம்

பள்ளித் தலமாக்கிப் பாமரர்க்கும் எழையர்க்கும்
அள்ளிக் கொடுக்கும் அறிவுப் பணிபுரியும்

குன்றா வளநல்கும் குன்றக் குடிமலையில்
ஒன்றும் [1]மலைவாழை ஓங்குத் [2]தலைவாழை

செந்தமிழே நெஞ்சிற் சிவமாக்கும் [3]செவ்வாழை

இந்தச் சுவைவாழைக் கென்வணக்கம் கூறுகின்றேன்;

முன்னைப் பழமரங்கள் மூதறிவால் வாழ்மரங்கள்
மின்னல் இடிபுயலால் வீழாமல் நிற்குமரம்

பற்பலவாய்ச் சூழும் பழவாழைத் தோட்டத்துள்
பொற்புடனே நற்கனிகள் புக்குப் பறித்தெடுத்து

நல்கும் கவிகாள்! கனியின் நலம்துய்க்க
மல்கும் செவியுணர்வின் மாமணிகாள் என்வணக்கம்;

**வாழையடி வாழை**
சங்க இலக்கியங்கள் சாகாக் கனிநல்கிப்
பொங்குகின்ற வாழைமரப் பூங்கா எனவுரைத்தார்

மூவாத் தமிழ்வளர்க்கும் மு.வ. அவர்மொழியை
நாவார வாழ்த்துகிறேன்; நாடு நலங்கொழிக்க

ஆயிரம்பல் லாயிரமாய் அவ்வாழை ஒவ்வொன்றும்
ஆயினவாம்; பாரதியும் அவ்வழியில் ஓர்வாழை;

பாரதியாம் வாழை பயந்த அடிவாழை
பாரதி தாசனென்று பாருரைக்கும்; இவ்வாழை

எண்ணில் அடங்கா இளம்வாழை பெற்றதுண்டு;
நண்ணி வளர்வாழைத் தோட்டத்து நானொருவன்;

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டத்துள்
ஏழையேன் நிற்க இடம்தந்த என்தமிழ்த்தாய்

வாழ்கஎன வாழ்த்தி வணங்குகிறேன்; என்குலமும்
வாழ்கஎன வாழ்த்துகிறேன் வாழ்க கனியனைத்தும்;

**கவிக்கனி**
பாவல்ல வாழை பழுத்தகனி துய்ப்போர்க்கு
நாவெல்லாம் இன்சுவையாம், நாளெல்லாம் நற்சுவையாம்,

சொல்ல இனிக்கும், சுவைக்க இனித்திருக்கும்,
மெல்ல நினைக்க மிகஇனிக்கும், மீண்டினிக்கும்,

கேட்கச் செவியினிக்கும், நாடோறும் கேட்பதற்கு
வேட்கும் படியினிக்கும், வேண்டும் பொழுதினிக்கும்,

இன்றினிக்கும், நாளைக் கினித்திருக்கும், இக்கனியே
என்றும் இனிக்கும்; இதனினிப்புக் கொப்புண்டோ?

உண்ண மிகஇனிக்கும் உண்டால் தெவிட்டாது;
வண்ணம் கனிந்திருக்கும் வாடாது நின்றிருக்கும்;

**பாரதி வாழை**
பாரதியாம் இவ்வாழை பாக்கனிகள் உண்பிக்கப்
பாரறிய எட்டைப் பதிமண்ணில் தோன்றியது;

மண்ணின் வளத்தால் மறமிக்க காவலரால்
உண்ணுநன் னீரால் உரமோ டுயருங்கால்

சென்னை நகர்க்குச் சிலர்கொண்டு சென்றார்கள்;
நன்னீரா வார்த்தார்கள்? நாளும் திருக்கூவப்

புன்னீரால் பூசை புரிந்தார்கள்; ஆனாலும்
[4]முன்னீர்மை போகவில்லை மும்மடங்காக் கண்டதனால்

ஆங்கிலத்தார் கண்பார்வை அவ்வாழை மேற்படலால்
தீங்குளத்தார் வஞ்சத் திருடர் அறியாமல்

பாண்டிப் பதியில் பதித்துக் கடல்நீரை
வேண்டி இறைத்திறைத்து வீரச் சுவைமாற்றக்

கூடி உழைத்தார்கள்; கூடும் புதுவையில்தான்
நாடிவரும் புத்துலக நல்லாசான் நம்ஆசான்

ஈடில் புரட்சி எழிற்கவிஞன் என்னுமொரு
பாடல் தருவாழை பாருக் களித்ததுவே;

**பயனும் சுவையும்**
வாழையிலை காய்கனிபூ பட்டை வளர்தண்டு
கீழே யுறுகிழங்கு கேடின்றிப் பயனுறல்போல்

பாவல்ல வாழை பயக்கின்ற அத்துணையும்
[5]ஓவின்றி மக்கட் குறுபயனை நல்குவதாம்;

காதற் சுவையுண்டு கல்விச் சுவையுண்டு
தீதற்ற வீரச் சுவையும் தெரிவதுண்டு

பத்திச் சுவையும் பழமை தரும்சுவையும்
மெத்தப் புதுமை விரும்பும் சுவையும்

புரட்சிச் சுவையும் புகுந்தபகை வர்க்கு
மருட்சிச் சுவையும் வழங்குவது நம்வாழை;

**சுவைகாணார்**
சாதிச் சழக்காலே சாப்பிடுவோர், மேலுலகம்
ஓதிப் பிழைப்பவர்கள், ஓரா யிரந்தெய்வம்

உண்டென் றலைந்திடுவோர், ஊரேய்த்து வாழ்ந்திடுவோர்
உண்டாற் சுவைநல்கா திவ்வாழை உண்மையிது;

**அகப்பகைவர்**
பாரதியின் பேர்சொல்லிப் பாங்குபெறும் நல்லன்பர்
வீரமிகு பாடல்களை வெட்டிவிட்டுக் காட்டுகின்றார்;

சூரன்முகத்திற் சுருண்டுவளர் மீசைதனில்
ஓரங் குறைத்தால் உருவமது பாரதியோ?

தாள்குறைத்து மேல்குறைத்துத் தண்டொன்றே கைப்பற்றி
ஆள்பிடித்து வாழைஎன ஆர்க்கின்றார் சூதுடையார்;

**பாரதி வந்தான்**
வீர உருக்குறைத்து வேடிக்கை காட்டுகின்ற
பேரின் செருக்கொழிந்து தீயாதோ? என்றேன்நான்;

‘தீயுமடா! தீயுமடா! தீப்பகைவர் தற்செருக்கு;
நீயுமெழு! நீயுமெழு! நேர்நின்று போர்தொடுப்பாய்’

என்ற வுரைகேட்டேன் ஏறனைய பாரதியும்
ஒன்றி எனதுமனத் துள்ளே நகைத்துநின்றான்;

[$]கானத்து வாழ்புலியாய்க், கத்துபுனல் நீந்திவரும்
மீனத்தில் நற்கயலாய், மேல்நோக்கிப் பாய்கின்ற

அம்பிருக்கும் வில்லாகி ஆரிருளை ஓட்டுகின்ற
செம்பொனிள ஞாயிறெனச் செக்கச் சிவந்துநின்றான்;

நின்றானை நோக்கி நிலையெல்லாம் பேசுகநீ
என்றேனை நோக்கி ‘இளையவனே! என்தம்பி!

உன்னுளத்தே நின்றிங்கே ஊதுகின்றேன் வெண்சங்கம்
முன்னெழுந்து போர்தொடுக்க முற்படுநீ! ஒன்றுரைப்பேன்’

என்றூதும் சங்கொலியை என்னால் இயன்றவரை
நின்றூது கின்றேன் நிமிர்ந்து

எண்சீர் விருத்தம்

**சங்கு முழங்கியது**
''நாமிருக்கும் நாட்டிற்குத் தமிழ்நா டென்று
நாமமிட முறையிட்டோம்; ஆள்வோர் பட்டை
நாமமிட்டார் நம்முகத்தில்; மாற்றுக் கட்சி
*நல்லறிஞர் உரைத்தமையால் மறுத்தோம் என்றார்;
தீமனமா? ஆணவமா? ஆட்சி தந்த
செருக்குரையா? அடிமைமனப் போக்கா? இல்லை;
நாமமது தமிழரெனத் திரிவோர், நாட்டை
நற்பெயரால் அழைப்பதற்கு நாணி நின்றார் 2

என்னாடு தமிழ்நாடென் றியம்பக் கேட்டால்
என்செவியில் தேன்பாயும் என்று கூறின்
பன்னாடை மதியுடையார் வெறுப்புணர்ச்சி
பகையுணர்ச்சி என்றெல்லாம் பகட்டு கின்றார்;
தென்னாடென் றுரைத்தாலோ ஒன்று பட்ட
தேயத்தைப் பிரிக்கின்ற உணர்ச்சி யென்பார்;
எந்நாளும் தமிழரெனும் உணர்ச்சி யின்றி
இருப்பவரே பாரதத்தின் புதல்வர் என்பார் 3

உன்னாட்டில் தமிழாட்சி கொடுத்து விட்டோம்
உயர்கலைகள் தமிழ்மொழியில் உண்டா? என்று
தென்னாட்டை உணராதார் கேட்பர்; உண்டு;
தீக்கிரையாய்ப் போனதுண்டு; நெஞ்சை யள்ளும்
பொன்னேட்டைத் தின்றொழித்த நெருப்பும் சொல்லும்
போகட்டும்; புதுக்கலைகள் செய்து காட்டும்
முன்னேற்றம் தமிழிலுண்டு; நேற்று வந்த
மொழியாளர் கேட்பதெனில் விந்தை தம்பி! 4

மெத்தவளர் புதுக்கலைகள் தமிழிற் செய்து
மேன்மைபெற வேண்டுமென்று பாடி நின்றேன்;
செத்தமொழி சுமப்பதற்கு நாடு கின்றீர்!
செந்தமிழை வாழ்மொழியைச் சாக டிக்கப்
பித்தரெனப் பிதற்றுகின்றீர்! நன்றோ? சொல்வீர்!
பிறனாட்சி தொலைந்துவிடின் தமிழின் மாட்சி
எத்திசையும் பரவிவரும் என்றி ருந்தேன்;
இகழ்ச்சிக்கோ போர்ப்பாட்டுப் பாடி வைத்தேன்? 5

கலைமலிந்த தமிழ்நாட்டில் வணங்கு தற்குக்
கடவுளர்தாம் ஆயிரம்பேர்; அவர்கட் கெல்லாம்
பலமனைவி; இவரன்றி வேறு பக்கம்
படையெடுப்பும் நடப்பதுண்டு; மக்கள் உண்டு;
தொலைவிலிருந் திங்குவந்த சாமி யுண்டு;
தொழுகின்ற அத்தனைக்கும் சமயம் உண்டு;
நிலையான தமிழ்ச்சமயம் எதுதான் என்று
நிலைநாட்டி வழிகாட்ட முயலக் காணேன் 6

பித்தாகிப் போனநும்பால் மானம் உண்டா?
பெருமிதஞ்சேர் வீரமுண்டா? தமிழர் வாழ்வில்
செத்தாலும் பிறந்தாலும் மணம்செய் தாலும்
செந்தமிழின் ஒலியுண்டா? பிள்ளை கட்கு
நத்துதமிழ்ப் பேருண்டா? பேச்சில், பாட்டில்,
நயந்தெடுக்கும் வழிபாட்டில், உமது வாழ்வில்
எத்துறையும் தமிழில்லை! தமிழன் என்ற
இனமொன்றும் உளதென்று சொலவும் வெட்கம்! 7

நண்போடு வரவேற்றீர் வந்த வந்த
நாட்டவரை; உமைமறந்தீர்! அவரைக் கூடிக்
கண்மூடிக் கிடந்துழன்றீர்! பண்பி ழந்தீர்!

கண்டகண்ட கோட்பாட்டைத் தழுவி நின்றீர்!
பண்பாட்டை முதன்முதலில் உலகுக் கோதிப்
பாங்குயர்ந்த நிலைமறந்தீர்! உணர்ச்சி யற்றுக்
[6]கண்பாடு கொண்டிங்கே கவலை யற்றுக்
கிடக்கின்றீர்! கண்விழித்துக் காண்ப தென்றோ? 8

இன்றெழுந்து தமிழ்காப்பீர்! ஒருமைப் பாட்டை
ஏனிழந்தீர்? ஆனாலும் வீரம் எங்கே?
குன்றெடுத்த தோளெங்கே? மானம் எங்கே?
குறைந்ததுவோ? நான்பிறந்த மண்ணின் பக்கம்
நின்றிருக்கும் கல்லெல்லாம் இந்தி கண்டேன்
நெடுங்கல்லாச் சுடுமண்ணா ஆகி விட்டீர்!
ஒன்றுசொன்னேன் தெருவெல்லாம் தமிழ்மு ழங்க
உரைத்தனைக் கல்லெல்லாம் சிரிக்கக் கண்டேன் 9

சிரிப்பதற்கோ உரிமைப்போர் தொடுத்து நின்றோம்?
செந்நீரும் கண்ணீரும் சிந்திக் காத்தோம்?
பறிப்பதற்கோ தெனனாட்டார் உரிமை எல்லாம்?
பாரதத்தின் பெயர்சொல்லி வடக்கு மட்டும்
பருப்பதற்கோ? செந்தமிழ்நற் றமிழர் வாழ்ந்து
பாரதமும் வாழ்கவென உணர்ந்தே சொன்னேன்
மறுத்துரைத்தால் [7]ஈரோடும் காஞ்சி யுந்தாம்
வழிசொல்லும்; புதியதொரு விதியும் செய்யும்'' 10

என்றுரைத்தான் பாரதிஎன் னெஞ்சி னுள்ளே;
என்னுடலம் நடுநடுங்கி வியர்த்து நின்றேன்;
ஒன்றியுளம் பற்றிநின்ற கவிஞன் சற்றே
ஒதுங்கிஎதிர் நின்றுரைத்தான்; ''அஞ்சி அஞ்சிப்
பொன்றுமுயிர் தாங்குகின்றாய் போ! போ! மானம்
போற்றுகின்ற வீரநெஞ்சாய் வா! வா! தாதன்
என்றுசொல வாழ்பவனே போ! போ! சிங்க
ஏறனையாய் அச்சமிலாய் வா! வா! என்றான் 11

பஃறொடை வெண்பா

**முடிவுரை**

வாழையடி வாழைக்கு வாய்மொழியால் வீரத்தைக்
கோழை மனத்திற் கொதிப்பேற்றிப் பாய்ச் சிவிட்டான்;

சூடு தணியவில்லை சொல்லெல்லாம் தீயாக்கிப்
பாடும் கவிதைகளில் பாயவிட எண்ணந்தான்;

நாடு பொறுக்குமோ என்றெண்ணி நல்லஇளஞ்
சூடு படக்கொடுத்தேன்; ஈதும் சுடுமென்றால்

குற்றம் எனதன்று; முற்றுந் தலைவாழை
பெற்ற சுவையைத்தான் பின்வாழை ஈன்றுநிற்கும்;

நாநலம் கொண்டார்க்கு நல்ல சுவைநல்கும்
பாநலம் வல்ல பரம்பரையில் யானொருவன்

ஈனும் கனியை இருந்து சுவைக்கவிட்டு
நானும் இருப்பேன் நயந்து. 12

---

**பாடற்குறிப்பு:–** 21–2–1960 அன்று தஞ்சைச் சரபோசி மன்னர் கல்லூரிக் கவியரங்கில் 'வாழையடி வாழை–பாரதியார்' என்ற தலைப்பில் பாடப்பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–**
1. மலைவாழை – குன்றக்குடி மலையில் வாழ்பவர்.
2. தலைவாழை – தலைமை தாங்குபவர் குன்றக்குடி அடிகளார்.
3. செவ்வாழை – காவி உடை அணிந்தவர்.
4. முன்னீர்மை – முன்னையியல்பு. 5. ஒவின்றி – நீங்காது.
$இவ்வரிகள் தமிழ்க்கொடியைச் சுட்டுவதுணர்க.

*பேரறிஞர் அண்ணா எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது தமிழ் நாடெனப் பெயர் சூட்ட வேண்டினர். 'நீங்கள் கூறுவதால் பெயர் மாற்ற மாட்டோம்' என்றார் ஓரமைச்சர்.
6. கண்பாடு – உறக்கம்.
7. ஈரோடும் – காஞ்சியும் –அங்குப் பிறந்த பெரியாரும்அண்ணாவும்.

## 33. பொங்கிக் கிளர்ந்தது வீரம்

(நூல்:–பாடுங் குயில்)

வெள்ளையர் ஆண்டிட வீழ்ந்துகிடந்தது நாடு – கதை
வேறுந டந்தது வெந்தும டிந்தது பாடு
கொள்ளையர் மீண்டிவண் கூடிப்புகுந்திட லாமோ – அவர்
கொட்டம டங்கிடக் கூடிஎ திர்த்திடு வோமே 1

ஏழைய ராயினும் கோழையரல்லர்நம் மாந்தர் – படை
ஏற்றம்மி குந்திடப் போரிற்ப டைக்கலம் ஏந்திக்
காளைகள் ஆயிரம் காணும்ப கைப்புலம் நீந்தும் – ஒரு
காவல்பு ரிந்திடும் சேனைபெ ரும்புகழ் ஏந்தும் 2

சங்கம்மு ழங்கிட வெங்களங் கண்டிடும் வீரர் – எம்
சந்ததி சந்ததி யாகவ ளர்ந்திடும் சூரர்
தங்களைப் பெற்றிடுந் தாயகங் காத்திடுந் தீரர் – அவர்
தாவியெ ழுந்திடின் ஓடிவரும்பகை தீரும் 3

சாவுக்க ளந்தனில் ஆடிக்க ளித்திடும் நேரம் – எனச்
சங்கமொ லித்தது பொங்கிக் கிளர்ந்தது வீரம்
[1]'சூ'வைவி ரட்டிடச் சூடுபி டித்தது நாட்டில் – ஒரு
சுட்டுவி ரற்கிடை விட்டுக்கொ டுத்திட மாட்டோம். 4

---

**பாடற்குறிப்பு:–** சீனம் நம்மைத் தாக்கியபோது பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. 'சூ' – சூயன்லாய்.

## 34. காட்டிக் கொடுக்கலாமோ?

(நூல்:–பாடுங் குயில்)

காட்டிக் கொடுக்க லாமோ – நாட்டைக்
காட்டிக் கொடுக்கலாமோ – மாலை
சூட்டி யழைக்க லாமோ – பகையைச்
சூழ்ந்து பிழைக்கலாமோ? 1

வீட்டைக் கெடுக்க லாமோ – உள்ளே
வேட்டை தொடுக்க லாமோ – இங்கே
தேட்டை யடிக்க லாமோ – கெட்ட
சேட்டை பிடிக்க லாமோ? 2

நாடித் திரிய லாமோ – பிறனை
நத்தி அலைய லாமோ – அடிமை
தேடிக் கொடுக்க லாமோ – நாட்டை
தீயர் பிடிக்க லாமோ? 3

கூடி விளக்க லாமே – நமக்குள்
கொள்கை முழக்க லாமே
தேடிக் கொடுக்க லாமே – அதனைச்
சேர்ந்து முடிக்க லாமே 4

தாயைப் பழிக்க லாமோ – பகைக்குத்
தாழ்ந்து பிழைக்க லாமோ – இழிந்த
நாயை நிகர்க்க லாமோ – ஈன்ற
நன்றி மறக்க லாமோ? 5

காலைப் பிடிக்க லாமோ – பகைக்கு
வாலைக் குழைக்க லாமோ – கையில்
வேலைக் கொடுக்க லாமோ – நமது
வேலை கெடுக்க லாமோ? 6

பற்றை விடுக்க லாமோ – நாட்டின்
பண்பைக் கெடுக்க லாமோ – பகையைச்
சுற்றி நொறுக்க வாவா – பகைவர்
சூழ்ச்சி விரட்ட வாவா 7

## 35. ஒற்றுமையா? ஒருமைப்பாடா?

(நூல்:–பாடுங் குயில்)

ஒற்றுமை என்றொரு சொல்லுண்டு – மேலும்
ஒருமைப் பாடென ஒன்றுண்டு
சற்றே அவற்றின் பொருள் கண்டு – நின்பால்
சாற்றிடு வேன்கேள் மனங்கொண்டு 1

கட்டிய மாலைகள் தொங்கும்பார் – அவற்றில்
கண்கவர் பூக்கள்வி ளங்கும்பார்
மொட்டுடன் முல்லைது லங்கும்பார் – இன்னும்
மூவகைப் பூவுமி லங்கும் பார் 2

எத்தனை எத்தனை வண்ணம்பார் – நெஞ்சில்
இன்பம் விளைந்திடப் பண்ணும்பார்
அத்தனை அத்தனை வண்ணப்பூ – மாலை
ஆகிடச் சேர்ந்ததை எண்ணிப்பார் 3

மாலையிற் சேர்ந்தவை நின்றாலும் – தத்தம்
மணத்தோ டுறுபெயர் குன்றாமல்
கோலமு றத்தொடர்ந் தொன்றாகும் – இதுவே
கொண்டிடும் ஒற்றுமை என்றாகும் 4

பாலொடு சர்க்கரை ஒன்றானால் – நாமும்
பருகிட வேசுவை நன்றாகும்
பாலிடு சர்க்கரை என்னாகும்? – வடிவும்
பண்டைய பேரதும் இன்றாகும் 5

ஒன்றனுள் ஒன்றுக ரைந்தழியும் – தம்பி
ஒன்றே வளரம றைந்தொழியும்
இன்றொரு மைப்பா டெனமொழியும் – சொல்லில்
[1]ஏய்பொருள் தானிது பாரறியும் 6

நம்முடன் மற்றவர் தாழ்வின்றி – வாழ
நாடுவ தொற்றுமை வாழ்வன்றோ?
நம்மழி வேபிறர் வாழ்வென்றால் – அதுதான்
நாடும் ஒருமைப் பாடென்பார் 7

ஒற்றுமை என்பதை வேண்டுதியோ? – தம்பி
ஒருமை எனுமது வேண்டுதியோ?
உற்றொரு தீர்வினைத் தேர்ந்தெடுநீ – அந்த
உண்மையை நெஞ்சினில் பூண்டெழுநீ. 8

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. ஏய் – பொருந்திய.

## 36. நாளைய நாடு

(நூல்:–பாடுங் குயில்)

அதோ அதோ ஒரு நாடு – கண்ணின்
அருகில் தெரிவதை நீ பாடு

–அதோ

எத்தனை எத்தனைக் கலைகள் – அவை
அத்தனை யுந்தமிழ் மொழியில்
இத்தரை மீதினில் உலவும் – கலை
எத்தனை அத்தனை நிலவும்

–அதோ

கற்றிட வந்தனர் கலையே – வெறும்
கத்தலும் கூச்சலும் இலையே
கற்றவிஞ் ஞானியின் அலைகள் – நாடு
காத்திடும் நினைவுடன் உலவும்

–அதோ

புத்தம் புதுத்தொழில் உயரும் – அவை
பூத்துக் குலுங்கிட வளரும்
எத்திசை நோக்கினும் கதவம் – அங்கே
எப்பொழு துந்ததிறந் தொளிரும்

–அதோ

நாளும் உழைப்புகள் பெருகும் – கொடும்
நச்சுச் சுரண்டலும் கருகும்
பாழும் அடைப்புகள் கடியும் – மிடி
பற்றிய வெந்துயர் மடியும்

–அதோ

ஏற்றமும் தாழ்ச்சியும் [1]இரியும் – மக்கள்
யாவரும் ஒன்றெனத் தெரியும்
மாற்றமெ லாமொரு புதுமை – செல்வம்
மாந்தர்கள் யாவர்க்கும் பொதுமை

–அதோ

கோபுர வாயில்கள் தெரியும் – அவை
கோவில்க ளாமெனல் மறையும்
ஆபயன் யாவையும் விளையும் – அவை
யாவரும் போய்வரும் நிலையம்

–அதோ

பேதைமை முற்றிலும் அழியும் – அங்குப்
பெண்ணின் வாழ்வுகள் தழையும்
ஓதுநல் ஞானமும் ஒளிரும் – அவர்
ஓர்நிக ராமெனல் மிளிரும்

–அதோ

பண்புகள் யாவையும் மலரும் – அமைதி
பாங்குற எங்கணும் படரும்
கண்கொளும் காட்சிகள் வளரும் – மனம்
காவிரி யாமென மகிழும்

–அதோ

---

**பாடற்குறிப்பு:–** 24–6–1979 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. இரியும் – ஓடும்.

## 37. எழுதுங்கள் புதுக்கவிதை

**(நூல்:–பாடுங் குயில்)**

அழகான கவியாக உருவாக்குவோம்
அதனாலே தமிழ்மாதை உயர்வாக்குவோம்
விழலாக வரும்யாவும் எருவாக்குவோம்
விளைவெல்லாம் பயனாகப் பயிராக்குவோம் 1

உரையான வரியெல்லாம் கவியாகுமோ?
உருவில்லா ஒலியெல்லாம் மொழியாகுமோ?
அரையான வரைகோடு கலையாகுமோ?
அடிபாறை சிறிதானால் சிலையாகுமோ? 2

மரபோடு வடிவங்கள் தடம்மாறினால்
மதியோடு மனமிங்குத் தடுமாறினால்
பிறவேறு மொழிகூடும் வெறியேறினால்
பிறழ்கின்ற உரையாவும் கவியாகுமோ? 3

உணர்வோடு கனவாகும் கருயாவுமே
உருவாகி வடிவாகிற் கவியாகுமே?
துணிவோடு வடிவங்கள் கொலையாகுமேல்
தொலையாத பழியாக உமக்காகுமே 4

மறையாத வடிவங்கள் பலவாக்குவோம்
மரபாக வருமாறு கலையாக்குவோம்
குறையோடு திரிகின்ற நிலைபோக்குவோம்
குலமான கவிவாணர் பழிநீக்குவோம் 5

வண்ணங்கள் எண்ணங்கள் புதிதாகவே
வடிவங்கள் அமையுங்கள் மரபாகவே
எண்ணுங்கள் எண்ணுங்கள் முனியாமலே
எழுதுங்கள் முயலுங்கள் இனியாவது 6

தனியான மரபுள்ள தமிழாகுமே
தரமான நெறிகொண்ட மொழியாகுமே
இனிதான வழிமாறித் தடுமாறினால்
இனிமேலும் உமைநோக்கி எதுகூறுவேன்? 7

---

**பாடற்குறிப்பு:–** 2–7–1979 ஆம் நாள் பாடியது.

## 38. நெஞ்சத் துடிப்பு
**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

**('குமுகம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின்
14 எண்சீர் விருத்தங்களில், 4 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

விழிசுமந்த அருளாலே வருவோர்க் கெல்லாம்
விருந்தளித்தோம் வரவேற்றோம் நட்பும் கொண்டோம்;
வழிசுமந்த பண்பாடு தமிழர்க் கென்றே
வாய்நிறையப் புகழ்ந்துரைத்தார் மகிழ்ந்தோம்; ஆனால்
எழில்சுமந்த என்நாட்டார் வந்தோர்க் கெல்லாம்
ஏமாந்து குனிகின்ற பித்த ராகிப்
பழிசுமந்து போனாரே என்ற போது
பதைபதைக்கும் துடிதுடிக்கும் எனது நெஞ்சம் 1

எதைக்கண்டு துடிப்பதடா? அந்தோ இங்கே
எதைக்கண்டு கொதிப்பதடா? தமிழர் நாட்டில்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை;
பைந்தமிழின் நிலைகாணின் நெஞ்சே வேகும்;
மிதிக்கின்ற வழிதேடி வடபு லத்தார்
மெல்லமெலப் புகுகின்றார்; இந்தி கொண்டு
வதைக்கின்ற வழியமைத்து வருதல் கண்டேன்
வடவர்பிடி எத்தனைநாள்? எனத் துடித்தேன் 2

இல்லத்தார் துடிதுடிக்க, மாலையிட்ட
இல்லாளும் துடிதுடிக்கப் பெற்ற பிள்ளை
சொல்லத்தான் முடியாமல் துடிது டிக்கச்
சூழ்ந்தஉயிர் அணுவெல்லாம் துடிது டிக்க
மெல்லத்தன் உயிர்த்துடிப்பே அடங்கும் வண்ணம்
மேனியிலே எரியூட்டிக் கொண்ட தோழர்
வெல்லத்தான் மொழிப்போரில் தமைக்கொ டுத்தார்
வியப்புமிகும் அத்துடிப்பே இன்றும் வேண்டும் 3

துடிக்கட்டும் உமதுமனம்; தமிழ்மொ ழிக்குத்

துளியேனும் பகைவருமேல் தூள்தூ ளாக
வெடிக்கட்டும் அப்பகைமை; தமிழர் நெஞ்சம்
விழிக்கட்டும்; இந்திமொழி ஆதிக் கத்தை
முடிக்கட்டும் இன்றோடு; கூடி எங்கும்
முழங்கட்டும் தமிழ்முழக்கம்; தமிழர் கைகள்
அடிக்கட்டும் போர்முரசு; பகைவர் கூட்டம்
அலறட்டும் சிதறட்டும் அஞ்சி நின்றே 4

## 39. ஓதிக்கெட்டவன்

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

‘யாதும் ஊரே யாவருங் கேளி’ ரென்
றோதிய மணிமொழிக் குரியவன் தமிழன்
எனினும் இவனைக் கேளிரென் றெண்ணும்
மனிதனை மாநிலத் தியாண்டுங் காண்கிலேன்;
இவன்வாழ் ஊரை எனதூர் என்று
தவறியும் நினைந்துகை தருவோ ரிலையே;
‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்
றோதும் இவனே யாவும் பிறரால்
வருவன என்றே வாழ்நா ளெல்லாம்
தெருவெலாஞ் சுற்றித் திரிதரல் கண்டேன்;
‘சாதலும் புதுவ தன்’ றெனச் சாற்றினன்
யாதொரு செயலும் அஞ்சி யஞ்சிப்
போதெலாம் செத்துப் புலம்பினன் அவனே;
‘இனிதென வாழ்வை மகிழ்தலும் இலமே
முனிவின் இன்னா தென்றலும் இலமே’
எனுமொழி இசைத்தவன் இவன்றான் எனினும்
தாழ்செயல் பலவும் தயங்கா தியற்றி
வாழ்வே இனிதென மகிழ்தலும் உண்டு;
பழித்தும் இழித்தும் பகர்ந்து வாழ்வை
மறுத்துப் பேசி வெறுத்தலும் உண்டு;
‘நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம்’ எனவும் மொழிந்தனன்;
அதனால்
நீந்தும் முயற்சியை நீத்தனன் ஆழ்ந்தனன்;
‘பெரியோரை வியத்தலும் இலமே தம்மிற்
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே’
எனுமொழி அவன்றன் ஏற்றமுங் காட்டும்;
மனத்துறு பண்புடன் மானமுங் காட்டும்.
எனினும் ஒருவரை ஏற்றிப் புகழ்ந்து
தனிநலம் ஒன்றே தகுமெனப் பேணித்
தனித்திறங் காட்டுவன்; தாழ்த்த நினைப்பின்
இவன்போற் பிறரை இகழ்வதில் பழிப்பதில்
இனிமேல் யாண்டும் எவனும் பிறவான்
தீதகல் வழியும் தேனிகர் மொழியும்
ஓதிக் கெட்டவன் இவன்போல் இலனே
உரைத்த குறிக்கோள், நடத்தும் வாழ்க்கை
இணைத்து நோக்கின் இரண்டும் தனித்தனி;
நினைதொறும் நினைதொறும் நெட்டுயிர்ப் புயிர்த்து
நனிபட ரெய்தி நலிவுறும் மனனே.

## 40. ஈழம் சிவந்தது

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

பூணுநல் லுரிமை வேண்டிப்
போரிடும் ஈழ நாட்டீர்
பேணுநர் இன்றி நீவிர்
பேதுறும் நிலைமை கேட்டேன்
[1]வாணுனி கொண்டென் னெஞ்சை

வகிர்ந்தது வகிர்ந்த தந்தோ!
கோணிய கொடுங்கோ லாட்சி
குலையும்நாள் தொலைவில் இல்லை. 1

சுடும்படி தூண்டி விட்டுச்
சூழ்ச்சிகள் பலவும் பேசும்
கொடுஞ்செய வர்த்த னேக்குக்
கோலொன்று கிடைத்த தாலே
இடும்பிணக் காடா மென்ன
ஈழத்தை யாக்கி நின்று
கடும்புலி வாழுங் காடு
நன்றெனக் காட்டி விட்டான் 2

தொட்டிலிற் றுயின்ற பிள்ளை
தோள்களிற் கிடந்த பிள்ளை
முட்டிய வயிற்றுப் பிள்ளை
முதுமையிற் றளருந் தாயர்
கட்டிய தாலி தொங்குங்
கழுத்தினர் இளையர் என்னா
தெட்டிய மட்டுங் கொன்றார்
இழிந்தசிங் களத்து மாக்கள் 3

ஆவணத் தெருவிற் கொள்ளை
அளியவர் மனையிற் கொள்ளை
காவலர் திருட ரானாற்
களவுகள் நிற்ப தேது?
தாவரும் மாந்த ரில்லம்
தமிழர்தம் தொழிலார் கூடம்
யாவையுஞ் சாம்ப ராக
ஆணவத் தீயர் செய்தார் 4

பகலிலே கொள்ளை யிட்டார்
பதறிடக் கொலைகள் செய்தார்
தகவிலார் சிங்க ளத்தார்
தணிவிலா வெறிய ராகி
மகளிர்தங் கற்பைத் தின்று
விலங்கென மாறி நின்றார்
பகிர்ந்திடும் உரிமைக் காகப்
பாடெலாம் நீவிர் பெற்றீர் 5

நாடென எமக்கொன் றில்லேம்
நற்றமிழ் மாந்தர்க் குற்ற
கேடுகள் களைவ தற்குக்
கிளாந்தெழும் நிலையு மில்லேம்
வீடண ரிடையே வாழ்வேம்
வெந்துழல் மனத்த ராகிச்
சாடுத லன்றிக் கைகள்
தந்திட வழியே இல்லை 6

விடுதலைப் புலிக ளாகி
வெந்துயர்க் குரிய ராகிக்
கெடுதலை எதிர்த்து நின்றீர்
கிளர்ந்தெழும் நும்மைக் காக்க
உடலினால் உதவி செய்ய
ஒருபடை எமக்கிங் கில்லை
தொடுமன வுணர்ச்சி யொன்றால்
துணைவர்க ளாகி நிற்போம் 7

நம்மைநாம் உணர்வ தில்லை
நமக்குளே பகைமை கொள்ளை
தும்மினால் வீழ்வார் கூடத்
துரும்பென எண்ணி நம்மை
அம்மவோ தாக்கு கின்றார்
ஆரிடம் போயு ரைப்போம்

நம்மின வுணர்வு தோன்றின்
நரிகளா அரியைத் தாக்கும்? 8

எங்குள தமிழ னுக்கும்
இடரொன்று நேர்ந்த தென்றால்
இங்குள தமிழ ரெல்லாம்
எதிர்த்திட ஒன்றாய்க் கூடிப்
பொங்கிடின் நம்மைத் தாக்கும்
கொம்பனும் புவியி லுண்டோ?
கங்குலிற் சிதறி விட்ட
கருமணி யாகி விட்டோம் 9

சிதறிய நிலையர் தம்முட்
சிந்தனை யுடைய நல்லோர்
பதறினர் இனத்தின் மானம்
படைத்தவர் நொந்து நொந்து
கதறினர் ஊர்கள் தோறும்
கழறினர் உலகப் பற்றை
உதறிய துறவி தாமும்
போர்வெறி உடையரானார் 10

கதிரவன் வரவு காட்டக்
கடலிடைச் சிவத்தல் காணீர்
எதிர்வருங் கால மெல்லாம்
இடர்பகை இனிமே லில்லை
புதியநல் வாழ்க்கை யொன்று
பூத்தது தமிழர்க் கென்றே
அதிர்ந்தது முரச மெங்கும்
ஆர்த்தது வெற்றிச் சங்கம். 11

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. வாணுனி – வாள் நுனி.

## 41. தென்னாட்டுக் கலைகள்

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

சீருடைய நுண்கலைகள் சேர்ந்திலங்கும் நாடொன்றே
பேருலகில் நாகரிகம் பெற்றிருக்கும் நாடென்பர்;
ஆயகலை அத்தனையும் அத்தனைக்கும் நூற்பகுப்பும்
தூய நெறிமுறையில் தோற்றுவித்து வாழ்ந்தவர்நாம்;
நல்ல கலைவளர்த்து நாகரிக நாடென்று
சொல்லும் நிலைதன்னைத் தொன்றுமுதல் பெற்றிருந்தோம்;

**சிற்பக்கலை**

கல்லெடுத்தான் கைச்சிற் றுளிஎடுத்தான் அக்கல்லில்
சில்லெடுத்தான் நல்ல சிலையொன்று கண்டெடுத்தான்;
கற்பனையில் கண்டெடுத்த காதற் பொருளெல்லாம்
சிற்பமென ஆக்கிச் சிறப்பெடுத்தான் நம்முன்னோன்;
கல்லைக் கலையாக்கும் கைத்திறனை நீள்கடல்மா
மல்லைக் கருங்குன்றம் மாறின்றிக் கூறிநிற்கும்;
தென்மதுரைக் கோவிலுக்குள் தேர்வடிவக் கல்லெல்லாம்
நன்மதுர மெல்லிசையால் நாளெல்லாம் பாடிநிற்கும்;
விண்ணெட்டும் கோபுரங்கள் விந்தைதரும் நற்சிலைகள்
உண்ணட்ட கற்றூண்கள் ஓங்கும் மதிற்புறங்கள்
ஒவ்வொன்றும் காட்டும் உயிர்ச்சிலைகள் நம்சிற்பச்
செவ்விதனைக் கூறிச் சிறப்பெல்லாம் பேசிநிற்கும்;
தஞ்சைப் பெருவுடையான் தங்கும் தளியதனுள்
நெஞ்சைக் கவரும் நிலையில் நிமிர்ந்திருக்கும்
காளை வடிவாய கல்லருகில் செல்வோர்கள்
தோளெல்லாம் பூரிப்பர்; தொன்மைத் தமிழ்மாந்தர்

சிற்பக் கலைத்துறையில் சேர்த்துவைத்த சீர்த்தியெலாம்
கற்பனையில் தேக்கிக் களிப்பார்கள் உண்மையிது;

**கட்டடக்கலை**

வான முகட்டு வழிஏற வைத்தஒரு
ஏணி எனத்தோன்றும் எண்ணில்லாக் கோபுரங்கள்,
மாடங்கள், மாளிகைகள், மாற்றுயர்ந்த பொன்வேய்ந்த
கூடங்கள், கொற்றவர்கள் கூடும் அரண்மனைகள்,
போர்யானைக கூட்டம் புகுந்துவரும் நேர்வாயில்
போர்கருதி யாரும் புகமுடியாச் சீர்வாயில்,
மாற்றார் கடந்தறியா மாமதில்கள் இத்தனையும்
சாற்றாவோ கட்டடத்து நுண்கலைக்குச் சான்றாக;
விஞ்சும் எழிலால் வியப்பூட்டும் கோபுரத்தைத்
தஞ்சைப் பெரும்பதியில் தந்தமன்னன் சாய்ந்துவிட்டான்
ஆக்கிப் படைத்தானே அன்னவனும் சாய்ந்துவிட்டான்;
தேக்குபுகழ் மட்டும் தினையளவும் சாயவில்லை;
கோபுரத்தில் காணும் கொடுமுடியின் தன்னிழலும்
ஓர்புறமும் சாயவில்லை; ஒப்பில்லை இக்கலைக்கே;

**இசைக்கலை**

நெஞ்சைக் கனிவித்து நெக்குருகச் செய்விக்கும்
விஞ்சைக் கலையாகும் விந்தை இசைக்கலையில்
ஒப்புயர் வில்லாமல் ஓங்குநிலை பெற்றிருந்தோம்
செப்புகின்ற சான்றுகளோ எப்பொழுதும் ஈங்குண்டு;
காட்டில்வளர் மூங்கிலிடைக் கார்வண்டு போய்த்துளைத்த
தோட்டில் நுழைகாற்றுத் தோற்றுவித்த நல்லிசையைக்
கேட்டான் மனங்களித்தான்; நாடோறும் கேட்பதற்கு
வேட்டான் எடுத்தான் [1]வெதிரைத் துளைத்தான்
குழல்கண்டான்; வாயைக் குவித்திசையை ஊதிப்
பழகி இனிதாக்கிப் பாருக் களித்தவன்யார்?
வேட்டைக் குதவிவரும் வில்லெடுத்து நாண்தொடுத்துப்
பூட்டித் தெறித்தான் புதிய ஒலிகேட்டான்
விண்ண் ணெணஇசைத்த ஓசை வியப்பூட்டப்
பண்ண் ணிசைக்கும்யாழ் பண்ணி நமக்களித்தான்;
வேட்டை யளித்த விலங்கினத்தின் தோலுரித்து
மேட்டில் உயர்மரத்தில் வீசி எறிந்துவிட்டான்
காய்ந்தெழுந்த தோலிடத்துக் காற்றால் சிறுகொம்பு
தோய்ந்துதோய்ந் தாடுவதால் தோன்றியதோர் பேரோசை
அன்றே படைத்தான் அளப்பரிய தோற்கருவி;
நன்றாம் இசைக்கருவி நாலுவகை செய்தமைத்தான்;
கூவும் குயில்கண்டான் கொக்கரித்துக் கூவிநின்றான்
யாவும் இசையாகப் பாயும் நிலையுணர்ந்தான்;
பந்தென்றும் கும்மியென்றும் பாய்ந்தாடும் ஊசலென்றும்
வந்த விளையாட்டில் மங்கையர்கள் பாடிடுவர்;
ஏற்றம் இறைப்பார் இசைக்கின்ற பாட்டோசை,
நாற்று நடுவோர்கள் நாவசைக்கும் கூட்டோசை,
கொல்லைத் தினையிடிக்கும் கோல்வளையார் பாடுகின்ற
[2]வள்ளைப்பாட் டெல்லாம் வளரிசையைக் காட்டாவோ?
சீராரும் தன்மகவைச் சின்னஒரு தொட்டிலிட்
டாராரோ பாடுகின்ற அப்பாட்டுப் போதாதோ?
ஒப்பாரிப் பாட்டுக்கோர் ஒப்புண்டோ? அஃதேபோல்
எப்பாரில் கண்டீர்கள்? ஈடில்லாக் கற்பனையாம்;

**நடனக்கலை**

பாடற் கலைசொன்னோம்; பாடல் துணையாக
ஆடற் கலையும் அறிந்தவனே நம்முன்னோன்;
விண்ணில் தவழ்ந்து விளையாடும் கார்முகிலைக்
கண்ணெதிரில் கண்டு களித்தெழுந்த வண்ணமயில்
தோகை தனைவிரித்துத் துள்ளிவிளை யாடுகையில்
ஓகை மிகவாக உள்ளந்தான் துள்ளியதால்
அன்றுமுதல் ஆடுகிறான் ஆடுகிறான் அம்பலத்தே
நின்றுநடம் ஆடுகிறான் நேரில்லாக் கூத்தே;
குரவை துணங்கை கொடுகொட்டி என்று
பரவிவர நாளும் பலவகையில் கண்டுநின்றான்;

கூத்தன் விறலி குறிக்கும் பொருளென்ன?
வேத்தியலும் மக்கள் விரும்பும் பொதுவியலும்
சொல்லும் பொருளென்ன? சொல்லுதலும் வேண்டுவதோ?
கல்லுந்தான் சொல்லாதோ ஆடற் கலத்திறனை?
மாதவித்தாய் ஆடும் மரபெல்லாம் கண்டபினும்
ஏன்தவித்தாய்? நல்ல எழிற்கலைகள் கண்டவன்நீ!

**ஓவியக்கலை**
வீட்டுச் சுவரில் விளங்குமேற் கூரைதனில்
காட்டும் திறமெல்லாம் காட்டித் திரைதன்னில்
ஊட்டும் பலவண்ணம் ஊட்டி உயிரோவம்
தீட்டும் திறலோனைத் தேர்ந்தெடுத்தே அன்னவனைக்
[3]கண்ணுள் வினைஞனெனக் கட்டுரைத்தே ஓவியத்துச்
செந்நூல் படைத்துச் செழிப்படையச் செய்தவர் நாம்;

**நெய்தற்கலை**
பாலாவி என்றிந்தப் பாரோர் புகழ்ந்தேத்த
நூலாலே ஆடைநொடியிற் படைத்திருந்தோம்;
பாவோ டிழையோடப் பஞ்சாலும் பட்டாலும்
ஓவா துழைத்தே உயர்ந்த கலைகண்டோம்;
நெய்தற் கலையாவும் [4]நெய்தல் உரிப்பொருளாய்
எய்தாமல் இன்றும் இயக்கி வருகின்றோம்;

**இலக்கியக்கலை**
கல்லைக் கலையாக்கிக் காடெல்லாம் வீடாக்கிச்
சொல்லிற் சுடரேற்றிச் சொல்லரிய காவியமென்
றாக்கிப் படைத்தான், அருங்கலைகள் ஆற்றலெலாம்
தேக்கிப் படைத்தான், தெளிதமிழின் பெட்டகம்போல்
காதல் சுவைத்திருக்கக் கண்டான் அகமென்று;
மோதும் பகைக்களத்து மூள்வோர் புறங்கண்டான்
ஓதும் புகழ்சேர் உயர்ந்த புறங்கண்டான்;
தீது சிறிதுமிலாத் தென்னாட்டான் நம்நாட்டான்
ஆயுங் கலைகள் அனைத்தும் பெருக்கிநலம்
தோயும் படிவாழ்வைத் துய்த்திருந்தான்; அவ்வாழ்வு
மீண்டும் தழைக்க வியனுலகம் பாராட்ட
வேண்டுமீ தென்றன் விழைவு.

---

**பாடற்குறிப்பு:–** காரைக்குடி அழகப்பர் கலைக்கல்லூரிக் கவியரங்கில் பாடியது – 28.10.1961.

**அருஞ்சொற் பொருள்:–**
1.வெதிர் – மூங்கில். 2.வள்ளைப்பாட்டு – உலக்கைப் பாட்டு.
3.கண்ணுள் வினைஞன் – ஓவியம் வல்லான்.
4.நெய்தல்உரிப்பொருள் – இரங்கல்.

## 42. நமது வீரம்
**(நூல்:–தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

வீரமுடன் காதல் விழியாம் எமக்கென்று
கூறியிவண் வாழ்ந்த குலத்திற் பிறந்தவர்நாம்;
காதலெனிற் காளையர்க்குக் கற்கண்டாம்; அஃதுரைக்க
ஈதன்று நேரம்; இருபாலும் போர்முகில்கள்
சூழும் பொழுதத்துச் சொல்லரிய வீரமன்றிப்
பாழும் பிறவுணர்வைப் பற்றிடுமோ நம்நெஞ்சம்?
ஆதலினால் வீரத்தை ஆர்வமுடன் பாடுதற்குப்
போதருமுன் அவ்வீரம் பூக்குமிடம் நாமறிவோம்;
நாடும் மொழியும் நலமிக்க இல்லாளும்
வீடும் முதலா விளம்பும் உரிமைகளில்
ஊறு விளைவிக்க உள்ளும் பகைகாணின்
வீரம் முளைக்கும் விளைநிலங்கள் ஆகுமவை;
மன்னர் விளைத்த மறப்போரும், மக்களிங்கு

[1]நென்னல் தொடுத்த அறப்போரும் நேர்சான்றாம்;
'ஈயென் றிரந்தால் எனதாட்சி மட்டுமன்று
மாயும் உயிரெனினும் மாற்றமின்றி ஈந்திடுவேன்;
எங்கள்குல மானத்தை ஏற்றமிகும் வீரத்தை
இங்கவர்தாம் போற்றாராய் எள்ளிஎமை மோதவரின்
போர்க்களிற்றின் காலடியில் புக்கழியும் வேய்முளைபோல்
சேர்த்தழியச் செய்திடுவேன்; செங்கட் புலியொன்று
கண்டுயிலும் போழ்தத்துக் காணாமல் காலிடறிக்
கொண்டதன்மேல் வீழுங் குருடன்தான் தப்புவனோ?
தப்பா தழித்துத் தறுகண்மை காட்டிடுவேன்;
இப்பார் எமக்குரிமை யாருக்கும் விட்டுவிட்டோம்'
என்றுரைத்த வஞ்சினத்தான் எம்முன்னோன்; அவ்வேந்தன்
நின்றுரைத்த வீரத்தை நெஞ்சிற் பதித்துள்ளோம்;
தாய்க்குலத்தின் வீரத்தைச் சற்றே நினைந்துவிடின்
போய்க்களத்தில் இன்றே புகுவோம் எனத்தோன்றும்;
'ஈன்று புறந்தருதல் எற்குத் தலைக்கடனாம்
ஆன்ற சமர்முருக்கி ஆர்த்த களிறடக்கி
வென்று திரும்புதலே வீரமிக்க காளையர்க்
கென்றுங் கடனாகும்' என்றுரைத்தாள் ஓரன்னை;
மாற்றான் படையெடுத்து வந்தான் எனப்புகன்ற
மாற்றம் செவிபுகுத மானத்தான் ஓரிளைஞன்
வேலெடுததான் போர்தொடுத்தான் வீரச் சமர்க்களத்தில்
காலொடித்தான் கையொடித்தான் கண்ணிமைக்கும் நேரத்தில்
சாகடித்தான் பற்பலரைச் சாகாரை நாற்புறமும்
போகடித்தான் ஆனாலும் தன்னுயிரைப் போக்கடித்தான்;
'வீரக் குலமகன்தான் வேலேந்திப் போனானே
நேரிற் பொருதானோ? நேராரை வென்றானோ?'
என்றவன்தாய் கேட்டாள்; இழிமகனாம் ஓர்பேதை
'துன்றமரில் [2]வெந்காட்டித் தோற்று மடிந்தா'னென்
றோர்பழியைக் கூறிவிட்டான்; 'ஓடியவன் என்மகனா?
ஊர்பழிக்கச் செய்தனனா? ஒன்னார்க்குத் தோற்றோடும்
பாவி மகனுக்கோ பால்கொடுத்தேன்' என்றவன் தாய்
ஆவி துடித்தாள் அலறிப் புலம்பியவள்
போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டாள் வாளெடுத்து;
பார்த்தலத்தை மூடியபோல் பற்பலரின் மெய்கிடக்கக்
கண்டாள் அவண்கிடந்த கட்டிளமைக் காளையரின்
புண்தாழ் குருதியுடல் ஒவ்வொன்றும் போய்ப்பார்த்தாள்;
கைவிரல்கள் வேல்பிடிக்கக் கண்ணிமைகள் தாம்மலர
மெய்குருதி நீர்வடிக்க மேலவன்றன் மார்பகத்தே
பாய்ந்ததொரு கூர்வேல் பளிச்சிட்டுத் தானிற்கச்
சாய்ந்ததிரு வாய்மகனைத் தாமரையைப் போல்முகனை
வெற்றிப்புன் மூரலொடு வீழ்ந்து கிடந்தானைப்
பற்றிப் பலமுறையும் பார்த்தாள் விழிமல்க;
ஈன்றெடுத்த ஞான்றையினும் எல்லையிலாப் பேருவகை
ஏன்றுளத்தாற் பூரித்தாள்; எம்மன்னை வாழியரோ!
வெங்கொடுமைச் சாக்காட்டை வீர விளையாட்டென்
றெங்கள்குலம் எண்ணும் இயல்பினது; போர்ப்பரணி
பாடி மகிழும் பரம்பரையேம்; வாகைமலர்
சூடி வருகின்ற தொல்குடியேம்; ஏந்தியநற்
கைவேல் களிற்றொடு போக்கி வரும்போதும்
மெய்வேல் பறித்தெடுத்து மேலேறிப் பாய்ந்திடுவோம்;
போரில் விழுப்புண் படாஅத நாளெல்லாம்
சீரில்லா நாளென்று செப்புந் திறலுடையேம்;
ஆற்றல் மிகவிருந்தும் அஞ்சாத நெஞ்சிருந்தும்
கூற்றம் எனவெகுளும் கோவேந்தர் ஆண்டிருந்தும்
தூற்றும் படியானோம் தொண்டடிமை யாகிவிட்டோம்
ஏற்றம் தனையிழந்தோம் ஏதிலர்க் காளானோம்;
வேலில்லை வாளில்லை வெட்டில்லை குத்தில்லை
கோலில்லை கொற்றக் குடையில்லை ஆயினுமே
வந்து புகுந்தவர்கள் வாணிகத்தின் பேர்சொல்லித்
தந்திரத்தால் நம்நாட்டைத் தட்டிப் பறித்தார்கள்;
வெள்ளை மனத்தினர்நாம் வெள்ளை நிறத்தவர்க்குக்
கொள்ளை யடிக்கக் கொடுத்துவிட்டோம் நம்நாட்டை;
செல்வம் பறிபோகச் சீரிழந்து நாடிழந்

தல்லும் பகலும் அடிமைகளாய் நொந்துழன்றோம்;
குற்றம் புரிந்திங்குக் கோலேந்தும் மாற்றாரைச்
செற்றம் மிகக்கொண்டு சீறிப் பகைத்தெழுந்தோம்;
ஆண்ட கொடுங்கோலர் ஆணவத்தாற் செய்தவெலாம்
மீண்டும் நினைத்துவிடின் மெய்சிலிர்க்கும் கண்சிவக்கும்;
வாட்டுஞ் சிறையெனினும் வாட்டம் அடையவிலை,
வேட்டு, துளைத்தாலும் வீரம் அடங்கவிலை,
நாட்டை நினைந்ததனால் நம்முரிமை வேட்டதனால்
வீட்டை மறந்தோம் விடுதலைக்கே பாடுபட்டோம்;
அந்நாளில் நம்மவர்கள் ஆற்றிய நற்றொண்டால்
இந்நாள் உரிமையினை ஏற்று மகிழ்கின்றோம்;
அஞ்சாமல் துஞ்சாமல் ஆர்த்தெழுந்த போர்வீரம்
எஞ்சாமல் நின்றிருக்க இன்றதனைப் பாடுவம்நாம்;
செந்தமிழை நம்முயிரைச் சீர்கொண்ட தாய்மொழியை
எந்தமொழி தன்னாலும் ஏங்க விடுவதில்லை;
ஆட்சி மொழியுரிமை அன்னை மொழிக்கானால்
மாட்சி நமக்காகும் என்றெழுந்த மாணவரைச்
சுட்டழித்த போதும் துளங்காமல் நின்றிருந்து
கட்டிளமைக் காளையர்கள் காட்டியநல் வீரத்தைப்
பாடாமல் விட்டுவிடப் பாவலரால் ஒல்லுவதோ?
பாடாமல் நாவெதற்குப் பாவெதற்குப் பாடுவம்நாம்;
மேன்மைத் தமிழ்காக்க மேலெல்லாந் தீயூட்டி
ஆண்மைத் திறமுரைத்த ஆடவரைப் பாடுவம்நாம்;
இவ்வனைய வீரத்தின் ஏற்றத்தைப் பாடுவதால்
செவ்வியநன் னெஞ்சத்தில் சிந்தா உரமேறும்;
சீனத்த ரானாலும் செந்நெறிசெல் லாப்பாகித்
தானத்த ரானாலும் [3]தண்டெடுத்துப் போர்முடிப்போம்;
காளைப் பருவத்தீர் காய்ந்தெழுதல் நும்கடனாம்
நாளைத் திருநாட்டின் நாயகங்கள் நீவிரன்றோ?
வீரம் மறவாதீர் வேற்றவர்தாம் நம்நாட்டின்
ஓரம் புகுதற்கும் ஒவ்வாதீர், காவலர் நீர்;
நீதமிலார் தக்கஒரு நேரமெதிர் பார்க்கின்றார்
பேதலித்து நம்முள்ளே பேதம் விளைக்காதீர்;
செந்நீருங் கண்ணீருஞ் சிந்தி வளர்த்தபயிர்
புன்னீர்மை கொண்டோரால் போயொழியப் பார்ப்பதுவோ?
நாமிருக்கும் நாடு நமதன்றோ? வேற்றவர்தாம்
பூமியினை ஆண்டிருக்கப் புல்லடிமை ஆவதுவோ?
ஆளப் பிறந்தவர்கள் ஆளடிமை செய்வதுவோ?
நாளைப் பிறப்பவர்கள் நம்மையன்றோ தூற்றிடுவர்;
வேங்கைப் புலிக்கூட்டம் வீரத் திருக்கூட்டம்
நீங்கள் எனஅறிவேன்; 'நேரார்தாம் இந்நாட்டில்
காலெடுத்து வைத்தால் உடலங்கள் காலாகும்;
வாலடக்கி வந்த வழிதிரும்பும்' என்றுரைத்தால்
போரெடுத்து வந்திருக்கும் புல்லியர் ஓர்நொடியில்
மாரடைத்துச் சாகாரோ? 'மான மறவர்யாம்,
எம்முரிமை தீண்டுவரேல் எம்முயிர்கள் வெல்லமல்ல,
எம்முனையும் துச்சமென எள்ளி நகைத்திடுவோம்'
என்றெழுக காளையர்காள், ஏது தடைபடைகள்?
நன்று புரிந்திடுக நாடு தழைத்திடுக;
ஒன்றிவரும் நல்லுணர்வால் உம்பால் உரைக்கின்றேன்
நின்றுபணி செய்வீர் நிமிர்ந்து.

---

**பாடற்குறிப்பு:–** அதிராம்பட்டினம் காதர்முகைதீன் கல்லூரிக் கவியரங்கில் பாடியது – 5.12.1965.

**அருஞ்சொற் பொருள்:–** 1. நென்னல் – நேற்று. 2. வெந் – முதுகு.
3. தண்டெடுத்து – படையெடுத்து.

## 43. ஊர்வலக் காட்சி

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

பேருலகில் நான்குமொழி பெற்றாலும் இன்றுவரை
சீரிளமை குன்றாத தெய்வத் திருமகளே,
ஆடிப் பெருக்காலும் ஆர்த்த நெருப்பாலும்
வாடிச் சிதையாமல் வாழ்ந்து வருபவளே,
பொங்கிச் சினந்தெழுந்து போராட வந்தகடல்
சங்கத்து வைத்திருந்த சான்றோர்தம் ஏடுபல
கொள்ளைகொண்டு போனாலுங் கோலஞ் சிதையாமல்
உள்ள தமிழரசி ஒப்பில்லா வாழ்வரசி,
மூவேந்தர் ஆட்சி முடிந்தபினர் யார்யாரோ
கோவேந்தர் என்றிங்குக் கோலேந்தி வந்தவர்கள்
அவ்வவர்தம் தாய்மொழிக்கே ஆக்கங்கள் தந்தாலும்
செவ்வியநல் லாற்றல் சிதையாமல் நிற்பவளே,
ஆழக் கடலலைகள் ஆர்த்துப் பெருங்குழுவாய்ச்
சூழத் தொடர்ந்து தொடுகரையை நோக்கிவரும்
நீண்ட கடல்போல் நெடுங்களிப்பால் மாந்தரினம்
ஈண்டிவரக் கண்டே இறும்பூது கொள்கின்றேன்;
ஈதென்ன தாயே எனவினவ, அவ்வன்னை
காதருகில் வந்ததனைக் காட்டித் ‘திருமகனே,
ஞாலமெலாந் தேமதுர நல்லோசை கேட்டிடவே
கோலமிகு மாநாடு கூட்டிக் களிக்கின்றார்;
வந்துவெளி நாட்டார் வணக்கஞ் செலுத்துகிற
அந்தத் திருநாளில் ஆர்த்துவருங் கூட்டமடா;
என்றன் புகழ்காக்க ஈடில்லாப் பேருழைப்பை
அன்று கொடுத்துயர்ந்த அன்புமிகு சான்றோர்க்கு—
அலையெழுப்பும் ஆழி அடைகரையில் நல்ல
சிலையெழுப்பிப் போற்றுஞ் சிறப்பனைத்துங் காணுதிநீ;
யாதும்நம் ஊராக யாவரும்நம் கேளிரென
ஓதும் மொழியால் உலகந் திரண்டதைப்பார்;
மண்ணில் தரைதெரிய மாட்டா தணிவகுத்துக்
கண்ணைக் கவர்ந்து கருத்தை மகிழ்விக்க
ஊர்ந்துவரும் ஊர்வலத்தில் உள்ளக் கிளர்ச்சியுடன்
சேர்ந்துவரும் மக்கள் செறிந்திருக்குங் காட்சியடா;
நீண்டதுதிக் கையை நிமிர்த்துப் பெருங்களிறு—
ஆண்டு நடந்துவர அக்களிற்றைப் பின்தொடர்ந்து
காவடிகள் நல்ல கரகங்கள் ஆடிவரப்
பூவடியார் நாட்டுப் புறமாதர் போலழகுப்பாவையர்கள் ஆடிவரும் பாங்கெல்லாம் இங்கேகாண்;
யாவையுமுன் கண்ணால் அழகுறவே காணங்கே;
நாட்டின் பழங்கருவி நாத சுரக்கருவிப்
பாட்டின் ஒலிகேட்டுப் பாடுகநீ பாவலனே;
வண்ணக் கொடிபிடித்து வஞ்சியருங் காளையரும்
நண்ணிப் படர்கின்ற நல்லழகைப் பாரங்கே;
கட்டழகுப் பெண்மகளிர் காலிற் சதங்கைகட்டி
இட்டடிகள் மாறா தெடுத்தாடும் நாட்டியங்காண்;
எப்படையும் இப்படைக் கீடில்லை என்றுரைக்க
முப்படையாய் மொய்த்திங்கு முன்னேறும் வீரரைப்பார்;
செந்தமிழைக் காக்குஞ் சிறப்புடைய வேற்குமணன்
வந்தஒரு பா1வலர்க்கு வாய்த்த தலைகொடுக்க
வாளெடுத்த வள்ளல் வடிவத்தைக் காட்டுமிந்த
நாளெடுத்த ஊர்வலத்தை நாட்டமொடு கண்டிடுநீ;
அவ்வை நெடிதிருப்பின் அன்னைமொழி வாழுமெனச்
செவ்வை மனமுடையான் சீரதியன் நெல்லிக்
கனிகொடுத்த காட்சியிலே காட்டும் பணிவை
இனிதெடுத்து வந்த எழிலெல்லாம் பார்மகனே;
வார்முரசு கட்டிலிலே வந்து துயில்கின்ற
சீர்வரிசைப் பாவலர்க்குச் செங்கோல் அரசனங்கு
நின்றிருந்து வெண்கவரி நீள்கையால் வீசுகிற
அன்றிருந்த காட்சி அழகெல்லாங் காண்மகனே;
பாவேந்தர் தம்மைப் பணிந்து மதித்துவந்த
பூவேந்தர் ஆண்டிருந்த பொற்காலம் அக்காலம்;
மீண்டுமொரு பொற்காலம் மீளத் திருவுளத்துப்
பூண்டெழுந்த என்மகனே போராட்டப் பாட்டெழுது;
ஆளும் பொறுப்பேற்றோர் ஆட்சி பிழைத்துவிடின்
வாழுமொரு பெண்ணும் வழக்குரைத்து நீதிபெறும்
நாடடா ஈதென்று நாளெல்லாஞ் சொல்பவளைப்

பாடடா கண்ணகியைப் பாரடா, முன்னைப்
[1]புறங்காட்டும் வீரர் புறங்காட்டாப் போரின்
திறங்காட்டி நிற்கின்ற தீரத்தைக் காட்டுகின்ற
கோட்டைப்போர்க் காட்சியினைக் கூர்ந்து மனத்திறுத்தி
நாட்டுக்கோர் பாட்டெழுதி நல்கி மகிழ்ந்திடுநீ;
போரெடுத்துச் சென்ற புகல்களிற்றைப் பூட்டிநெற்
போரடித்த காட்சிப் பொலிவினையும் இங்கேகாண்;
பண்டைப் புகார்நகரில் பண்டங்கள் கொண்டுசெல
அண்டைப் பிறநாட்டார் அண்டிவருங் காட்சியைப்பார்;
நீலத் திரைக்கடலில் நீந்திவருங் கப்பலுடன்
கோலத் திருமுகத்தன் கொள்கைப் பெருங்கோமான்
செந்தமிழன் வீர சிதம்பரன் நிற்கின்றான்
இந்தநிலை கண்டுணர்தல் இன்றைக்குத் தேவையடா;
செஞ்சிக்கோன் தந்த செழுங்கோட்டை மாட்சியிது;
வஞ்சிக்கோன் தம்பிமுதல் வார்த்தெடுத்த காப்பியங்கள்
ஐந்து மகவாக ஆங்கே அருகிருக்க
மைந்துடன்நான் நிற்கின்ற மாண்புயர்ந்த காட்சியிது;
ஆறுபடை வீடெழுப்பி ஆங்கருகில் நக்கீரன்
வீறுபெற நிற்கும் விறல்மிகுந்த காட்சியைப்பார்;
பாவை நலம்பாடிப் பள்ளிகொளும் ஆரணங்கைப்
பாவை துயிலெழுப்பும் பாங்கினையும் ஈங்கேகாண்;
மாமல்லைக் காட்சி, மனுநீதிச் சோழனொடு
பூமுல்லை தேர்பெற்ற பொற்பினையும் காணுகநீ;
பாரெல்லாம் என்பெயரைப் பாடிப் புகழ்ந்தேத்தச்
சீரெல்லாஞ் செய்துவரும் செம்மை யுளத்தானாம்
[2]உன்னண்ணன், நல்லெண்ணம் ஓங்கிவரும் நல்லண்ணன்,
என்கண்ணன் ஆங்கே எழிலுடனே நிற்கின்ற
தோற்றத்தைக் காட்டுகிற தூய சிலையுருவின்,
ஏற்றத்தைக் கண்டுமகிழ்' என்றாள் தமிழன்னை;
ஊர்வலத்தைக் கண்டேன் உணர்ச்சி வயப்பட்டேன்
பேருளத்தில் இன்பமிகப் பெற்று.

---

**பாடற்குறிப்பு:—** சென்னை இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் பாடியது — 6.1.1968.

**அருஞ்சொற் பொருள்:—** 1. புறங்காட்டும் — புறநானூறு காட்டுகின்ற.
2. அண்ணன் — பேரறிஞர் அண்ணா.

## 44. கம்ப நாட்டில்
**(நூல்:—தமிழ் முழக்கம்)**

எண்சீர் விருத்தம்

கம்பனைஓர் 'சக்ரவர்த்தி' என்று சொன்னார்
    கனன்றெழுந்தேன் முடியரசன் ஆன தாலே;
வெம்பியெழுந் தார்ப்பரித்தேன்; தோள்கள் தட்டி
    வீரரெலாம் வருகவெனக் கூவி நின்றேன்;
தெம்புடைய என்மறவர் போர்வி ருப்பால்
    தினவெடுத்த திண்டோளர் திரண்டு வந்தார்;
நம்பியவர் துணையாக என்றன் வீரம்
    நாட்டுதற்குப் படையெடுத்தேன் கம்பன் நாட்டில். 1

கனன்றெழுந்து படையெடுத்த என்முன் கோட்டைக்
    கதவடைக்க வில்லைஅதைத் திறந்தே வைத்தான்;
முனைந்தெழுந்து காவல்செயும் வீரர் இல்லை;
    முற்றுகையைத் தடுக்கின்ற படையு மில்லை;
சினந்தெழுந்த என்னுடன்போர் செய்ய அஞ்சிச்
    செயலற்று நின்றனனோ கம்பன் என்று
நினைந்தெனது படைதொடர உட்பு குந்தேன்
    நிறைந்தொளிரும் அமைதியையே அங்குக் கண்டேன். 2

உருவியவாள் உறையகத்தே உறங்க வைத்தேன்;

உளத்தடத்தில் பொங்கிவரும் உணர்ச்சி ஒன்று
மருவியதால் இனமறியா மகிழ்ச்சி கொண்டு
மன்னனவன் அரசிருக்கும் மன்றஞ் சென்றேன்;
பெருகியதோர் அறிவொளியைத் தேக்கி வைத்த
பெருவிழியன் விரிநுதலன் என்னை நோக்கி,
‘அருகினில்வா என்மகனே’ என்று கூறி,
அகங்குளிர இருகையும் நீட்டி நின்றான். 3

அரவணைக்க நீட்டியகை யதனுள் ஏதோ
அடங்கியுள தெனநினைந்து கூர்ந்து நோக்க,
அறம்வளர்க்கும் குறளேடும், புலம்வ ளர்க்கும்
அழகியதொல் காப்பியமாம் ஏடும் கண்டேன்;
பொரநினைந்த என்மனத்தை நொந்து கொண்டேன்;
பொன்னிவள நாட்டான்முன் மண்டி யிட்டு,
நறவுகுக்கும் மலர்ப்பொழில்சூழ் நினது நாட்டை
நான்கண்டு மகிழவந்தேன் என்று ரைத்தேன். 4

என்றுமுள தென்றமிழைப் பாடிப் பாடி
இயல்தவழ்ந்து விளையாடும் நாவின் வேந்தன்,
நின்றஎனை நகைதவழ இனிது நோக்கி
‘நேரியனே என்னுடன்வா எனது நாட்டில்
துன்றுமெழிற் சிறப்பெல்லாம் காட்டு கின்றேன்;
தோழமையால் அதுகண்டு மீண்ட பின்னர்
நின்றனுயர் நாட்டினையும் அதுபோல் ஆக்க
நினைந்தெழுக’ என்றுரைத்தான்; அவன்பின் சென்றேன்.5

செந்தமிழின் பாட்டரசன் கம்ப நாடன்
செங்கோன்மை செலுத்திவரும் நாட்டில் வாழ்வோர்
சிந்தைகொளும் மகிழ்ச்சியினால் சிரித்துப் பேசிச்
சிந்துகிற கண்ணீரே அங்குக் கண்டேன்;
வெந்துழல்வோர் திரண்டெழுந்து நீதி கேட்க
வெகுண்டரசு தாக்கியதால் அவர்தம் மெய்கள்
சிந்துகிற குருதியிலே தோய்த்தெ டுத்துச்
செங்கோலாக் காட்டுகிற கோன்மை காணேன். 6

வயலொன்றைக் காத்துவரும் உழவன் போல
வையமெலாம் காக்கின்ற கோன்மை கண்டேன்;
உயிரொன்றி வாழ்கின்ற உடம்பாய் நின்றே
உயிரனைத்துங் காக்கின்ற கோன்மை கண்டேன்;
செயிரின்றி இயல்பினிலே ஒருமைப் பாடு
செழித்துயரச் செய்கின்ற கோன்மை கண்டேன்;
கயலொன்றும் விழிமடவார் கற்பைக் காக்கும்
கருத்தேபோல் நிலங்காக்குங் கோன்மை கண்டேன். 7

கலைதெரியும் மண்டபங்கள் அங்குக் கண்டேன்
கல்லெறியும் மண்டபங்கள் அங்கே இல்லை;
விலையறியாக் கல்விதனை விரும்பிக் கற்று
வீறுபெறும் மாணாக்கர் குழுவைக் கண்டேன்;
நிலையறிய மாட்டாமல் மயங்கி, வேலை
நிறுத்தங்கள் செய்வோரைக் கண்டே னல்லேன்;
அலைதவழும் கடலொலிபோல் ஆர்ப்பா ரில்லை
அமைதியுடன் சுவடிகளே பார்ப்பா ருண்டு. 8

காசுபணம் தந்துகலைப் பட்டம் வாங்கும்
காளையரை அந்நாட்டில் எங்குங் காணேன்;
ஆசிரியச் செய்கின்ற கடமை பூண்டும்
அன்பளிப்புத் தொகையாகப் பொருள்கள் பெற்று,
மாசுபடத் தேர்வெழுதி வந்த பேர்க்கும்
மதிப்பெண்கள் வழங்குகிற கயமை இல்லை;
ஆசிரியர் மாணவர்க்குள் பகையும் இல்லை
அப்பன்மகன் எனமதிக்கும் உறவே கண்டேன். 9

பயிலவரும் மாணவர்கள் தெளிந்து தேரப்
பயிற்றுமொழி எந்தமொழி என்று கேட்கும்

[1]மயலறிவும் சொற்போரும் அங்கே இல்லை;
மதியுடையார் செந்தமிழே மொழியக் கேட்டேன்;
வயிறுவளர்ப் பொன்றனையே குறியாக் கொண்டு
வழங்குகிற கல்வியினை அங்குக் காணேன்;
உயரறிவு வளர்ச்சிக்கே உதவுங் கல்வி
உணர்த்துகிற மேன்மைதனை அங்குக் கண்டேன். 10

கந்தனுக்கே நிகராய இளைஞர் எல்லாம்
கலைபலவுந் தெரிகின்ற கழகங் கண்டேன்;
சந்தனத்து [2]நகில்மடவார் சதங்கை கட்டிச்
சதிதவறா தாடிவரும் அரங்கங் கண்டேன்;
பந்தடித்துப் பயில்கலையும் மற்று முள்ள
பன்னரிய நுண்கலையும் தேர்ந்த வல்லோர்
வந்திருக்கும் இடம்பலவுங் கண்டு கண்டு
வளர்கலைகள் மிகுநாட்டை வாழ்த்தி நின்றேன். 11

குழலிசையும் யாழிசையும் எழுப்பும் ஓசை
குயிலிசையை வண்டிசையை விஞ்சி நிற்கும்;
முழவுவகைத் தோற்கருவி தனித்தும் சேர்ந்தும்
முழங்குகிற பேரொலிகள் இடியை விஞ்சும்;
பழகுமவர் மிடற்றெழுந்த பாடல் தந்த
பண்ணெல்லாம் தெளிதேனை விஞ்சி நிற்கும்;
அழகொழுகும் இடைமடவார் அரங்கம் ஏறி
ஆடுகின்ற எழில்கண்டு மயில்கள் சோரும். 12

கலையுடுத்துக் குழலிசைக்கத் தாளங் காத்துக்
கைவழியே விழிசெலுத்தும் நடனங் கண்டேன்;
கலைவிடுத்துக் குழல்விரித்து மானம் விட்டுக்
காசொன்றே குறியென்று பிறந்த மேனி
நிலைபடைத்துச் சூடுண்ட மண்பு ழுப்போல்
நெளிந்துகுதித் தாடுகின்ற பேய்கள் இல்லை;
நிலைகெடுத்த கலைகெடுத்த பரணிப் பேய்கள்
நெளிவினுக்குக் கலையின்பேர் சூட்ட வில்லை. 13

பண்ணுடனே திறமனைத்தும் உணர்ந்த வல்லோர்
பாட்டரங்கில் தமிழிசையே முழங்கக் கேட்டேன்;
[3]கண்ணறவக் களிப்பினிலும் பாணர் தம்வாய்
கன்னிமொழித் தமிழிசையே பாடக் கேட்டேன்;
எண்ணமெனக் கெங்கெங்கோ ஓடி ஓடி
எனதுதமிழ் நாட்டுநிலை நினைந்த தங்கே;
நண்ணிஎனைத் தோள்தொட்டுக் கம்ப நாடன்
நலமிக்க வேளாண்மை காண்க என்றான். 14

படியரிசித் திட்டங்கள் அங்கே யில்லை
படிமுழுதும் நெல்விளைந்து கிடப்ப தாலே;
குடிபுரப்போர் உழமறுப்புச் செய்ய வில்லை
கொடுமைகளைக் காணாத கார ணத்தால்;
இடுவரம்புச் சட்டங்கள் அங்கே இல்லை
எழில்வயல்கள் உழவரிடம் இருப்ப தாலே;
படுபொருளைப் பதுக்குகிற பழக்கம் இல்லை
பார்முழுதும் நினைத்தவெலாம் கிடைப்ப தாலே. 15

உரம்போடத் தழையறுப்பர் அன்றி மற்றோர்
உயிர்போகத் தலையறுக்குந் தொழிலைச் செய்யார்;
தரங்காணும் பயிரறுப்பர் அன்றி மற்றோர்
தவிதவிக்க உயிரறுக்க நினையார் அங்கே;
வரம்பாடும் களையெடுப்பர் அன்றி மற்றோர்
வரம்புகளை எடுக்கமனம் விரும்பார் அங்கே;
[4]அறம்பாடுஞ் செயல்முறைகள் விளைப்ப ரன்றி
அறம்பாடும் தீவினைகள் விளையா ரங்கே. 16

பலவகைய தொழில்வளங்கள் படைத்து நிற்பார்
பணிபுரியும் நிறுவனங்கள் அடைத்து நில்லார்;

உலகுடனே தலைநிமிர உழைத்து நிற்பார்
உண்டாக்கும் பொருள்தடுத்து வளைத்து நில்லார்;
கலகமொடு கயமைசெய விருப்பங் கொள்ளார்
கடமைகளைப் புரிவதற்கு வெறுப்புங் கொள்ளார்;
பலதொழில்கள் புரிவினைஞர் பகைமை கொள்ளார்
பாடுபடும் நிலைக்கேற்பப் பயனே கொள்வார். 17

ஏற்றுமதிப் பொருள்களெலாம் மலைபோற் கண்டேன்
இறக்குமதிப் பொருள்களெலாம் சிலவே கண்டேன்;
காற்றுவழிக் கலஞ்செலுத்தும் வணிகங் கண்டேன்
கணக்கின்றிப் பொருள்குவிக்குந் திறமுங் கண்டேன்;
போற்றுமதிக் கணக்கரெலாம் எழுதும் ஏட்டில்
பொய்யான கணக்கிரண்டு காண வில்லை;
தூற்றுகின்ற பழியொன்றும் பெற்றா ரல்லர்
துலவுக்கோல் போல்வணிகம் செய்வ தாலே. 18

சாதியெனும் தொழுநோயை அறியா மக்கள்
சமுதாயப் பண்புடனே ஒழுகக் கண்டேன்;
ஓதிவருங் கல்வியினால், உற்ற செல்வ
உயர்ச்சியினால், பிறநலத்தால் மிளிரக் கண்டேன்;
பாதிமதி நுதல்மடவார் பிள்ளை கட்குப்
பாலூட்டித் தமைக்கொண்ட கணவற் பேணிக்
கோதில்மனை நலங்காத்து விருந்தும் ஓம்பிக்
குடும்பத்தின் விளக்காக விளங்கக் கண்டேன். 19

சமையங்கள் பலவெனினும் உயர்வு தாழ்வுச்
சண்டையின்றிச் செம்பொருள்தான் ஒன்றே என்று
அமைதியுடன் அப்பொருளை அகத்தி றுத்தி
அன்புவழி ஒழுகிவரும் நிலையைக் கண்டேன்;
இமையந்தன் நிலைகெடினும் ஆணும் பெண்ணும்
இமையளவும் வழுவாத ஒழுக்கங் கண்டேன்;
எமதவ்வை உரைக்கிணங்க மக்கள் நல்லர்
என்பதனால் உயர்ந்தோங்கும் நாடு கண்டேன். 20

---

**பாடற்குறிப்பு:–** காரைக்குடி கம்பன் திருநாள்க் கவியரங்கில் பாடியது – 21.3.1970.

**அருஞ்சொற் பொருள்:–** 1. மயலறிவு – மயக்கத்தை உடைய அறிவு.
2. நகில் – கொங்கை. 3. கண்ணறவம் – கள்நறவம்.
4. அறம்பாடும் – அறநூலிற் பாடும், வசைபாடுதல்.

## 45. பாவேந்தர் வழங்கிய கொடை

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

எண்சீர் விருத்தம்

பூவேந்தர் வழங்குகொடை, காலப் போக்கிற்
போய்மறையும் நிலைமைத்தாம்; பெருமை சான்ற
நாவேந்தர் வழங்குகொடை கால மெல்லாம்
நலம்பயந்து நிலைத்திருக்கும்; பாண்டி தந்த
பாவேந்தன் வழங்குகொடை கவிக்கு லத்துப்
பரம்பரையாய்த் தலைமுறைகள் தோறும் நிற்கும்;
சாவேந்திப் போனபினும் தழைத்து நிற்கும்
தகைமைத்தாம் அக்கவிஞன் தந்த செல்வம். 1

பாவேந்தன் வழங்குகொடைப் பெருமை எல்லாம்
பகுத்தெடுத்து வகைப்படுத்திச் சிறப்பை எல்லாம்
நாவேந்திப் பாடுதற்கு யாரால் ஒல்லும்?
நாளொன்று போதுவதோ? பலநாள் வேண்டும்;
கோவேந்தர் போலஎழில் தோற்றங் கொண்டோன்
கொடைசொல்லக் காவியங்கள் பலவும் வேண்டும்;
பூவேந்தும் நறவமென இனிக்கும் செஞ்சொற்

புரட்சிப்பாக் கொடைஞனவன் கொற்றம் வாழ்க 2

குருட்டுலகில் இருட்டறையில் வாழ்வோர்க் கெல்லாம்
குடும்பவிளக் கேற்றியறி வொளியைத் தந்தான்;
திருட்டுமனப் போக்கர்தமைச் செருக்க டக்கித்
தீந்தமிழை வளர்ப்பதற்கு வழியைச் சொல்லித்
தெருட்டுகின்ற தமிழியக்கம் ஒன்று தந்தான்;
திரிகாற்று கதிர்திங்கள் இவற்றி னுள்ளே
உருக்கொண்டு சிரிக்கின்ற அழக னைத்தும்
உருவாக்கி நமக்களித்தான் உலகம் போற்ற. 3

கூத்தடிக்க நாடகநூல் தந்தா னல்லன்
கொள்கைக்கே நாடகங்கள் எழுதித் தந்தான்;
பூத்தொடுத்த குழல்மடவார் தம்மைத் தாழ்த்தும்
புன்மைகளை மாய்ப்பதற்கு, வீரம் மிக்க
பாத்திறத்தான் தமிழச்சி ஏந்தும் கத்தி
படைத்தளித்தான்; நினைந்துநினைந் துள்ளம் பொங்க
ஏத்தெடுக்கும் முத்திரையாய் விளங்கி வேண்டி
எதிர்பாரா முத்தமொன்று தந்து வந்தான். 4

காவியங்கள் எனும்பெயரில் நல்ல நல்ல
கருத்துகளை உள்ளடக்கி நிலைத்து நிற்கும்
ஓவியங்கள் பலதந்தான்; பரிசி லாக
உயர்பாண்டி யன்பரிசில் எனும்நூல் தந்தான்;
பூவியங்கும் செழுந்தேனோ? கரும்பின் சாறோ?
புரட்சிக்கு நடும்வித்தோ என்று மக்கள்
நாவியந்து போற்றுவணம் தொகுதி யாக
நல்லகவி மலர்தொடுத்து நமக்க ளித்தான். 5

பயில்கின்ற நெஞ்சமெலாம் வண்டாய் மொய்த்துப்
பைந்தமிழ்த்தேன் சுவைக்கின்ற முல்லைக் காடு;
மயில்திரியும் தென்பொதிகைக் குற்றா லத்து
மலையிறங்குந் தேனருவி; துன்பம் என்னும்
[1]மயல்இரிய நம்முளத்தை இளமை யாக்கி
மகிழ்வுதரும் இசையமுது பாடித் தந்தான்;
இயல்பினிலே அமைதியினன்; எழுச்சி கொண்டால்
இரணியன்தான், எதிர்நிற்க எவரு மில்லை. 6

கொடைதந்தான் பாவேந்தன் பெற்றுக் கொண்டோம்;
கொடுத்தவற்றைப் பயன்படுத்தி வாழ்ந்த துண்டா?
விடைதந்து தலைநிமிர்ந்து நிற்ப தற்கு
விதியுண்டா? மதியுண்டா? வெட்கம்! வெட்கம்!
படைதந்தான் வீரரென நமைநி னைந்து;
பற்றியநாம் பேடியர்போல் நடுங்கு கின்றோம்;
உடையுண்டு போனதலால் நமது வீரம்
ஒளியுண்டு நின்றதென உரைக்கப் போமோ? 7

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவரும் நாளை யிங்கு
நாடப்பா! ஏழைமுத லாளி என்ற
நாடகத்தைக் கலைத்தொழிக்க நாளும் எண்ணிப்
பாடப்பா உலகப்பா உன்றன் பாட்டை!
பார்மகிழப் போடப்பா [2]புதிய பாட்டை!
கேடப்பா மேல்கீழ்கள் என்று சொன்னான்
கேட்டிருந்தும் ஊமையப்பர் ஆகி நின்றோம். 8

புதியதொர் உலகமினிப் படைப்போம் வாரீர்
பொசுங்கட்டும் கெடுதிதரும் பழைமை எல்லாம்;
மதியதனை ஒளிசெய்வோம்; உயர்வு கொள்வோம்
மதம்சாதிக் கொடுமைகளை விட்டொ ழிப்போம்;
விதியதனை நம்பிமனம் சோர்ந்து நின்று
வீணாகிப் போகாமல், பொதுமை காணும்
விதியதனைச் செய்திடுவோம் என்றான்; நாமோ
விழிதிறக்க மனமின்றி உறங்கு கின்றோம். 9

தெற்கோதும் தேவாரம் ஆழ்வார் தந்த
திருவாய்நன் மொழியான தேனி ருக்கக்
கற்கோவில் உட்புறத்தே புரியாப் பாடை
கால்வைத்த தெவ்வாறு? நெஞ்சு ருக்கும்
சொற்கோவின் நற்போற்றி அகவல் எங்கே?
தூயவர்தம் திருமொழிகள் இறைவன் காதில்
நிற்காது போய்விடுமோ? என்று கேட்டான்;
நிற்கின்றோம் சிலையாக நாமும் சேர்ந்து. 10

தமிழ்நாட்டுப் பாடகரே தமிழைப் பாடித்
தமிழ்மானம் காத்திடுவீர் என்று சொன்னான்;
அமிழ்தூட்டும் தாய்மொழியைப் பாடா ராகி
அவர்மானம் தமிழ்மானம் அனைத்தும் விட்டார்;
தமிழ்வேட்டுப் பாடுதற்கு முனைந்த பேரைத்
தமிழ்ப்பகைவர் படுகுழியில் அழுத்து கின்றார்
தமிழ்நாட்டு மாந்தரெனும் நாமும் சேர்ந்து
ததிங்கிணத்தோம் போடுகின்றோம் மானம் கெட்டு. 11

உன்னை வளர்ப்பன உணவே – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே
என்ன வழங்கினன் பாடல் – எனினும்
எதனை வளர்த்தனம் இங்கே?
தென்னை வளர்ந்தது போலே – இந்தத்
தேகம் வளர்ந்தது மேலே
கன்னல் நிகர்த்திடும் தமிழை – நெஞ்சில்
கட்டி வளர்த்ததும் உண்டோ? 12

கொடியோர்செயல் அறவே ஒரு
கொலைவாளினை எடடா!
இடியேறெனப் புலியேறென
எழுவாய்கணை தொடடா
படிவாழவும் தமிழ்வாழவும்
பகைமாயவும் [3]கொடுவாள்
பிடிவாவெனத் தருவான்எனின்
பெறவேயிலை அதையே. 13

தலையாகிய அறமேபுரி
சமவாழ்வினைப் பெறவே
இலையோ உரம்? மலையோபகை?
எழுவாய்தமிழ் மகனே!
பலநாளிதை மொழிவானவன்
பயனேஇலை அடஓ!
சிலையாமென இருந்தோம்செவி
செவிடாகிய ததனால். 14

கொண்டவர் மாண்டனர் என்பதால் மங்கையர்
கோலமெ லாமழித் தோம் – எதிர்
கண்டவர் ஏசிடக் கைம்பெண்டிர் என்றபேர்
கண்ணீ ருடன்கொடுத் தோம். 15

கொண்டவள் போனபின் நின்றிடும் ஆண்மகன்
கூடிக்கு லாவிடு வான் – எனில்
கண்டு நிகர்மொழிப் பெண்டிரை மட்டிலும்
காதல் மறுத்திடல் ஏன்? 16

கோரிக்கை யற்றுக் கிடக்குதடா இங்கு
வேரிற் பழுத்த பலா – எனக்
கூறிக்கை தந்திட வேண்டுமென் றானவன்
கோலக்கை தந்தவ ரார்? 17

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கெனப்
பொங்கி முழங்கிடச் சங்கமொன் றளித்தான்

சங்கமது முழங்காமல் போயொளிந்த தெங்கே? 18

வெங்குருதி தனிற்கமழந்து வீரஞ்செய்
 கின்றதமிழ் எங்கள் மூச்சாம்
தங்குதடை யில்லாமல் தந்தகவி
 சொன்னமொழி எங்கே போச்சாம்?
இங்கினியும் செந்தமிழில் கல்விசொல
 வழியிலதேல் என்ன பேச்சாம்? 19

---

**பாடற்குறிப்பு:–** பறம்புமலை பாரிவிழாக் கவியரங்கில் பாடியது – 18.4.1970.

**அருஞ்சொற் பொருள்:–** 1. மயல் இரிய – மயக்கம் விலக.
2. புதியபாட்டை – புதிய பாதை. 3. கொடுவாள் – வளைந்தவாள்.

## 46. பாரதி பொழிந்த மழை

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

எண்சீர் விருத்தம்

‘காலதனால் உனைமிதிப்பேன் காலா வாடா’
 கவியிதனில் இடிமுழக்கம் ஒலிக்கக் கேட்டேன்;
நூலமரும் நெஞ்சத்தில், நுவலும் வாக்கில்
 நுடங்காத உண்மையொளி மின்னக் கண்டேன்;
கோலமிகு வெள்ளத்தின் பெருக்கைப் போலக்
 கொடுத்தகவிப் பெருக்கத்தில், உணர்ச்சிப் பாங்கில்
ஞாலமிசைத் தெள்ளுதமிழ் மழையைக் கண்டேன்
 நான்நனைந்து நனைந்தெழுந்து பாடு கின்றேன். 1

வள்ளுவனும் இளங்கோவும் மற்று முள்ளோர்
 வகுத்தமைத்த நூற்கடலுள் தவழ்ந்த மேகம்,
உள்ளெழுந்த உணர்ச்சிஎனும் பெருங்காற் றுந்த
 உயர்ந்தெழுந்து கற்பனைவான் திரிந்த மேகம்,
துள்ளிவருஞ் சொற்களெனும் இடிமு ழக்கித்
 தூயதமிழ்ப் பார்வையினால் மின்னும் மேகம்;
கள்ளுமிழும் கவிப்பயிர்கள் செழிக்க வேண்டிக்
 கருக்கொண்டு தமிழ்மழையைப் பொழிந்த மேகம். 2

அடிமைஎனுங் கொடுவெயிலின் வெம்மை தாக்க
 அகம்வறண்டு, செயல்திரிந்து, பொருள்நீர் வற்றி,
மிடிமைஎனும் வெடிப்புற்றுத், தொடர்ந்து வந்த
 மேலான உரங்கெட்டுத் தொழில்கள் என்னும்
செடிகொடிகள் அடிவதங்கி, உரிமை என்னும்
 செழும்பயிர்கள் மிகவாடி, மயங்குங் காலை
இடியுடைய கோடைமழை போல வந்தான்
 இந்நாடு செழித்துயரப் பொழிந்து நின்றான். 3

தலைவரெனும் உழவரெலாம் சொல்லேர் கொண்டு
 தாய்நாட்டார் மனப்புலத்தைப் பண்ப டுத்தி,
நிலையுடைய உரிமையுணர் வென்னும் வித்தை
 நிலமெல்லாந் தூவிவிட்டார்; அந்தப் போழ்து
கலையுணரும் பாரதியாம் மேகந் தோன்றிக்
 கவிமழையை நிலங்குளிரப் பொழியக் கண்டோம்;
விலைமதியா விடுதலையாம் பயிர்செ ழித்து
 விளைபயனும் நனிநல்கி வளரக் கண்டோம். 4

சேர்த்தெடுத்த சொல்விளங்குங் கவிதை வானில்
 திரிந்துவரும் பாரதியாம் எழில்சேர் கொண்டல்
கார்த்தொடுப்பால் இடியிடித்துப் பொழிதல் போலக்
 கவித்தொடுப்பால் உணர்ச்சியினை முழக்கி, மின்னி,
ஆர்த்தடித்த தமிழ்மழையால் திரண்ட வெள்ளம்
 ஆங்கிலத்தார் அடித்துவைத்த கூடா ரத்தைப்
போர்த்தெடுத்துத் தள்ளியதை அறியா ருண்டோ?

பெருமழையின் ஆற்றலினைத் தெரியா ருண்டோ? 5

கள்ளெடுத்துத் தீயெடுத்துச் சேர்த்து நல்ல
காற்றெடுத்து வான்வெளியும் கலந்து வைத்துத்
தெள்ளுதமிழ்ப் பெரும்புலவன் கவிதை யாக்கித்
தீந்திமிதீம் எனமுழங்கிப் பெய்தான்; நீரின்
அள்ளுசுவைப் பெருமைஎலாம் சுருங்கக் கூறின்
அகங்கவரு மெண்சுவையும் பொருந்தி நிற்கும்;
துள்ளிவரும் உணர்ச்சியினால் வேகங் காட்டுந்
தொடர்மழையில் நனைந்தவர்க்கு வீரந் தோன்றும். 6

பொதுவுடைமைச் செம்புலத்துப் பெய்யும்போது
புத்துலகச் செம்மைநிறம் பொருந்தி நிற்கும்;
மதியுடைமைக் கார்நிலத்திற் கொட்டுங் காலை
மலர்ந்திருக்குங் கருவண்ணம்; கருமை செம்மை
பொதுளியநற் பூமிதனில் பொழியும் போது
பூத்திருக்கும் இருவண்ணம்; மதத்திற் பெய்தால்
அதனுடைய வண்ணமுமாய்க் காட்சி நல்கும்;
அமரகவி பெய்ததமிழ் மழைநீ ரெல்லாம். 7

பழங்குப்பை கூளமெலாம் அடித்துச் செல்லும்;
பகுத்தறிவுப் புலத்தையது குளிரச் செய்யும்;
வளங்கெட்ட வறுமையுடன் செல்வ மென்று
வருமேடு பள்ளமெலாம் சமப்படுத்தும்;
விளங்குற்ற அறிவுவளம், உரிமை வேட்கை,
வீரமிக்க துணிவுள்ளம், இன்னோ ரன்ன
களங்கமறு நறுமலர்கள் மலரச் செய்யும்
கவிஞனவன் பெய்ததமிழ் மழைநீ ரெல்லாம். 8

எங்கள்சுதந் திரதாகம் தணிவ தெந்நாள்?
என்றேங்கும் பொழுதத்துத் தாகம் தீர்க்கச்
சிங்கமகன் கோடைமழை யாக வந்தான்;
செந்தமிழர் திருநாட்டைப் பாடும் போது
பொங்கிவருங் காலமழை யாகி நின்றான்;
புதுமுறையில் பாஞ்சாலி சபதம் பாடிப்
பங்கமறப் பொதுநெறியில் தெய்வப் பாடற்
பண்பாடி அடைமழையாய்ப் பொழிந்து நின்றான். 9

பாரதிபெய் தமிழ்மழையால் சாவா தின்னும்
பாட்டுலகம் வழங்கிவரும் கார ணத்தால்
[1]வாரமிகும் அம்மழையை அமிழ்தம் என்றே
வாய்மணக்கச் சொல்லிடலாம்; பாடல் என்னும்
ஈரமழை பெய்யாது பொய்த்தி ருந்தால்
இனியகவிக் கடலுந்தன் னீர்மை குன்றும்;
நேரமெலாந் தன்னுரிமைப் பசியே வந்து
நின்றிருந்து நமைவருத்தி உடற்றும் அன்றோ? 10

ஆர்ப்பாட்டப் போாப்பாட்டுப் பாடி வந்த
அடலேற்றுப் பெரும்புலவன் வேட்டெ ழுந்து
சீர்ப்பாட்டுத் தமிழ்மழையைப் பெய்யா விட்டால்
செந்தமிழர் நெஞ்சமெலாம் வாடி நிற்கும்;
ஏர்ப்பாட்டுப் பாடாமல் ஓய்ந்தி ருக்கும்;
இன்பமலர் சாய்ந்திருக்கும், எழுச்சி யூட்டும்
போர்ப்பாட்டு மொழியுணர்ச்சி என்னும் பச்சைப்
புல்நுனியுங் காண்பரிதாய்க் காய்ந்தி ருக்கும். 11

'பாமரரே! விலங்குகளே! பான்மை கெட்டீர்!
பார்வைதனை யிழந்துவிட்டீர்! செவிடும் ஆனீர்!
நாமமது தமிழரென வாழ்வீர்!' என்று
நாமுணர இடித்திடித்துப் பொழிந்த போதும்
ஏமமுற வீட்டுமொழி கற்கு மெண்ணம்
எங்கணுமே மலரவில்லை; வேறு வேறு
தீமொழியே பயில்கின்ற விழல்கள் இன்னும்
தெருவெல்லாம் வளர்வதையே காணு கின்றோம். 12

‘நெஞ்சமது பொறுக்கவிலை இந்த நாட்டு
   நிலைகெட்ட மாந்தர்தமை நினைந்து விட்டால்
வஞ்சனைகள் புரிந்திடுவார்; மானம் விட்டு
   வாழ்வுக்கே அலைந்திடுவார்; பிறப்புக் குள்ளே
கொஞ்சமோ பிரிவினைகள்?’ என்று கண்ணீர்
   கொட்டுதமிழ் மழைமொழிந்தும் ஒற்று மைக்கு
நஞ்சையிலே இடமில்லை; கள்ளி காளான்
   நன்றாக வளர்ந்துவரக் காணு கின்றோம். 13

‘தண்ணீரை விட்டோநாம் இந்த நாட்டில்
   தன்னுரிமைப் பயிர்வளர்த்தோம்? நாளும் நாளும்
கண்ணீரும் செந்நீரும் சிந்திச் சிந்திக்
   காத்திருந்தோம்; கருகாமல் வளர்ப்பீர்’ என்று
புண்ணான தனதுமனம் பொங்கிப் பொங்கிப்
   பொழிந்தானே வானமழை! அதனைச் சற்றும்
எண்ணாமல் திரிகின்றோம்; நெஞ்சில் ஈரம்
   ஏறாமல் இருக்கின்றோம் பாறை யாக. 14

மழைபெய்தும் விளைவறியாக் களிமண் ணாக
   வன்பாறை நிலமாகக் கிடக்கின் றோம்நாம்;
கழைபெய்த சாறிருந்தும் அதனை மாந்திக்
   களிக்காமல் எதைஎதையோ பருகு கின்றோம்;
விழைவெல்லாம், பாரதியின் எண்ண மெல்லாம்,
   வெறுங்கனவாய்ப் பகற்கனவாய்ப் போவ தென்றால்
நுழைமதியன் பாவேந்தன் தனது நெஞ்சம்
   நொந்தழிந்து போகானோ? நன்றோ சொல்வீர்? 15

முன்பிருந்தோர் எழுதியநூற் கடலுள் மூழ்கி
   முகந்துவரும் பாரதியாம் மேகம் இங்கே
அன்பளைந்து தமிழ்மழையைப் பொழிந்த தாலே
   ஆறுபல தமிழகத்தே பாயக் கண்டோம்;
என்பொடிந்த தேகத்தும் எழுச்சி யூட்டும்
   எம்கவிபா ரதிதாசன் ஓரா றாவர்;
என்பினையும் உருக்குமணிக் கவிதை சொன்ன
   எங்கள்கவி மணியாரும் ஓரா றாவர். 16

நாட்டுக்குப் பாட்டுரைத்து விருது பெற்ற
   நாமக்கல் கவிஞரும்ஓர் நல்லா றாவர்;
ஏட்டுக்குள் அடங்காத கவிஞ ரான
   எம்போல்வார் கிளைநதிகள் ஆவோம் கண்டீர்;
பாட்டுக்குப் பரம்பரைகள் தோன்றி நின்று
   பயனல்கும் வாய்க்கால்கள் பலவும் உண்டு;
கேட்டுக்குத் துணைபோவார் கவிதை என்று
   கிறுக்கிடுவர் அவரெல்லாம் வடிகால் ஆவர். 17

---

**பாடற்குறிப்பு:–** காரைக்குடி இந்துமதாபிமான சங்கக் கவியரங்கில் பாடியது – 16.9.1973.

**அருஞ்சொற் பொருள்:– 1.** வாரம் – அன்பு.

## 47. புறமும் அகமும்
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

நன்றென்றும் தீதென்றும் நன்கு பகுத்துணர
ஒன்றுந் தெரியாமல், உள்ளத்தாற் சிந்திக்கும்
ஆற்றல் இலனாக ஆதிநாள் வாழ்ந்தமகன்
சாற்றும் மொழியொன்றும் தானறியா அந்நாளில்
கண்ணசைத்தும் கையசைத்தும் காட்டுகிற சைகையினால்
எண்ணமதைச் சொல்லிவந்த எண்ணறியாக் காலத்தே
காட்டகத்தே காடடர்ந்த கல்லின் குகையகத்தே
கோட்டு விலங்கினமும் கூரெயிற்று மாவினமும்
சூழ்ந்து திரிகின்ற சொல்லரிய சூழலில்தான்

வாழ்ந்திருந்தான்; அந்த வரலாறு நாமறிவோம்.
கொல்லும் விலங்கின் குழுவிடையே வாழ்ந்ததனால்
வெல்லும் வகையறிந்து வேட்டைத் தொழில்புரிந்து
தற்காத்துக் கோடற்கும் தன்பசியைப் போக்கற்கும்
கற்கருவி விற்கருவி கைக்கொண்டான் அம்மாந்தன்;
அந்நாளில் வாழ்வின் அடித்தளமே வீரந்தான்;
முன்னாளில் வாழ்ந்தோன் முதற்பண்பே வீரந்தான்;
வீர விளையாட்டால் வெற்றிக் களியாட்டால்
நேரங் கடந்துவர நீண்டநாள் தாண்டிவிடச்
சிந்தனையில் ஓர்தெளிவு சேர்ந்து தளிர்விட்டு
முந்திவரும் கூட்டுணர்வு மூண்டு வளர்ந்துவரக்
கூடி மகிழ்ந்து குழுவாக வாழ்நெறியை
நாடிக் குமுகாய நாட்டத்தைப் பெற்றிருந்தான்;
ஒட்டி உறவாடி உள்ளங் களித்ததனால்
கட்டுப் படுத்திக் கனிவுதரும் அன்புணர்வு
விட்டுத் தளிர்த்து விளைந்து பெருகியது;
மட்டுப் படுத்தும் வகையறியா அம்மாந்தன்
அன்பின் வலிமைதனை அன்பு தருந்தொடர்பை
நன்கு தெளிந்தான் நாள்கள் வளர்ந்துவரக்
காதலெனும் பாலுணர்வைக் கண்டு மிகமகிழ்ந்தான்
ஆதி மனிதனவன் அன்பின் பயன்கண்டான்;
பேசும் மொழியறிவைப் பெற்று வளர்ந்ததற்பின்
மாசிலா நூல்கள் வகுக்கும் வகையறிந்தான்;
சாதல்தரும் வீரத்தை ஆதல்தரும் காதலினை
ஓதும் புறமென்றும் உள்ளும் அகமென்றும்
கண்டான் கனிதமிழில் விண்டான் உலகதனிற்
கொண்டான் பிறரறிந்து கொள்ளாப் பெருமைஎலாம்;
அவ்விரண்டு பண்பிற்கும் ஆன இலக்கணமும்
செவ்விதிற் செப்பினான் சேர்த்து.

---

**பாடற்குறிப்பு:–** 5.12.1965 ஆம் நாள் பாடியது.

## 48. ஏனோ?

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

பல்லவி

சிந்தை திரிந்ததேனோ – *கோவைக் குமரன்
நிந்தை மிகுந்த செயல் இங்கு புரிந்திடச்
(சிந்தை)

அனுபல்லவி

அந்தநாளிலே சொன்ன சொல்லையும் மறந்து
ஆகாது பிரிவினை எனுமொழி புகன்றிடச்
(சிந்தை)

சரணம்

பட்டம் பதவிகளில் கொண்டுள்ள மோகமோ
பாதி யறிவினர்தம் போதனை வேகமோ
கெட்ட நினைவுகொளும் ஆரியர் சூழ்ச்சியோ
கெடுமதி இதுவன்றோ ஏனிந்த வீழ்ச்சியோ
(சிந்தை)

---

**பாடற்குறிப்பு:–** அறிஞர் அண்ணா தனது ‘திராவிட நாடு’ (8.4.1945) இதழில், இக்கவிதையை வெளியிட்டுக் கவிதைக்கு மேலே, “சர்.சண்முகம், திராவிட நாடு தனி நாடாவதை எதிர்க்கிறார்! ஏனோ இவருடைய மனம் இப்படி வேறுபட்டது என்று கேட்கிறார் தோழர் கவிஞர் முடியரசன்; கலைச்சுவை காணும் சர்.சண்முகத்துக்குக் கவிதை உருவிலேயே....”. எனக் குறிப்பும் எழுதியிருந்தார் அண்ணா.

**அருஞ்சொற் பொருள்:–**

*கோவைக்குமரன் – விடுதலை பெற்ற இந்தியாவில் நேருவின் அமைச்சரவையில் முதல் நிதியமைச்சராக இருந்த கோவை சர்.ஆர்.கே.சண்முகம்.

## 49. தமிழினத்தின் தனித்தலைவர்

(நூல்:—ஞாயிறும் திங்களும்)

தொண்டொன்றே வாழ்வின் தொழிலாக நாளெல்லாம்
கொண்டிலங்கும் நம்பெரியார் கோலம் வடித்தெடுத்தே
வண்டலுக்குப் பேர்பெற்று வாழ்வுதரும் தஞ்சைமண்ணில்
அன்றெடுத்தார் ஓர்[1]சிலைதான் அந்நாள் கவியரங்கில்
நாட்டுக் குழைத்துவரும் நம்மினத்துக் காவலர்க்குப்
பாட்டெழுத வேண்டிப் பணித்திருந்தார் வீரமணி;
நன்றிக் கடன்செலுத்த நல்லதொரு வாய்ப்பிதுவாம்
என்றுநான் எண்ணி இசைவும் அளித்துவிட்டேன்;
சூழ்நிலையால் பாமாலை சூட்ட இயலாமல்
ஆழ்துயரம் கவ்வியதால் அன்றுமுதல் நொந்திருந்தேன்;
அந்த மனத்துயரம் ஆறும் படியாக
இந்தநிலை வாய்த்ததென எண்ணி மகிழ்கின்றேன்;
அன்றுதஞ்சை மண்ணில் அவர்க்குச் சிலையெடுத்தார்
இன்றுதிண்டுக் கல்லில் எடுத்தார் சிலையொன்று;
பாமலர்கள் சூட்டப் பணித்தமையால் இவ்வரங்கில்
நாமகிழ நெஞ்சம் நனிமகிழப் பாடுகின்றேன்
என்தந்தை தோன்றியஊர் இவ்வூரே; அவ்வூரில்
முன்வந்த எம்மினத்தின் மூத்ததிருத் தந்தையைநான்
பாடுகின்ற பேறடைந்தேன்; பாவலர்கள் சொன்மலர்கள்
சூடுகின்ற தாள்மலரைச் சூடுகிறேன் என்தலையில்;
பற்றிப் படர்ந்திருந்து பாழ்செய்யும் ஆரியத்தைச்
சுற்றித் தொலைப்பதற்குச் சூறா வளியாகி
வேரெல்லாம் பேர்த்தெறிய வேகப் புயலாகி
ஊரெல்லாம் நாடெல்லாம் ஓடி வரும்நாளில்
ஆய்ந்துணர மாட்டா தறியாமைப் பேரிருளில்
தோய்ந்து கிடந்தோர் தொடுத்தெறிந்த கல்லெல்லாம்
சேர்ந்து திரண்டு சிலையாக வந்தின்று
நேர்ந்திங்கு நிற்பதுபோல் நெஞ்சம் நினைக்கிறது;
கல்லுக்கும் சொல்லுக்கும் காட்டும் எதிர்ப்புக்கும்
தொல்லைக்கும் அஞ்சாது தொண்டுசெயும் அந்நாளில்
ஆரியரின் கால்வருடும் அன்பர் திருக்கூட்டம்
சீறிவரும் நாகமெனச் சேர்ந்து பெரியார்மேல்
வீசி எறிந்தபொருள் வீசைப் பொருளாகிக்
காசு பணமாகக் காண்கின்றேன் இந்நாளில்;
பேராசைக் காரர் பெரியார் எனச்சொல்ல
ஓராசை என்மனத்தே ஓடிச் சுழல்கிறது;
தம்வயது தொண்ணூற்றைத் தாண்டிவிட்ட பின்புமவர்
தம்வயது நீண்டுவரத் தாம்ஆசை கொள்கின்றார்;
ஏனிந்த ஆசைஎனில் 'இன்னும்பல் முன்னேற்றம்
நானிங்குச் செய்வதற்கு நாடுகின்றேன்' என்கின்றார்;
நம்மினத்தை ஈடேற்ற நாடுகின்ற ஆசைஎனில்
எம்முயிர்க்கு வைத்தநாள் எல்லாம் அவர்க்கீவோம்
பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
நல்லாண்டு பெற்றிலங்க நாமெல்லாம் வாழ்த்திடுவோம்;
தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயலென்ற முன்மொழியால்
தாம்பெற்ற தி.மு.க. தாயகத்துப் பேரவையில்
ஓங்குற்று மேன்மைபெற உண்டாக்கி விட்டமையால்
தந்தை செயும்பணியைத் தாழ்வின்றிச் செய்துவிட்டார்
அந்தப் பெருமகனை ஐயாவை வாழ்த்திடுவோம்;
தேயத்தில் கட்சிபல சேர்ந்து வளர்வதுண்டு
நேயம் வளர்க்கின்ற நேர்த்தியைநாம் பார்த்ததுண்டா?
ஐயா எனஉறவு சொல்லி அழைப்பதற்கு
மெய்யாக ஓர்தலைவர் மேதினியிற் கண்டதுண்டா?
அண்ணாஅண் ணாவென் றழைக்கின்ற அன்புமொழி
எந்நாளில் எக்கட்சி எங்கே உரைத்ததுண்டு?
வீட்டுக் குடும்பம்போல் வேண்டிப் பழகுகின்ற
நாட்டுக் குடும்பமென நம்கழகம் வாழ்வதற்குக்

கற்பித்த நம்ஆசான் காட்டும் நெறிநடக்க
முற்பட்டு நின்றால்நாம் முன்னேற்றம் பெற்றிடுவோம்;
முன்னேற்றம் நாம்பெற்றால் மூத்திருக்கும் இக்கிழவர்
இந்நூற்றைத் தாண்டி இனிதிருந்து வாழ்ந்திடுவார்;
தொண்ணூறு தாண்டிவிடின் தொண்டுகிழம் என்றுரைப்பர்
தொண்ணூறு தாண்டிடினும் தொண்டுக் கிழவரிவர்;
இவ்வுலகை மாயமென ஏய்க்கும் மதச்சழக்கை
வெவ்வுரையால் சுட்டெரிக்கும் வெந்தழல்தான் நம்பெரியார்;
எம்மதமும் அண்டா நெருப்பிவர்தாம் என்றாலும்
அம்மா மதத்தலைவர் அண்டும் மதித்தலைவர்;
திட்டப் படும்புலவர் சிந்தையது நோவாமல்
ஒட்டிப் பழகும் உரிமைத் தலைவரிவர்;
வாளெடுப்போம் நம்பகையை வாட்டிடுவோம் என்றுபல
நாளெடுத்துக் கூறிடினும் நம்பகையாய் வந்தவர்க்குக்
கேடொன்றும் சூழாக் கிழவரிவர்; நெஞ்சத்தில்
சூடொன்றப் பேசிடினும் தோழமைக்குத் தந்தையிவர்;
வன்முறைகள் நாடா வலியரிவர்; தம்கருத்தைச்
சொன்முறையால் நற்புரட்சி தோற்றுவித்த வீரரிவர்;
பார்போற்றும் வண்ணம் பகுத்தறிவுக் கல்லூரிச்
சீர்போற்றி நின்றிலங்கச் செய்யும் முதல்வரிவர்;
தென்னாட்டை மீட்கத் திறல்காட்டி நம்பகைவர்
[2]வெங்காட்டி ஓடச்செய் வெண்தாடி வேந்தரிவர்;
இந்தி எனும்பெயரால் இங்குவரும் ஆதிக்கம்
முந்தித் தொலைத்துவிட மூட்டும் பெருநெருப்பு;
தங்கமுடி யாமல் ததும்பிவரும் சிந்தனைகள்
பொங்கி வழிகின்ற புத்தறிவுப் பேரூற்று;
சாதி சமயங்கள் சாத்திரங்கள் என்றுபல
ஓதும் மடமை உடைக்கும் வெடிமருந்து;
நல்ல குடியரசும் நாடு விடுதலையும்
வெல்லும் படிதந்த வீரத் தலைவரிவர்;
உய்வ்வண்ணம் ஆய்ந்தறிந் தோய்வே அறியாமல்
செய்யரிய செய்து பெரியார் எனவானார்;
நாட்டை அடிமைக்குள் நட்டு மிடிமைக்குள்
வாட்டி நமையாண்ட வஞ்சகத்து வெள்ளையரை
ஓட்டுதற்குப் பாடுபட்ட ஓரியக்கம் பேரியக்கம்
காட்டும் நெறிநின்று கடுஞ்சிறையுட் புக்கதெலாம்
நாடறியும், அந்நாள் நலிவுற்ற ஓரினத்தைப்
பீடுபெறச் செய்வதற்குப் பிற்போக்கு வைக்கத்தில்
காட்டிய அத்துணிவைக் கண்டவர்கள் வீரரென
ஏட்டில் எழுதி எடுத்துப் புகழ்ந்தார்கள்;
நாட்டிற் குழைத்தஇவர் நம்மினத்தின் மேன்மைக்குக்
கேட்டார் சிலவுரிமை; கேட்டும் மறுத்ததனால்
காஞ்சிபுர மாநாட்டில் கண்சிவக்கப் பேசிவிட்டு
வாஞ்சைகொளும் நம்பெரியார் வந்தார் வெளியேறி;
எங்கள் இனத்துரிமை ஏற்றம் பெறவந்த
சிங்கம் நிகர்தலைவர் சீர்மைமிகு காஞ்சியிற்றான்.
ஏற்றமிகும் அண்ணா இனப்போர்ப் படைத்தலைமை
ஏற்கத் தகுதியுளார் என்று தெரிந்தெடுத்தார்;
நாடு பிரிவதுதான் நன்மை பயக்குமென
நாடி முடிவெடுத்தார் நல்லாரூர் தன்னில்
பிரிவினைக்கு வித்திட்ட பேர்பெற்ற அவ்வூரில்
உரிமைக் குரல்தந்(து) – உறவுக்குக் கைதந்து
தன்னாட்சி நாடுந் தலைமகனை, இந்தியத்தின்
முன்னாட்சி செய்கின்ற மு.க.வைத் தந்தவரார்?
மூன்று தலைமுறையை முற்போக்குத் தலைவர்தமை
ஈன்று கொடுத்தவரார்? இன்னும் படைப்பவரார்?
பிற்போக்குக் கொள்கைகளைப் பேரிடிபோல் தாக்கிநின்ற
முற்போக்குக் கொள்கையினான், மொய்ம்புடைய ஏறனையான்,
பாட்டுக் குரியவனைப் பாரதியை விஞ்சிவிட்ட
பாட்டுக்கு வேந்தனவன், பாரதியின் தாசன்றன்
பாட்டுக்குள் வீரத்தைப் பாய்ச்சியவர் ஈரோட்டுப்
பாட்டனன்றோ? ஆற்றலெலாம் பாடி முடிவதுவோ?
ஒப்பரிய நற்றலைவர் ஆனாலும் ஓர்பொழுதும்
தற்செருக்குக் காட்டாத் தலைவர்அப் பண்பால்

எளிமைத் தலைவர்; எவரிடத்தும் இன்சொல்
மொழியுந் தலைவர்; முழுமைபெறும் நம்தலைவர்;
தள்ளாட்டம் உற்றும் தடுமாற்றம் இல்லாமல்
சொல்லாட வல்லஒரு சோர்வில்லாப் பேச்சாளர்;
பல்லெல்லாம் வீழ்ந்தும் பகுத்தறிவைப் பாய்ச்சுகின்ற
சொல்லெல்லாந் தித்திக்கும் சூடுங் குறையாது;
கிண்டல் நிறைந்திருக்கும் கேலி மிகுந்திருக்கும்
கிண்டி அறிவைக் கிளர்ச்சி கொளச்செய்யும்;
சிந்தித்துக் கண்ட சிறப்புமிகும் தங்கருத்தை
எந்தச் சமயத்தும் எங்குந் துணிந்துரைக்கும்
அஞ்சாத நெஞ்சத்தை ஆரிடத்துங் கண்டதில்லை;
துஞ்சாத சிங்கத் துணிவுமிகப் பெற்றார்.
நமது தலைமுறையில் நாம்பெற்ற பேற்றால்
இமயப் புகழ்கொண்ட ஈடில் தலைவர்
நமக்குக் கிடைத்துள்ளார்; நாளும் உழைத்தே
நமக்குற்ற தாழ்வை நசுக்கித் தொலைத்துவிட்டார்;
நாமும் தமிழரென நாடாளும் மாந்தரென
[3]ஏமம் மிகக்கொண் டினிதிங்கு வாழ்கின்றோம்;
பெற்றதொரு நல்வாழ்வைப் பேணி மிகக்காத்து
நற்றமிழர் என்றுரைக்க நாம்வாழ்வோம் என்றுசொலித்
தந்தை பெரியாரின் தாள்வணங்கி வாழ்த்துரைத்துச்
சிந்தை மகிழ்ந்திருப்போம் சிந்தனையைப் பேணிடுவோம்
என்றுநான் சொல்லி இருகை குவிக்கின்றேன்.
மன்றிலுளார் வாழ்க மகிழ்ந்து.

---

**பாடற்குறிப்பு:–** திண்டுக்கல் பெரியார் சிலை திறப்பு விழாக் கவியரங்கில் பாடியது – 17.9.1970.

**அருஞ்சொற் பொருள்:–** 1. சிலை – தந்தை பெரியார் சிலை.
2. வெங்காட்டி – புறமுதுகு காட்டி. 3. ஏமம் – இன்பம்.

## 50. தன்மானப் புத்தகத்தை மூடமாட்டோம்

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

கேட்டதடா ஒருசெய்தி தொண்டு செய்தே
    கிழமான பழமொன்று விழுந்த தென்றே;
போட்டதடா என்னெஞ்சில் பாராங் கல்லைப்
    பொழுதுபுலர் நேரத்தே அந்தச் செய்தி;
கேட்டமுகை வரவில்லை எனது கண்ணில்
    கிறுக்குற்ற எனதுமனம் அழுத தாலே;
பாட்டெழுத வரவில்லை எனது கையே
    பகலவனைத் தொழுதழுது புலம்ப லாலே. 1

நெஞ்சுரத்தை மட்டுமொரு துணையாக் கொண்டு
    நீபட்ட பாட்டையெலாம் நினைந்த தன்றி
அஞ்சலிக்கு நானெழுதும் பாட்டை என்றன்
    அகங்கருத முடியாமல் தவித்த தையா!
வெஞ்சினத்து [1]மடங்கலுக்கு நிகராய் வந்த
    வெண்தாடி வேந்தேஎன் புலம்ப லாலே
நெஞ்சுருக்கும் என்துயரப் பாட லாலே
    நினைகின்றேன் தொழுகின்றேன் ஐயா நின்னை. 2

ஐயாஉன் தலைமகனை அறிஞர் செம்மல்
    அண்ணாவை அன்றிழந்தோம் துயரில் மூழ்கிக்
[2]கையாறு மிகவுழந்தோம்; நின்றன் பேரன்
    கலைஞர்தரும் ஆறுதலால் தேறி வந்தோம்;
நையாமல் நையும்வணம் இங்கு நாங்கள்
    நாதியற்று நிற்கும்வணம் பிரிந்து விட்டாய்!
ஐயாஎம் ஐயாஎன் றலறு கின்றோம்
    யாரைக்கண் டாறுதலைப் பெறுவோம் ஐயா! 3

சமுதாய மருத்துவனே! 'பிணியுற் றோனைச்

சாகாமல் காப்பதுதான் எனது கொள்கை
அமுதான இனியமருந் தென்பா லில்லை;
அறுவைசெயும் மருத்துவன்நான்; நோயுற் றுள்ள
குமுகாயம் வருந்தினுமோர் கவலை யில்லை;
குற்றுயிராயச் சாகவிடேன்' என்று கூறி
எமைமேவும் பிணிநீக்கி மான முள்ள
இனமாகத் தலைநிமிரும் வாழ்வு தந்தாய்! 4

உடல்நலமும் உயிர்நலமும் கருதா தெங்கள்
உயர்வுக்கே உள்ளளவும் உழைத்தி ருந்தாய்
விடுமுயிரைத் தாழ்ந்திருக்கும் தமிழி னத்தின்
விடுதலைக்கே விடுவேன்என் றுழைத்து நின்றாய்
அடலரியே ஆருயிரே எம்மி னத்தின்
அடிமைதனை அகற்றவந்த தலைவா நாங்கள்
படுதுயரை எவ்வண்ணந் தாங்கிக் கொள்வோம்?
பகலவனே பயணத்தை ஏன்மு டித்தாய்? 5

கண்மூடிக் கிடந்துழன்ற தமிழி னத்தைக்
கண்டுமனம் நொந்தெழுந்து தட்டித் தட்டிக்
கண்திறக்க வைத்தாயே! திறக்கும் போது
கண்ணெல்லாம் குளமாகச் செய்து விட்டுக்
கண்மூடிக் கொண்டாயே! ஐயா உன்றன்
கடமைஎலாம் முடிந்ததென்றோ? நினது மெய்யை
மண்மூடிக் கொண்டாலும் ஐயா எங்கள்
மனமெல்லாம் நீயிருக்கத் திறந்து வைத்தோம். 6

கண்மூடிக் கிடந்தாலும், எங்கட் காகக்
காலமெலாம் உழைத்துழைத்துப் பழுத்த மெய்யை
மண்மூடிக் கிடந்தாலும், துயரம் எங்கள்
மனமூடிக் கிடந்தாலும், கண்க ளெல்லாம்
தண்ணீரிற் கிடந்தாலும் எமக்குத் தந்த
தன்மானப் புத்தகத்தை மூட மாட்டோம்;
கண்மூடிப் பழக்கங்கள் சாயும் மட்டும்
கடமைப்போர் ஆற்றுவதில் ஓய மாட்டோம். 7

ஈரோட்டுப் பாசறையில் பயிற்சி பெற்ற
எதையுமஞ்சாப் போர்வீரர் சூழ்ந்து நிற்கப்
போராட்டம் போராட்டம் என்று சொல்லிப்
போராடிக் காலமெலாம் வாழ்ந்த வேந்தே!
நீரோட்டம் அற்றாலும் எங்கள் நெஞ்சில்
நீகாட்டும் போராட்டம் ஓய்வ தில்லை;
வேரோட்டும் பேரால மரமே உன்றன்
விழுதுகளாய் நின்றிருந்து கொள்கை காப்போம். 8

---

**பாடற்குறிப்பு:–** தந்தை பெரியார் இயற்கை எய்திய செய்தி கேட்டுப் பாடியது – 24.12.1974.

**அருஞ்சொற் பொருள்:–**
1. மடங்கல்–சிங்கம். 2. கையாறு–செயலற்ற நிலை.

## 51. புத்துலகச் சிற்பி
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

மூவேந்தர் ஆட்சிசெயச், சங்கத் தோட்டம்
முத்தமிழாம் கனிவளர்க்கப், பெருமி தத்துப்
பாவேந்தர் அறமுரைக்க, உலக மெல்லாம்
பணிந்தேத்தும் வள்ளுவனார் முப்பால் ஓத,
மாவேந்துங் காட்டகத்து மற்றை நாட்டார்
மாக்களென மதியின்றி வாழ்ந்த நாளில்
நாவேந்தும் புகழ்மிகுத்த தமிழர் நாடு
நாகரிகத் தொட்டிலென விளங்கக் கண்டோம். 1

வயல்கண்டார், தொழில்கண்டார், வளமை சேர்க்கும்

வழிகண்டார், பகுத்துண்ணும் வகையுங் கண்டார்,
இயல்கண்டார், இசைகண்டார், எழிலார் கூத்தின்
இனங்கண்டார், ஈடில்லாக் கலைகள் கண்டார்,
கயல்கண்டார் அதுபோலக் கடலிற் செல்லக்
கலங்கண்டார் போராட்டக் களமுங் கண்டார்,
செயல்கண்டோர் வியந்தேத்தும் அரசு கண்டார்,
சீர்கண்டார், பேர்கண்டார் தமிழ மாந்தர். 2

தப்பொன்றும் அறியாத வெள்ளை யுள்ளத்
தமிழ்மாந்தர் விருந்தோம்பும் பண்பால் இங்கு
முப்புரியர் வரும்போது வருக என்று
முகமலர்ந்து வரவேற்றார்; வந்த வஞ்சர்
எப்படியோ வலைவிரித்தார் வீழ்ந்து விட்ட
எம்மினத்தார் தமைமறந்தார் மயங்கி நின்றார்;
ஒப்பில்லை எனவுரைக்க வாழ்ந்தி ருந்த
ஒருநாடு திருநாடு வீழ்ந்த தன்றே. 3

நடமாடும் வழியெல்லாம் நான்கு வேத
நரிக்கூட்டம் ஊளையிட, அறிவை மாய்க்கும்
படுமூட நம்பிக்கை விலங்கு சுற்றப்,
பஞ்சாங்க முட்புதர்கள் மொய்த்துக் காணக்,
கடுநரகம் சொர்க்கமெனும் மேடு பள்ளம்
கலக்குறுத்தத், தருப்பைஎனும் நெருஞ்சி குற்றத்,
தடமேதுந் தெரியாமல் விழியி ரண்டைச்
சமயமெனும் சாதிஎனும் புழுதி மூட. 4

அறியாமை இருள்பரவத், தடங்கள் தோறும்
ஆயிரமாம் கடவுளெனும் பரல்கள் மேவத்,
திருநீறு திருநாமம் என்று கூறும்
சின்னமெனுங் கற்றாழை வளர்ந்து நிற்கத்,
தெரியாத தலையெழுத்து மறுபி றப்பு
தீவினைகள் எனச்சொல்லும் கள்ளி காளான்
நெறியாவும் படர்ந்திருக்கக் காடாய் மாறி,
நிழல்பரப்பும் பூஞ்சோலை கெட்ட தந்தோ! 5

திருமணங்கள், இசையரங்கம், கோவில், இன்னும்
தெளிதமிழில் எழுதிவந்த நூல்கள் எல்லாம்
உருவிழந்து நிலைமாறித் திரிந்து போக,
உட்புகுந்த ஆரியமே ஆட்சி செய்ய,
அறிவிழந்தார் நெறியிழந்தார் வீரம் மிக்க
ஆண்மையொடு தன்மான உணர்வி ழந்தார்
அரசிழந்தார் குறியிழந்தார் உரிமை கெட்டார்
அடிமைஎனத் தமிழ்மாந்தர் ஆகி விட்டார். 6

புகைபடிந்த ஓவியம்போல், சுவர்க ளெல்லாம்
புழுதியடை மாளிகைபோல், கருமை கொண்ட
முகில்படர்ந்த முழுமதிபோல், அழுக்க டர்ந்து
மூடியஓர் பளிங்கினைப்போல், மண்ணுக் குள்ளே
புகவிழுந்த பொற்சிலைபோல், பனிப டிந்த
பொன்மலர்ப்பூஞ் சோலையைப்போல் தமிழர் நாடு
தகவிழந்து பொலிவுதரும் அழகி ழந்து
தகதகக்கும் ஒளியிழந்து நின்ற தந்தோ! 7

கல்லடர்ந்து முள்ளடர்ந்து கள்ளி முள்ளி
கற்றாழை மிகவடர்ந்து புதர டர்ந்து
செல்வழிகள் தோன்றாமல் திகைத்து நிற்கச்
சீர்கெட்ட பாதையெலாம் செப்ப னிட்டு
நல்வழிகள் பலஅமைத்துப் புதுமை மிக்க
நாடாக்க வளமாக்க உழைத்த போது
பல்லிடர்கள் உற்றாலும் ஆரி யத்தின்
பாம்பெதிர்த்து வந்தாலும் அயர்ந்தா ரல்லர். 8

அஞ்சாத அரியேறு, கொடுஞ்சி றைக்கும்
அடங்காத புலிப்போத்து, வாழ்நாள் எல்லாம்

துஞ்சாத போர்க்களிறு, கொண்ட கொள்கை
துவளாத பெருங்கரடி, எவரை யும்போய்க்
கெஞ்சாத கவரிமான், உழைப்பில் சோம்பிக்
கிடவாத அடலேறு, முதுமை யுற்றும்
எஞ்சாது பாடுபடும் பொழுது துள்ளி
எழிலாகப் பாய்கலைமான் எங்கள் தந்தை. 9

ஊர்தோறும் பம்பரம்போல் சுற்றிச் சுற்றி
உழைத்துவரும் அந்நாளில் அறியா மாந்தர்
பேர்கூறி வைதார்கள், நடையன் முட்டை
பிறவெல்லாம் எடுத்தெறிந்தார், கூச்சல் போட்டார்
ஊர்கூடிக் குழப்பத்தை விளைத்து மேடை
ஒளிவிளக்கை அறுத்தெறிந்தார், பாம்பை விட்டார்
யார்கூடித் திரண்டெதிர்த்தும் இகழ்ந்து பேசி
யாதுரைத்தும் நம்தலைவர் கலங்க வில்லை. 10

தேரோட்டி விழவெடுக்குங் கூட்டத் தாரும்
தெருவெல்லாம் கல்வைத்துப் பூசிப் பாரும்
ஏரோட்டி உழைப்பாரும் கற்ற மாந்தர்
எழுத்தாளர் மற்றோரும் விழித்தெ ழுந்தார்;
ஈரோட்டுப் பாசறையில் வந்து சேர்ந்தார்;
இனவுணர்வும் மொழியுணர்வும் பெற்ற பின்னர்
தார்சூட்டி எடைக்கெடையில் பொருள் கொடுத்தார்;
தலைவரவர் பொருள்புகழால் மயங்க வில்லை. 11

இகழ்ச்சிக்கும் நம்தலைவர் கலங்க வில்லை
ஏத்தெடுத்த புகழ்ச்சிக்கும் மயங்க வில்லை;
மிகச்சிவந்த பகலவன்போல் கடமை யாற்றி
மேற்கொண்ட பணியாற்றி வெற்றி கண்டார்;
இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் செவிகள் சாய்த்தால்
இயங்காது பொதுத்தொண்டு; குறிக்கோள் ஒன்றே
அகத்திருக்க வேண்டுமெனும் நெறியைக் காட்டும்
ஐயாபோல் தொண்டாற்ற வல்லார் யாரே? 12

எவ்வுணவே என்றாலும் ஏற்றுக் கொள்ளும்;
இரவெனினும் பகலெனினும் தொண்டு செய்யும்,
எவ்வழியில் என்றாலும் பயணஞ் செய்யும்;
இருவிழியும் துயிலாது விழித்தி ருக்கும்;
செவ்வாயில் பல்லெல்லாம் வீழ்ந்த போதும்
செம்மையுறச் சொல்லெல்லாம் அவர்நா ஓதும்;
ஒவ்வொருகால் நோய்வரினும் எதிர்த்து நிற்கும்;
உளம்போல அவருடலும் புரட்சி செய்யும். 13

ஏறுங்கால் மேடைதனில் அம்மா அம்மா
எனஅரற்றுங் குரல்கூடக் குகையில் சிங்கம்
சீறுங்கால் முழங்குவது போலக் கேட்கும்;
சேர்ந்துவிட்ட முதுமையிலும் மேடை ஏறிக்
கூறுங்கால் அவர்மொழிகள் கனலைக் கக்கும்;
கொழுந்துவிடும் சிந்தனைகள் ஒளியை வீசும்;
சேருங்கள் தமிழினத்தீர் சிந்தித் தாய்ந்து
தெளியுங்கள் விழியுங்கள் என்பார் ஐயா. 14

காரோட்டும் பெருவளிபோல் உலகைப் பற்றும்
காரிருளை ஓட்டுகிற பகல வன்போல்
ஈரோட்டில் வந்துதித்த பெரியார் தாமும்
இனஇழிவைத் தொலைப்பதற்கு நடத்தி வந்த
போராட்டம் எத்தனையோ! அதனால் ஐயா
புகுந்தசிறை எத்தனையோ! அறப்போர் என்றே
பாராட்டும் படிசெய்தார்; மனிதர் யாரும்
பழுதுறவோ வன்முறையோ செய்தா ரல்லர். 15

பதவிகளில் தமிழர்க்குப் பங்கு வேண்டும்
படிப்பினிலும் அப்படியே உரிமை வேண்டும்
புதுவுலகில் பிற்பட்டோர் வாடல் நன்றோ?

பொதுமைநிலை சரிசமங்கள் அவர்க்கும் வேண்டும்
இதுதகுதி இதுதிறமை என்று பேசி
ஏய்ப்பவரை எதிர்த்துப்போ ராடி நின்றார்;
புதுநிலைமை வளர்பொழுதில் ஆள்வோர் மீண்டும்
புகுத்துகிறார் தகுதிதிறம் வெட்கம் வெட்கம். 16

வேதங்கள் புராணங்கள் இதிகா சங்கள்
வேண்டாத சட்டங்கள் இவைகள் எல்லாம்
தீதுங்கள் வாழ்வுக்கென் றெடுத்து ரைத்துத்
தெளிவித்தார் அவற்றைஎலாம் தீயி லிட்டார்
வாதங்கள் பலபுரிந்தார் வெற்றி கண்டார்
வளரறிவுச் சுடரொளியைத் தூண்டி விட்டார்
பேதங்கள் பேதைமைகள் தொலைப்ப தற்குப்
பெரும்போர்கள் நடத்திநமைக் காத்த வீரர். 17

புலவர்தமைப் பொய்ந்நூலைச் சாடி னாலும்
புலவரெலாம் இவர்பக்கம்; பிளவு பொய்ம்மை
மலிசமயக் கொள்கைகளை எதிர்த்த போதும்
மதத்தலைவர் இவர்பக்கம்; கடவுட் பொம்மை
கலகலக்க உடைத்தெறிந்த போதும் அந்தக்
கடவுளரும் இவர்பக்கம்; ஆரி யத்தை
அலறவைக்கப் போர்தொடுத்து நின்ற போதும்
ஆச்சாரி யாருமிவர் நண்பர் ஆனார். 18

சமயத்தின் பொய்ம்மைஎலாம் தொகுத்து வைத்துச்
சமுதாயச் சீர்கேட்டைச் சிந்தித் தாய்ந்தே
இமயத்தின் மேல்நின்று மக்கள் முன்னர்
எடுத்துரைத்த வாதங்கள் கொள்கை எல்லாம்
உமியொத்த மனத்தவரைத் தவிர மற்றோர்
உண்மைஎனத் தெளிந்ததனால் பகைமை யின்றித்
தமையொத்த ஐயாவின் பக்கம் நின்றார்
தந்நலத்தை நாடாத ஐயா வென்றார். 19

தீண்டாமை ஒழிப்புப்போர் நடத்திக் காட்டித்
தீமைகளை முறியடித்த வைக்கம் வீரர்
வேண்டாத பெண்ணடிமை தொலைப்ப தற்கும்
வீழ்ந்துவிட்ட தமிழினத்தின் விடுத லைக்கும்
ஈண்டையா போர்நடத்தி வெற்றி கண்டார்;
ஈங்கின்றிப் பிறநாட்டிற் பிறந்தி ருந்தால்
ஆண்டுள்ளோர் ஆபிரகாம் லிங்கன் என்பார்
அறிவுரைத்த சாக்கரடீ சென்று ரைப்பார். 20

யாராண்டால் நமக்கென்ன என்றி ருந்த
எமக்கெல்லாம் உணர்வூட்டி அறிவும் ஊட்டிப்
'பாராண்ட தமிழினமே விழித்து நோக்கு!
பகுத்தறிவால் ஆய்ந்துணர்வாய்!' என்ற தந்தை
நூறாண்டுப் பணிவியந்து விழாவெ டுத்தோம்
நோக்கிஎதிர் வீட்டிலுள ஒருவன் நம்மை
'யாராரோ போட்டிவிழா எடுத்தா' ரென்றே
ஏளனங்கள் செய்கின்றான்; பேதை மாந்தன்! 21

வெம்மைமிகும் பாலையைப்போல் தலைவ ருண்டு
விளைவறியா நெய்தலைப்போல் தலைவ ருண்டு
செம்மறிமேய் முல்லையைப்போல் தலைவ ருண்டு
சேர்விலங்கு குறிஞ்சியைப்போல் தலைவ ருண்டு
[1]கொம்மையுறும் உழுபடையால் பிளந்த போதும்
கொடுமைகண்டு கலங்காமல் பயனே நல்கும்
நன்மருத நிலம்போல உணர்வு தந்து
நமைஎல்லாம் காக்கின்ற தலைவர் ஐயா. 22

நாதியற்றுக் கிடந்துழன்ற தமிழினத்தை
நானிலத்தில் தலைநிமிரச் செய்த கோவே!
தீதகற்றும் சொன்மலர்கள் தேர்ந்தெ டுத்துச்
செந்தமிழிற் பாமாலை தொடுத்து வந்து

காதலுற்று நின்னடிக்குச் சூட்டு கின்றோம்
கைதொழுது வாழ்த்துகின்றோம் எமது நெஞ்சில்
கோதகற்றும் பகுத்தறிவை இன்னும் ஏற்று!
கொடுமைகளை எதிர்க்கின்ற துணிவும் ஊட்டு. 23

நீதந்த பகுத்தறிவுச் சுடரை ஏந்தி
நிமிர்ந்திங்கு நிற்கின்றோம் வீரம் தாங்கிப்
பாதந்த தமிழ்மொழிக்குத் தீங்கு வந்தால்
பாய்ந்தெழுந்து சேர்ந்தெதிர்ப்போம் மானங் காப்போம்;
யாதெந்தத் துயர்தரினும் அச்சங் கொள்ளோம்;
யாம்எமது திருநாட்டின் உரிமை காப்போம்;
பூதந்த தேனுண்ட வண்டே போலப்
புத்தலகப் பாடல்களே பாடி நிற்போம் 24

வெண்தாடி வேந்தர் வாழ்க
விறல்மிகு பெரியார் வாழ்க
கண்மூடி வழக்கம் நீங்கிக்
கதிரவன் ஒளியே வாழ்க
தண்ணாரும் தமிழும் நாடும்
தழைத்தினி தென்றும் வாழ்க
பண்பாரும் கழகம் வாழ்க
பகுத்துணர் அறிவே வாழ்க 25

---

**பாடற்குறிப்பு:—** சென்னை பெரியார் திடல் பெரியார் நூற்றாண்டு விழாக் கவியரங்கில் பாடியது – 16.9.1978.

**அருஞ்சொற் பொருள்:—** 1. கொம்மை – திரட்சி.

## 52. இனத் தலைவர்

**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

பெரியாரை நினையாத தமிழன் இல்லை
பேசாத புகழாத நாவும் இல்லை;
மரியாதை தமிழனுக்கு வாய்த்த தென்றால்
மாமேதை பெரியாரின் தொண்டே யன்றோ?
சரியாத அப்பெரியார் வாழ்நாள் எல்லாம்
சலியாது தளராது முயலா விட்டால்
நரியாரின் சூழ்ச்சிக்குள் தமிழி னத்தார்
நசுக்குண்டு விழிபிதுங்கி அழிந்து தீர்வர். 1

'மங்காத புகழ்படைத்த தமிழி னத்தான்
மாற்றானுக் கடிவருடி யாகி விட்டான்
இங்காளும் உரிமையினை அவனுக் கீவேன்
எதிர்த்துவரும் எப்பகையும் துணிந்து சாய்ப்பேன்
[1]வெங்காயம் தளர்ந்தாலும் ஓய மாட்டேன்
வென்றிடுவேன்' என்றெழுந்த பெரியார் போல
இங்காரும் உழைத்ததில்லை வீரம் மிக்க
இனவெழுச்சி வரலாற்றுத் தலைவர் ஆவார். 2

---

**அருஞ்சொற் பொருள்:—** 1. வெங்காயம் – விரும்பத் தக்க உடம்பு.

## 53. தட்டி எழுப்பினார்

**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

தட்டி எழுப்ப வந்தார் – நம்மைத்
தட்டி எழுப்ப வந்தார் – ஐயா
தன்மான எண்ணத்தை வளர்க்க வந்தார்
—தட்டி

பட்டிகள் தொட்டிகள் பட்டண ஊர்களில்

மட்டிகள் போலினும் வாழ்ந்திடும் மாந்தரைத்
—தட்டி

கொண்டித் தொழுவத்தில் கட்டிய மாடெனக்
குப்பையில் மேய்கிற கோழிக ளாமெனச்
சண்டை யிடும்மதச் சாத்திரக் குப்பையில்
சாதியில் கட்டுண்டு சாய்ந்து கிடந்தோரைத்
—தட்டி

அண்டிப் பிழைத்தவர் ஆட்சி பிடித்தனர்
ஆட்சி புரிந்தவர் மாட்சி யிழந்தனர்
மண்டி யிடும்பல தொண்டு புரிந்தனர்
மாயையில் தூங்கினர் கண்கள் திறந்திடத்
—தட்டி

---

**பாடற்குறிப்பு:—** 18.6.1979 ஆம் நாள் பாடியது.

## 54. சங்கே முழங்கு
**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

சங்கே முழங்கு — வெற்றிச்
சங்கே முழங்கு — முச்
சங்கம் வளர்த்ததமிழ் எங்கும் தழைக்கவெனச்
—சங்கே

எங்கே வரும்படைகள்? எங்கே வரும்தடைகள்?
இங்கே புகும்பகைகள் எல்லாமே தூளென்று
—சங்கே

எங்கோ இருந்தவர்கள் இங்கே புகுந்தவர்கள்
இம்மா நிலத்துமொழி இரண்டாம் நிலைக்குவர
வெங்கோல் செலுத்துவதை [1]நுங்கா திருப்பதுவோ?
வெங்களம் கண்டுவரும் வேங்கைகள் யாமென்று
—சங்கே

மூடத் தனத்தைவிடு சாடக் களத்திலெழு
மூத்துப் பழுத்தமொழி காத்துப் புரந்திடென
ஆடிக் களங்கண்ட தாடிக் கிழப்பெரியர்
ஐயா உரைத்தமொழி மெய்யே எனப்புகலச்
—சங்கே

---

**பாடற்குறிப்பு:—** 20.6.1979 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—1.** நுங்காது — அழிக்காது.

## 55. ஒன்றா இரண்டா?
**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல — ஐயா
உழைத்தவை யாவையும் தொடுத்துச் சொல்ல — செய்கை
—ஒன்றா

வெயிலா மழையா நடந்து செல்வார் — நாம்
விழித்திடத் தமிழினம் பிழைத்திடச் செய்த — தொண்டு
—ஒன்றா

சென்றால் இருந்தால் நம் நினைவு — கண்
சிறிதே அயர்ந்தால் நம் கனவு — கனவு
—ஒன்றா

நினைவும் கனவும் எவர்க்காக — போர்
நெஞ்சினில் பொங்குதல் நமக்காகப் — போர்
—ஒன்றா

நின்குலம் தழைத்திடத் தமிழ்மகனே — நீ
நிலைத்திடத் துடித்தெழு! நின்கடனே

உயிரும் உடலும் நிலைத்தவையோ? – என்றும்
உழைப்பாய் நின்னினம் உயர்ந்திடவே
உயர்ந்திடவே உயர்ந்திடவே

---

**பாடற்குறிப்பு:–** 25.6.1979 ஆம் நாள் பாடியது.

## 56. தமிழ்காத்த தலைவர்

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

செப்பும் மொழிபதி னெட்டுடையாள் என்றாலும்
ஒப்புமனச் சிந்தனை ஒன்றுடையாள் பாரதத்தாய்
என்றுரைத்தான் என்பாட்டன்; ஏற்புடைய அக்கருத்தை
ஒன்றுபடும் ஆற்றை உணரா வடபுலத்தார்
செப்புமொழி ஒன்றென்றார் சிந்தனைகள் நூறாகத்
தப்புவழி மேற்கொண்டார்; தக்கார் பலர்கூடிச்
'செந்தமிழ்க்குத் தீங்கு சிறிதும் வரஒவ்வோம்
இந்திக்குத் தென்னாட்டில் என்றும் இடமில்லை;
ஒற்றுமைக்குத் தீமை உருவாக்க எண்ணாதீர்
பற்றுமக்குத் தாய்மொழியில் பாரித் திருப்பதுபோல்
எங்களுக்கும் தாய்மொழியில் ஈடில்லாப் பற்றுண்டு
பொங்கும் மொழியுணர்வைப் புல்லென் றிகழாதீர்'
என்றெல்லாம் கூறி இடித்துரைத்தும் கேளாராய்த்
தென்றல் உலவுந் திருநாட்டில் இந்தியினை
வன்பில் திணித்தார் வடபுலத்து வாழ்மாந்தர்;
அன்போ டுரைத்தும் அவர்செவியில் ஏறவில்லை
நம்மை அடிமையென நாடாள்வோர் எண்ணியதால்
வெம்மை வழியை விழைந்து திணித்தார்கள்;
'பாரில் குடியரசுப் பண்பை எடுத்தெடுத்துக்
கூறிப் பயனில்லை; கூடார் எனமாறிக்
கொண்டதே கொள்கையெனக் கொட்டம் அடிக்கின்றார்
கண்டும் பொறுத்திருந்தால் காலம் நமைப்பழிக்கும்
போர்க்கோலம் பூணுங்கள் போற்றுங்கள் தாய்மொழியை
யார்க்கும் அடிமையலோம் ஆளப் பிறந்தவர்நாம்
கொன்று குவித்தாலும் கூட்டில் அடைத்தாலும்
நின்றமரில் தோளை நிமிர்த்துங்கள்' என்றெல்லாம்
ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டை அண்ணன் முழங்கிஒரு
[1]போர்ப்பாட்டை கண்டு புறங்கண்டார் இந்தியினை;
செந்தமிழ் நாடாளச் செங்கோல் தனையேந்த
வந்ததும் நம்தமிழ் வாழ வழிசெய்தார்;
எம்முடைய நாட்டில் இருமொழி போதுமென
மும்மொழிக் கொள்கை முறிய வழிசெய்தார்;
செந்தமிழைக் காத்துச் சிறந்த தலைமகனைப்
பைந்தமிழிற் பாடிப் பரவுவதே நம்கடமை;
நாம்வாழ வந்தவனை நல்லவனை வாழ்த்திடுவோம்
தேன்பாயும் தீந்தமிழைச் சேர்த்து.

---

**அருஞ்சொற் பொருள்:–1.** போர்ப்பாட்டை – போர் நெறி.

## 57. எழுத்தும் பேச்சும்

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

முழுத்தாளில் எதைஎதையோ எழுதி விட்டு
முற்போக்கு மறுமலர்ச்சி என்று சொல்லி
எழுத்தாளர் உலகத்தில் சிலபேர் கூடி
ஏடெல்லாம் குப்பையென மாற்றி விட்டார்
குழுத்தோற்று நாணும்வணம் எழுதிக் காட்டிக்
கூரறிவுச் சுடர்வேல்போல் எழுத்தை மாற்றி
எழுத்தாளர் உலகத்தை வென்று நின்றான்

இவன்நடையை எழுத்தாளர் தொடர லானார். 1

பரலோகக் கதைகளையே படைத்துக் காட்டிப்
பாடலொடு நடிக்கின்ற திரைப்ப டங்கள்
உரமேறிப் பரவிவரும் அந்த நாளில்
ஓரிரவு நம்அண்ணன் விழித்தி ருந்தான்
தரமான திரைப்படங்கள் உலவக் கண்டோம்
தன்மான வுணர்ச்சிமிக வளரக் கண்டோம்
அறிவாளன் கலையுலகம் புகுந்தான் அங்கும்
அவன்வெற்றித் திலகந்தான் பெற்றுக் கொண்டான். 2

பொருள்பெறவும் புகழ்பெறவும் நடிக்க வில்லை
புகைப்படங்கள் எடுப்பதற்கும் நடிக்க வில்லை
இருள்செறியும் தமிழகத்தைத் தமிழி னத்தை
எழுச்சிபெறச் செய்வதற்கே நடித்து வந்தான்
சுருள்குழலார் மயங்குதற்கு நடிக்க வில்லை
சோர்தமிழர் மயக்கத்தை அகற்று தற்கே
அருளுடையான் நாடகங்கள் எழுதிக் காட்டி
அழகுறவே நடிப்பதற்கும் கற்றுத் தந்தான். 3

நாடாண்ட இனத்தவன்நீ! உலகில் மூத்த
நாகரிகத் தமிழ்மொழிக்குச் சொந்தக் காரன்!
ஏடாண்ட இலக்கியநூல் ஆயி ரங்கள்
ஈங்குண்டு சான்றாக; எடுத்துப் பார்நீ!
கேடாண்ட நரிக்குணத்தர் சூழ்ச்சி யாலே
கீழானாய்! விழித்தெழுநீ! மானம் எங்கே?
[1]பேடாண்ட பிறப்பாநீ? என்று பாடம்
கற்பித்த பேராசான் எங்கள் அண்ணன். 4

சாதிஎன்றும் சமயமென்றும் மேல்கீழ் என்றும்
சமனிலைகெட் டடிமையென வாழுங் காலை
ஆதியில்இங் கில்லாத கருத்தை மாய்க்க
அறிவென்னும் படைதாங்கிப் போர்தொ டுத்து,
மோதவரும் பகைஎதிர்த்து, வெற்றி கண்டு
முன்னேற்றப் பாதைதனில் மக்கள் செல்ல
ஓதிவந்த பகுத்தறிவுப் பேச்சால் அன்பால்
ஊட்டிவிட்ட இனவுணர்வால் எழுச்சி பெற்றோம். 5

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. பேடாண்ட பிறப்பு – பேடி

## 58. தாய்மொழிக் காவலர்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

நற்றலைவர் ஓரமைச்சர் யானோ இந்த
நாடறிந்த முடியரசன்; அமைச்சர் முன்னே
உற்றரசன் பாடுவது புதுமை யன்றோ?
உண்மையினில் குடியாட்சி மதிக்கும் பண்பு
பெற்றமையால் இப்புதுமை காணு கின்றோம்;
பெருமைமிகு திமுக தலைமை ஏற்க
மற்றதொரு பேரரசு வணங்கி நிற்க
மாறிவரும் காலத்தைப் படைத்து விட்டோம். 1

தமிழ்மொழியின் தவமகனை, நாடு காக்கும்
தலைமகனைத் தனிமகனைக் காஞ்சி தந்த
அமிழ்தனைய பெருமகனைப் புகழ்ந்து பாட
அறியாத நாவென்ன நாவே! கண்ணின்
இமையனையான் மெய்ப்புகழைக் கேட்டு வக்க
இயலாத செவியென்ன செவியே! அன்பால்
தமையனெனும் அவன்வந்து பிறந்த ஞான்றே
தமிழ்சிறந்து தனிப்பெருமை கொள்ளக் கண்டோம். 2

கற்கண்டோ சர்க்கரையோ கரும்பின் பாகோ
    கனிபிழிந்து வடித்தெடுத்த இனிய சாறோ
சொற்கொண்டல் பொழிமழையோ கவிஞன் தந்த
    சுவைமிக்க அணிமிக்க கவிதை தானோ
முற்கண்ட யாழ்தந்த சுவையோ என்ன
    முத்தமிழின் நடையழகை எழுதிக் காட்டிக்
கற்கஒரு பரம்பரையைத் தோற்று வித்துக்
    கனிமொழிக்குத் தமிழ்மொழிக்கோர் புதுமை செய்தான்.3

நஞ்சுமிழும் பாம்பினையும் மயங்க வைத்து
    நடம்பயிலச் செய்கின்ற மகுடி தானோ
நெஞ்சமெலாம் வயப்படுத்திக் களிப்பில் ஆழ்த்தும்
    நெடுங்குழலாம் நாதசுரக் கருவி தானோ
கொஞ்சுதமிழ் மாமழையோ அருவிக் கூட்டம்
    கூடியதோ ஆற்றொழுக்கோ எனவி யந்து
வஞ்சகரும் மறைந்திருந்து நயந்து கேட்டு
    வாய்மலரும் அவன்பேச்சைப் புகழ்ந்து ரைப்பர். 4

எதுகையுடன் மோனையெலாம் எழுந்தெ ழுந்தே
    எக்காளம் இட்டுநடம் புரியும் பேச்சு,
புதுமையுடன் பழமையினைப் பிணைத்து வைத்துப்
    பொலிவூட்டிப் புத்துலகைப் படைத்துக் காட்டும்;
பொதுமைமிகுங் கருத்தலைகள் ஊறி ஊறிப்
    பொங்கிவரும் பேரூற்றை நினைவிற் கூட்டும்;
இதுவரையில் பேச்சரங்கம் காணா ஒன்றை
    இவன்பேச்சிற் கண்டெழிலைப் பெற்ற தன்றோ! 5

மிகப்பெரிய பேச்சாளர் பேசும் போதும்
    மேவிடுவோர் தொகைமுன்பு நூற்றை எட்டும்
அகத்தொளிரும் நம்தலைவன் பேச்சைக் கேட்க
    ஆயிரம்பல் லாயிரமாய்க் கூடக் கண்டோம்;
நகைச்சுவையும் மதித்தெளிவும் வீரப் பாங்கும்
    நாடகமாய் இலக்கியமாய்க் கலந்து தோன்றும்
பகைச்சுமையைத் தாங்கிகளும் தனித்தி ருந்து
    பாராட்டும் தமிழ்ப்பேச்சின் திறந்தான் என்னே! 6

எழுத்துலகில் பேச்சுலகில் தாய்மொ ழிக்கோர்
    எல்லையிலாத் தனிமிடுக்கைப் படைத்து விட்டான்,
முழுத்திறமை கொண்டவன்றன் மொழித்தி றத்தால்
    முத்தமிழ்க்கோர் பரம்பரையைத் தோற்று வித்தான்
வழுக்கிவிழும் விகடநடை கொச்சைப் பேச்சு
    வம்பர்தருங் கலப்புநடை எங்கே? எங்கே?
அழுக்ககலச் செய்துவிட்டான் திருப்பு மையம்
    ஆகிநின்று தாய்மொழிக்குக் காவல் செய்தான். 7

வடபுலத்து வெறிமனத்தர் கூடி நின்று
    வளர்மொழியாம் தமிழ்மொழிக்கு மாறாய் இங்குப்
படபடத்த ஒலிஎழுப்பும் இந்தி தன்னைப்
    பரப்புதற்கு, வஞ்சகத்தால் புகுத்து தற்குப்
படமெடுத்த பாம்பெனவே முனைந்து விட்டார்;
    பதைத்தெழுந்து நம்அண்ணன் தமிழர் நாட்டுள்
விடமறுத்தான் படையெடுத்தான் போர்தொ டுத்தான்
    வீரத்தால் தாய்மொழிக்குக் காவல் செய்தான். 8

செந்தமிழைக் காக்குமொரு கொள்கை பூண்டு
    சீறிவரும் மறக்குலத்தின் எழுச்சி கண்டோம்;
உந்துகளில் தமிழ்எழுதும் கைகள் கண்டோம்;
    ஓர்ந்துணரின் இவற்றுக்குப் பின்னே நிற்ப
தெந்தஉரு? காஞ்சிநகர் உருவம் அன்றோ?
    ஏந்தலவன் ஊட்டிவிடும் உணர்ச்சி யன்றோ?
எந்தவிதம் நோக்கினுமே அவன்றன் செய்கை
    இனியதமிழ் காக்கின்ற செயலே ஆகும். 9

பெற்றெடுத்த தாய்நாட்டைத் தமிழ்நா டென்று
பேர்சொல்ல வைத்தவன்யார்? வாய்மை வெல்லும்
பெற்றிமைக்குக் கோட்டைமுகம் சான்று சொல்லும்;
பெரியார்முன் உந்திவிட்ட இந்திப் போரில்
உற்றமுதற் படைத்தலைவன் இவனே யன்றோ?
ஓயாமல் அன்றுமுதல் இன்று காறும்
பற்றகத்துக் கொண்டுமொழிப் போரில் நிற்போன்
பைந்தமிழ்க்குக் காவலனாய் விளங்கக் கண்டோம். 10

'பெரியாரே எனக்கென்றும் தலைவ ராவார்
பிறிதொருவர் தலைவரெனக் கொள்ளேன்' என்றே
அறிவாளன் நம்அண்ணன் உறுதி பூண்டான்
அத்தலைவர் தமிழ்மொழியைப் பழித்த போதும்
சரியான மறுப்புரைக்கத் தவற வில்லை;
தாய்மொழிக்குக் காவலன்தான் ஐயம் இல்லை;
விரிவான உலகெங்குந் தமிழ்ம ணக்க
விழைகின்றான் அதற்குரிய செயலும் செய்தான். 11

சட்டங்கள் பிறகலைகள் தமிழில் ஆக்கத்
தலைப்படுங்கால் மனம்பொறுக்கா உளுத்துப்போன
விட்டங்கள் ஏதேதோ உளறிக் கொட்டும்
வெற்றுரைக்குச் செவிசாய்க்கா வண்ணம் நல்ல
திட்டங்கள் பலதீட்டித் தமிழ்வளர்க்கும்
தீரனவன்; தாய்மொழியைத் தாழ்த்திப் பேசிப்
பட்டங்கள் பெற்றவரும் திருந்தி வந்து
பைந்தமிழைப் போற்றிடவே செய்த நல்லோன். 12

புரியுமொழி புரியுமொழி எனப்பு லம்பிப்
புன்மொழிகள் பலகலந்து பேசு வோர்தம்
திரிபுடைய மனப்போக்கை மாற்றி விட்டான்;
தெளிவுடைய தமிழ்மொழியா புரிய வில்லை?
தெரியவிலை உமக்கென்றால் மனத்தின் குற்றம்;
தெள்ளுதமிழ்த் தாய்மொழியின் குற்ற மன்று;
உரிமையினை மறந்தமையால், அடிமை நெஞ்சம்
உற்றமையால் உமதுமொழி விளங்க வில்லை. 13

இன்றதுதான் புரியவிலை என்றால் நாளை
எளிதாகப் புரிந்துவிடும்; உங்கள் மக்கள்
நன்றெனவே புரிந்திடுவர்; ஆத லால்நீர்
நலங்கெடுத்துப் பிறமொழிச்சொல் கலத்தல் வேண்டா
என்றுமுயர் தனிமொழியைக் குழப்பி விட்டால்
இளைஞரெலாம் இகழ்வரென இடித்துக் கூறி
நன்றுணரும் பேரறிஞன் தாய்மொ ழிக்கு
நலங்காக்குங் காவலனாய் விளங்கு கின்றான். 14

'சாவென்றால் ஒருமுறைதான் நம்மைச் சாரும்
சாய்ந்தபினர் மறுமுறையும் உயிரை யிங்கு
வாவென்றால் வாராது; போகும் அந்த
வறியவுயிர் தாய்மொழியைக் காப்ப தற்கே
தாவென்றால் தந்திடுவேன்; தயக்கங் கொள்ளேன்
தமிழ்நாடு தனைக்காப்பேன்' என்று ரைத்த
நாவென்றான் வாய்மொழியை நினைந்து பார்க்கும்
நாளெல்லாம் உடல்சிலிர்க்கும் உயிர்சி லிர்க்கும். 15

'செந்தமிழ்க்குத் தீங்கென்றால் அரசி ருக்கை
சிறிதெமக்குப் பெரிதன்று; தாய்மொ ழிக்கு
நொந்திருக்கும் நிலைவந்தால் பொறுக்க மாட்டோம்;
நொடிப் பொழுதில் துச்சமென உதறி விட்டு
வந்திருப்போம் போர்தொடுப்போம் தமிழ்மொ ழிக்கு
வாழ்வுதரச் சிறைபுகுதத் தயங்க கில்லோம்
வெந்துயர்க்கும் அஞ்சகிலோம் வாழ்வும் சாவும்
விளையாட்டென் றெண்ணிடுவோம் பகைமு டிப்போம்'.16

என்றெழுந்து சூளுரைத்த அண்ணா எங்கள்

எழில்மொழிக்குக் காவலனாய் விளங்கக் கண்டோம்
இன்றெழுந்த மொழிப்போரில் இவனை விட்டால்
எமதுமொழி காப்பதற்கோர் தலைவ னில்லை;
ஒன்றுணர்ந்து சொல்கின்றேன் தமிழைக் காக்க
உறுகழகம் ஈதன்றி வேறொன் றில்லை;
துன்றிஎழும் கழகத்தைக் காப்ப தற்கும்
தூயஒரு தமிழன்றி மற்றொன் றில்லை. 17

பேரரசு, வளர்ந்துவரும் ஒற்று மைக்குப்
பிழைசெய்ய இந்தியினைத் திணித்தால் மக்கள்
போர்முரசு கொட்டிடுவர்; குருதி சிந்தப்
பொங்கிடுவர்; தமிழ்மாந்தர் சினந்தெ ழுந்தால்
சாரரசு சடசடெனச் சரிந்த தைப்போல்
சாய்ந்தொழியும் ஆணவத்தார் ஆட்சி யெல்லாம்
போரரசு செயநினைத்தால் புகுந்து பார்ப்போம்
பொன்றுவதும் யாரென்று துணிந்து பார்ப்போம். 18

'செப்புமொழி பதினெட்டுக் கொண்டாள் அன்னை
சிந்தனைதான் ஒன்றுடையாள்' என்று சொன்ன
ஒப்பரிய பாரதியின் மொழியைக் கூட
ஒழிப்பதற்கோ முனைகின்றீர்? இந்தி என்று
செப்புமொழி ஒன்றாக்கி, அறிவு கெட்டுச்
சிந்தனையைப் பலவாக்கி, வெறிய ராகித்
தப்புவினை புரிகின்றீர்! தேயம் உங்கள்
தனியுடைமை யன்றுபொது வுடைமை யாகும். 19

தாய்மொழியாம் தமிழ்மொழியே முரசம் ஆகத்
தமிழகத்துப் பண்பாடு கவசம் ஆக
ஆய்முறைசேர் அறிவுபடைக் கலமே யாக
அறநெறியே வழிகாட்டும் துணையே யாகக்
கூய்வருமோர் மொழிப்போரில் தலைமை தாங்கிக்
கொடுமைகளைச் சாய்த்தொழிக்க எங்கள் அண்ணா
தாய்வருமோர் காவலனாய் விளங்கக் கண்டோம்
தலைவணங்கிப் பாடுதும்யாம் வாழ்க என்றே. 20

---

**பாடற்குறிப்பு:–** சென்னையில் நடைபெற்ற அண்ணா 59–ஆவது பிறந்தநாள் விழாக் கவியரங்கில் பாடியது– 17.9.1967.

## 59. திரும்பிப் பார்

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

காலங்கள் மாறிடலாம்; ஒருநாள் கண்ட
கருத்துகளும் மாறிடலாம்; பூண்டு கொண்ட
கோலங்கள் மாறிடலாம்; சட்டம் கூறும்
கொள்கைகளும் மாறிடலாம்; வாழும் இந்த
ஞாலங்கள் மாறிடலாம்; வாழ்ந்து வந்த
நாகரிகம் மாறிடலாம், மானம் மற்றும்
சீலங்கள் மாறிடுமேல் சீசீ என்ற
சிறுமைக்கே ஆட்படுவாய் சீரி ழந்தே. 1

ஆடைகளை மாற்றுகிறாய்; முடியைக் கூட
அருவருக்க மாற்றுகிறாய்; பேசு கின்ற
மேடைகளை மாற்றுகிறாய்; வீரங் காட்டும்
மீசையினை மாற்றுகிறாய்; தொலைந்து போபோ
கோடையினைக் குளிர்ச்சிதரும் பருவ மென்று
குலவுகின்ற தமிழ்மகனே உன்னி னந்தான்
வாடுவதை மாற்றுகிற உணர்வே யின்றி
மயக்கத்திற் சிக்குண்டு திரிகின் றாயே. 2

ஊறிவருங் குருதியினைக் கெடுத்துக் கொண்டாய்
உன்னினத்தின் மானத்தை ஒதுக்கி விட்டாய்
சீறிவரும் அரியேற்றின் குலத்தில் வந்த

சிறப்பினையும் மறந்துவிட்டாய்; தன்ன லத்தால்
மீறிவரும் ஆவலினால் கவர்ச்சிக் காளாய்
மீளாத பழிசுமந்தாய்; முகிலிற் காணும்
தேருருவம் பயன்படுமா போர்க்க ளத்தில்?
தெளியாத தமிழ்மகனே தெளிந்து நிற்பாய். 3

பசுதந்த சுவைப்பாலைக் கொம்புத் தேனைப்
பலாதந்த நறுஞ்சுளையைக் கருப்பஞ் சாற்றை
நசைமிகுந்த மாங்கனியை வாழை தந்த
நற்கனியைப் பாழ்நிலத்திற் கொட்டி விட்டுப்
பசிவந்து திரிகின்ற பேதை யுண்டா?
பயன்மிகுந்த இளமையினைப் பாழ்ப டுத்தி,
வசைமிகுந்து, நல்லுணர்வைச் சிதற விட்டு,
வழிதவறிச் செல்லுவதா அறிவின் பாங்கு? 4

திரும்பிப்பார் உன்னினத்தைப் புகழ்க்குன் றின்மேல்
தெரிவதைப்பார் அதன்பெருமை; பின்னர் இன்று
விரும்பிப்பார் அவ்வினத்தை; வீழ்ந்து விட்ட
விளைவைப்பார்; தாழ்ந்துகெட்ட நிலைமை யைப்பார்;
துரும்பைப்பார் அதைப் போலத் தேய்ந்த தைப்பார்;
தோன்றும்பார் உன்னுளத்தில் ஒரு ணர்ச்சி;
இரும்பைப்பார் அதன்பின்னர்த் தோள்க ளைப்பார்;
எழுச்சியினால் மலரும்பார் இந்தப் பாரே. 5

---

**பாடற்குறிப்பு:–** 24.11.1980 ஆம் நாள் பாடியது.

## 60. தமிழர் திருநாள்
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

தைபிறக்க வழிபிறக்கும் என்பர் மேலோர்;
தமிழகத்து வழிவகுக்க வந்தாய் பொங்கல்!
பொய்யுறக்கம் கொள்கின்ற தமிழர் இந்நாள்
பொங்கிஎழுந் தாற்பகைமை தூள்தூள் ஆகும்,
[1]செய்புரக்கும் உழவோரே செங்கோல் தாங்கிச்
செந்தமிழ ஆட்சியினைச் செய்வர், நம்மோர்
கைசிறக்கும் கலைசிறக்கும் தொழில்சி றக்கும்
காலமெலாம் களிசிறக்கும் தமிழ்சி றக்கும்.

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. செய் – வயல்.

## 61. தமிழின வரலாறு
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

கல்லெடுது முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன்பெற்றான்;
மாநிலத்தில் முல்லை மருதம் குறிஞ்சிநெய்தல்
நானிலத்தைக் கண்டபெரும் நாகரிக மாந்தனவன்;
கோட்டைச் சுவரெடுத்துக் கூடும் படையமைத்து
நாட்டைப் புரந்து நலந்தந்தான்; நாளும்
குடிபழி தூற்றாது கோலோச்சி நல்ல
படியரசு செய்து பயன்தந்து பேர்கொண்டான்;
மாந்தர் உயிரானால் வேந்தர் உடலாவான்
வேந்தன் உயிரானால் மாந்தர் உடலாவார்;
ஆழக் கடல்கடந்தான் அஞ்சும் சமர்கடந்தான்
சூழும் பனிமலையைச் சுற்றிக் கொடிபொறித்தான்

முக்குளித்தான் ஆழிக்குள் முத்தெடுத்தான் தோணிக்குள்
எக்களிப்பு மீதூர ஏலம் மிளகுமுதற்
பண்டங்கள் ஏற்றிப் பயன்நல்கும் வாணிகத்தால்
கண்டங்கள் சுற்றிக் கலமேறி வந்தவன்தான்;
காட்டைத் திருத்திக் கழனி எனவாக்கி
மேட்டைச் சமமாக்கி வேளாண் தொழில் புரிந்தான்;
பாராளும் காவலர்க்கும் பாட்டாளும் பாவலர்க்கும்
ஏராளும் காராளன் செய்யுதவி ஏராளம்;
சாவா மருந்தெனினும் தன்பால் இயைந்துவிடின்
ஆஆ இனிதென் றவனே தனித்துண்ணான்
மற்றோர் வெறுத்தாலும் மாறி அவரிடத்துச்
சற்றும் முனிவுகொளான் தாவி அணைத்திருப்பான்;
நெஞ்சில் உரமும் நெடுந்தோளில் வல்லமையும்
விஞ்சும் இயல்புடையான் துஞ்சுதலைத் தான்விழையான்;
அஞ்சாமை மிக்கவன்தான் ஆனாலும் சான்றோர்கள்
அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்;
தக்கும் புகழென்றால் தாவி அதுபெறவே
பொக்கை உயிர்போக்கிப் பொன்றாது நின்றிருப்பான்
சூழும் பழியென்றால் தூவென் றுமிழ்ந்தொதுக்கி
ஆழி உலகம் அதுபெறினும் தான்வேண்டான்;
தன்னலம் ஒன்றைத் தவிர்த்திடுவான் மற்றவர்
தந்நலம் வேண்டித் தனிமுயற்சி மேற்கொள்வான்
யாதுமென் ஊரென்பான் யாவரும் கேளிரென்பான்
தீதறியான் சூதறியான் சாதலும் கண்டஞ்சான்
தன்னிற் பெரியோரைத் தான்வியந்து நின்றாலும்
தன்னிற் சிறியோரைச் சற்றும் இகழ்ந்தறியான்;
வாழ்வில் வருமானம் வாய்ப்பின் அதுவேண்டான்
[1]சாவில் வருமானம் ஒன்றே சரியென்பான்;
ஒன்றே குலமென்றான் தேவன் ஒருவனென்றான்
நன்றே இறையுணர்வை நாட்டிற் குணர்த்திவந்தான்
வாழ்ந்த தமிழினத்தின் வாய்த்த வரலாறு
சூழ்ந்து சொலக்கருதின் சொல்லில் அடங்காது;
நாகரிகத் தொட்டில் நமது திருநாடு
வாகுடனே வாழ்ந்த வரலா றிதுவாகும்;
வாழ்ந்த வரலாற்றில் வந்த சிலசொன்னேன்
வீழ்ந்த வரலாறு விண்டால் மனம்நோகும்;
முச்சங்கம் கண்டு மொழிவளர்த்தோன் எப்பகையின்
அச்சங்க ளின்றி அமைதியில் நூல்படைத்தோன்
ஆங்கிலத்தால் ஆரியத்தால் ஆதிக்க இந்தியினால்
தீங்குவரு மோவென்று திண்டாடி நிற்கின்றான்
பண்படுத்தும் நூல்கள் பலதந்தோன் சான்றோரைப்
புண்படுத்தி மன்பதையில் பண்பழிக்கும் ஏடுகளே
இன்றுகுவிக் கின்றான்; இளையோர் உணர்வுகளைக்
கொன்று கெடுத்துவிட்டுக் கூசாமல் பேசுகின்றான்;
காசுக்கும் மாசுக்கும் கண்ட படிஎழுதும்;
ஆசைக்குட் பட்டே அலைகின்றான் பாவிமகன்;
நல்ல அரசியலில் நஞ்சைக் கலந்துவிட்டான்;
சொல்லும் மொழியெல்லாம் சூதன்றி வேறில்லை;
சூதாட் டரசியலில் சொக்கித் திரிபவரைச்
சூதாட்டக் காயாக்கிச் சொக்கட்டான் ஆடுகிறான்;
பண்பாட் டரசியலைப் பாழடித்துச் சாகடித்துத்
தன்பாட்டில் மட்டும் தனியார்வம் காட்டுகிறான்;
கண்டுமுதல் காணும் களமாக்கி அச்செயலைத்
தொண்டென்றும் சொல்லித் தொலைக்கின்றான் மக்களிடம்;
நோக்குந் துறைதோறும் நோய்செய்யும் போலிகளே
தூக்கித் தலைநிமிர்த்தித் தோளுயர்த்திச் செல்கின்றார்.
ஏட்டில் படித்தேன் இலக்கணப் போலியென
நாட்டிலும் போலிகள் நன்கு பெருகிவிட்டார்;
மானம் மறந்தான் மனத்தைத் துறந்துவிட்டான்
போனது போகப் பொருள்வந்தாற் போதுமென்றான்;
ஒட்டும் வயிற்றில் உடுத்த உடையில்லை
கட்டும் தறியில்தான் காலமெல் லாங்கிடப்பான்;
சிக்கல் எடுப்பான் சீர்செய்வான் பாநூலைச்
சிக்கலுக்குள் சிக்கி இவன்மட்டும் சீரழிவான்;

பாவறுந்த நூலைப் பதப்படுத்தி ஒட்டிவைப்பான்
வாழ்வறுந்து போனால் வழியின்றித் தான்தவிப்பான்
நூற்றுக் கணக்கிலவன் நூற்றுக் கொடுத்தாலும்
சோற்றுப் பருக்கைக்கு நோற்றுக் கிடப்பான்;
நாட்டுப் பசிபோக்க நாற்றை நடுகின்றான்
வீட்டுப் பசிநீக்க வேளாளன் சாகின்றான்;
பல்லுயிரும் வாழப் பகுத்துண்டான் முன்னாளில்
பல்லுயிரும் வாடப் பறித்துண்பான் இந்நாளில்;
கூம்பிக் கிடக்கும் குடும்ப நிலைகண்டும்
சோம்பிக் கிடந்தே சுகங்கண்டு வாழ்கின்றான்;
பாவம் பழியென்று பாரான் தனதுமனம்
தாவும் செயலொன்றே தக்க தெனப்புரிவான்;
சின்ன நலமொன்றுசேரும் எனத்தெரிந்தால்
என்ன பெரும்பழியும் ஏற்கத் தயக்கமிலான்;
எல்லாம் பொதுவென்பான் என்பொருள்கள் மற்றவர்க்கு
அல்ல தனியென்பான் ஆராத பேராசை!
வல்லான் சுரண்டி வளர்வதன்றி மற்றொன்றும்
கல்லான் கருதான் களத்தில் நடிக்கின்றான்.
வால்பிடித்துக் கால்பிடித்து வாழ்வு நடத்துதற்கு
வேல்பிடித்த மைந்தன் விரைவாக முந்துகின்றான்;
தன்னிலையிற் றாழ்ந்தும் தனதுயிரைக் காப்பதற்குப்
பின்னடைய வில்லை பெரும்பேதை ஆகிவிட்டான்;
பண்பாடு மூலையிற்போய் பாயை விரித்துவைத்துக்
கண்பாடு கொள்கின்ற காலம் இதுவன்றோ?
எங்கே உனதுமறை? எங்கே உனதுநெறி?
எங்கே உனதிறைவன்? என்றால் விழிக்கின்றான்;
இங்கே புகுந்தமறை இங்கே புகுந்தநெறி
இங்கே புகுந்தஇறை என்பவற்றைக் காட்டுகிறான்
அந்தோ தமிழினத்தான் தன்னை யறியாது
நொந்தே கிடக்கின்றான் நோயிற் படுக்கின்றான்;
சொந்தமெது வந்ததெது சொல்ல வகையறியான்
வெந்ததைத் தின்று வெறுமனே சாகின்றான்;
விண்முட்ட வாழ்ந்து வியந்த வரலாறு
மண்முட்டச் சாய்ந்து மடிவதோ? பீடுடுத்து
வாழ்ந்த வரலாறு வீழ்ந்து மறைவதோ?
தாழ்ந்து கெடுதல் தகுமோ? எனவெழுந்து
பண்டை வரலாற்றைப் பாரில் நிலைநிறுத்தி
மண்டும் புகழ்சேர்க்க வந்தோர் சிலராவர்;
தாளாண்மை கொண்டு தளராது பாடுபட்ட
வேளாண்மை நெஞ்சர் விதைத்த உணர்வுகளை
நெஞ்சமெனும் நன்செய்யில் நேர்த்தி பெறவிளைத்து
விஞ்சுபயன் கொள்க விழைந்து.

---

**பாடற்குறிப்பு:—**பறம்பு மலைப் பாரி விழாக் கவியரங்கில் பாடியது—27.4.1980.

**அருஞ்சொற் பொருள்:—1.**சாவில் வருமானம் – இறந்தால் மானம் வரும்.

## 62. இன்றைய நாடு
**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

அயில்வேலும் உடைவாளும் உண்டான நாடு – இன்று
அயலார்கள் அரசாளச் சரிபோடும் நாடு
—அயில்

வயல்யாவும் கயல்பாயும் புனல்சூழும் நாடு
வயிறார உணவார இயலாத நாடு
மயிலாடும் குயில்பாடும் வளமான நாடு
மனம்நோகத் தெருவோரம் குடிவாழும் நாடு
—அயில்

தலையான நெறிகண்டு புகழோடு நின்றோர்
தன்மானங் கெடும்போதும் உணராத நாடு
தலைநாளில் மொழிமூன்று வகையாகி நின்றும்
தமிழாலே இசைபாடத் தெரியாத நாடு

—அயில்

கதையாகக் கனவாக எதையேனும் சொல்வார்
காணாத உலகாள வழியோதிச் செல்வார்
பொதுவாகும் பொருள்யாவும் எனுமாறு நாடிப்
புதுவாழ்வு நனவாக முயலாத நாடு

—அயில்

அரங்கேறும் மொழியாளர் பொழிவார்கள் சொல்லை
ஆனாலும் அவர்வாழ்வில் தொடர்பேதும் இல்லை
நிறமாறும் பச்சோந்தி மரபாளர் சொல்லில்
நினைகின்ற பயனேதும் விளைவாவ தில்லை

—அயில்

அயலாரும் துணிவோடு சதிராடு கின்றார்
அறிவாளர் திறம்யாவும் விழலாக நின்றார்
மயலோட மதிவாழ ஒருநாளும் எண்ணார்
வழியேதும் தெரியாத விழியாத கண்ணார்

—அயில்

புயலாகப் பகைசூழும் பொழுதாதல் கண்டும்
புழுவாக இனம்வீழும் நிலையாவுங் கண்டும்
செயல்காணத் துணிவேதும் உருவான துண்டா?
சிறிதேனும் உணராமல் சிலையாக நின்றார்

—அயில்

பெரியாரும் அறிவாளர் பலபேரும் வந்து
பெரும்பாடு பட்டாலும் உருவான தென்ன?
அறியாமை இருள்மூழ்கித் தடுமாறு கின்றார்
அணுவேனும் நகராமல் மரமாகி நின்றார்

—அயில்

---

**பாடற்குறிப்பு:—** 24.6.1979 ஆம் நாள் பாடியது.

## 63. தமிழக அரசு
**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

முடியரசர் தமக்குரிய அரசைப் பற்றி
முத்தமிழ்ப்பா வாணரெல்லாம் புகழ்ந்து பாடக்
கடிநகருள் அரிணையில் வீற்றி ருந்து
கற்பனையில் திளைத்திருந்த என்னை யிங்குக்
குடியரசைத் தமிழரசைப் பாடு கென்று
கூறிவிட்டார்; குறைநிறையைத் துணிந்து சொல்ல
முடியரசன் தகுவனென நினைந்தார் போலும்;
முயல்கின்றேன் குறைகாணின் அதுவும் சொல்வேன் 1

பண்டைநல் லரசுக்குக் கொடிகள் மூன்று
பைந்தமிழ்நாட் டரசுக்குக் குறிகள் மூன்று
தொண்டுபுரி செயல்மேவும் 'கடமை' ஒன்று
தூய்மைமிகு 'கண்ணியமாம்' தன்மை ஒன்று
கண்டபடி சிதறாமல் தலைவன் சொல்லைக்
காக்கின்ற 'கட்டுப்பா டெ'ன்னும் ஒன்று
தண்டமிழ அரசுக்கு வழிவ குத்த
[1]தலைவன்றன் பெயருக்கும் முன்றெ ழுத்து. 2

ஒருமொழியால் உலகாண்டார் பண்டை வேந்தர்
உறவாடி வருமொழிக்கும் இடம ளித்தார்;
இருமொழியால் உலகாளச் சட்டம் செய்த
தென்னரசு தமிழரசு; நமது நாட்டின்
கருவிழியாய் உயிர்மொழியாய்த் துறைகள் தோறும்
காணுமொழி தமிழொன்றாம்; தமிழைத் தாழ்த்த
வருமொழிதான் துணைமொழிதான்; தமிழைத் தாழ்த்த
வருமொழிக்கிங் கொருநாளும் இடமே யில்லை. 3

காருந்தும் பனிமலையை வெற்றி கொண்டு

கயல்புலிவில் இலச்சினையைப் பொறித்தார் முன்னோர்;
ஊரெங்கும் நிகழ்ந்தபொதுத் தேர்தல் நாளில்
உரைகாண முடியாத வெற்றி கண்டு,
பேருந்து வண்டிகளில் குறள்பொ றித்துப்
பெருநெறியில் குறள்நெறியைக் காட்டு கின்ற
சீருண்டு தமிழகத்தின் அரசுக் கென்றால்
சிதறுண்டு போனவர்கள் குறையும் சொல்வார். 4

பாரெங்கும் படைகொண்டு சென்றார் அன்று
பண்புடைய தமிழ்கொண்டு செல்வார் இன்று;
பாரெங்கும் பெருவெற்றிக் களிப டைத்தார்
பண்டிருந்த மூவேந்தர் ஒளிப டைத்தார்;
பாரெங்கும் நானூற்றுத் தமிழ்ப டைத்துப்
பைந்தமிழ அரசிங்கே ஒளிப டைக்கும்;
பாரெங்கும் தமிழினத்தின் பண்பைக் காட்டப்
பரசுதமிழ் மாநாடு நடத்திக் காட்டும். 5

மன்னவனை உயிரென்றும், உயிரைத் தாங்க
மக்களையே உடலென்றும் புறத்திற் சொன்னார்;
அன்னவனை உடலென்றும், உடலில் தங்கும்
ஆருயிரே மக்களென்றும் சாத்தன் சொன்னான்;
பின்னவனைத் தொடர்ந்துதமிழ்க் கம்பன் பாட்டும்
பேசுவதை நாமறிவோம்; எனினும் அண்ணா
என்னுமொழி யாலழைக்கும் முதல மைச்சை;
இவ்வண்ணம் தமிழரசில் உறவு தோன்றும். 6

புவிபுரக்க அரசிருக்கை அமர்ந்த முன்னோர்
பொலிவுமிகும் கவிபலவும் புனைந்து தந்தார்;
கவிபுரக்கும் சங்கத்தும் தலைமை ஏற்றார்;
காட்டுதற்குச் சான்றுபல இன்றும் உண்டு;
புவிபரக்க அரசிருக்கை இன்று கொண்டோர்
புதுமைமிகும் கவிபலவும் புனைந்து தந்தார்;
கவிபரப்பும் அரங்கத்தும் [2]தலைமை ஏற்றார்;
காலமெலாம் நம்மரபு நிலைத்து நிற்கும். 7

அரசோச்சும் மன்றத்தில் அறம்உ ரைக்க
அவைக்களத்துப் புலவர்பலர் இருந்தார் அந்நாள்;
அரசாட்சி மன்றத்தில் பெருமை நல்க
அவைக்களத்துப் புலவரென இல்லை இந்நாள்;
முரசோச்சி ஒலியெழுப்பும் முதல மைச்சே
முறையோஎன் றுள்நினைந்தேன்; புலவ ரைத்தான்
[3]அரசாட்சி மன்றத்தின் தலைவ ராக
அமைத்தமையால் குறைசொல்ல வழியும் இல்லை. 8

மாரிக்கு நிகராகப் பொருளை வாரி
வழங்கியருள் வள்ளல்பலர் ஆண்டார் அந்நாள்;
ஊருக்கு நலஞ்செய்யும் தொண்டர், இந்நாள்
ஊராள வந்தமையால் வள்ளல் அல்லர்;
ஆருக்கும் ஈவதற்குச் செல்வர் அல்லர்;
ஆனாலும் தமிழரசில் எளிய வர்க்குப்
பாரிக்கு நிகராக வாழ்வு நல்கும்
பண்பாட்டைக் காக்கின்ற பண்பும் உண்டு. 9

களைத்திருந்த புலவனுக்கு முன்னே நின்று
கவரியினால் மெல்லனவே வீசி, நெஞ்சம்
களித்திருந்த மேலவனைப், புலவர்ப் போற்றும்
காவலனை, முடியரசில் அன்று கண்டோம்;
இளைத்திருக்கும் தமிழ்த்தாயின் வாட்டம் நீங்க,
இனியதமிழ்ப் புலவர்சிலை கடலின் ஓரம்
நிலைத்திருக்க, ஆழிஅலைக் கையால் வீச,
நிற்பதைநாம் தமிழரசில் இன்று கண்டோம். 10

படைவலியால் வடபுலத்தை அன்றை வேந்தர்
பகையாக்கிப் பணிவித்தார்; இன்றோ பேச்சு

நடைவலியால் நட்பாக்கிப் பணிய வைக்கும்
நாவன்மை கொண்டிலங்கக் காணு கின்றோம்;
குடையுடைய மூவேந்தர் வீரம் ஒன்றே
குறியாக மறங்காட்டி வந்தார் அந்நாள்;
நடையுடைய நாவேந்தர், கொள்கை ஒன்றே
நடுவாகத் திறங்காட்டி வந்தார் இந்நாள். 11

மாரிவளங் குன்றியக்கால் வான்பேர் அச்சம்,
மக்களுக்கோர் இன்னல்வரின் பெரும்பேர் அச்சம்,
பாரிதனைக் காக்கின்ற குடிப்பி றத்தல்
படுதுயரம் எனநினைந்து காத்தார் அன்று;
மாறியது பருவமழை, அதனால் எங்கும்
வறட்சிநிலை பரவியது கண்டு நெஞ்சில்
ஊறிவரும் பரிவுடனே ஓடி ஓடி
உறுதுயரம் துடைப்பதற்கு முனைந்தார் இன்று. 12

முன்னாளில் தமிழ்நாடு பொதுமை யின்றி
முடியரசாய்த் தனியரசாய் விளங்கக் கண்டோம்;
இந்நாளில் குடியரசாய் மலர்ந்த தேனும்
எடுப்பார்கைப் பிள்ளையென நிற்கக் கண்டோம்
தன்னாட்சி செய்கின்ற உரிமை யின்றித்,
தாவென்று நடுவரசைக் கேட்டு வாங்க
அன்னார்பின் திரிகின்ற நிலையே கண்டோம்;
அதிகாரம் இல்லாத அரசே பெற்றோம். 13

நடுவரசில் அதிகாரம் குவிந்த போதும்
நாகரிக அரசியலைச் சொல்லிக் காட்டிக்
கொடுவுரிமை என்றுரைத்த குரல்கொ டுக்கும்;
கூடிமகிழ் உறவுக்குக் கைகொ டுக்கும்;
கெடுதலையாய்ப் போராடும் உள்ளம் இல்லை;
கிளந்துரைத்து வாதாடும் நெஞ்சம் உண்டு;
விடுதலைக்குக் கேடுசெய்ய பகைகள் வந்தால்
வீறுடனே சீறிஎழும் நாடு காக்கும். 14

எளியரென வலியரென இன்னும் இங்கே
இருக்கின்ற நிலையொழிக்கும் பணியில் நிற்கும்;
துளியளவும் வன்முறையை நாட லின்றித்
தோழமையால் பொதுவுடைமை பூக்கச் செய்யும்;
இழிவுடைய உயர்வுடைய சாதி என்னும்
இறுமாப்புக் கொள்கைகளைச் சுட்டெ ரிக்கும்;
தெளிவுடைய அறிவினராய் மாந்தர் எல்லாம்
திருவினராய்ச் சரிநிகராய் வாழச் செய்யும் 15

யானைகட்டிப் போராடித்து விளைச்சல் கண்டு
யாவருக்கும் நெல்லளந்த தமிழர் நாட்டில்
பானைகட்டிப் போரடிக்க வந்த பேர்க்கும்
படியரிசி யளப்பதற்கு முயலும் போது
மோனைகட்டி எதுகையிட்டுக் கவிதை யாத்து
முழுமனத்தாற் பாராட்ட மனமே யில்லார்
சேனைகட்டி எதிர்க்கின்றார்; சிறுமை யன்றோ?
செந்தமிழர் நாட்டுக்கு நன்மை யாமோ? 16

---

**பாடற்குறிப்பு:—**பறம்புமலைப் பாரிவிழாக் கவியரங்கில் பாடியது—28.4.1969.

**அருஞ்சொற் பொருள்:—** 1. தலைவன் — பேரறிஞர் அண்ணா.
2. தலைமை ஏற்றவர் — தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி.
3. அரசாட்சி மன்றத்தலைவர் — தமிழக சட்ட மன்றத் தலைவர் புலவர் கோவிந்தன்.

## 64. ஒருமைப்பாடு

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

ஒருமைப்பா டென்றொருசொல் உரைக்கக் கேட்டோம்

ஒற்றுமைஎன் றொருசொல்லும் மொழியக் கேட்டோம்
இருமைக்கும் உள்ளதொரு வேறு பாட்டை
இனியமனம் படைத்தவர்கள் உணர்தல் வேண்டும்;
ஒருமைப்பா டென்றுரைத்தால் ஒன்று வாழும்
ஒற்றுமைஎன் றுரைத்தாலோ பலவும் வாழும்
உரிமைக்குக் குரல்கொடுப்போம் பலவும் வாழ
உறவுக்குக் கைகொடுப்போம் நாட்டைக் காக்க.

---

**பாடற்குறிப்பு:—** 2.3.1975 ஆம் நாள் பாடியது.

## 65. ஒற்றுமை உருப்படுமா?

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

வளமனை பலவும் வருபொருட் டொகையும்
உளநல் முதியோன் ஒருவன்; அவற்குக்
கற்றறி மக்கள் காளையர் நால்வர்
உற்றனர் மணம்பெறத் தக்கநற் பருவம்;
மகட்கொடை வேண்டி மருகும் நாளில்
நகத்தகும் நண்பன் நவின்றனன் சிலசொல்;
நால்வரும் தனித்தனி நங்கையர் மணப்பின்
பாழ்படும் ஒற்றுமை; பழுதுறும் அமைதி;
வருத்தமும் குழப்பமும் வந்துனைச் சூழும்;
ஒருத்தியைக் கொணரின் ஒற்றுமை வாழும்;
பெண்டிர் நால்வர் சண்டைகள் இடுவர்
மண்டைகள் உடைபடும் அண்டையர் நகைப்பர்;
பலமொழி பேசும் பலப்பல மாநிலம்
நலமுற ஒற்றுமை நிலவுறச் சான்றோர்
ஒருமொழி கொணர்தலை உற்று நோக்குதி!
அறிவிலாச் செயலா அவரெலாம் செய்வர்?
அதனால் நீயும் அரிவை ஒருத்தியை
மதலை நால்வர்க்கும் மணமுடிப் பாயே!

---

**பாடற்குறிப்பு:—** 2.7.1979 ஆம் நாள் பாடியது.

## 66. ஒற்றுமையும் ஒருமையும்

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

ஒற்றுமை எனவும் ஒருமை எனவும்
சொற்றிடும் இருசொலைச் சற்றிவண் நோக்குதும்
வேறுபடு பொருள்களைக் கூறிடும் அவற்றுள்
சாரும் பொருண்மை [1]தேறுதல் நம்கடன்
ஒன்றுடன் மற்றொன் றிணைவதே ஒற்றுமை
ஒன்றினுள் ஒன்று மறைவதே ஒருமை;
இணைந்தும் தனித்தும் இயங்குவ தொற்றுமை
அணைந்தபின் ஒன்றாய் அமைவதே ஒருமை;
மலைப்பினி வேண்டா மனத்தினிற் பொருந்த
இலக்கணச் சொல்லால் விளக்குதும் கேண்மின்;
பலபல எனுஞ்சொல் பகுக்கவும் இயலும்
கலகல எனுஞ்சொல் கலந்தே நிற்கும்;
முன்னதை அடுக்குத் தொடரென மொழிவர்
பின்னதை இரட்டைக் கிளவியென் றியம்புவர்;
அடுக்குத் தொடரென ஆகுவ தொற்றுமை
இரட்டைக் கிளவியென் றிருப்பதே ஒருமை;
இடர்ப்பல் தவிர்த்தினி இருவகைப் பொருளும்
மனத்தினில் தெளிகநும் மயக்கமும் விடுத்தே.

---

**பாடற்குறிப்பு:—** 1.1.1977 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:– 1.** தேறுதல் – தெளிதல்.

## 67. எங்கே தமிழன்?
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

தமிழனைக் காணவில்லை – ஈன்ற
தாயகம் முழுவதும் போயெதிர் தேடினும்
–தமிழனை

இமிழ்கடல் வரைப்பில் எங்கணும் சென்றான்
இசையுடன் தன்கொடி ஏற்றினன் என்றார்
–தமிழனை

இந்துவென் றொருவன் என்னெதிர் வந்தான்
இசுலாம் எனவோர் இளைஞன் சொன்னான்
வந்துமற் றொருவன் கிறித்தவன் என்றான்
வருபவர் ஒவ்வொரு வகைவகை சொன்னார்
–தமிழனை

பார்ப்பான் முதலி பஞ்சமன் செட்டி
பள்ளொடு பறையெனப் பலபேர் சுட்டி
ஆர்த்தார் இனும்பல் லாயிரங் கொட்டி
ஆதலின் என்மனம் அலைந்தது சுற்றி
–தமிழனை

---

**பாடற்குறிப்பு:–** 3.12.1982 ஆம் நாள் பாடியது.

## 68. தமிழனா? இந்தியனா?
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

எடுப்பு

இந்தியன் என்றொரு தமிழ்மகன் சொன்னால்
அவன்தான் இங்கே ஏமாளி – கூத்தன்
இயக்கிட இயங்கும் கோமாளி
–இந்தியன்

தொடுப்பு

உந்திய உணர்வால் தமிழனென் றேதனை
உரைப்போன் மானம் உயர்ந்துள திறனாளி
–இந்தியன்

முடிப்பு

அவனே இந்தியத் தமிழனென் றிசைத்தால்
அடிமையென் றெழுதிய முறியாளி
புவிமிசைத் தமிழ இந்தியன் என்றே
புகல்பவன் சரிநிகர் சமனாளி
–இந்தியன்

எப்பெயர் சூடுதல் ஒப்புமென் றாய்ந்தே
ஏற்றிட முனைபவன் பொறுப்பாளி
எப்பொருள் கூறினும் எவ்வெவர் கூறினும்
மெய்ப்பொருள் காண்பவன் அறிவாளி
–இந்தியன்

---

**பாடற்குறிப்பு:–** 7.5.1987 ஆம் நாள் பாடியது.

## 69. கண்ணீர்ப் பொங்கல்
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

துளைக்க வரும் துப்பாக்கிக் குண்டு கண்டும்

துணிந்தெதிர்த்தார் அஞ்சவிலை ஈழ நாட்டார்
வளைக்கவரும் படைகண்டும் கலங்க வில்லை
வரிப்புலியாய்ப் பாய்ந்தெதிர்த்து வாகை கொண்டார்
அழைத்தபடை அரவணைக்கும் என்று நின்றார்;
அமைதியெனும் பெயராலே குண்டு வீசித்
தொலைக்கவரும் நிலைகண்டே மயங்கு கின்றார்;
தோழமையே பகையானால் என்ன செய்வார்? 1

சிங்களத்துக் கொடுங்கோலால் அடிமை யாகிச்
சிக்குண்டு நலிந்துருகிப் பின்நி மிர்ந்து
வெங்களத்தில் வரும்விடியல் எனநி னைந்து
வேங்கையெனச் சினந்தெழுந்து போர்தொ டுத்தார்
தங்குலத்தோர் விழியிழந்தும் உயிரி ழந்தும்
தையலர்தம் கற்பிழந்தும் தயங்கா ராகித்
தங்குறிக்கோள் வெற்றிபெறும் வேளை யிற்றான்
தடையாகிப் பாரதமே நின்ற தம்மா! 2

இனப்பகையை எதிர்ப்பானா? அமைதி பேசி
எழும்பகையை எதிர்ப்பானா? ஈழ நாட்டான்
தனித்துலகில் நிற்கின்றான்; சிங்க ளத்தார்
தாங்குபடை கைக்கொள்ளத் தமிழன் மட்டும்
முனைக்களத்தில் வெறுங்கைய னாக நிற்க
முயல்வதனால் அமைதியுண்டோ? தமிழி னத்தை
நினைக்குமுளம் பொங்குவதால் விழிகள் பொங்கி
நிலைகலங்கித் துடிக்கின்றோம் பொங்கல் நாளில். 3

---

**பாடற்குறிப்பு:—** 29.12.1987 ஆம் நாள் பாடியது.

## 70. தீப்பொறி
**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

தோற்றத்தால் முதல்மாந்தன், தொல்லுலகில்
முதன்மொழியைத் தோற்று வித்த
ஏற்றத்தால் முதல்மாந்தன், ஈடில்லா
நாகரிக இயல்பு காட்டும்
ஊற்றத்தால் முதல்மாந்தன், உயர்மறத்தை
போர்க்களத்தில் உணர்த்தி நிற்கும்
சீற்றத்தால் முதல்மாந்தன், சீர்மிகுத்து
வாழ்ந்தவன்றான் சிதறிக் கெட்டான். 1

சாதிதரும் பிரிவுகளைச் சமயத்தின்
பொய்மைகளைச் சடங்கு தம்மை
ஓதிவருஞ் சழக்கர்களை ஓராது
நம்பியதால் உணர்வி ழந்தான்;
பாதிமதி உடையவனாய்ப் பாழ்பட்ட
வாழ்வினனாய்ப் பான்மை கெட்டான்;
மேதினியின் மேல்மகன்றான் மேவலராற்
கீழ்மகனாய் வீழ்ந்து விட்டான் 2

வீழ்ந்தவனை மேலுயர்த்த வீறுபெறும்
வாழ்வுதர விழைந்து, தீமை
போழ்ந்தெறியப் பாட்டுலகிற் புகுந்திருக்கும்
புரட்சிமனப் பொன்னுச் சாமி
சூழ்ந்தெழுதும் ஒவ்வொன்றும் சுடுகின்ற
தீப்பொறிதான்; சொல்லும் பாடல்
தாழ்ந்தவரை உயர்த்திடுக தன்மானம்
வளர்த்திடுக தழைத்து வாழ்க 3

---

**பாடற்குறிப்பு:—** மலேசியக் கவிஞர் பொன்னுசாமியின் ‘தீப்பொறி’ என்ற கவிதைத்தொகுப்பு நூலுக்கு எழுதிய வாழ்த்து—5.1.1984.

## 71. நீர்ப்பானை ஓட்டையானால்...?

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

சாதிக்குச் சாதியிங்கு மோதிக் கொண்
  டழிகின்ற சேதி யுண்டு
வீதிக்கு வீதியிங்குப் போதிக்கும்
  பள்ளிக்குஞ் சாதி யுண்டு
வாதிக்க வாயில்லை, வாழ்விக்க
  வழியில்லை, வாழ்ந்த நம்மைப்
பாதிக்கும் நிலையுண்டு பாழ்பட்ட
  பிரிவுண்டு பாராய் தம்பி! 1

பார்ப்பானைத் திட்டுகிறாய் பாடுபல
  படுகின்றாய் பயன்தான் உண்டா?
சேர்ப்பாரை ஒன்றாகச் சேர்க்காமல்,
  செயன்முறையிற் செய்து காட்ட
ஏற்பாடு செய்யாமல் எத்தனைதான்
  முயன்றாலும் என்ன கண்டாய்?
நீர்ப்பானை ஓட்டையடா! நிரப்புகிறாய்
  தண்ணீரை, நிறைதல் உண்டோ? 2

ஒன்றாக நாமிணைந்தால் ஊறுசெயும்
  பகைமையெலாம் ஒழிந்தே போகும்;
நன்றாக எண்ணிப்பார்; நாலாயி
  ரஞ்சாதி நமக்குள் வைத்தோம்;
[1]ஒன்றாரும் புகுந்துவிட ஓட்டைகளை
  அமைத்துவிட்டோம்; உட்பு குந்தோர்
வென்றாள வழிசமைத்தோம்; வெறுங்கூச்சல்
  போடுகிறோம்; விடியல் காணோம். 3

இனவுணர்வு நமக்குள்ளே எழுந்துவிடின்
  நமைப்பகைமை என்ன செய்யும்?
இனநலமே குறியாக எப்பொழுதும்
  அப்பகைவர் இயங்கு கின்றார்;
கனவுலகில் திரிகின்ற தமிழ்மகனே
  உண்மைநிலை கண்டு கொள்வாய்;
உனையொன்று வேண்டுகிறேன் உன்னினத்தை
  முன்னேற்ற ஒன்று சேர்வாய் 4

தமிழரெலாம் ஒன்றானார் தமிழர்க்குப்
  பகைவரெலாம் தாழ்ந்து போனார்
அமிழ்தனைய இம்மொழியை அகம்மகிழ
  என்செவியில் ஆரு ரைப்பார்?
இமிழ்கடல்சூழ் இவ்வுலகில் எந்தமிழர்
  சாதியினை எரித்தே விட்டார்
தமிழினந்தான் இனியுண்டு தலைநிமிர்ந்து
  வாழ்வரெனச் சாற்று வார்யார்? 5

---

**அருஞ்சொற் பொருள்:—** 1. ஒன்றார் – பகைவர்.

## 72. மூன்று தமிழ் தோன்றியது

**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

கலிவெண்பா

நீர்நிறைந்து யாண்டும் நிலமொன்றுங் காணாமல்
பார்மறைந்து வெள்ளம் பரவிநின்ற தோர்காலம்;
அந்தப் புனல்குறைய ஆங்கிருந்த ஓங்குமலை
வந்து தலைகாட்டி வானோக்கி நின்றதைத்தான்

கற்றோன்றி மண்தோன்றாக் காலமெனப் பூவியலைக்
கற்றோர்தம் நூலிற் கணித்தார்கள்; மண்டிணிந்த
ஞாலத்தின் முன்தோன்றும் நீலப் பெருங்கல்லைக்
கோலக் குறிஞ்சியெனக் கூறி மகிழ்ந்தனர்; அவ்
வெற்பிடத்துங் காட்டிடத்தும் வேட்டம் பலபுரிந்து
கற்களிலே தீயெழுப்பிக் காலங் கடத்தியவன்
ஆடை யறியாமல் ஆசை புரியாமல்
வீடுந் தெரியாமல் வீரமட்டுந் தானறிவான்;
ஆதி மனிதனவன் அன்னான் கருத்துரைக்க
ஏதும் அறியாதான் எண்ணம் எடுத்தியம்பப்
பேசும் மொழியறியான் பிள்ளைநிலை யுற்றிருந்தான்;
பேச விழியுண்டு பேணும் முகமுண்டு
நீண்டஇரு கையுண்டு நெஞ்சிற் படுங்கருத்தை
வேண்டும் படிஎடுத்து விண்டுரைத்தான் சைகையினால்;
எண்ணம் பலித்துவிடின், எக்களிப்பு மீதூரின்
நண்ணும் உணர்ச்சியினால் நாடித் துடிப்பேறித்
துள்ளிக் குதித்தெழுந்து தோழனுக்குத் தன்கருத்தை
உள்ளக் கிளர்ச்சிதனை ஓதினான் சைகையினால்;
அந்தக் குறிப்பும் அவன்காட்டுஞ் சைகைகளும்
முந்திக் கலந்து முகிழ்த்தனகாண் கூத்தாக;
மற்றொருநாள் மாந்தன் மகிழ்ந்து குதித்துவந்தான்
உற்ற பெருங்களிப்போ உள்ளத்துப் பூரிப்போ
பெற்ற பெரும்பொருளோ பெண்காதற் கூட்டுணர்வோ
எற்றுக்கே ஆடினனோ என்ன நடந்ததுவோ
எப்படியோ ஓருணர்ச்சி இன்னதெனாப் பேருணர்ச்சி
அப்படியே உள்ளோடி ஆவி கலந்தெழுந்து
நாடிநரம் பெல்லாம் நடமாடச் செய்தோடிக்
கூடி மனத்தகத்திற் கூத்தாட்டம் ஆடியது;
கூத்தாடும் அவ்வுணர்ச்சி கூடி நிலைநிற்க
ஆற்றாமல் வாய்திறந்தே ஆர்ப்பரித்துக் கூவிவிட்டான்;
கூவுங் குரல்கேட்டான் கொண்டான் பெருவியப்பு;
கூவினான் மீண்டுங் குரலெடுத்துக் கூவினான்;
கோட்டிற் குயிலொன்று குக்குக்கூ என்றொலிக்கக்
கேட்டான் கிளைக்குயில்போற் கூவினான் வாய்குவித்தே;
ஒட்டி இருகுரலும் ஓரொலியாய்த் தொட்டிசைக்க
விட்டுவிட்டுக் கூவி விளையாடிக் கொண்டிருந்தோன்
கிட்டும் பெருமகிழ்வால் கொட்டினான் கையிரண்டும்
கொட்டினான் கூவினான், கூவினான் கொட்டினான்
கூவுதலுங் கொட்டுதலுங் கூடி இசையென்றும்
மேவிவருந் தாளமென்றும் மேதினியில் பூத்தனகாண்;
எண்ணுங் கருத்தை எடுத்துரைக்க அம்மாந்தன்
கண்ணசைத்தான் கையசைத்தான் காலங் கடந்துவரப்
பையஅவன் நாவசைத்தான்; பாலோ தெளிதேனோ
செய்யஒரு நற்கரும்பின் தீஞ்சாறோ என்னஒரு
சொன்மொழிந்தான், மீண்டுமதைச் சொன்னான், எதனாலோ
பன்முறையும் பன்னிப் பழகினான் அச்சொல்லை;
சொல்லிப் பழகுமொழி மெல்லத் தமிழாகி
இல்லைநிகர் என்ன இயலாய்க் கனிந்ததுகாண்;
இவ்வண்ணம் முத்தமிழாய் ஏற்றம் பெறுமொழியை
எவ்வண்ணம் ஏத்திப் புகழ்வோம்நாம்? அம்மொழியில்
கூத்தும் இசையுங் குறிக்கின்ற நூலெங்கே?
ஏத்தும் இயல்நூலில் ஏனையவை தாமெங்கே?
பாழுங் கடல்கோளும் பாவிப் பகைக்குலமும்
சூழுங் கொடுவினையால் சொல்லரிய ஏடுகள்தாம்
காணா தொழிந்தனவே; கண்மூடிக் கொள்கையினால்
மாணாச் செயல்செய்தோம் மற்றும் பலஇழந்தோம்;
ஆடிப் பெருக்கிலிட்டோம் அந்தோ நெருப்பிலிட்டோம்
வேடிக்கை மாந்தர் விளையாட்டை என்னென்போம்!
அஞ்சியஞ்சிச் சாகாமல் ஆளடிமை யாகாமல்
எஞ்சியவை காப்போம் இனி.

---

**பாடற்குறிப்பு:–** விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரிக் கவியரங்கில் பாடியது.

## 73. தமிழ் காப்போம்
(நூல்:—தாய்மொழி காப்போம்)

எண்ணுடையாள், எழுத்துடையாள், காலங் காணா
எழிலுடையாள், இளைமையினாள், கோலங் கண்டு
கண்ணுடையார் எனவாழ்ந்தோம்; ஆனால் இன்று
கண்ணொன்றை இழந்து விட்டோம்; கீழ்வாய் என்னும்
எண்ணறிவார் எவருள்ளார்? தமிழர் கண்ட
எண்வடிவம் மறைந்துவரும் நிலைமை கண்டோம்
புண்ணுடைய நெஞ்சுடையோம்; மாற்றார் ஆட்சி
புகுந்தமையால் விளைந்தவொரு தீமை யன்றோ? 1

எஞ்சியுள எழுத்தேனும் முன்னோர் கண்ட
இயல்புடனே நிலைத்திடுதற் குறுதி யில்லை;
வஞ்சமனம் படைத்தவர்தாம் வேற்று நாட்டு
வரிவடிவைப் புகுத்துதற்கு முயலு கின்றார்;
நெஞ்சமிதை நினைந்துவிடின் வெந்து போகும்;
நெறிகெட்ட இம்முறைதான் என்று சாகும்?
அஞ்சுவது கெஞ்சுவது மடமை யாகும்;
ஆர்ப்பரித்துக் கேட்பதுதான் கடமை யாகும் 2

இந்நாட்டிற் குரியனவென் றியம்பு கின்ற
ஈரேழு மொழிகளுக்கும் உரிமை வேண்டும்
[1]வெந்காட்ட ஒருமொழியும் அதன்மே லேறி
வீற்றிருக்க ஒருமொழியும் வேண்டா! வேண்டா!
என்னாட்டிற் கலைக்கூடம் ஆட்சி மன்றம்
எத்துறையும் தமிழ்மொழியின் ஆட்சி வேண்டும்;
இந்நாட்டம் நிறைவெய்த வில்லை என்றால்
இருந்தென்ன வாழ்ந்தென்ன சாவே மேலாம். 3

இவ்வண்ணம் தமிழ்காக்க முனைவோர் தம்மை
இழிமொழிகள் சொலலன்றி ஆட்சி செய்வோர்
செய்வண்ணம் அறியாராய்ப் புலம்பு கின்றார்;
'தேர்தலிலே நாற்காலி பற்று தற்கே
இவ்வண்ணம் தமிழ்தமிழென் றியம்பு கின்றார்'
என்றுரைப்பர் நாற்காலிப் புத்தி கொண்டோர்;
உய்வண்ணம் அவர்க்குரைக்க வல்லார் யாரோ?
உரைத்தாலும் கேட்கின்ற நல்லார் யாரோ? 4

எப்படியோ அரசிருக்கை கிடைத்து விட்டால்
எடுபிடிகள் ஆளம்பும் அமைந்துவிட்டால்
அப்படியே ஒட்டிக்கொண் டகல மாட்டார்,
அடுக்கடுக்காய்ப் பழிவரினும் இறங்க மாட்டார்,
எப்பொழுதோ ஒருநாளில் வெறுத்தாற் போல
இப்பதவி வேண்டேனென் றெழுந்து நிற்பர்,
அப்பொழுதே மீண்டுமதில் அமர்ந்து கொள்வர்,
அவர்நம்மை எள்ளிஉரை யாடு கின்றார். 5

காலந்தான் இவர்தம்மைத் திருத்த வேண்டும்
கடுகிவரும் அணுகிவரும் தேர்தல் என்னுங்
காலந்தான் இவர்க்கறிவு புகட்ட வேண்டும்;
கண்திறந்து தமிழரென உணர்வர் அந்நாள்;
ஞாலந்தான் இவர்க்குரிமைச் சொத்தா என்ன?
நமக்குமதில் உரிமையிலை என்றா எண்ணம்?
கோலந்தான் கலையாதோ? இவர்கள் செய்யும்
கொட்டந்தான் அடங்காதோ? அடங்கும் நாளை! 6

ஈன்றெடுத்த தாய்மொழிக்கு வாழ்வு வேண்டி
எடுத்துரைக்க முனைந்ததுமோர் குற்றம் ஆமோ?
ஆன்றவிந்த கொள்கையினார் தமிழ்மொ ழிக்கே

அரசுரிமை வேண்டியதும் குற்றம் ஆமோ?
ஏன்புகுந்தார் சிறைக்கூடம்? ஆசா னாக
இருந்தசிலர் பதவியையும் ஏனி ழந்தார்?
நான்றுணிந்து கூறிடுவேன் பதவி என்ன
நற்றமிழின் உயர்ந்ததுவோ சீசீ தூசி 7

மாநிலத்து மொழிகாணாப் புதுமை கண்டு
வகைப்படுத்தி அகம்புறமாப் பொருளைச் சொல்லித்
தேனிகர்த்த சுவைப்பாவால் பத்துப் பாட்டும்
தித்திக்கும் தொகைஎட்டும் பாடி வைத்த
பாநலத்தைப், பொருள்வளத்தை, நுகர்ந்த உள்ளம்
பணியாது; பெருமிதத்தால் நிமிர்ந்து நிற்கும்;
கானகத்துப் புலிப்போத்தாய் வீரங் காட்டும்;
கவிதைக்கு விளைநிலமாய்க் காட்சி நல்கும். 8

கண்ணகிக்கு வரப்போகும் இடர்நி னைந்து
கண்ணீரை நிறைத்துடலம் தோன்றா வண்ணம்
வண்ணமலர் பலகொண்டு மறைத்துச் சென்றாள்
வையையெனும் குலக்கொடிஎன் றிளங்கோ சொல்வர்;
அண்ணலெனும் இலக்குவனார்க் குற்ற துன்ப
அவலநிலை கண்டுள்ளம் நொந்து நொந்து
மண்மிசையே வரஅஞ்சி மணலுட் புக்கு
மறைந்துகொண்டாள் அவளென்று நான்பு கல்வேன்; 9

சிறைசெல்லப் புலவர்சிலர் வேண்டும் இன்று;
செந்தமிழின் உயர்வுதனை வேண்டி நின்று
முறைசெய்யப் பதவிதனை இழப்ப தற்கும்
முனைந்துவரும் புலவர்சிலர் வேண்டு மின்று;
குறைசெய்யும் ஆள்வோரின் கொடுமைக் காளாய்க்
குருதியுடன் உயிரீயப் புலவர் வேண்டும்;
நிறைசெய்ய உயிரீயும் புலவர் தம்முள்
நிற்குமுதற் புலவன்நான் ஆக வேண்டும்; 10

பிறந்தநிலம் ஒன்றுண்டு வணங்கல் வேண்டும்
பேசுமொழி ஒன்றுண்டு போற்றல் வேண்டும்
சிறந்த பொருள் இவற்றின்மேல் ஒன்றும் இல்லை
சிந்தித்தே இவைகாக்க முனைவோம் வாரீர்!
கரந்துவரும் பகையுண்டு நினைவிற் கொள்க!
காலமெலாம் அடிமைசெய விழைதல் வேண்டா!
இறந்தபினும் தலைமுறைகள் நம்மை வாழ்த்த
ஏற்றசெயல் ஈதொன்றே காப்போம் வாரீர்! 11

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. வெந் – முதுகு.

## 74. கனன்றெழுக!

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

இந்தியினால் விளைதீமை யாவை என்றே
இயன்மொழிகள் கற்றுணர்ந்த புலவர் சொன்னார்;
சிந்தனையாற் கல்வியினால் தந்நே ரில்லாச்
சீர்மைமிகு பேரறிஞர் விளக்கந் தந்தார்;
முந்திஎழும் உணர்ச்சியினாற் கவிதை வேந்தர்
முழுமூச்சில் எதிர்ப்புரைத்தார்; நேர்மை பேணும்
புந்தியினார் அரசியலில் வல்லார் யாரும்
புகன்றவெலாம் ஆள்வோர்க்குக் கேட்க வில்லை 1

செவியிருந்துங் கேளாராய் ஆகி விட்டார்;
செப்புகின்ற நல்லவரைப் புறக்க ணித்தார்;
புவிமுழுதும் நமக்குத்தான் உரிமை யென்ற
போக்கினிலே போகின்றார்; நாளை யிங்குக்
குவிகின்ற உணர்ச்சிக்கு விடைஎன் சொல்வார்?

கூண்டோடு பலியாவர்; கொடிய ஆட்சி
தவிடுபொடி யாகிவிடும்; தமிழைக் காக்கத்
தமிழரெலாந் திரண்டெழுந்தால் பகைதூள் ஆகும் 2

நமக்குரிய தாய்மொழிக்கு வந்து விட்ட
நலிவகற்ற ஒருமுகமாய் எழுக! மற்றோர்
தமக்குரிய மொழிக்கெல்லாம் வரவு கூறித்
தலைவணங்கும் அருளினிமேற் போதும் போதும்!
சுமக்கின்ற பழிதவிர்க்கத் தொன்று தொட்டுத்
தொடர்ந்துவரும் தன்மானம் நிமிர வேண்டும்
நமக்கென்ன என்றிருக்கும் பொறைமை நீக்கி
நமக்குத்தான் பொறுப்பெனநாம் எழுதல் வேண்டும். 3

பகைவருமேல் அதைஎதிர்த்து வாகை சூடிப்
பரம்பரையின் பெருமிதத்தைக் காட்டல் வேண்டும்;
நகைமுகத்த தீநட்பு நெருங்கி நின்றால்
நம்மையது நெருங்காத விழிப்பு வேண்டும்;
அகப்பகையும் புறப்பகையும் நுழையா வண்ணம்
ஆய்ந்துணர்ந்தே அவைதவிர்க்கும் ஆற்றல் வேண்டும்;
தகுமுறையில் இவ்வண்ணம் நாமி ருப்பின்
தமிழ்வாழும் தழைத்தோங்கும் தலைமை தாங்கும். 4

---

**பாடற்குறிப்பு:–** மதுரை எழுத்தாளர் மன்றக் கவியரங்கில் பாடியது.

## 75. உயிர் கொடுப்போம்

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

“இந்திமொழி பொதுமொழியா? தகுதி என்ன
இருக்கின்ற தம்மொழிக்கு? குயில்கள் கூவும்
கொந்தவிழும் மலர்ச்சோலை தமிழர் நாடு;
கோட்டானுக் கங்கென்ன வேலை?” என்று
செந்தமிழும் பிறமொழியும் நன்கு கற்றோர்
சீர்தூக்கி நன்குணர்ந்து மறுத்து ரைத்தார்;
எந்தவழி இந்திமொழி வந்த போதும்
ஏற்பதிலை என்றெல்லாம் எடுத்துச் சொன்னார். 1

அரசியலில் மூதறிஞர் மறுத்துச் சொன்னார்
ஆய்வுரைகள் அறிவுரைகள் எழுதிப் பார்த்தார்;
முரசொலிக்கும் போர்க்களத்தில் நின்று நாளும்
முழக்கமிடும் பேரறிஞர் எதிர்த்து நின்றார்;
உரமிகுந்த அறப்போர்கள் பல நடாத்தி
உயிர்ப்பலிகள் பலகொடுத்தார்; எல்லாம் கண்டும்
இருள்மதியர் இந்திவெறி கொண்ட மாந்தர்
இன்றுவரை கேளாராய் உலவு கின்றார். 2

விரலைந்தும் தனித்தனியே இயங்கி நிற்கும்
வேலேந்தும் பொழுதிலவை இணைந்து நிற்கும்;
தரமறந்த உரிமையுடன் மாநி லங்கள்
தனித்தனியே இயங்கிவரும்; பகைவ ருங்கால்
உறவுணர்ந்து தோள்தந்தே இணைந்து நிற்கும்;
ஒற்றுமைஎன் றிதனைத்தான் உரைப்பர் மேலோர்;
ஒருமைஎனும் பெயராலே விரல்கள் ஐந்தை
ஊசியினால் தைப்பதற்கு முனைவா ருண்டோ? 3

தத்தமது நாகரிகம் மொழிகள் பண்பு
தனித்தன்மை எள்ளளவும் கெடுத லின்றி
ஒத்துரிமை உணர்வுடனே மாநி லங்கள்
உளமொன்றி வாழ்வதுதான் நமது வேட்கை;
பித்தரென வெறியரென ஒருமை என்ற
பெயர்சொல்லி இந்தியினால் தைத்து விட்டால்
எத்தனைநாள் ஒட்டிருக்கும்? குனிந்த மாந்தர்
இருதோளும் விரித்தெழுந்தால் தெறித்துப் போகும். 4

உறவுக்குக் கைகொடுப்போம் எனினும் எங்கள்
 உரிமைக்கும் குரல்கொடுப்போம்; தென்பு லத்தின்
மறுதிக்கில் வாழ்வோர்கள் குரலைக் கேட்க
 மறுத்துவிடின் உயிர்கொடுப்போம்; சிறையில் மாண்ட
திறமிக்க நடராசன் தால முத்து
 தென்னாட்டில் பலருள்ளார்; இன்று வாழ்வோர்
உரிமைக்கே உயிர்கொடுப்போம் என்பர் நாளை
 உணர்வுடையார் என்சொல்வார்? யாரே கண்டார். 5

## 76. சாவுக்கும் அஞ்சோம்
(நூல்:—தாய்மொழி காப்போம்)

மணம்பரப்பும் பூங்காவுள் கள்ளிக் கூட்டம்
 வளரவிடப் பார்த்ததுண்டோ? வாழைத் தோப்பில்
கணங்கணமாய் மந்திபடை எடுத்து வந்தால்
 களிப்போடு வரவுரைக்கக் கண்ட துண்டோ?
உணவளிக்கும் நெல்வயலுள் உதவாக் காளான்
 உறுகளைகள் படருவதை விடுவ துண்டோ?
இணையில்லாத் தமிழ்வழங்கும் தமிழர் நாட்டில்
 இந்திமொழி புகவிடுதல் கண்டோம் கண்டோம்! 1

அரியேறு பலகுழுமி வாழுங் காட்டில்
 அஞ்சிவரும் நரியாட்சி செலுத்தல் உண்டோ?
விரிகுரலின் கோட்டானை அழைத்து வந்து
 விரும்புமிசைக் குயிலினத்தை ஆள்க என்று
சுரிகைமுடி சூட்டுவதைக் கண்ட துண்டோ?
 தொன்னூல்கள் பலதொகுத்த பெட்ட கத்துள்
சிறியதொரு கறையான்தான் ஆள்வ துண்டோ?
 செந்தமிழின் பேழைக்குள் இந்தி கண்டோம்! 2

தூங்குகிற தமிழ்ப்புலியை இடறி வீழ்ந்த
 துணைவிழிகள் இல்லாதான் நிலைமை போல
ஏங்குகிற வடவர்தமக் கொன்று சொல்வேன்
 என்னினத்தார் மொழிவெறியில் சளைத்தா ரல்லர்;
வீங்குகிற தோளுக்கு விருந்து வைக்க
 விழைவீரேல் மொழிப்போரைத் தொடர்க; போரைத்
தாங்குகிற வலிமையுண்டு வீரம் உண்டு
 சாவதற்கும் அஞ்சாத துணிவும் உண்டு 3

அறப்போரைத் தொடங்குதற்குக் காஞ்சிச் செம்மல்
 அண்ணாதம் முரசொலியை முழக்கி விட்டார்
வரப்போகும் மொழிப்போரில் அணிவ குக்கும்
 வயப்புலிகள் கூட்டமொரு கடலை விஞ்சும்
இறப்போர்கள் சிந்துகின்ற குருதி வெள்ளம்
 எழுந்தெழுந்து தலைகளுடன் அலைகள் வீசும்
சிறப்போடு வருமிந்தி அதனுள் சிக்கிச்
 சீரிழந்து நாணிழந்து சிதறி ஓடும். 4

## 77. வாகை கொள்வோம்
(நூல்:—தாய்மொழி காப்போம்)

மூன்றாம்நாள் முளைத்துவரும் இந்திப் பெண்ணே!
 முனைகின்றார் உன்புகழைப் பரப்பிக் காக்க!
ஈன்றாளைக் காப்பதுமோர் கடமை யாகும்;
 எங்களையும் ஈன்றெடுத்தாள் ஒருத்தி யுண்டே!
ஆன்றோரும் சொலற்கரிய காலங் கண்ட
 அன்னையையும் காப்பதெங்கள் கடமை யன்றோ?
சான்றோர்கள் பழிக்கும்வினை செய்தல் வேண்டா

தடுமாறும் நின்புதல்வர்க் கிதனைக் கூறு! 1

புன்மக்கள் பெற்றெடுத்தாய் பழிசு மந்தாய்!
பொதுமகளா நினையாக்கத் துடித்தல் காணாய்!
நன்மைக்கே சொல்கின்றேன் கற்பைக் காக்க
நாடுவதே முறையாகும்; தீமை வந்த
பின்னுக்கு வருந்துவதிற் பயனே இல்லை;
பேசாதார் தலைவாயில் நுழைதல் நன்றோ?
நன்மக்கள் மனம்வருந்தப் புகுதல் வேண்டா
நாடுகிற கடைவாயில் நாடிச் செல்க! 2

முன்னமிரு முறைநீயே வந்த போது
முழுமூச்சோ டுனைத்தமிழர் எதிர்த்து நின்றார்;
என்னினத்தார் இருதோழர் உயிர்கள் தந்தார்.
ஏந்திழையார் துயருழந்தார் குருதி சிந்திப்
பன்னரிய கொடுஞ்சிறையுள் வீரர் புக்கார்,
பைந்தமிழைத் தாய்மொழியைக் காத்து நின்றார்;
இன்னுமிங்கு வன்முறையால் நுழைவா யென்றால்
எதற்கெடுத்தோம் இவ்வுடலம்? ஒருகை பார்ப்போம். 3

வீடென்ன மனையென்ன மக்க ளென்ன
வீணுக்கு வாழ்வென்ன பதவி என்ன
நாடென்ன மொழியன்னை நலியும்போது?
நாமென்ன மரமென்று நினைந்தார் போலும்?
ஓடென்ன மெலிந்தென்ன? நரம்பி லெல்லாம்
ஓடுவது புண்ணீரா? செந்நீர் வெள்ளம்;
ஈடென்ன கண்டதுண்டு தமிழ்மொ ழிக்கே?
ஈந்திடுவோம் நம்முயிரை; வாகை கொள்வோம். 4

**அருஞ்சொற் பொருள்:—** 1. ஓடென்ன — ஓடுபோல

## 78. இனி விடோம்

**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

உலகத்து முதன்மொழியாம் தமிழைத் தங்கள்
உயிர்மூச்சாக் கொண்டிலங்கும் தமிழர் நாட்டிற்
கலகத்தை உருவாக்கும் வெறியர் கூடிக்
கடுகளவுந் தகுதியிலா இந்தி தன்னைப்
பலகட்டுக் கதைகூறிப் புகுத லிட்டார்
படையெடுத்தார், தடியெடுத்தார், பயனே யில்லை
நிலைகெட்டோர் மூன்றுமுறை முயன்று பார்த்தும்
நினைப்பொன்றும் பலிக்கவில்லை தோல்வி கண்டார்! 1

முதன்முறையா இந்திமொழி தமிழர் நாட்டுள்
முகங்காட்ட வன்முறையால் நுழைந்த போது
கதவடைத்துத் தடுத்துரைத்தோம்; ஆள வந்த
கடுங்கோலர் சிறைக்கதவைத் திறந்து வைத்தார்;
அதன்கொடுமைக் கஞ்சவிலை புகுந்து நின்றோம்;
அங்கேதான் ஈருயிரைப் பலியாத் தந்தோம்;
இதன்பிறகே அந்தமொழி அஞ்சி ஓடி
இடுப்பொடிந்து வடபுலத்தே கிடக்கக் கண்டோம். 2

புறங்காட்டிச் சென்றமொழி மீண்டு மிங்குப்
புகுவதற்குத் துணிவோடு வருதல் கண்டோம்;
திறங்காட்டும் மறவர்குழாம் சாக வில்லை
சிங்கமென இருக்கின்றோம் என்றெ ழுந்தோம்;
அறங்காக்கும் மனமில்லா ஆட்சி யாளர்
அடித்தடித்துத் துரத்திடினும் துணிந்து நின்றோம்;
நிறங்காட்டுஞ் செங்குருதி சிந்தக் கண்டு
நிலைகுலைந்து மறைந்தோடிச் சென்ற திந்தி. 3

மதியாதார் தலைவாசல் மிதிப்ப தற்கு

மதிகெட்டு வந்தமொழி மானங் கெட்டுக்
கதியேதுங் காணாமல் ஓடித் தோல்வி
கண்டபினும் தன்னகத்தே வாழும் எண்ணம்
உதியாமல், பிறன்வீட்டிற் புகநி னைந்தே
உணர்விழந்து மறுமுறையும் அறுபத் தைந்தில்
விதியோடு விளையாட உறவும் ஆட
வீறுநடை யோடிங்கு நுழையக் கண்டோம். 4

இனிவிடுத்தால் தமிழ்மொழிக்கும் நமக்குந் தீங்காம்
எனக்கருதித் தமிழகமே கொதித்தெ ழுந்து
முனைமுகத்துத் தலைநிமிர்ந்து நிற்கக் கண்டோம்;
மூண்டுவரும் மொழிப்போரில் வாழ்வா சாவா
எனநினைத்துத் தமதுயிரைச் சிறிதென் றெண்ணி
இனியதமிழ் காப்பதென உறுதி பூண்டு
தினவெடுத்த போர்மறவர் திரண்டு நின்று
திரும்பிச்செல் திரும்பிச்செல் இந்திப் பெண்ணே 5

என்றுரைத்துக் கனன்றெழுந்து வீரம் மிக்க
எம்மினத்தார் அணிவகுத்தார்; இந்தி ஆட்சி
கொன்றழித்த பிணக்குவியல் கொஞ்சம் அல்ல;
கொடுங்கோன்மை கட்டவிழ்த்துக் கொண்டு சீறி
நின்றிழைத்த கொடுமைகளும் கொஞ்ச மல்ல;
நெடுந்தவத்தாற் பெற்றெடுத்த பிள்ளை மார்பில்
சென்றடித்த குண்டுகளும் கொஞ்ச மல்ல;
சிறையகத்துப் பட்டோரும் கொஞ்ச மல்லர்; 6

ஐயிரண்டு திங்களுடல் சுமந்து பெற்ற
அரும்புகளை இழந்தமையால் நொந்த தாயர்
கையிரண்டும் பிசைந்தழுத கண்ணீர் வெள்ளம்
கண்டவர்தம் கல்மனமுங் கரைந்து போகும்;
மையிருண்ட மேகமெனச் செந்நீர் சிந்த
மாணவர்தம் மார்பகத்தே குண்டு பாய்ந்து
மெய்யிருந்த உயிர்குடித்துச் சென்ற தந்தோ!
மேலவர்தம் ஆட்சியில்இம் மாட்சி கண்டோம்! 7

பன்முறையால் இந்தியினைப் புகுத்த எண்ணிப்
படுதோல்வி கண்டபினும், மக்கள் மன்றில்
புன்முறையால் இழிமொழிகள் பேசக் கேட்டுப்
பொன்றுயிராய்க் குற்றுயிராய்க் கிடந்த போதும்
வன்முறைதான் பேசுகின்றார்; பட்டா ளத்தை
வரவழைப்போம் இந்தியினைத் திணிப்போம் என்ற
பொன்மொழியே உதிர்க்கின்றார்; மக்க ளாட்சிப்
பூமாலை இவர்கையிற் படும்பா டென்னே! 8

எப்படியும் இந்தியினைத் திணிப்ப தென்றே
எண்ணிமுடி வெடுத்துள்ளார் வடக்கில் வாழ்வார்
ஒப்புடைய செயல்செய்ய எண்ண வில்லை;
உயர்ந்தவர்சொல் அவர்செவியில் ஏற வில்லை;
அப்படியே விடுமெண்ணம் எமக்கும் இல்லை
அவரவர்க்குந் தாய்மொழியுண் டென்று ணர்த்தி
இப்படியில் தமிழ்மொழியின் உரிமை காக்க
எழுந்துவிட்டோம் இரண்டிலொன்று பார்த்தே நிற்போம். 9

தொன்றுதொட்ட தமிழ்மொழியின் எழுத்துக் கெல்லாம்
தூயவரி வடிவுண்டு தெளிவும் உண்டு
கொன்றுவிட்டுத் தமிழெழுத்தை அவர்தம் தேவ
நாகரியாம் குறுக்கெழுத்தைக் கொணர்வ தற்கே
நின்றுவிட்டார் வடபுலத்தார்; ஒருமைப் பாட்டை
நிலைநிறுத்தும் நோக்கமென உளறு கின்றார்
நன்றுகெட்ட அவர்நினைவை மாய்ப்ப தற்கு
நாமிங்கு மனத்துணிவு பூண்டு விட்டோம். 10

---

**பாடற்குறிப்பு:—** 18.11.1967 ஆம் நாள் பாடியது.

## 79. மாவீரர் பலருண்டு
(நூல்:–தாய்மொழி காப்போம்)

நிலைகெடுக்க வருமிந்தி மொழியெ திர்க்க
நேர்வருவோர் போர்தொடுப்போர் தம்மை எல்லாம்
தலைஎடுப்பேன் கையறுப்பேன், என்று வீரம்
சாற்றுகின்ற நாப்பறையா! ஆள்வோர் உன்னை
விலைகொடுத்து வாங்கியதால் உன்றன் தாயை
விற்றுவிடத் துணிந்தனையோ? வீசும் எச்சில்
இலைபொறுக்கும் நாய்க்குணத்தை விட்டொ ழிப்பாய்
ஈங்குன்னை ஈன்றவள்யார்? தமிழ்த்தாய் அன்றோ? 1

மாற்றாரின் அடிக்கடிமை யாகி நின்று
மதிகெட்டுத் தறிகெட்டு மானம் விட்டுத்
தூற்றாதே, கூலிக்கு வருமு னக்குத்
துணிவிருப்பின் தமிழ்காக்கும் எமக்கு மட்டும்
தோற்றாதோ அத்துணிவு? துணிந்து நிற்போம்
தொழுதடிமை செய்யகிலோம் சாவும் ஏற்போம்
கூற்றாக வருமொழியைத் துரத்தி நிற்போம்
கொடுமைக்கும் மிடிமைக்கும் அஞ்சோம் வெல்வோம். 2

சாவதற்கும் துணிந்தெழுந்த மறவர் கூட்டம்
தமிழ்காக்க முன்னணியில் நிற்றல் காணீர்!
போவதற்குள் நுங்கொடுமை மாய்த்து விட்டுப்
புகழ்காப்போம் தமிழ்காப்போம் மானங் காப்போம்
மேலவர்க்குத் தாள்பிடிப்பீர்! எம்மைக் கொன்று
மேலெழும்பும் குருதிக்குள் கொடுங்கோல் தோய்த்து
யாவருக்கும் செங்கோலாக் காட்டி நிற்க
ஆய்ந்தவழி செய்தீரோ? ஆளும் பார்ப்போம்; 3

பிறப்போர்தாம் இறப்பதுவே இயற்கை என்ற
பேருண்மை உணர்ந்தொருவன் எரியை யூட்டி
வரப்போகும் இந்திக்கோர் செவ்வி எக்காய்
மறக்கோலங் கொண்டுடலம் வெந்து நின்றான்
அறப்போரில் நிற்பவர்க்கோர் [1]சின்னம் ஆனான்
ஆண்மையுளோர் வணங்குகிற சாமி ஆனான்;
மறக்காதீர் மறைக்காதீர்! இவனைப் போன்றோர்
மாவீரர் பலருண்டு தமிழைக் காக்க! 4

தாய்மொழியைக் காக்களனில் உயிர்கள் நல்கும்
தாலமுத்து நடராசன் இன்னும் உண்டு;
காய்மொழியீர்! உயிரீய வல்லார் எல்லாம்
கனன்றெழுந்து நுமைநோக் கி விட்டால் நீங்கள்
போய்மடிய எந்நேரம் ஆகும்? உங்கள்
புல்லடிமை ஆட்சியெலாம் நின்றா வாழும்?
பேய்மனத்தீர் பழிசுமக்க வேண்டா! நம்மைப்
பெற்றவட்குப் பிழைசெய்தா வாழ்தல் வேண்டும்? 5

---

அருஞ்சொற் பொருள்:–
1. சின்னம் – இந்தி எதிர்ப்பில் எரியூட்டிக் கொண்ட சின்னசாமி.

## 80. தமிழோடிணைந்தாய்!
(நூல்:–தாய்மொழி காப்போம்)

விறலிமலை தருமகனே, வீரமிகு
சண்முகனே, ‘வெருட்டி வந்த
பிறமொழியை ஆளவிடேன் பெற்றெடுத்த

தாய்மொழியைப் பேணி நிற்பேன்
திறலுடைய தமிழகத்தில் தீமனத்தர்
இந்தியினைத் திணிக்க வந்தால்
மறலியுல கடைவதையும் மகிழ்வுடனே
வரவேற்பேன் மானங் கொள்வேன்' 1

எனவெகுண்டு சூளுரைத்தாய், இனமானப்
போர்தொடுத்தாய், எடுத்த நஞ்சை
'எனதுயிரின் மேலான இனியதமிழ்
காத்திடநான் இதனை யுண்பேன்'
எனவெழுதி அவ்வாறே இனிதுண்டாய்,
எமைப்பிரிந்தாய் இறந்து விட்டாய்
எனமொழிய மாட்டேன்நான் எனதுதமிழ்
மொழியுடன்நீ இணைந்தாய் என்பேன். 2

இனமானங் காத்திடுவோம் எரிநஞ்சும்
எடுத்துண்போம் என்று கூறிப்
புனலாடி எழுவதுபோல் அனலோடு
விளையாடிப் புகுந்த இந்திக்
கனலோடு சமராடிக் களங்கண்டு
புகழ்கொண்ட காளை நீவிர்
நனவோடு நனவாக எமதுயிர்ப்பு
மூச்சாக நாளும் வாழ்வீர்! 3

---

**பாடற்குறிப்பு:–** இந்தி எதிர்ப்பின் போது நஞ்சுண்டு மாண்ட விறலிமலை சண்முகனைப் பாடியது.

## 81. தமிழே வெல்லும்
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

காலத்தைக் கடந்தமொழி கற்போர் நெஞ்சைக்
கவருமொழி தரைகடந்து கடல்க டந்து
ஞாலத்தை வென்றமொழி என்றுங் குன்றா
நாவன்மை படைத்தமொழி இலக்க ணத்தின்
கோலத்தை முழுமைபெற வடித்துக் காட்டும்
குறைவில்லா அறிவுமொழி இலக்கி யத்தின்
மூலத்தைக் கண்டமொழி சுவைகள் விஞ்சும்
மும்மைமொழி அன்புமொழி தமிழே யாகும். 1

பெருமைஎலாம் பூண்டுலகை ஆண்டு வந்த
பேராற்றல் பெற்றமொழி வளமே யில்லா
[1]வறுமொழியால் சிறுமொழியால் அடிமையுற்று
வாழ்விழந்து போய்விடுமோ? படையெ டுத்த
பெருமொழிகள் பலபொருதும் வாகை சூடிப்
பீடுபெற்ற வீரமொழி கைகால் இல்லா
ஒருமொழிக்குத் தோற்றிடுமோ? தன்னை நோக்கி
ஊறுசெய எதுவரினும் வெல்லும் வெல்லும். 2

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. வறுமொழியால் – வறிய மொழியால்.

## 82. செல்லடி செல்லடி இந்திப் பெண்ணே
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

நில்லடி நில்லடி இந்திப்பெண்ணே – உன்
நெஞ்சினில் என்ன துணிச்சலடி!
சொல்லடி சொல்லடி இந்திப்பெண்ணே – உன்
சூடு சுரணைகள் அற்றனவோ! 1

மூன்று முறையிங்கு வந்தனையே – நீ
மூக்கறு பட்டுமே சென்றனையே!

ஏன்தமிழ் நாட்டினை நாடுகிறாய்? – பின்
ஏனடி பட்டதும் ஓடுகிறாய்? 2

சான்றவர் சொல்லையும் மீறுகிறாய் – படி
தாண்டிப் பிறர்மனை ஏறுகிறாய்
ஈன்றவர் கண்ணெதிர் நாறுகிறாய் – உனை
ஏற்பவர் யாரெனத் தேடுகிறாய் 3

ஏற்பவர் தோள்களைத் தொற்றிடடி – மனம்
ஈபவர் கால்களைச் சுற்றிடடி
மேற்படி வேலையைக் கற்றிடடி – எம்
மீதினில் ஆசையை விட்டிடடி 4

மாட்சிமை ஏதொன்றுங் கற்றிலைநீ – நல்
மானமும் தோற்றமும் உற்றிலைநீ
ஆட்சியில் நற்றிறம் கற்றிலைநீ – ஓர்
ஆணவம் மட்டுமே பெற்றனைநீ 5

நாட்டினில் ஒற்றுமை நாடுகிறோம் – அதை
நாளும் நினைந்திங்குப் பாடுகிறோம்
நாட்டைப் பிளந்திட நாடுகிறாய் – அது
நன்மை எனத்திட்டம் போடுகிறாய்! 6

போவென வாயிலை மூடுகிறோம் – வரப்
பொந்துள தோவென நாடுகிறாய்
சாவென்ற போதிலும் நாடவிடோம் – எம்
சந்ததி யின்மனம் வாடவிடோம் 7

நில்லடி நில்லடி இந்திப்பெண்ணே – உன்
நெஞ்சினில் என்ன துணிச்சலடி!
செல்லடி செல்லடி இந்திப்பெண்ணே – இதைச்
சிந்தையில் வைத்திரு சென்றபின்னே. 8

---

**பாடற்குறிப்பு:–** 20.12.1979 ஆம் நாள் பாடியது.

## 83. ஒன்றே நினைப்பீர்!

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

பேசுங் கலையாவும் பேணிவந்த முன்னவன்,தான்
பேசும் மொழிக்குப் பெருமை தரும்வகையில்
எண்ணும் எழுத்தும் இயற்றி நமக்களித்தான்
கண்ணென் றவைதம்மைக் காத்து வளர்த்தோமா?
கீழ்வா யிலக்கம் கிழடாகிப் போனதென்று
தாழ்வாக நாமதனைத் தள்ளிக் கிடத்திவிட்டோம்;
மிஞ்சும் எழுத்தேனும் விஞ்சுமா என்றாலோ
அஞ்சும் நிலைக்குத்தான் ஆளாகி நிற்கின்றோம்;
நாடாளும் நல்லோர் நடந்துவரும் போக்குத்தான்
கேடாகும் என்று கிறுகிறுத்து வாடுகின்றோம்;
நாட்டில் ஒருமைதனை நாட்ட நினைவோர்தாம்
கேட்டில்விளை யாடக் கிளர்ந்தெழுந்தால் என்செய்வோம்!
'உங்கள் எழுத்தை ஒதுக்கிவிட்டு மேற்கோட்டில்
தொங்கும் எழுத்தை துணைக்கொள்க; ஒற்றுமையைக்
கண்டு விடலாம்' எனத்தான் கதறுகின்றார்;
துண்டு படத்தான் துணைசெய்யும் இக்கதறல்;
ஆள்வோர் கருத்தும் அதுவாயின் ஆகட்டும்!
வீழ்வோர்தாம் வீழட்டும்! வாழ்வோர்தாம் வாழட்டும்!
தாய்மொழியின் ஆக்கந் தடையுறுதல் நாம்காணின்
காய்மொழிகள் வேண்டா கனிமொழிகள் சொல்லிடுவோம்
கேட்டால் நிலைவாழும் கேளாரேல்...? நான்சொன்னால்
பாட்டின் தரங்குறையும் பார்த்து முடிவுசெய்க!
கட்சி சமையம் கடந்துதமிழ்த் தொண்டுசெய
நச்சி எழுதல் நமதுகடன் என்றுணர்ந்து

காக்க முனைந்தெழுக! காவா தொழிவீரேல்
போக்க முடியாத புல்லடிமை நேரும்
எழுத்தை இழக்க இசைவீரேல் உங்கள்
கழுத்தைக் கொடுத்துக் கலங்கும் நிலைபெறுவீர்!
ஆண்டாண்டு காலம் அழியாத் தமிழ்மொழிக்கு
வேண்டாதார் இந்த வினையெல்லாம் செய்கின்றார்;
வீரத் தமிழினத்தின் வேரறுக்க மாற்றலர்தாம்
ஈரத் துணியிட்டு நும்கழுத்தை ஈர்கின்றார்;
காட்டிக் கொடுக்கும் கயமைக் குணமிங்கு
நீட்டித் தலைகாட்டி நேய மொழியுரைக்கும்,
வீழ்ந்து சிதையாதீர்! வீணாகிப் போகாதீர்
தாழ்ந்து பணியாதீர்! தன்மானங் கொண்டெழுவீர்!
எவ்வழியால் உட்புகுவோம் என்றே இருக்கின்றார்
செவ்வியர்போல் பேசுகின்றார் செந்தமிழீர் நீரயர்ந்தால்
அன்றே நுழைவர்; அயரேல்! தமிழ்வாழ
ஒன்றே நினைப்பீர் உளத்து.

## 84. பிரிந்து போ

(நூல்:–தாய்மொழி காப்போம்)

தேசிய மொழிக ளென்று
செப்பினை பத்தும் நான்கும்
பேசிய துண்மை யென்றால்
பேணுவை சமமாக் கொண்டே;
வீசிய சொன்ம றந்து
விரைந்துநீ இந்தி யென்னும்
ஊசியை நுழைக்க வந்தால்
அதன்நுனி ஒடிந்து போகும். 1

உன்மொழி மட்டு மென்ன
உலகிலே உயர்ந்த ஒன்றா?
என்மொழி மட்டு மென்ன
இழிந்ததா? எண்ணம் என்ன?
பொன்னெலாங் கோடி கோடி
பொழிகிறாய் வளர்க்க வேண்டி!
என்வரிப் பங்கும் உண்டால்
எதிர்க்கவும் உரிமை யுண்டு. 2

உனக்கென்ன உரிமை யுண்டோ
எனக்குமவ் வுரிமை யுண்டாம்
எனக்குள வுரிமை கொல்ல
எண்ணினை யாகின் அன்றே
எனக்குனக் குரிய பங்கைப்
பிரித்திட எழுவேன் கண்டாய்
மனத்தினிற் பட்ட ஒன்றை
வாய்திறந் தெடுத்துச் சொன்னேன். 3

உலகிலே நீயும் நானும்
உறவுடன் பிறந்தா வந்தோம்
தலைதடு மாறி என்னைத்
தாள்பணி யென்று சொன்னால்
நிலைதடு மாறிப் போகும்
நெஞ்சிலே பதித்துக் கொள்வாய்
[1]சிலையென என்னை யெண்ணின்
சீரழிந் தொழிந்து போவாய். 4

வெள்ளையன் விடுத்துச் சென்றான்
[2]விரகினில் எடுத்துக் கொண்டாய்
கொள்ளையும் அடித்து விட்டாய்
கொடுஞ்செயல் பலவுஞ் செய்தாய்
வெள்ளைநெஞ் சுடைய யானும்
விடுதலைப் பயனுங் காணேன்

[3]தள்ளையைக் கொல்ல வந்தால்
தலைமகன் பார்த்தா நிற்பான்? 5

இந்தியைப் புகுத்தி என்றன்
இளந்தமிழ் நோகச் செய்ய
வந்திடின் நின்னை நானும்
வாழ்த்தவா செய்வேன்? நெஞ்சம்
நொந்துழன் றழுவேன் பின்னர்
நொடியினில் துடித்தெ ழுந்து
வெந்தழல் விழியிற் காட்டி
விரட்டுவேன் வெருண்டு போவாய் 6

என்னுடன் உன்னைக் கூட்டி
இணைத்தனன் எவனோ வந்து
பின்னுமென் னுடைமை யெல்லாம்
பிடுங்கினை! என்றன் தாய்க்கும்
இன்னலே செயநி னைந்தால்
இனியுமுன் தொடர்பெ தற்கு?
சொன்னதும் பிரிந்து போபோ
சுடுமொழி தோன்று முன்னே 7

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. சிலை – கல். 2. விரகு – தந்திரம்.
3. தள்ளை – தாய்.

## 85. சட்டம் செய்க
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

இந்தியத்தில் ஒருமொழிக்கே ஏற்றமெனில்
இரண்டுபடும் இந்த நாடு
விந்தியத்தின் வடபுலமே விடுதலையின்
பயன்பெறுமேல் விரைந்து தெற்கு
முந்தியெழுந் தார்ப்பரிக்க முயலாதோ
உரிமைபெற? அடிமை யென்றால்
வந்தெதிர்த்து விடுதலைக்கு வழிவகுக்கும்
நாளைவரும் [1]வயவர் கூட்டம் 1

கடலுக்குள் கலம்விட்ட காரணத்தாற்
செக்கிழுத்த காளை யைப்போல்
மிடல்மிக்கோர் ஆயிரத்தின் மேலானோர்
மொழிகாக்க மிகுதல் வேண்டும்
அடல்மிக்க வாஞ்சியைப்போல் ஆயிரவர்
எழல்வேண்டும்; அற்றை ஞான்றே
இடம்விட்டு விலகாதோ? இந்திபுக
வெருவாதோ? இடிந்தே போகும். 2

விடுதலைக்குப் போர்தொடுத்தோம் வெள்ளையரோ
புறங்கொடுத்தார் விடிவு பெற்றோம்
அடிமையினி எமக்கில்லை அரியணையில்
யாமென்றோம் ஆனால் எம்மை
அடிமைகொள நினைக்கின்றீர் அம்மொழியைத்
திணிக்கின்றீர். அடுத்தி ருந்தே
குடிகொடுக்க முயல்கின்றீர், குடிலர்சிலர்
துணைநிற்கக் கொடுங்கோல் கொண்டீர் 3

பிறப்புரிமை எமக்குண்டு பேசுமொழி
காத்திடுவோம், பிறந்த நாடும்
சிறப்புறவே செய்திடுவோம். திருநாடு
யார்சொத்து? தெளிந்து சொல்க
மறுப்புரைக்க வாயுண்டோ? மனமறிந்த
பொய்யுண்டோ? வஞ்ச நெஞ்சைத்
திறக்கின்றீர் இந்தியினைத் திணிக்கின்றீர்

ஒற்றுமையைத் தீக்குகள் வீட்டீர். 4

எம்மொழியும் சமமாக இனியதொரு
வழிசெய்க இணைந்து வாழ்வோம்
நும்மொழிதான் கோலோச்ச நுழைப்பீரேல்
தனிநாடு நொடியில் தோன்றும்;
நன்மையெனிற் கைகொடுப்போம் நலிவுதரிற்
போர்தொடுப்போம் நயச்சொல் பேசும்
எம்மொழியும் இனிவேண்டா எழுதுங்கள்
சட்டத்தில், இதுதான் நேர்மை. 5

---

**பாடற்குறிப்பு:–** 7.3.1987 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:– 1.** வயவர்–வீரர்.

## 86. பொய்த்த வாய்மொழி போதும்

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

[1]ஏழு மாநிலம் ஆளவோ? – பதி
னேழு மாநிலம் தாழவோ?
பாழும் அந்நிலை காணவோ? – யாம்
பாரி லேபழி பூணவோ? 1

உங்கள் தாய்மொழி இந்தியாம் – நீர்
ஓம்பிப் போற்றுதல் நன்றியாம்
எங்கள் தாய்மொழி செந்தமிழ் – அதை
ஏத்திக் காத்திடல் எம்கடன். 2

கட்டில் ஏறிட இந்தியோ? – எமைக்
காக்குந் தாய்மொழி பிந்தியோ?
சுட்டு வீழ்த்தினும் விட்டிடோம் – உயிர்
சோரு மாகினும் கட்டுணோம் 3

வஞ்ச வாய்மொழி நம்பினோம் – பயன்
வாய்த்த லின்றியே வெம்பினோம்
நெஞ்சில் உண்மையைக் காட்டுவீர் – அதை
நேரில் சட்டமென் றாக்குவீர் 4

பெற்ற விடுதலை பொய்க்கவோ? அப்
பேறு நீங்களே துய்க்கவோ?
மற்ற வர்க்கது கைக்குமோ? – இம்
மாநிலம் யாவும்நும் கைக்குளோ? 5

அவ்வம் மாநிலத் தாய்மொழி – சமம்
ஆக நினைப்பது நேர்வழி
தெவ்வர் போலெதிர் நிற்பிரேல் – இத்
தேயம் துண்டுற முற்படும் 6

கெஞ்சல் தானினித் தேவையோ? – எம்
கேளிர் நும்விரற் பாவையோ?
அஞ்ச லின்றியே ஆர்த்தனம் – இனி
அங்கங் கேஎழும் போர்க்களம். 7

---

**பாடற்குறிப்பு:–** 9.3.1987 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–1.** ஏழு மாநிலம்–இந்தி பேசும் மாநிலங்கள்.

## 87. விடை கொடு தாயே

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

விடைகொடு விடைகொடு தாயே – சமரில்
வென்றிடுந் திறமருள் வாயே
உடைமைகள் உயிருடல் நீயே – எங்கள்
உணர்வினில் உறுந்தமிழ்த் தாயே. 1

படையுடன் இவண்வரும் இந்தி – பல
பாடை கொணர்ந்திடும் இந்தி
தடையுடன் புகவரும் இந்தி – பெருந்
தடிபல கொணர்ந்திடும் இந்தி 2

படைவரும் தடைவரும் அறிவோம் – அது
பாதியில் உடைபடும் தெரிவோம்
கொடுமைகள் கண்டுளந் திரியோம் – எமைக்
கொன்றிடி னுஞ்சமர் புரிவோம். 3

அடிபட அடிபட எழுவோம் – எங்கள்
ஆவி பிரிந்திடின் விழுவோம்
சுடுபடக் கொள்கையில் நழுவோம் – நெஞ்சில்
துணிவொடு தமிழ்மொழி தொழுவோம். 4

## 88. முழங்கட்டும் போர்ப்பறை

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

எடுப்பு

ஆர்த்து முழங்கட்டும் [1]பொருநர்பறை – புகழ்
சேர்த்து விளங்கட்டும் தமிழர்படை
–ஆர்த்து

தொடுப்பு

பார்த்துப் பகைவர்கள் வேர்த்துப் புறமிடப்
பாட்டுப் புறம்பெறக் காட்டும் திறல்வர
–ஆர்த்து

முடிப்பு

காட்டுப் புலியெனக் காட்டும் மறவர்கள்
காப்பர் தமிழினைச் சேர்ப்பர் புகழ்மொழி
நாட்டில் அரியணை ஏற்றி வணங்கிட
நாட்டம் மிகுந்ததைக் காட்டும் வகையினில்
–ஆர்த்து
வேற்றுப் புலமென வேட்டை யிடவட
நாட்டுப் புலத்தவர் வேட்டுப் புறப்படின்
தோற்றுப் பிறக்கிடத் தூக்கி எறிந்திடும்
தோளுண் டெமக்கெனத் தோம்தோம் எனுமொலி
–ஆர்த்து

---

**பாடற்குறிப்பு:–** 9.3.1987 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. பொருநர் – போர்செய்யும் மறவர்.

## 89. வாளேந்தி வாமகனே

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

எடுப்பு

கொம்பூது கொம்பூது மறவா – வந்த
கூடலர் ஓடிடச் சாடுவோம் என்றுநீ
–கொம்பூது

தொடுப்பு

தெம்பெங்கே படர்மார்பில் திறலெங்கே தடந்தோளில்
    திறம்பாடி மறம்பாடி நெஞ்சுக்குள் உரமேறக்
—கொம்பூது

முடிப்பு

தமிழாலே ஒன்றானார் தமிழ்மாந்தர் என்றாலே
    தலைதூக்க முடியாது தமிழ்நாட்டில் பகையாளர்
சுமையாக வாழாமல் சோற்றுக்கே சாகாமல்
    சூடேற்றித் தோளேற்றித் தமிழாநீ வாவென்று
—கொம்பூது
வந்தமொழி நாடாள வாய்த்ததமிழ் பீடேக
    வாழ்வதிலே யாதுபலன்? வாளேந்தி வாமகனே
எந்தமதம் எக்கட்சி என்றெதுவும் பாராமல்
    எமதுதமிழ் எமதுதமிழ் என்றோடி வாவென்று
—கொம்பூது

---

**பாடற்குறிப்பு:—** 25.2.1987 ஆம் நாள் பாடியது.

## 90. போர் தொடுப்பாய்
**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

எடுப்பு

தமிழா நீயொரு போர்தொடுப்பாய் — யாரும்
தமிழை இகழ்ந்தால் இடர்செய முனைந்தால்
—தமிழா

தொடுப்பு

அமிழ்தாம் எனுமொழி அதற்கொரு துயரா? போர்
ஆடவா பகை சாடவா மலர் சூடவா
—தமிழா

முடிப்பு

தடையாபொரு படையஅஃ துடையும்என மொழிவாய்
    தவிடாய்ச்சிறு பொடியாய்அது படநீஉடன் எழுவாய்
விடைபோல்நடை யுடையாய்எரி விழியால்கனல் சொரிவாய்
    விடுவேல்எறி நெடுவாள்தொடு சுழல்வாய்சமர் புரிவாய்
—தமிழா
கலையாமனம் பெறுவாய்பகை மலையாஎன [1]மலைவாய்
    கடலாஅது படையாஎனில் படகாயதில் திரிவாய்
உலையாதெழு பொருவாய்சமர் உமியாய்விடும் பகையே
    உயிராஇது மொழியாஇரு விழியாஎன நினைவாய்
—தமிழா

---

**பாடற்குறிப்பு:—** 9.3.1987 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. மலைவாய் — போர்புரிவாய்.

## 91. போருக்கு வா!
**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

யாருக்கு நீயஞ்சிச் சாகிறாய்? — மொழிப்
போருக்கு வா!எங்குப் போகிறாய்?
பாருக்குள் நீஇன்று மூத்தவன் — தமிழ்
வேருக்கு நீபுனல் வார்த்தவன். 1

வீட்டுக்குத் தூணென நின்றனை — களி

யாட்டுக்கு வாழ்வினைத் தந்தனை
நாட்டுக்கு யாரிங்குக் காவலோ? – வட
நாட்டுக்கு நீயென்ன ஏவலோ? 2

[1]ஓட்டுக்கு வந்தவன் ஆளவோ? – பட
கோட்டிக்கு நாடின்னும் தாழவோ?
ஆற்றுக்குள் காத்தனன் என்பதால் – தமிழ்
நாட்டுக்குங் காவலன் என்பதோ? 3

கோட்டைக்குள் ளேஒரு கும்பலோ? – ஒரு
[2]கோட்டுக்குள் ளேவிழும் வெம்பலோ?
தேட்டைக்குள் வாழ்வரை நம்பவோ? – இனும்
கேட்டுக்குள் வீழ்ந்துளம் வெம்பவோ? 4

நேற்றைக்கு நீயிங்கே ஆண்டவன் – அரி
யேற்றையும் விஞ்சுரம் பூண்டவன்
கூற்றுக்கு நேர்நிற்க அஞ்சிடாய் – தமிழ்
நாற்றுக்கு நீர்விடக் கெஞ்சினாய் 5

நாளைக்கு நின்னினம் போற்றுமோ? – சிறு
கோழைக்குங் கீழெனத் தூற்றுமே?
காளைக்குச் சோற்றினில் ஏக்கமோ? – மொழி
வாழையைக் காப்பதில் தூக்கமோ? 6

தோளுக்குள் ளேஉரம் ஏற்றுவாய் – மனச்
சூளைக்குள் ளேஎரி மூட்டுவாய்
வாளுக்குள் ளேசுடர் ஏற்றுவாய் – ஒரு
நாளைக்குள் ளேபகை ஓட்டுவாய் 7

---

**பாடற்குறிப்பு:–** 9.3.1987 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**
1. ஓட்டுக்கு – ஓடம் ஓட்டுவதற்கு. 2. கோட்டுக்குள் – கிளையில்.

## 92. வாகை சூடு

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

பண்பட்ட மொழியொன்று கண்டாய் – அது
பழுதாகி எழில்போதல் பாராது நின்றாய்
கண்பெற்றுங் குருடாக நின்றால் – பாரில்
கைகொட்டிச் சிரியாரோ காளையுனைக் கண்டால்? 1

மொழிகாக்க ஒருநோக்கு வேண்டும் – தமிழ்
முன்னேறும் முன்னேறும் முழுதாக யாண்டும்
பழியாக்கும் பலநோக்கங் கொண்டால் – கட்சி
பார்த்தாலுன் தமிழன்னை பாராளல் உண்டோ? 2

ஒருகோட்டில் நீயிங்கு நின்றால் – போரில்
உனைவெல்ல நினைவாரும் உலகெங்கும் இன்றாம்
வருவார்க்கு நீயொன்று சொல்வாய் – கையில்
வாளுண்டு தோளுண்டு வழிகாண என்பாய் 3

வெறிநோக்கம் குறுநோக்கம் என்பார் – அந்த
வீணான சொல்லாலே வீழாதே அன்பா
பெருநோக்கம் தமிழ்காத்தல் ஒன்றே – என்று
பீடாக நின்றோது பேடில்லை என்றே 4

மொழிகாக்க முனையாத நாடு – பாரில்
மூலைமுடுக் கெங்குமுண் டொவென்று தேடு
வழிகாட்டி நிற்றல்கண் கூடு – போரில்
வாளுக்குந் தோளுக்கும் வாகைதனைச் சூடு 5

அங்கங்கே மொழிகாத்தல் உண்மை – அஃ(து)
அவ்வவர்க் கியல்பாக வாய்த்ததோர் தன்மை
இங்குள்ள மாந்தர்க்கு மட்டும் – அதை
இடித்திடித் தெந்நாளும் சொன்னால்தான் எட்டும். 6

---

**பாடற்குறிப்பு:–** 9.3.1987 ஆம் நாள் பாடியது.

## 93. வெறி வேண்டும்
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

எடுப்பு

வெறி கொள்ள வேண்டும்நீ தோழா – நீ
விளையாட்டுப் பொம்மையா? விளங்காத பிள்ளையா?
–வெறி

தொடுப்பு

நெறிகண்ட குறளொன்று கண்டாய் – அந்த
நீள்புகழ் தாய்த்தமிழ்க் கோரிடர் என்றால்
–வெறி

முடிப்பு

நற்றமிழ்க் குற்றது கேடு – நீ
நானுளன் என்றதை வேரொடு சாடு
பற்றுளங் கொண்டுனை நாடு – வளர்
பைந்தமிழ் மைந்தனென் றுன்புகழ் பாடு
–வெறி
ஒற்றுமை என்றுரை கூறும் – அவன்
ஓதுதல் நம்பிடின் உன்முது கேறும்
கற்சிறை காட்டினும் மீறு – பல
கற்றவர் சொன்மொழி கேட்டுளந் தேறு
–வெறி
வந்த மொழிக்குயர் வாழ்வு – நின்
வண்டமிழ் வாழ்வுக்கு வந்தது தாழ்வு
வெந்தது சோறெனத் தின்று – பாரில்
வீழ்வதும் தாழ்வதும் நின்தொழி லன்று
–வெறி

---

**பாடற்குறிப்பு:–** 10.3.1987 ஆம் நாள் பாடியது.

## 94. அந்த நாள் வந்தே தீரும்
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

'உறவுக்குக் கைகொடுப்போம் எங்கள் நாட்டின்
உரிமைக்குக் குரல்கொடுப்போம்' என்று பல்கால்
குரல்கொடுத்தும் பயனொன்றும் விளைய வில்லை;
கொதித்தெழுந்தே 'உயிர்கொடுப்போம்' என்று சொன்னோம்;
விரலெடுத்துச் செவிவழியை அடைத்துக் கொண்டார்;
'விடுதலையாற் பெறும்பயனை நமக்கு மட்டும்
தரமறுத்தால் உயிரெடுப்போம்', எனமு ழங்கும்
தமிழ்த்திருநாள் ஒன்றிங்கு வந்தே தீரும்! 1

ஆண்டமொழி அடிமையென ஆவ தென்றால்
ஆர்பொறுப்பர்? தன்மான உணர்வு நெஞ்சில்
பூண்டறுந்து போனதுவோ?, எனவெ தும்பிப்
பொறுமையுடன் இசையரங்கில் தமிழிற் பாட

வேண்டுமென ஆண்டுபல வேண்டி நின்றோம்
வீணரினும் பிறமொழியே பாடு கின்றார்;
ஈண்டினியும் பாடுவரேல் இசைய ரங்கை
இடித்தெறியும் நாளொன்று வந்தே தீரும்! 2

எவர்படைத்தார் கற்சிலையை? கோவில் தம்மை
எவரெடுத்தார்? தமிழ்புகுதத் தடையா? அந்தத்
தவறிழைத்தார் யாரிங்கே? ஆண்ட வர்க்குத்
தமிழென்றால் நச்சுமிழும் எட்டிக் காயா?
சுவரெடுத்துத் தமிழுரிமை தடுப்ப தென்றால்
சுடுகாட்டுப் புதைகுழியின் பிணமா நாங்கள்?
உவர்நிலத்தில் இடும்வித்தா? அவற்றை யெல்லாம் –
உடைத்தெறியும் நாளொன்று வந்தே தீரும். 3

ஆகாச வாணிக்குக் கால்க ளான
அரியதமிழ் வானொலியைத் திருப்பி விட்டால்
வேகாத மொழிகளிலே எழுதி வைத்த
விளங்காத பாடல்களே செவியில் வீழும்;
சாகாமல் இருக்கிறதே எனும்நி னைப்பில்
தமிழிசைக்குச் சிறுபொழுதை ஒதுக்கி வைக்கும்;
நோகாமல் முறையிட்டோம் பயனே இல்லை;
நொறுக்குகிற நாளொன்று வந்தே தீரும்! 4

‘பொறுக்கும்வரை பொறுத்திருந்தோம் பொறுத்த நம்மைப்
புழுவென்று கருதுகின்றார்; குனிந்து கொண்டே
இருக்கும்வரை ஏறுபவர் ஏறிப் பார்ப்பர்;
இளைஞர்படை நிமிர்ந்தெழுந்து வீறு கொண்டால்
தருக்குடையார் தலையுருளும் உடல்கள் சாயும்
தன்மானப் போர்முரசம் முழங்கும்’ என்று
வெறுப்படைந்தோர் எழுச்சிகொளா முன்னர் இங்கே
விடுதலையைத் தமிழ்நாட்டிற் பரவச் செய்வீர். 5

---

**பாடற்குறிப்பு:–** 29.9.1979 ஆம் நாள் பாடியது.

## 95. வாழ்வா? சாவா?
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

அறிவுபெறச் சிந்திக்க ஆய்வு செய்ய
அதற்குரிய நூல்கற்க மேன்மை காணக்
குறியுடையேன் பள்ளிக்குட் செல்லுங் காலை
குலவவரும் இந்தியுடன் ஆங்கி லந்தான்
தெரிவுசெயும் மொழியென்பார்க் கடிப ணிந்தால்
தென்னாட்டு மொழியெதற்கு? தமிழைப் பேசித்
திரிகின்ற இனமெதற்கு? மான மின்றித்
தின்றலையும் வாழ்வெதற்கு? சாவே மேலாம். 1

நான்பிறந்த பொன்னாடு, தவழ்ந்து நின்று
நடந்தோடி விளையாடி மகிழ்ந்த நாடு,
தேன்சுமந்த மலர்வருடி மணந்து வந்து
தென்றலெனைக் குளிர்விக்கக் களித்த நாடு,
வான்படர்ந்த புகழ்மிகுக்கும் எனது நாட்டை
வாழ்த்துதற்கு வங்கமொழி வேண்டு மென்றால்
ஏன்பிறந்தேன் தமிழ்நாட்டில்? பிறந்த பின்னும்
இருக்கின்றேன் இருக்கின்றேன் சோற்றுக் காக. 2

தோற்கருவி துளைக்கருவி நரம்பிற் கட்டும்
துணைக்கருவி வெண்கலத்துக் கருவி என்ற
நாற்கருவி முழங்குமிசை யரங்கில் ஏறி
நான்பாடத் தெலுங்குமொழி வேண்டு மென்றால்
வேற்கருவி எடுத்துவிளை யாடுந் தோள்கள்
வீறிழந்து சீரிழந்து தமிழன் என்ற

பேர்க்குரிமை பூண்டின்னும் வாழு கின்றேன்
    பிறப்படிமை யானவற்கேன் பட்டுக் குஞ்சம்? 3

வானுயர்ந்த கோபுரங்கள், வளைந்து சுற்றும்
    மதிற்சுவர்கள், கருவறைகள், வல்லார் செய்த
தேனினுயர் சுவைப்பொங்கல், கல்லால் செம்பால்
    செய்துவைத்த சிலைகள்பொலி கோவி லுக்குள்
நானுழைந்து நெக்குருகி வணங்கி நின்று
    நாவசைக்க வடமொழிதான் வேண்டு மென்றால்
ஏனிருந்து வாழ்கின்றேன் தமிழர் நாட்டில்?
    இருந்துபழி சுமப்பதிலே யாது கண்டேன்? 4

விழிநலிவு பெறுமானால் முகமெ தற்கு?
    விளைபயிர்கள் கருகுமெனில் வயலெ தற்கு?
வழிபுனல்தான் அறுமெனிலோர் ஆறெ தற்கு?
    வளர்ச்சியிலாப் பிண்டமெனில் கருவெ தற்கு?
மொழியடிமை யாவதெனில் நானெ தற்கு?
    மூச்சில்லா உடலெதற்கு? மொழியைக் காத்துப்
பழிவிலக வாழ்வதுவே வாழ்க்கை; இன்றேல்
    பாருக்குச் சுமைகுறையச் சாதல் மேலாம். 5

---

**பாடற்குறிப்பு:—** 8.3.1987 ஆம் நாள் பாடியது.

## 96. தாய்மொழிப்பற்று(
**நூல்:—தாய்மொழி காப்போம்)**

கன்னட மாநிலங் காணும் ஆவலால்
என்னொடு சிலர்வர ஏகினேன்; ஆங்குப்
பிருந்தா வனத்தின் பேரெழில் விழிக்கு
விருந்தா கியது வியந்து மகிழ்ந்தேன்;
கைத்திறம் வல்லார் கண்கவர் ஓவிய
மெய்த்திறங் காட்டி வைத்தநற் கூடம்,
வண்ணக் குலமலர் வகைவகை பூத்துத்
தண்ணென் றெழிலுடன் தலைநிமிர் பூங்கா,
மடங்கல் உலவும் மரஞ்செறி காவுடன்
நடங்கொள் மயில்திரி நலங்கெழு சோலை
அடங்கலும் நோக்கி அகமிக மலர்ந்தேன்;
இடம்படுந் தலைநகர் ஏற்றங் காண
நகர்வலம் வந்தேன் நாற்புறத் தெழிலும்
பகர்தல் அரிதே; பார்த்துக் களித்தேன்;
அருகில் ஓரிசை யரங்கு நிகழ்ந்தது;
உருகும் இசையால் உள்ளம் நெகிழ்ந்தது
பொருள்விளங் காமற் போனது பாட்டு;
மயங்குமவ் வேளை மற்றொரு பாடல்
வியந்திட இசைத்தது விளங்கியது பொருளும்
வெள்ளிப் பனிமலை மீதுலவு வோமெனும்
தெள்ளிய பாடல் தேனென இனித்தது;
கற்கள் விழுந்தன கலகம் விளைந்தது
பற்பல விளக்குகள் பரவிச் சிதறின;
இசையும் நின்றது; ஏனென வினவினேன்;
'இசைவலார் பிறமொழிப் பாடல் இசைத்தலாற்
சினந்தெழு வோரிது செய்தனர்' என்றனர்;
இனைந்துளம் வெதும்பி மொழிவெறி யென்றேன்;
தடித்த கையை மடக்கிஎன் முகத்திற்
கொடுத்தனர் குத்து, குருதி வழியச்
சிதறின பற்கள்; திடுக்கிட் டெழுந்தேன்
உதடுகள் பற்கள் உருக்கெடா திருந்தன;
தாய்மொழிப் பற்றின் தகைமை உணர்ந்து
வாயிதழ் அசைந்தன வாழிய எனவே.

---

**பாடற்குறிப்பு:—** 13.5.1987 ஆம் நாள் பாடியது.

## 97. உறங்குந் தமிழ்மகன்

**நூல்:—தாய்மொழி காப்போம்)**

தமிழன் போலத் தன்னுயர் மானம்
உமிழ்ந்தான் ஒருவற் காண்கிலம் உலகில்;
தன்னினம் தன்மொழி தாழ்வுறல் கண்டும்
உன்னுதல் செய்யா துறங்குவன் நெடிதே!
தந்தை தொகுத்ததே தனக்குரி மைப்பொருள்
என்றதை ஓம்பிடல் ஒன்றே குறியுளன்;
முந்தையர் தொகுத்த முத்தமிழ்ச் செல்வம்
வெந்தழல் வீழினும் வெறுமனே இருப்பன்;
உரிமை தனக்கும் உண்டெனக் கருதாப்
பெருமை யுடையன் பெயரால் தமிழன்!
தன்மொழி தாழ்வுறின் தன்னுயர் மானம்
புன்மை யுற்றதென் றெண்ணுதல் செய்யான்;
கடவுள் வழிபடப் புகுவோன் கால்கழி
நடையன் மீதே நாட்டம் வைப்பன்
கடவுளின் மேம்படக் காலணி கருதுவோன்
இடமுடைக் கோவிலுள் ஈடிலாத் தாய்மொழி
இகழ்வுறல் கண்டும் கவலா திருப்பன்;
உயர்தனிச் செம்மொழிஎன் றோதிடும் மொழியில்
அயன்மொழிச் சொல்லும் ஆங்கில எழுத்தும்
பெயவிழை வோரிவண் பேசினர் எழுதினர்
மயலுறு தமிழனும் மயங்கினன் ஒப்பினன்;
உறங்குந் தமிழ்மகன் உணர்ச்சிதான் என்னே!
அரங்கம் ஏறி ஆர்ப்பொலி எழுப்பிசைச்
சுரங்கள் கேட்டவை தெரிந்தவன் போலக்
கையுங் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவையின் ஆட்டுவன் தலையை;
பொருளும் ஓரான் உணர்வுங் காணான்
மருளன் பிறமொழி இசையில் மயங்கினன்;
பழுத்த வளமைப் பைந்தமிழ் மொழியை
இழித்தும் பழித்தும் எள்ளி யுரைத்தும்
கையொலி பெறுதல் காணுதும் ஈங்கே
பொய்யிலை மேடையிற் புகுந்தவர் செயலிது;
எள்ளிய மடவனை ஈன்றதாய் யாவள்?
தமிழ்மகள் எனினும் தகவிலான் எள்ளினன்;
கயவன் மொழியால் கையொலி எழுப்பும்
பயனிலா மகனும் பைந்தமிழ் மகனே;
யாதுரை புகலினும் பேதைமை நீங்கிலன்
வேதனைக் கடலுள் வீழ்ந்ததெம் முளமே;
தன்மொழி தாழ்வுறல் கண்டும் தமிழ்மகன்
உன்னுதல் செய்யா துறங்குவன் நெடிதே.

---

**பாடற்குறிப்பு:—** 23.9.1975 ஆம் நாள் பாடியது.

## 98. தமிழர் போக்கு

**(நூல்:தாய்மொழி காப்போம்)**

தமிழ்நாட்டின் சிறப்பனைத்தும் புகல்வ தென்றால்
  தனிப்பிறவி எடுத்தவர்க்கும் இயலா தாகும்;
அமிழ்தூற்றும் தமிழ்க்குறளின் பெருமை சொல்ல
  ஆயிரம்நா போதுவதோ? போதா வாகும்;
தமிழ்காட்டும் பண்பனைத்தும் நாமே சொல்லித்
  தற்பெருமை கொள்ளவிலை; உலக மெல்லாம்
இமைகூட்ட மனமின்றி விழித்து நோக்கி

எண்ணரிய வியப்பெய்திப் போற்றக் கண்டோம் 1

ஆனாலும் நாம்மட்டும் அறிந்தோ மல்லோம்
அறிந்தாலும் வாய்திறந்து புகழ்ந்தோ மல்லோம்
போனாலும் போகட்டும்; மற்றோர் யாரும்
புகழ்ந்தாலும் ஒருசிறிதும் பொறுப்ப தில்லை;
தானாகக் கதைதிரித்து மறுப்புக் கூறித்
தரியலர்போல் இகழ்ந்துரைத்து வாழ்ந்து செல்லும்
கூனான மனமுடையார் சிலரும் நம்மில்
[1]குடிலர்களாய் வாழ்கின்றார் உண்மை உண்மை. 2

நல்லுள்ளங் கொண்டவர்தாம் தமிழ்மொ ழிக்கு
நன்மைசெய முற்படுங்கால் வாழ்த்தல் வேண்டும்;
அல்லுள்ளங் கொண்டவரோ மாறாய்ப் பேசி
அவர்திறமைக் கேற்றபடி ஏள னங்கள்
சொல்லுவதிங் கியல்பாகக் கொண்டார்; அந்தத்
தூயவருந் தமிழினமாம்; பழித்து ரைக்கும்
புல்லுள்ளங் கொண்டவர்க்கும் தமிழே தாயாம்;
புரியாராய் ஏசுகின்றார் அவர்தம் தாயை. 3

பேருந்து வண்டிகளிற் குறளைக் கண்டால்
பேருவகை தமிழ்நெஞ்சிற் பொங்க வேண்டும்;
யாரந்தக் குறளெழுத முனைந்தா ரோஇங்
கெவர்மனத்துத் தோன்றியதோ என வியந்து
பாரெங்கும் அவர்பெயரை ஏழ்த்த வேண்டும்
பைந்தமிழ்க்கு நற்காலம் வந்த தென்று;
யாரிங்கு வாழ்த்துகின்றார்? பொல்லாங் கன்றோ
யார்யாரோ புகல்கின்றார் பித்தர் போல; 4

விரைந்துசெலும் உந்துகளுக் காங்கி லத்தில்
வைத்திருந்த பெயர்மாற்றித் தமிழில் நன்கு
வரைந்ததிருக் கைகளைநான் வாழ்த்து கின்றேன்
வளர்தமிழின் வளர்ச்சியிலே விரைவு கண்டே;
விரிந்தமதி யான்உரைத்தான் விரைவு வண்டி
விறகுவண்டி எனச்செவியில் விழுந்த தென்றே;
திரிந்தவற்குச் செவிபழுதாய் விட்ட தென்றால்
செந்தமிழைப் பழிப்பதற்கா முயல வேண்டும்? 5

எங்கெங்குக் காணினுமே தமிழ்தான் என்ற
இயல்புநிலை இங்குவர வேண்டு மென்று
பொங்குகிறோம்; ஓரிரண்டு நிலையி லேனும்
பூத்துளதே தமிழென்று மகிழ்கின் றோம்நாம்;
மங்கியவர் எள்ளிநகை யாடு கின்றார்;
மல்லிகைப்பூ [2]வராகத்தால் நுகர்தல் உண்டோ?
இங்கிவர்தாம் திருந்திவரும் நாள்தான் என்றோ?
இனியதமிழ் இகழ்வதுவா கட்சி யாகும்? 6

தாய்மொழியை வளர்ப்பதிலே கட்சிப் பூசல்
தலைகாட்டல் கூடாது; தமிழர் யார்க்கும்
தாய்மொழியை வளர்ப்பதிலே உரிமை யுண்டு;
தந்தம்மால் இயலும்வரை முயல வேண்டும்;
தாய்மொழியை வளர்ப்பதிலே சாதி வேண்டா
சாதியினைப் புகுத்துவது சதியே யாகும்;
தாய்மொழியை வளர்ப்பதிலே சமயம் வேண்டா
சமயம்வரின் மொழியழியுஞ் சமயந் தோன்றும். 7

---

**பாடற்குறிப்பு:–** விரைவு வண்டி என்று மாற்றி அமைத்ததை விறகு வண்டி என முன்னாள் அமைச்சர் ஒருவர் எள்ளி நகையாடியதைக் கடிந்து பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**
1. குடிலன் – அடுத்துக் கெடுக்கும் ஓர் அமைச்சன். 2. முன்னாள் அமைச்சர் பூவராகன் பெயர் மறைந்துள்ளது அறிக.

## 99. என்று தணியும்....?

(நூல்:–தாய்மொழி காப்போம்)

தனக்கினிய பாயலிலே பள்ளி கொள்ளத்
தார்புனைந்தான் மனைவிக்கே உரிமை யுண்டு;
மனக்கினியாள் தவித்திருக்கப் பாயல் மீது
மற்றொருத்தி கிடந்திடுமேல் ஒழுக்கக் கேடு;
தனக்குரிய நிலவரைப்பில் இசைய ரங்கில்
தலைமைபெறத் தமிழுக்கே உரிமை யுண்டு;
நினைப்பினிலும் இனிக்குமொழி தவிக்க, ஏனை
நிலத்துமொழி தலைமைபெறின் மானக் கேடு. 1

மானமுளான் மறத்தமிழன் என்றி ருந்தோம்
மாறி அவன் மரத்தமிழன் ஆகிவிட்டான்
மீனவனால் வில்லவனால் புலியன் தன்னால்
மேம்பாடு கண்டமொழிப் பாடல் எல்லாம்
தேனமுதோ எனஇனித்தல் தெரிந்தி ருந்தும்
தெளிவிலனாய்ப் பிறமொழியில் மயங்கு கின்றான்;
ஏனவனால் தமிழ்கேட்க இயல வில்லை?
எத்தனைநாள் உரைத்தாலும் உறைக்க வில்லை! 2

மொழிஎன்றும் இனமென்றும் வேறு பாடு
முழங்குமிசைத் துறைக்கில்லை என்று ரைத்துப்
பழிகொண்ட தமிழ்மகனே! ஒன்று சொல்வேன்
பகர்ந்தவிதி யாவருக்கும் பொதுதான் என்றால்
பொழிகின்ற இசையரங்கில் எந்த நாட்டான்
புகல்கின்றான் தமிழ்ப்பாட்டு? கேட்ட துண்டா?
அழிகின்ற வழிசொல்வோய்! நீதி என்றால்
அவர்க்கொன்று நமக்கொன்றா? உணர்ந்து சொல்வாய்! 3

சரியாத தமிழ்மறவன் எங்கள் பாட்டன்
தனிப்புலவன் பாரதிக்கு விழாவெ டுத்தாய்
புரியாத மொழிப்பாட்டைக் கேட்டுக் கேட்டுப்
பொங்கிஅவன் நொந்துரைத்த மொழியை எல்லாம்
தெரியாது மறைத்துவிட்டாய்! தமிழை விட்டாய்!
தேயத்தைக் காப்பவன்போல் நடிக்கக் கற்றாய்!
நரியாக உலவுகின்றாய்! நீயா இந்த
நாட்டுக்கு நலந்தேட வல்லாய்? அந்தோ! 4

மடம்படுவாய்! பிறமொழிக்கே இசைய ரங்கில்
மதிப்பளிப்பாய்! இசைபாடி முடிக்கும் போதில்
இடந்தருவாய் தமிழுக்கும்; ஒன்றி ரண்டே
இசைத்திடுவாய் உதிரியெனப் பெயருஞ் சூட்டி;
நடந்துவரும் உண்மையிது; கேட்டுக் கேட்டு
நைந்தமனம் தமிழ்வேண்டும் என்று சொன்னால்
அடகெடுவாய்! ஏதேதோ அலறு கின்றாய்
அடிமைமனப் பித்தெல்லாம் தணிவ தென்றோ? 5

---

**பாடற்குறிப்பு:–** பாரதி நினைவுநாள் கவியரங்கில் பாடியது–11.9.1976.

## 100. எக் காலம்

(நூல்:–தாய்மொழி காப்போம்)

காட்டுகிற 'டீ.வி' யைக் கண்டன்று நீகளித்தாய்
நாட்டமுடன் 'தூரதர்சன்' நாடியின்று பார்க்கின்றாய்
பூட்டுந் தமிழ்ப்புலியே போற்றும் உனதுமொழி
காட்டுந் தொலைக்காட்சி காண்பதுதான் எக்காலம்? 1

இசையெழுப்பும் 'ரேடியோ' ஏற்றன்று கேட்டிருந்தாய்
வசையுடுத்த 'ஆகாச வாணி'யின்று கேட்கின்றாய்

நசைவிடுத்த கோட்புலியே நம்நாட்டில் வானொலியைப்
பசியெடுத்துக் கேட்பதற்குப் பாய்வதுதான் எக்காலம்? 2

ஏறிப் பறந்துவரும் 'ஏரோப்ளேன்' அன்றிவர்ந்தாய்
மாறியது 'வாயுதூத்' மற்றதிலின் றேறுகின்றாய்
[1]தூறல் வரிப்புலியே தூக்கம் விடுத்தெழுந்து
வீறுடன்நீ வானூர்தி மேலூர்தல் எக்காலம்? 3

காணுங்கால் 'குட்மார்னிங்' என்றன்று கையெடுத்தாய்
நாணமிலா தின்று 'நமஸ்தே' மொழிகின்றாய்
[2]ஏணம் விடுபுலியே ஈன்றெடுத்த தாய்மொழியிற்
காணும் வணக்கமெனக் கைகுவிப்ப தெக்காலம்? 4

---

**பாடற்குறிப்பு:–** 8.3.1987 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. தூறல் – பழிச்சொல். 2. ஏணம் – வலிமை.

## 101. தமிழனா நீ?

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

எடுப்பு

தமிழன் எனும்பெயர் தகுமா? – உனக்குச்
சான்றோர் மொழிசெவி புகுமோ?
–தமிழன்

தொடுப்பு

சமையம் பலபல சார்ந்தனை தாழ்ந்தனை
சாற்றிடும் சடங்கினில் வீழ்ந்தனை உனக்கினி
–தமிழன்

முடிப்பு

இந்துவென் றொருமதம் இனிதெனத் தோய்ந்தனை
ஏனோ தமிழ்மொழி உணர்வினில் தேய்ந்தனை?
வந்திடும் வடமொழிப் பேர்களுக் கேங்கினை
வையக அடிமையென் றொருபழி தாங்கினை
–தமிழன்

ஆங்கொரு சிலுவை அணிந்திட ஓடினை
அதனால் ஆங்கிலப் பெயர்களே நாடினை

ஈங்கொரு இசுலாம் எனப்புகழ் பாடினை
ஏனோ அரபு மொழிப்பெயர் சூடினை?
–தமிழன்

ஒருமதம் தழுவுதல் உரிமையென் றோதலாம்
உன்தமிழ் அன்னையை எப்படி மீறலாம்?
பெரும்புகழ்த் தமிழகம் பெற்றிடும் நீயெலாம்
பிறமொழிப் பெயர்களை எப்படிச் சூடலாம்?
–தமிழன்

---

**பாடற்குறிப்பு:–** 7.3.1987 ஆம் நாள் பாடியது.

## 102. சமயத்தில் நட்டதமிழ்

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

அருளப்பன் என்னும் பேரான்
அப்துல்லா வானான் கண்டாய்!
கருப்பணன் என்பான் இங்கே
கபூரென ஆகி விட்டான்;

விருப்புள பொன்னன் கூட
    விஜயனாய் மாறி விட்டான்;
வெறுப்புற ஜெகந்நாத் தானான்
    வெள்ளையன் அந்தோ அந்தோ! 1

செல்லப்பன் இயல்பு மாறி
    ஜீவபந்த் தாகி விட்டான்;
நல்லப்பன் கெட்டே போனான்
    நண்ணினான் ஸ்ரீபா லாக;
சொல்லுக்கோர் அழகன் இங்கே
    சொக்கினான் ஜோசப் பானான்;
அல்லலுக் காளாய் நின்றான்
    அந்தோணி யானான் மெய்யர். 2

தைத்திங்கள் பிறக்கும் நாளைத்
    தமிழ்மகன் சங்கி ராந்தி
வைத்திங்குக் கூவி நின்றான்;
    வளரிளஞ் சிறுவ ரெல்லாம்
மொய்த்திங்குக் கூடி ஆட
    முயல்மகார் நோன்பைக் கூடக்
கைத்ததென் றொதுக்கி விட்டான்
    கழறினான் தசரா என்றே. 3

திருமறைக் காடென் றோதும்
    தீந்தமிழ்ப் பெயரும் செல்ல
வருமொழி வேதா ரண்யம்
    வந்தது; வளங்கள் யாவும்
மருவிடும் தமிழின் அண்ணா
    மலையெனும் பெயரும் மாறி
அருணமும் கிரியு மாகி
    அய்யவோ ஓங்கிற் றம்மா! 4

தன்பெயர் மாற்றி வைத்தான்;
    தனித்தமிழ் ஊரின் பேரை
என்பயன் கருதி னானோ
    இயம்பினான் வேறு பேரால்;
முன்புள திருநாள் தன்னை
    மொழிந்தனன் பெயரை மாற்றி;
புன்செயல் என்றே எண்ணான்
    பொன்றினான் அடிமைப் பட்டே. 5

சமயத்தில் தமிழை நட்டான்
    சாய்ந்துமே தளர்ந்த தம்மா!
இமயத்தில் கொடியை நட்டோம்
    என்றெலாம் வீரம் பேசித்
தமிழைத்தான் கோட்டை விட்டான்
    தமிழனென் றொருபேர் கொண்டான்
இமையைத்தான் விழிம றந்தால்
    எப்படிப் புகல்வ தம்மா? 6

மதமெனும் பேய்பி டித்தே
    மடமையுள் மூழ்கி நின்றான்;
கதவினைத் திறந்து வைத்தான்
    கண்டவை புகுவ தற்கே;
எதனையும் தழுவிக் கொண்டான்
    இவனைத்தான் மறந்தே போனான்;
பதரெனச் சொல்வ தல்லால்
    பகர்ந்திட உவமை ஏது? 7

---

**பாடற்குறிப்பு:–** 27.9.1975 ஆம் நாள் பாடியது.

## 103. கோவிலுக்குள் கொடுமை
(நூல்:—தாய்மொழி காப்போம்)

தருக்கினால் அயலான் வந்து
    தமிழனைப் பழித்துப் பேசும்
வெறுப்புறுங் குற்றஞ் செய்தால்
    விரைந்தவன் முதுகெ லும்பை
நொறுக்கடா என்ற பாடல்
    நுவன்றவன் பிறந்த மண்ணிற்
செருப்பினால் தாக்கப் பட்டான்
    செந்தமிழ் பழித்த வாயன். 1

என்னுமோர் சொல்லைக் கேட்டேன்
    இருசெவி குளிரப் பெற்றேன்
வன்முறை நோக்க மன்று
    வழிவழி மரபு மன்று
சொன்முறை யெல்லாஞ் சொல்லித்
    தொலைத்தும்நற் கோவி லுக்குள்
தென்மொழி வேண்டா வென்றால்
    செய்வது வேறென்? சொல்லும் 2

தாய்மொழி பழித்துப் பேசுந்
    தறுதலை எவனுந் தோன்றின்
பாய்புலி யாவர் எங்கள்
    பைந்தமிழ் மறவர் என்று
கூய்வரும் மொழியைக் கேட்டுக்
    குளிர்ந்ததென் னுள்ள மெல்லாம்;
நாய்களின் வாலைச் சற்று
    நறுக்கித்தான் வைக்க வேண்டும். 3

தன்னுடல் வளர்ப்ப தற்குத்
    தமிழையே சொல்லிச் சொல்லிப்
பொன்பொருள் பெருக்கிக் கொண்டான்;
    புல்லியன் நன்றி கொன்றே
தென்மொழி வெறுத்தல் கண்டும்
    திருவிழா நடத்துங் கூத்தர்
பின்னுமேன் அழைக்க வேண்டும்?
    பித்தர்கள் இவர்போ லுண்டோ? 4

வடமொழி ஒன்றே ஏற்பர்
    வண்டமிழ் ஏலா ரென்றால்
கடவுளர் உருவக் கல்லைக்
    கடலிடை வீச லன்றி
இடமுடைக் கோவி லுக்குள்
    இன்னுமேன் வைத்தல் வேண்டும்?
மடமிகு மதிய ரானீர்
    வந்தவர் ஏறிக் கொண்டார். 5

கல்லினைக் கடவு ளாக்கிக்
    கைத்திறன் காட்டுஞ் சிற்பி,
கல்லொடு கல்ல டுக்கிக்
    கோவிலைக் கட்டுங் கொற்றன்,
கல்லினை மண்ணைச் சாந்தைக்
    களத்தினிற் சுமக்குஞ் சிற்றாள்
செல்லவுந் தடையாம் செய்த
    சிலைகளைத் தொட்டால் தீட்டாம். 6

மாந்தரைத் தடுத்த போது
    மடமையாற் பொறுத்துக் கொண்டீர்
தீந்தமிழ் மொழியை நம்மை
    ஈன்றருள் தாயைத் தீயர்
போந்தவர் தடுக்கும் போதும்
    பொறுமையா காட்டு கின்றீர்?

மாந்தரென் றும்மை யெண்ண
 மனமிகக் கூசு கின்றேன். 7

தன்மதிப் பிழந்தீர் வேதர்
 தாளிணை வருடி நின்றீர்
நன்மதி திரிந்து கெட்டீர்
 நால்வகை ‘வருண தர்மம்’
பன்னுதல் நம்பி ஏய்ப்போர்
 பகட்டுரைக் கடிமை யானீர்
இந்நிலை தெளியா தின்னும்
 இருட்டினில் உழலு கின்றீர் 8

கதிரவன் தோன்றக் கண்டும்
 கண்களை மூடிக் கொண்டீர்
மதியொளி பரவல் கண்டும்
 மயக்கினை விட்டீ ரல்லீர்
புதியதோ ருலக மிங்குப்
 பூப்பது காணீ ராகி
முதுகினை வளைத்துக் கொண்டீர்
 முப்புரி நிமிர விட்டீர். 9

---

**பாடற்குறிப்பு:–** 28.3.1984 ஆம் நாள் பாடியது.

## 104. திரும்பி விட்டேன்

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

‘ஆறணிந்த சடைமுடியான் கூடல் தன்னில்
 ஆர்வமுடன் சுந்தரப்பேர் வழுதி யானான்;
கூறமர்ந்த பங்கினளும் மதுரை மன்னன்
 குலக்கொடியாய்த் தடாதகையாய்த் தோன்றி வந்தாள்;
வீறமர்ந்த வேலவனும் உக்கி ரப்பேர்
 மேவியங்கு வந்துதித்தான்; இவர்கள் ஈண்டுச்
சேரவந்து பிறப்பெடுக்கும் நோக்க மென்ன?
 செந்தமிழின் சுவைமாந்தி மகிழ வன்றோ?’ 1

‘தேனிகர்க்குந் தமிழ்மொழியில் நெஞ்சி னிக்கத்
 தேவாரம் பாடியருள் மூவ ருள்ளும்
வானிடிக்கும் பொழில்சூழும் ஆரூர் வாழும்
 வடிவழகன் சுந்தரனோர் நள்ளி ருட்டில்
ஆனுயர்த்த கொடியானைத் தூத னுப்பி
 ஆட்டாத ஆட்டமெலாம் ஆட்டி வைத்தான்
சேனிகர்த்த விழிபங்கன் தமிழை வேட்டுச்
 செய்யாத செயலெல்லாஞ் செய்து வந்தான்’. 2

‘நல்லறிஞர் உறைவிடமாம் தொண்டை நாட்டில்
 நாடறிந்த காஞ்சிதனில் வாழ்ந்து வந்த
நல்லவனைக் கணிகண்ணன் என்பான் றன்னை
 நாடுகடந் தேகுகென அரசன் கூறச்
செல்லுமவன் பின்தொடர்ந்தார் புலமை மிக்க
 திருமழிசை யாழ்வாரும்; கார்மே கத்தை
வெல்லுகின்ற நிறத்தானும் அவர்பின் சென்றான்
 வேட்டெழுந்த தமிழார்வ மதனால் அன்றோ!’ 3

‘தூண்டாமல் தோன்றுசுடர்க் காதல் கொண்டு
 சூடிமலர் கொடுத்தாளைப் பாவால் நம்மை
ஆண்டாளை ஆண்டானை, நினைந்த ரற்றி
 அருட்கடலில் ஆழ்வார்தம் ஆயி ரங்கள்
பூண்டானை, அவர்திருவாய் மொழியைக் கேட்டுப்
 புவியிடத்து மாலாகி நின்றான் தன்னை,
வேண்டானெந் தமிழ்மொழியை என்று ரைத்தால்
 வெறுமதியர் என்பதலால் வெறென் சொல்வோம்?’ 4

‘கடவுளர்கள் உகந்தமொழி, என்புக் கூட்டைக்
காரிகையாக் கண்டமொழி, மறைக்காட் டூரில்
அடைகதவந் திறந்தமொழி, முதலை யுண்ட
ஆண்மகவை மீட்டமொழி, தெய்வப் பான்மை
படருமொழி, பத்திமொழி, தொடுக்குந் தெய்வப்
பழம்பாடல் நிறைந்தமொழி, உள்ள மெல்லாம்
மடைதிறந்த வெள்ளமென அருளைப் பாய்ச்சி
மகிழ்விக்கும் அன்புமொழி தமிழே யன்றோ!’

என்றுரைத்த சொன்மாரி செவியு ளோடி
என்மனத்தை நெக்குருக்க இளகி ஆண்டு
நின்றிருக்கும் நான்மகிழ்ந்தேன்; எதிரில் தோன்றும்
நெடுங்கோவி லுட்புகுந்தேன்; அருளால் நெஞ்சம்
ஒன்றிநிற்கும் பன்னிருவர் நால்வர் மற்றோர்
ஓதிவைத்த பாடலெலாம் உன்னி யுன்னிச்
சென்றிருந்தேன்; திடுக்கிட்டேன்; சிந்தை நொந்தேன்;
செந்தமிழைக் காணவிலை திரும்பி விட்டேன்.

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. சேனிகர்த்த – சேல்+நிகர்த்த.

## 105. நகைதரு செயல்
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

சிதறிய மையெலாம் திரையிற் படுங்கால்
இதுதான் சித்திரம் எனிலது சரியோ?
உளிபடு பொருளெலாம் உலகில் நிலைபெறும்
ஒளிமிகு சிற்பமென் றோதுதல் முறையோ?
மதிற்சுவர் மட்டும் மாந்தர் வதியும்
புதுக்குடில் என்றால் பூவுல கேற்குமோ?
களியர் போலக் கழறும் மொழியெலாம்
நளிசுவைக் கவியெனல் நகைதரு செயலே!

## 106. எது கவிதை?
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

ஒருத்தியும் ஒருவனும் உள்ளத் தெழுந்த
பருவ உணர்ச்சி பக்குவம் பெற்றுக்
கருக்கொளும் பின்னர் உருக்கொளும்; எல்லா
உறுப்பும் அமைந்து வனப்புடன் ஒருமலர்
வந்து தோன்றும்; வாய்த்த அதைத்தான்
இந்த வுலகம் குழந்தையென் றியம்பும்;
கற்பனை வளமும் கவிஞன் உளமும்
பொற்புடன் மருவப் புதியதோர் உணர்ச்சி
கருக்கொளும் பின்னர் உருக்கொளும்; எல்லா
உறுப்புடன் அமைந்து வனப்புடன் நறுமலர்
வந்து தோன்றும்; வாய்த்த அதைத்தான்
இந்த வுலகம் கவிதையென் றியம்பும்;
உறுப்புகள் இல்லா உருவினை
வெறுக்கும் பிண்டமென் றிசைக்குமிவ் வுலகே.

---

**பாடற்குறிப்பு:–** 27.11.1980 ஆம் நாள் பாடியது.

## 107. ஆணா? பெண்ணா?
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

உரைநடை என்பதோர் உரம்பெறும் ஆண்மகன்;
கவிநடை என்பது கண்கவர் பெண்மகள்;
கற்பனை என்னும் பொற்புறு சீலையால்
ஒப்பனை செயினும் உரைநடை என்னும்
ஆண்மகன் பெண்மகள் ஆதல் ஒல்லுமோ?
காண்பவர் அன்றோ கைகொட்டிச் சிரிப்பர்;
உடுத்திய சீலை ஒன்றால் மட்டும்
அடுத்தோர் பெண்ணென் றறைதல் செய்யார்;
பருவ மகளெனப் பாருக் குணர்த்த
உருவ அமைப்புடன் உறுப்பெழில் வனப்பும்
பெறுதல் வேண்டும்; பெண்மையும் வேண்டும்;
பேசுமிவ் வொன்றும் பெறாஅ திருந்தும்
ஆசைமீ தூர ஆணைப் பெண்ணெனப்
பேசுதல் ஒழிக; பித்தம் தவிர்க;
புதுமை எனவும் புரட்சி எனவும்
எதையுஞ் செய்தல் இழிவினும் இழிவே.

---

**பாடற்குறிப்பு:–** 5.12.1980 ஆம் நாள் பாடியது.

## 108. ஐக்கூ அடிமை

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

அரும்பிய கருத்தை அழகிய முறையிற்
சுருங்கிய அடிகளிற் சொல்லுதல் வேண்டின்
திருந்திய தமிழிற் சிலவகை யுண்டு,
முன்னிய கருத்தை மூன்றடிக் குள்ளே
பன்னும் பாவகை பைந்தமிழ் காட்டும்
முந்தை இலக்கணம் மொழிந்த சான்றோர்
சிந்தியல் வெண்பா என்றதைச் செப்புவர்;
ஈரடிப் பாடல் இயம்பலும் உண்டு
பேரது யாதெனிற் குறளெனப் பேசுவர்;
ஓரடி கூட உள்ளக் கருத்தை
நேரடி யாக நிகழ்த்தலும் உண்டு
கொன்றை வேந்தன் என்றதைக் கூறுவர்;
அரையடிப் பாடலும் அருந்தமிழ் காட்டும்
ஆத்தி சூடியென் றதன்பேர் உரைப்பர்;
ஏத்தும் இவையெலாம் தமிழில் இருக்கச்
சீர்த்த தமிழைச் சிந்தையிற் கொளாது
எங்கோ அலைகிறாய் ஐக்கூ என்கிறாய்
இங்கே இருப்பதை எண்ணாது தாய்மொழிக்
கின்னல் விளைக்க எண்ணித் திரியும்
உன்னை அடிமையென் றுரைப்பதே சாலும்
கைப்பொருள் இருக்கக் கடன்பெற அலையும்
பைத்தியம் உலகிற் பார்த்ததும் இலையே!

---

**பாடற்குறிப்பு:–** 26.10.1990 ஆம் நாள் பாடியது.

## 109. அதன் பெயர் என்ன?

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

பிறந்தவர் அனைவரும் மனிதர் – ஆனால்
பிரிவுகள் அவருளும் உண்டு
சிறந்தவர் எனச்சிலர் வாழ்வர் – சீர்
குறைந்தவர் எனச்சிலர் தாழ்வர். 1

கனிபவை யாவுங் கனிகள் – ஆனால்
கழிப்பன அவற்றுளும் உண்டு
இனியன எனச்சில கொள்வார் – சுவை

இல்லன எனச்சில கொள்ளார். 2

காய்ப்பன யாவுங் காய்கள் – ஆனால்
கறிக்குத வாதன வுண்டு
பேய்ச்சுரை கொள்பவர் உண்டோ – அந்தப்
பேதைமை எவரிடங் கண்டோம்? 3

பிறப்பன யாவுங் குழந்தை – என்று
பேசுவ தெப்படிப் பொருந்தும்?
உறுப்புகள் உடம்பினில் இன்றிப் – பிறந்தால்
உண்மையில் அதன்பெயர் என்ன? 4

எழுதிய வெல்லாங் கவிதை – என்றால்
எங்ஙனம் ஒப்புவ ததனை?
பழுதுகள் அடைந்தன உறுப்பு – பின்னும்
பாவெனச் சொல்வதா சிறப்பு? 5

## 110. கற்றோரை வேண்டுகிறேன்

(நூல்:–தாய்மொழி காப்போம்)

அறிவியல் கற்று வந்தீர்
அளவிலா உவகை கொண்டேன்;
பொறியியல் தேர்ந்து வந்தீர்
பூரித்து மகிழ்வு பெற்றேன்;
பொருளியல் துறையில் தேர்ந்தீர்
புகழ்ந்தனர் அயல்நாட் டாரும்;
இருளினில் மூழ்கி நின்ற
இனத்திலோர் ஒளியைக் கண்டேன். 1

மருத்துவத் துறையுங் கற்றீர்
மருந்தியல் நெறியும் பெற்றீர்
பெருத்தநும் அறிவால் நாட்டில்
பெரும்புகழ் குவித்தீர் மேலும்
[1]அருத்தியால் உம்மை வேண்டி
அழைத்தனர் வெளிநாட் டாரும்;
கருத்தினுள் எழுச்சி கொண்டேன்
காய்நிலஞ் செழித்த தென்றே. 2

உயிரியல் தோய்ந்து கற்றீர்
உடலியல் ஆய்ந்து கற்றீர்
பயிரியல் செழிக்கக் கற்றீர்
பலவகை நிலநூல் என்னும்
[2]அயிரியல் அதுவும் கற்றீர்
ஆதலின் உலகம் போற்றும்
பயன்பல விளையும் என்றே
பகலெலாம் கனவு கண்டேன். 3

வேதியல் என்று கூறும்
வியத்தகு நூலுங் கற்றீர்
ஓதிய பூதம் ஐந்தை
உணர்த்திடும் இயல்கள் கற்றீர்
மூதுணர் வுடையார் சொன்ன
மொழியியல் பலவுங் கற்றீர்
ஆதலின் நிமிர்ந்து நின்றேன்
அருந்தமிழ் தழைக்கு மென்றே. 4

கற்றஅத் துறைகள் யாவும்
கருத்தினில் தேக்கி வைத்துப்
பெற்றநம் தாய்மொ ழிக்குள்
பிறமொழிக் கலைக ளெல்லாம்
முற்றிய வளர்ச்சி காணும்

முயற்சியில் யாது செய்தீர்?
பற்றினை எங்கோ வைத்துப்
பதவிக்கே நெஞ்சை வைத்தீர். 5

இனத்திலே ஒளியைக் கண்டேன்
இருநிலஞ் செழிக்கக் காணேன்;
மனத்துளே கனவு கண்டேன்
வாழ்விலே பலிக்கக் காணேன்;
முனைப்புடன் நிமிர்ந்து நின்றேன்;
முகங்கவிழ் நிலையைத் தந்தீர்;
நினைத்துநீர் முனைந்தெ ழுந்தால்
நெடும்புகழ் வாகை கொள்வீர். 6

இன்னுமோ அடிமை நீங்கள்?
இன்றுநீர் உரிமை மாந்தர்;
பன்னிலை அறிவா இல்லை?
பரிவுதான் நெஞ்சில் இல்லை;
பன்னருங் கலைகள் யாவும்
பைந்தமிழ் அடையச் செய்வீர்!
நன்னிலை தமிழுக் காக்க
நயந்துநான் வேண்டு கின்றேன். 7

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. அருத்தி – அன்பு. 2. அயிரியல் – நுண்ணியல்.

## 111. பட்டஞ் சூட்டுக!

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

பல்கலைக் கழகம் பயிற்றிடும் மொழிகளுள்
தொல்தமிழ் ஒன்று; தூய்தமிழ் விழைந்தோர்
ஈரிரண் டாண்டுகள் இலக்கண இலக்கியப்
போரினுள் மூழ்கித் தேறினர் வென்றனர்;
வென்றவர் தம்மை வித்துவான் என்றனர்;
அன்றது சிறப்பென அயர்ந்தனர் நம்மவர்,
உரிமையின் பின்னர் அரியணை ஏறிய
பெரியவர் துணையால் பெயர்பிறி தாயது;
சொற்றமிழ் பயின்றோர் சூடிய பிறமொழிப்
பட்டயம் போயது பைந்தமிழ் ஆயது;
புலவர் எனும்பெயர் பூத்தது மலர்ந்தது
குலவிய மகிழ்வால் கூறினம் நன்றி;
பெயராற் புதுமை பெற்றதே ஆயினும்
உயர்வால் மதிப்பால் ஒன்றும் பயனிலை;
பட்டயம் எனவே பகர்ந்தனர் அதனைப்
பட்டம் எனச்சொலப் பதைத்தனர் தமிழர்;
ஆங்கிலம் பயின்றவர்க் கடிமைப் புத்தி
நீங்கிய பாடிலை நெடுநாட் பிணியது;
கழகம் அரியணை கண்ட பின்னரும்
இழிநிலை தமிழுக் கிருத்தலும் முறையோ?
தமிழால் வென்றது தமிழால் உயர்ந்தது
தமிழை வளர்ப்பது தமிழை மதிப்பது
கழகம் என்றெலாம் கழறுவர் அதனால்
தமிழுக் குயர்நிலை தரல்அதன் கடமை;
பட்டயம் எனுமொரு பழம்பெயர் மாற்றிப்
பட்டம் என்றொரு சட்டம் செய்தால்
உலகம் குப்புற உருண்டா வீழும்?
அலைகடல் பொங்கி ஆர்த்தா சீறும்?

பட்டமென் றாக்கிடின் பலப்பல சிக்கல்
பொட்டெனப் போகும்; போற்றிடுந் தமிழகம்;
அரசு கட்டில் அமர்ந்தினி தாளும்
கலைஞர் நாவலர் கருதுவீ ராயின்
இலையொரு தடையும் எம்தமிழ் மொழிக்கே;
இன்றுள அரசு நன்றிது செயாவிடின்
என்றுதான் விடியும் எந்தமிழ் வாழ்வு?
தம்மை யீன்ற தாய்த்திரு நாட்டைச்
செம்மைத் தமிழால் செப்பிட மறுத்தவர்
பழிக்கவும் இழிக்கவும் பட்டனர் அன்றோ?
மொழிக்குயர் ஆக்கம் முனைந்து தராவிடின்
நாளைய உலகம் நம்மையும் பழிக்கும்;
வேளை யிதுதான் விரைந்திது புரிக!
செய்யத் தகுவ செய்யா விடினும்
எய்துவ தியாதெனத் தெரிந்து செயல்செயும்
நுண்மாண் நுழைபுலம் உடையீர்
நண்பால் வேண்டுதும் நலம்தமிழ் பெறவே.

---

**பாடற்குறிப்பு:—** 30.11.1974 ஆம் நாள் பாடியது.

**ருஞ்சொற் பொருள்:—**கலைஞர், நாவலர் – கலைஞர் மு. கருணாநிதியும், நாவலர் இரா.நெடுஞ்செழியனும்.

## 112. தமிழ்ச் சான்றோரைப் போற்றுக!
**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

தாய்மொழியைப் பாராட்ட விழையும் மாந்தர்
தம்மொழியிற் சான்றோரைப் போற்றல் வேண்டும்
தாய்நாட்டு முதலமைச்சர் மாலை சூட்டத்
தகுகல்விப் பொறுப்பேற்ற அமைச்சர் நின்று
வாய்விட்டுப் பாராட்ட நிதிய மைச்சர்
வரையாது மனங்குளிர்ந்து பரிசில் நல்கச்
*சேய்நாட்டார் வியந்துரைக்க யானை மீது
செம்மாந்து செலல்வேண்டும் அந்தச் சான்றோர். 1

செம்மாந்து செல்கின்ற காட்சி காணச்
சேர்ந்தோடி வருகின்ற மக்கள் கூட்டம்
அம்மானன் றதிசயிக்க வேண்டும் என்றன்
ஆவல்நிறை வேறுகின்ற நாள்தான் என்றோ?
இம்மாநி லத்திருக்கும் புலவர் என்போர்
எல்லாரும் ஒன்றாகி எழுந்தால் உண்டு;
சும்மாஇங் கிருந்ததெலாம் போதும் போதும்
சூளுரைத்து நாமெழுதல் வேண்டும் வேண்டும். 2

---

**அருஞ்சொற் பொருள்:—** சேய்நாட்டார் – தூர நாட்டவர்.

## 113. வாழ்க முச்சங்கம்
**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

அப்பனைத் தாடி யென்றும்
அம்மையை மம்மி என்றும்
செப்பிடுந் தமிழர் நாட்டிற்
செந்தமிழ் உணர்ச்சி நெஞ்சில்
எப்படி வேர்விட் டூன்றும்?
எப்படித் தழைக்கும்? பூக்கும்?
இப்பழி சுமந்தா ராகி

இருக்கின்றார் தமிழ ரிங்கே. 1

எச்சங்கம் ஊதி னாலும்
இருவிழி திறவா ராகிப்
பச்சிளம் பிள்ளை போலப்
பள்ளிகொண் டுள்ளா ரென்றே
இச்செயல் தீர்வான் வேண்டி
எழுச்சிகொள் புலிப்போத் தன்னார்
முச்சங்கம் ஒன்று கண்டார்
முந்துறும் ஆர்வத் தாலே. 2

தோன்றுமுச் சங்கம் வாழ்க
தொடங்கியோர் உள்ளம் வாழ்க
ஈன்றதாய் மொழியைக் காக்கும்
எழுச்சியை வளர்த்து வாழ்க
ஆன்றவர் போற்றும் வண்ணம்
அரியநற் பணிக ளாற்றி
மூன்றெனுந் தமிழைக் காத்து
மொய்ம்புடன் வாழ்க நன்றே. 3

---

**பாடற்குறிப்பு:–** சென்னையிலமைந்த முச்சங்கத்திற்கு வாழ்த்து.

## 114. தமிழின் செம்மை

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

எண்ணி லடங்காத எத்தனையோ நன்மொழிகள்
மண்ணிற் பிறந்து வளமையுறாக் காலத்தே
தன்வளமை காட்டித், தனிப்பெருமை கொண்டிலங்கிச்,
சொன்மரபு மாறாமல் தூய நிலைநாட்டி,
வாழ்க்கைப் பெருநிலத்தை வளமாக்கிச், செம்மைதனைச்
சேர்க்கப் பொருள்நூலைச் செப்பிப், பெருமையொடு
செப்பமுறச் செய்தமையால் செந்தமிழென் றோதினரோ?
அப்பெருமை யாரே அறிந்துரைக்க வல்லார்கள்?
மெய்யுணர அன்புணர மேன்மைத் திறமுணர
உய்வகைகள் தேர்ந்தே உளந்தெளிய வையத்துள்
வாழ்வாங்கு வாழ வழிவகுத்துத் துன்பமெனும்
பேழ்வாய் எரிநரகில் பேதுற்று வீழாமல்
இம்மையினில் காக்கும் இணையில்லா ஓர்மறையால்
செம்பொருளைக் காட்டுவதால் செந்தமிழென் றோதினரோ?
நூல்மறைந்து போனாலும் நுண்மாண் நுழைபுலத்துக்
கால்மறைந்து போகாமல் காக்கும் அகத்தியனும்
பல்காப் பியந்தோன்றப் பாட்டு நெறியுரைக்குந்
தொல்காப்பி யனென்னுந் தூயோனுந் தோன்றியிங்கு
நம்மொழியைக் காப்பதற்கு நல்வரம்பு கட்டிஅதைச்
செம்மையுறச் செய்தமையால் செந்தமிழாக் கண்டனரோ?
ஆரியம்போற் பேச்சற் றழிந்து சிதையாத
சீரிளமை கண்டவர்கள் செம்மைமொழி என்றனரோ?
நீரால் நெருப்பால் நிலைகுலைந்து போகாமல்
சீராய்த் திகழ்வதனால் செந்தமிழென் றோதினரோ?
முந்தைத் தமிழ்கெடுக்க மூண்டெழுந்த நோக்கமுடன்
எந்தத் துணைகொண்டிங் கெந்தமொழி வந்தாலும்
நோவுக்கும் அஞ்சோம் நொடிப்பொழுதில் வீழ்கின்ற
சாவுக்கும் அஞ்சோம் தமிழ்காப்போம் என்றெழுந்த
அஞ்சலிலாக் கூட்டத்தை ஆளவந்தோர் தாக்கியதால்
நெஞ்சிருந்து சிந்தி நெடிதோடுஞ் செங்குருதி
பாய்ந்து தமிழ்மொழியாம் பைங்கூழ் செழிப்பதனால்
ஆய்ந்தமொழி செந்தமிழென் றானதென நானுரைப்பேன்;
ஆரியத்தார் ஆட்சிமுதல் ஆங்கிலத்தா ராட்சிவரை
சீரழித்த ஆட்சிகளைச் செப்பத் தொலையாது;
தேன்மொழியாந் தென்மொழியின் சீர்மை பரவிவர
மீன்புலிவில் ஏந்திநல் மேலோர் துணைநின்று

காத்ததிரு நாட்டிற் கதவு திறந்திருக்கப்
பார்த்திங்கு வேற்றுப் பகைமொழிகள் உள்நுழைந்து
நீக்கமற எங்கும் நிறைந்தாலும் நம்மினத்தார்
தூக்கங் கலையாமல் சோர்ந்து கிடந்தாலும்
நான்வணங்குந் தெய்வ நலமிக்க செந்தமிழ்த்தாய்
தேன்வழங்கும் நாண்மலர்போல் என்முன் திகழ்கின்றாள்;
அன்னை திருமுகத்தில் அணுவளவும் சோர்வின்றி
என்னை வளர்க்கின்றாள் இவ்வுலகைக் காக்கின்றாள்;
தெவ்வர் எவர்வரினுந் தென்மொழிக்குக் கேடில்லை;
எவ்வெவர் சூழினும் ஏதும் இடரில்லை;
ஆற்றல் குறையாமல் அம்மொழித்தாய் நின்றாலும்
ஏற்ற இடமின்றி ஏனோ தவிக்கின்றாள்?
சீர்மை குறையாமல் செம்மை சிதையாமல்
நேர்மை பிறழாமல் நின்றாலும் அம்மகளை
உற்றாரும் பெற்றாரும் உற்ற துணையாரும்
அற்றாரைப் போல அலைய விட்டுவிட்டோம்;
கல்வி தருங்கோயிற் கட்டடத்துட் செல்வதற்குச்
செல்வி தயங்குகிறாள் செல்லும் உரிமையின்றி;
மூவேந்தர் ஆண்ட முறைதெரிந்தும் செங்கோலைத்
தாயேந்த இங்கே தடையுண்டாம்; அங்காடி
சென்றுலவ ஒட்டாமற் சேர்ந்து விரட்டுகிறோம்;
நின்றுமனம் ஏங்கி நிலைகலங்கச் செய்கின்றோம்;
பாட்டரங்கிற் சென்றிருந்தால் பைந்தமிழ் கேட்பதிலை
கூட்டுமொழிப் பாடல்களே கோலோச்சக் காண்கின்றோம்;
எங்கெங்கு நோக்கினும் இங்கே புகுந்தமொழி
அங்கங்கே ஆட்சிசெய் தார்ப்பரிக்கக் காண்கின்றோம்;
செம்மை யுறுமொழிக்குச் சீரில்லை பேரில்லை;
செம்மை யுறாமொழிக்குச் சீருண்டு பேருண்டு;
பாலறியாப் பச்சைப் பகட்டு மொழிதனக்குக்
கோலுரிமை ஈயுங் கொடுமை நிலைகண்டோம்;
தாரமெனுஞ் சொல்லைத் தயங்காமல் ஆண்பாலாக்
கூறும் மொழியுண்டு; கொங்கை எனுமொழியை
ஆண்பா லெனவுரைக்க அஞ்சா மொழியுண்டிங்
காண்பா லிவனென் றறிய வுணர்த்துகிற
மீசை எனுஞ்சொல்லை மேதினியிற் பெண்பாலென்
றாசையுடன் பேசும் அழகு மொழியுண்டு
செம்மை ஒருசிறிதுஞ் சேராச் சிறுமொழிக்கு
அம்ம எனவியக்க ஆக்கம் பலவுண்டு;
பண்டே திருந்தியநற் பண்புடனே சீர்த்தியையும்
கொண்டே இயங்கிவரும் குற்றமற நின்றொளிரும்
தூய்மொழியாம் தாய்மொழியைத் தொன்மைத் தனிமொழியைச்
சேய்மையில் தள்ளிவிட்ட சேயாகி நிற்கின்றோம்;
நற்றவத்தால் நம்நாடு நல்லோர்தம் கையகத்தே
உற்றமையால் அன்னை உறுதுயரம் நீங்குமினி;
எங்கெங்குந் தாய்மொழிக் கேற்றம் மிகக்காண்போம்
இங்கினிநம் செந்தமிழ்க்கோர் ஏறுமுகம் ஈதுறுதி
எங்குந் தமிழாகும் எல்லாந் தமிழாகும்
பொங்கும் இனிமேற் பொலிந்து.

---

**பாடற்குறிப்பு:–** தருமபுரம் திருமடத்தில் நடைபெற்ற கவியரங்கில் பாடியது–13.5.1968.

## 115. தமிழில் மறுமலர்ச்சி
**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

கலிவெண்பா

பூக்குஞ் செடிகொடியில் போதாய் ஒருமுறைதான்
பூக்கள் மலரும்; புவியோர் மலர்ச்சியென்பர்;
காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமலர் வாடி முடிந்துவிடின்
மீண்டும் மலர்ச்சியிலை; மீண்டும் மலர்வதைத்தான்

யாண்டும் மறுமலர்ச்சி என்று புகன்றிடுவர்;
தெவ்வர் பலவகையாற் செய்துவிட்ட தீமைகளால்
செவ்வையுற வாழ்ந்ததொன்று சீர்கெட்டு வாடியபின்
மற்றுமொரு வாய்ப்பதனால் வாழ்வுயர்ந்து சீரடைந்தால்
கற்றவர்கள் அந்நிலையைக் காணின் மறுமலர்ச்சி
என்று மொழிவர்; இதற்கொரு சான்றுரைப்பேன்;
சென்று முகில்புகுந்து செல்லும் முழுமதிதான்
தேய்ந்து குறைந்துவரும் தேய்ந்தாலும் மீண்டும்ஒளி
தோய்ந்து வளர்ந்துவரத் தோன்றும் மறுமலர்ச்சி;
காலத்தால் முந்துமொழி காப்பியங்கள் தந்தமொழி
ஞாலத்து மூத்தமொழி நல்லறங்கள் பூத்தமொழி
என்றெல்லாம் சான்றோர் இசைக்குமொழி செந்தமிழ்தான்
அன்றிந்தத் தென்னாட்டில் ஆட்சி செலுத்தியது;
எப்படியோ யார்யாரோ இந்நாட்டி னுட்புகுந்த
தப்பதனால் எல்லாத் தவறுகளும் நேர்ந்துவிடப்
புன்மைச் செயலுக்குப் புத்தியைநாம் ஒற்றிவைத்தோம்
நன்மலர்ச்சி குன்றி நலங்கெட்டு வாடியதே!
ஆனாலும் நல்லவர்தாம் நாட்டிற் பலர்தோன்றி
மேனாளில் ஊட்டும் உணர்வதனால் தாய்மொழிக்கு
நாட்டாட்சி வேண்டுமென நல்லுரிமைப் போர்புரிந்தோம்
கேட்டாட்சி செய்தோர்தாம் கேளாராய் வந்தெதிர்த்தார்;
தானே இயங்குந் தகுதிபெற்று வாழ்ந்தமொழி
தேனே எனத்தக்க தெள்ளத் தெளிந்தமொழி
வேற்று மொழிச்சொற்கள் வீணே கலந்தமையால்
நேற்றுவரை தாழ்ந்து நிலைகுலைந்து வீழ்ந்தமையால்
கண்ட மறைமலையும் கல்யாண சுந்தரரும்
தொண்டு மனங்கொண்டு தூற்றலுக்கும் அஞ்சாது
நாடோறும் பாடுபட்டு நல்ல தமிழ்வளர்த்தே
ஈடேறச் செய்தார்கள்; ஈடில்லாச் செந்தமிழே
மீண்டும் மலர்ச்சிபெற்று மேலும் உணர்ச்சியுற்று
யாண்டும் மணம்பரவ ஏற்றம் மிகக்கண்டோம்;
காஞ்சி புரத்தண்ணல் கற்ற அரசியலில்
நீஞ்சி வரும்அறிஞர் நெஞ்சார்ந்த பேருழைப்பால்
பாச்சுவையின் மேலாகப் பாரோர் சுவைத்து வரும்
பேச்சால் எழுத்தால் பெறுமோர் மறுமலர்ச்சி
நாடறியும் ஏடறியும் நல்லவர்தம் நாவறியும்
கூடலர்தம் நெஞ்சறியும் கோல்கொண்டார் வீடறியும்
எங்கள் தமிழ்மொழிக் கீதோர் மறுமலர்ச்சி
எங்கும் பரவும் இனி.

---

**பாடற்குறிப்பு:–** திருப்புத்தூர் கவியரங்கில் பாடியது–8.6.1965.

## 116. தமிழ்த்தேசியக் காப்பியமும் மொழிப்போர்க்காவியமுமான 'பூங்கொடி' காப்பியத்திலிருந்து சில அடிகள்:–

அலையெழு நெடுங்கடல் ஆடை [1]உடீஇய
நிலமகள் தனக்கு நிறைமதி முகமெனும்
நாவலந் தீவின் நாடியாய் விளங்கும்
பாவலர் புகழ்தரு பண்டைத் தமிழகம்
[2]மேவலர் அணுகா வீரங் [3]கெழுமிய
காவலர் மூவர் கயல்புலி வில்லெனும்
கொடிமூன் றுயர்த்திக் [4]கோலோச் சியது;
சங்கம் [5]நிறீஇத் தமிழ்மொழி ஓம்பிப்
பொங்கும் புகழ்வரப் பொலிந்தநன் னாடு;
'யாதும் ஊரே யாவருங் [6]கேளிர்'என்
றோதி ஓதி உயர்ந்ததோ டன்றி
வருபவர் தமக்கெலாம் வணங்கி வரவுரை
தருவது தொழிலாய்த் தான்கொண் டதுவே;

அயலவர் மொழிக்கெலாம் [7]ஆளுகை தருதல்

தவறென உணரார் தாய்மொழி ஈங்குச்
சிறுகச் சிறுகச் சீரிழந் தேகுதல்
அறியக் காணார் அயர்ந்தனர்; ........ .
...... ...... ...... ......
'தமிழர் திருநாள் தைமுதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் பெருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சி தருபயன் பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்
இதுவே பெருவிழா எனக்கொண் டாடுக;
ஆங்காங் குறையுநர் அயலவர் பண்புகள்
நீங்கிய திருநாள் நினைந்திதைப் பேணுக
பிறபிற பண்புகள் பேணிய போதும்
நமக்கென மொழியும் நாளும் உளவென
உலகம் அறிய உணர்த்துவம் வாரீர்;
பலவகைத் தோரணம் பாங்குடன் [8]நாற்றுமின்
வளர்குலைக் கமுகும் வாழையுங் கட்டுமின்
கிளரொளி மாடங் கிளைபடு குடிசை
யாங்கணும் யாங்கணும் ஓங்குக இன்பம்;
எத்திசை நோக்கினும் எழுப்புக மேடை
தத்தங் கொள்கை தவிர்த்து நாடும்
மொழியும் வளம்பெற முன்னுவ தொன்றே
வழியெனக் கருதி வழங்குக பேருரை
முத்தமிழ் ஒலியே முழங்குக [9]யாண்டும்
சிறுசிறு பகையைச் சிந்தைவிட் டகற்றுக
ஓரினம் நாமென [10]உன்னுக பெரிதே.
[11]காரினம் மழையைக் கரவா தருள்க
பசிப்பிணி வறுமை பகைமை நீங்கி
வசைக்கிலக் கிலதாய் வளர்க அரசியல்
செல்வங் கல்வி சிறந்துமிக் கோங்குக
வாழிய பொங்கல் வாழிய திருநாள்'
*** *** *** ****
'ஐயகோ தமிழே! ஐயகோ தமிழே!
செய்ய தொண்டுளம் சிலரே கொண்டனர்;
உன்பெயர் சொல்லித் தந்நலம் [12]நுகர்வார்
நின்னலம் சிறிதும் நினையார் உளரே'
...... ...... ...... ......
'உள்ளமும் உயிரும் உணர்வும் தமிழென
[13]உள்ளுவோன் எவனோ அவனே தமிழன்!
தமிழ்தமிழ் என்றுரை சாற்றுவோர் எல்லாம்
தமிழ்காப் போரென நினைப்பது தவறு;'
...... ...... ...... .....
'வேற்று மொழிகள் விரைவில் பயில்நீ!
தெலுங்கு கன்னடம் தென்மலை யாளம்
ஒழுங்கு பெறநீ ஓதுதல் வேண்டும்!
பழம்பெரும் மொழியுள் ஒன்றெனப் பகுக்கும்
வழங்குதல் இல்லா வடமொழி முதலா
[14]நெருநல் முளைத்திவண் வருமொழி வரையில்
மறுவறப் பயின்று [15]மாற்றார் வாயைத்
திறவா வண்ணம் செய்திடல் வேண்டும்!
அவ்வம் மொழியார் ஒவ்வும் வகையில்
செவ்விதின் உரைப்பாய் செந்தமிழ்ப் பெருமை;
அவரவர் மொழியில் உயர்பொருள் காணின்
தவறறப் பெயர்த்துத் தாய்மொழிக் காக்கு!
தாய்மொழி விடுத்துப் பிறமொழி விழைவோர்
ஆய்வுரை கேட்கின் அவர்செருக் கடக்கு!
பிழைபடத் தமிழைப் பேசியும் எழுதியும்
பிழைப்போர்க் காணின் பேரறி வூட்டு!
பழிப்போர் இங்கே பிழைப்போர் அல்லர்
அழித்தேன் என்றெழும் சிறுத்தைகள் கூட்டம்
நாட்டினில் பல்கிட நல்லுரை வழங்கு!
[16]கோட்டமில் மனத்தாய்! [17]குக்கலின் செயல்போல்
இலக்கண நூலை இழித்தும் பழித்தும்
குரைத்தால் அவர்தம் கொட்டம் அடக்கு!

*** *** *** ***

'செம்பொன் றன்னோடு செம்பு கலந்தால்
அம்பொன் அணிகள் அமைத்திடல் ஒல்லும்;
கலவா விடினோர் கலன்செய இயலா
ததுபோற் பிறமொழி அகற்றுதல் கருதின்
தமிழ்வள ராதெனச் சாற்றுவர் சிலர்தாம்;
அமிழ்தம் இனிக்க அச்சு வெல்லம்
கலப்போர் உலகிற் கண்டோ மில்லை;
[18]உலப்பிலாத் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி
கலப்பிலா தியங்கும், கற்றவர் அறிவர்;
செம்பு கலந்தணி செய்வதும் இயற்கை,
செம்பும் மிகவே சேர்த்திடப் பெறுமேல்
கலன்செய அப்பொன் பலன்படா தொழியும்;'

...... ...... ...... ......

'தமிழிற் பற்றுதல் தவறுவோர் தம்மையும்
தமிழினம் என்றே சாற்றுதல் கண்டோம்;
தாய்க்குரங் கொருகிளை தாவுங் காலை
தாய்மடி பற்றுதல் தவறுமேல் குட்டியைக்
[19]குரக்கினம் தம்மொடு கொள்ளா தொழிக்கும்;
மரக்கிளை வாழும் மந்தியின் மானம்
நமக்கிலை அந்தோ! நாமோ மாந்தர்!
மானம் பரவுதற் கானவை இயற்றுக;'

...... ...... ...... ......

'தகுமிசை யரங்கில் தாய்மொழி விடுத்துப்
புகுமொழி இசைத்திடும் புன்மையை உலகில்
யாண்டுங் காண்கிலை ஈண்டுக் காண்குவை;
மீண்டுந் தமிழிசை வேண்டும் எனினோ
மொழிவெறுப் புணர்ச்சி என்றதை மொழிகுவர்;
பழுதுறு மதியர் பான்மையஃ தன்றோ?
அகப்பகை தமிழை அழிப்பதைக் காணுதி!
செகுத்ததை ஒழித்துச் செந்தமிழ் பேணுதி!'

...... ...... ...... ......

இசைத்தமிழ் முழக்குக எங்கணும் பெரிதே!
வசைத்தொழில் புரிவோர் வாய்தனை அடக்குக!
இசைப்பணி புரிதல் இனிநமக் கேலாது
வசைத்தொழில் ஈதென [20]வாளா விருந்தனை!
திசைத்திசைச் சென்று செந்தமிழ்ப் பாட்டின்
இசைத்திறன் காட்டுதி இனிநீ தாயே!
நின்னுயிர் பெரிதோ? தென்மொழி பெரிதோ?
இன்னுயிர் ஈந்தும் இசைத்தமிழ் பேணித்
தோமறு பணிசெயத் துணிந்தெழு நீ'....

*** *** *** ***

'யாழும் குழலும் எழுப்பிய இசைதான்
வாழும் தமிழோ? வருமொழி இசையோ?
அவ்விசைக் கருவிகள் ஆய்ந்து கண்டவர்
செவ்விய தமிழர்; சிறந்தஇக் கருவிகள்
எப்பொருட் டியற்றினர்? இசைப்பொருட் டன்றோ?
பாணன் பாடினி பாடற் றொழிலோர்
மேனாள் ஈண்டு மேம்பட வாழ்ந்தனர்;
அவர்தாம்
எம்மொழிப் பாடல் இசைத்தனர்? ஆய்ந்துணர்!
திணைகள் ஐந்தெனச் செப்பிய முன்னோர்
இணையும் வகையால் பண்ணும் இசைத்தனர்;
இவைஎலாம் மறந்தே இலைஎனல் முறையோ?'

*** *** *** ***

'தாய்மொழி மானம் தமதென நினையும்
ஆய்முறை தெரிந்த ஆன்றோர் தாமும்
உயிரெனத் தமிழை உன்னுவோர் தாமும்
[21]செயிரறத் தமிழைத் தெளிந்தோர் தாமும்
புகுந்து தமிழிசை போற்றுதல் வேண்டும்;
தகுந்தோர் புகின்அது தழைத்திடல் ஒருதலை;'

*** *** *** ***

வருவிருந் தோம்பும் பெருந்திறல் உடையோய்!
வருமொழி தமக்கெலாம் வணங்கி வரவுரை

தருவது தொழிலாக் கொண்டது தமிழகம்;
அயன்மொழி பலவும் ஆய்ந்து தெளிந்து
மயலற மொழியும் மாந்தர் பற்பலர்
எம்முடை நாட்டினில் இலங்கிடல் காணுதி!
[22]எம்மொழி யாயினும் [23]எம்மொழி என்றதை
நம்பும் இயல்பினர் நாங்கள்; இந்நிலை
அறிகதில் ஐய! அமிழ்தெனும் தமிழை
மறந்தும் பிறமொழி மதிக்கும் பெற்றியேம்;
ஆயினும் தமிழை அழிக்கும் கருத்தின்
சாயல் காணினும் [24]தரியேம் எதிர்ப்போம்;'
...... ...... ...... ......
'தமிழர் உயர்வைத் தகைக்கக் கருதிப்
பழியும் பொய்மையும் பகர்தல் நாணா
இழிமதிக் கூட்டம் எம்செயல் கண்டே
[25]அவ்விய நெஞ்சில் அச்சமும் சேர
எவ்வகை யேனும் தமிழியல் எழுச்சியைக்
கொல்லும் நோக்கொடு குழுமிய சிற்றினம்
ஒல்லும் வகையாற் பல்வகைப் பழியைச்
சொல்லித் தீர்த்தது சூழ்ச்சிகள் விளைத்தது;

சூழ்ச்சியால் அயன்மொழி ஆட்சியைப் பரப்பிடப்
பாழ்செயல் புரிந்தது; பகைமனங் கொண்டெமைக்
குறுமனம் என்று குறைகள் [26]சொற்றது;
பிறமொழி வெறுக்கும் பெற்றியர் என்றது;
உடனிருந் தழிக்கும் நோய்நிகர் மாந்தர்
கொடுமனம் உடையோர் விடுபொய் மொழியை
நண்ப! மெய்யென நம்பேல்; எம்முயர்
பண்பினை நடுநிலைப் பாங்கினர் ஏத்துவர்'

*** *** *** ***

'யாண்டும் கவிதை யாத்திட முனைவோர்
வேண்டு மளவில் விரிந்திடல் கண்டோம்;
ஆயினும் சிலரே அறிவுடைப் புலவோர்;
தாயினும் மேலாம் தமிழ்மொழி ஓங்கிட
நவையறு கவிதை குவிந்திடல் வேண்டும்;

கவியெனும் பெயரால் கற்பனை செய்து
புனைவோர் அனைவரும் புலவோர் அல்லர்,
துணைசெயும் யாப்பும் தொட்டவர் அல்லர்,
எழுத்தும் சொல்லும் பழுத்தவர் அல்லர்,
முழுக்கப் பொருளும் முடித்தவர் அல்லர்,
பழுதிலா அணியும் படித்தவர் அல்லர்,
ஐவகை இலக்கணம் அனைத்தும் இன்றிச்
செய்யுள் எழுதி உய்வோர் பலரே!

இவர்தம் பாடல் எழிலுற அச்சுச்
சுவடி வடிவில் சுற்றுதல் கண்டோம்
விடுத்தஇச் சுவடிகள் அடுத்திவண் வருமவர்
படித்தவர் விழியிற் படுமேல் நம்மைப்
பழிப்பவர் ஆவர்; பைந்தமிழ் வளர்ச்சி
இழித்துரை கூறுமா றிருந்ததே என்பர்;
செழித்துயர் தமிழைப் பழித்திட நாமே
விடுத்திடல் நன்றோ? விளம்புதி மகளே!
நிலைத்திடுங் கவிதை தொடுத்திடுங் காப்பியம்
விளைத்திடல் வேண்டும் பலப்பல இன்றே,
அருமைத் தமிழ்க்கிஃ தாக்கப் பணியாம்,
தரும்நமைத் தலைமுறை தலைமுறை வாழ்த்தும்;

போலிக் கவிஞர் புனைபவை புனைக!
வேலி யிடினும் விளைபவை விளையும்;
பயனும் பண்பும் [27]பழுநிய நூல்கள்
வியனுற வெளிவர முயலுதல் வேண்டும்;
புதியநம் சுவடிமுன் போலிச் சுவடிகள்
கதிரோன் முன்னர்க் கைவிளக் காகும்;
நாளைய உலகம் நந்தமிழ் ஏத்தும்;'

*** *** *** ***

'மனமொழி செயலினை வயப்படச் செய்யும்.
தனியொரு செயற்றிறம் தமிழிசைக் குண்டு;
கொடுந்தொழில் விலங்கும் கடுவிட அரவும்
படிந்திடச் செய்யும் பாங்கிதற் குண்டு;'

*** *** *** ***

'தொன்று முதிர்ந்த தூயநன் மொழியாம்
தமிழிசை மீண்டும் தரணியில் தழைக்கத்
தந்தநற் சுவடியின் தகவெலாம் உரைத்துப்
புந்தியிற் பதியப் பொதிந்துள நுணுக்கம்
முறைமுறை தெரித்தும் இடையிடை இசைத்தும்
நறைபழுத் தொழுகும் துறைத்தீந் தமிழின்
பழம்பெரும் பாடல் பாங்குடன் பாடியும்
முழங்கிசை வல்ல முத்துத் தாண்டவர்
வழங்கி யருளிய வளர்தமிழ்ப் பாட்டும்,
அரும்பெறல் இசைவல அருணா சலக்கவி
திறம்பட நல்கிய தீந்தமிழ்ப் பாட்டும்,
விரும்பிய சமநிலை வேத நாயகர்
தருபழச் சுவைநிகர் தண்டமிழ்ப் பாட்டும்,
என்றிவர் அனையார் இசைத்துறை வித்தகர்
துன்றுநல் லுணர்வில் துய்த்துப் பாடிய
தென்றமிழ்ப் பாட்டும் தெள்ளிதின் இசைக்க,'

*** *** *** ***

'தாய்மொழி காக்கும் வாய்மை மாந்தர்
வீய்துயர் எய்தி வீண்பழிக் காட்படல்
விரிநீர் உலகத்து விதியோ' ......

*** *** *** ***

'ஆயிரம் ஆண்டுகள் அறியா வகையில்
[28]வீயுறும் நிலையில் வீழ்ந்து கிடந்த
நற்றமிழ் யாழும் சொற்றமிழ் இசையும்
தெற்றென விளக்குந் திருவிளக் கிந்நூல்;
செந்தமிழ்க் கிஃதோர் சீர்சால் [29]பொற்பணி'

...... ...... ...... ......

'நெஞ்சினை யள்ளும் செஞ்சொற் சிலம்பில்
வேனிற் காதையும் வேட்டுவ வரியும்
ஆனினங் காக்கும் ஆய்ச்சியர் குரவையும்
பத்துப் பாட்டும் பரிபாட் டேடும்
வைத்துக் கிடக்கும் பண்வகை வகுத்து
[30]நாவின் அரசர் நலந்திகழ் [31]பிள்ளை
[32]நாவலூர் நம்பியெனும் நற்றமிழ் வல்ல
மூவர் அருளிய தேவா ரத்தொடு
தேரும் செந்தமிழ்த் [33]தேறல் மாந்திய
[34]மாறன் திருவாய் மலர்ந்தருள் மொழியும்
அருண கிரியார் அருள்திருப் புகழும்
மருவிய பண்களில் வகையெலாம் தெரித்து,
வாழிய பாவாய் வாழிய தமிழால்!
வாழிய உலகம் வாழிய தமிழிசை!'

*** *** *** ***

'அலர்தொறும் [35]அலர்தொறும் [36]அஞ்சிறை விரித்துப்
பலமுறை சுழன்று பசுந்தேன் உறிஞ்சி
நலம்நுகர் [37]சுரும்புபோல் நாடொறும் முயன்று
பலமொழி பயின்று பயன்றுய்த் தனையால்;
ஆங்காங் கணுகி அவ்வவர் கலையும்
ஓங்குயர் பண்பும் உணர்ந்தனை யாயின்
புதுமைக் கலைகள் தமிழிற் பூக்கும்,
அருமைத் தமிழும் அவ்விடை மலரும்,
உரிமை யனைத்தும் உன்மொழிக் கெய்தும்,'

*** *** *** ***

'அகத்தும் பிறமொழி வெறுத்திடல் அறிகிலம்
பகுத்தறி வுடையோம் பண்பும் உடையோம்
வேண்டும் மொழிகளை வேண்டுவோர் பயின்றீங்
கீண்டி [38]யுறையுநர் [39]எண்ணிலர் அறிக!

குறுமன மென்றும் விரிமன மென்றும்

சிறுமன முடையோர் [40]செப்புவ கொள்ளேல்!
தனியொரு [41]மாந்தன் தன்னலம் பேணின்
[42]முனியத் தகுமது குறுமன மாகும்;
தன்னல மறுப்பது விரிமன மாகும்,
முன்னவர் பேணிய மொழியும் நாடும்
மன்பதை முழுமைக் குரியன வன்றோ!
அன்புளங் கொண்டோர் அவற்றைப் பேணின்
தென்படும் குறைஎன்? தெளியா மாந்தர்
குறுகிய மனமெனக் குளறுவர் நம்பேல்!

பெறுபுகழ்த் தாய்மொழி [43]பேணாஅ ராகி
வருமொழி வாழ்த்தி வரவுரை கூறுநர்
அறமன முடையரென் றறிவுளோர் பகரார்;
பிறமொழி தீதெனப் பேசலும் அறிகிலம்
உரியநம் மொழியே உயர்வுறல் வேண்டி
இரவும் பகலும் இடரிலும் முயல்வேம்;

யாதும் ஊரெனில் எம்முடை ஊரகம்
தீதுறல் வேண்டுமோ? சீருறல் தீமையோ?
யாவரும் கேளெனில் [44]யாயுடன் தந்தையும்
[45]மேவருங் கேடுகள் மேவுதல் வேண்டுமோ?
அன்னவர் நலம்பெற ஆர்வம் பூணுதல்
[46]புன்மையோ? பகையும் பூத்திடல் [47]என்னையோ?

உலகப் புகழ்பெறு தலைவரும் கவிஞரும்
பலகற் றடங்கிய பண்புயர் மாந்தரும்
தாய்மொழி வேட்கை [48]தணிந்திலர் துறந்திலர்;
ஆய்புலப் பாங்கினர் அறிகுவர் இதனை;
தமிழின் பகைவர் சாற்றும் மொழியினை
உமிழ்க! மெய்ம்மை உணர்க! எழுக'
...... ...... ...... ......
'கூவும் குயில்தன் குரலாற் பாடும்;
காகம் தன்குரல் கொண்டே கரையும்;
இரவற் குரலைப் பெறுவது காணேம்;
பறவையின் இயல்பைப் பகுத்தறி வுளநாம்
அறிவதும் இல்லேம்; தெளிவதும் இல்லேம்;
நமக்குள மொழியை நாடுதல் தவிர்த்துப்
பிறர்க்குள மொழியாற் பிதற்றுதல் உடையேம்;

உருகும் இசையால் உள்ளம் என்றீர்!
பொருளும் உணரப் புரியும் மொழியால்
மருவிய பாடல் வழங்கும் இனிமையை
ஒருமுறை எண்ணுக! ஊனும் உயிரும்
நெஞ்சுடன் குழைந்து [49]நெக்குநெக் குருகி
விஞ்சுபே ரின்ப விளைவினில் திளைக்கும்;
குழல்தரு மிசையில் மொழியிலை என்றீர்!
அழகிது நும்மொழி! அவ்விசை [50]சாலுமேல்
மிடற்றிசை வேண்டுமோ? வேறொரு மொழியில்
தொடுத்திடும் பாடலும் தொகையுடன் பாடுவோர்
கூட்டமும் வேண்டுமோ? குழல்முத லாகக்
காட்டும் அவ்விசைக் கருவிகள் சாலுமே!

தமிழ்விழை யாரும், தம்வயிற் றுணவே
அமிழ்தெனத் தேடி அலைந்துழல் வாரும்,
உரிமை வாழ்வினைக் கருதகில் லாரும்,
அடிமை வாழ்வினி லமைதிகொள் வாரும்,
தமிழறி வில்லாத் தமிழருந் தாமே
அயன்மொழி யிசையே அரங்கினிற் பாடுவர்
மயலுணர் வுடையீர்! மற்றொன் றறைகுவல்

'எம்மொழி யாயினும் இசையினி லேற்போர்
நம்மொழி ஒதுக்குதல் நன்றுடைச் செயலோ?
ஏற்போர் ஏற்க! இசையுணர் பெரியீர்!
[51]காற்கூ றறிவாற் கழறுதல் தவிர்க!

இசைவளந் தமிழில் இலைஎனப் பிதற்றல்
வசையுமக் காகும்; [52]வாய்மதம் ஒழிக!
முத்தமிழ் என்றொரு முறைவைப் புளதை
மெத்தவும் மறந்தீர்! மெய்ம்மையை இகழ்ந்தீர்!_
நெஞ்சறி பொய்யை நிகழ்த்துதி ராயின்
பஞ்செனு அதுதான் பறப்பதிங் [53]கொருதலை;

பழியுரை நாணாப் பண்புள பெரியீர்!
மொழிவெறி எனவொரு மொழியினை மொழிந்தீர்
உரிமை விழைவது வெறியெனக் கூறும்
பெருமை நும்பால் உறைவது கண்டேன்;
நரிமனம் இஃதென நவின்றிட நாணுவல்;
வெறியுணர் வுளதேல் விளைவன வேறு!
முறையொடும் அறிவொடும் முறையிடு கின்றோம்;
நெறியறிந் தொழுகும் நேர்மையை வியந்திலீர்!
புரைபடும் நும்முளம் புலப்படச் செய்தீர்!
செந்தமிழ் மொழியொடு செற்றம் என்கொலோ?
வந்துடன் தாய்மொழி வளர்த்திடக் கூடுக!
முந்துநம் தமிழிசை மொய்ம்புறப் பாடுக!'
...... ...... ...... ......
'வழிபடு துறையிலும் வண்டமிழ் வேண்டுதும்;
இழிநிலை போதும்; இறைவன் திருமுனர்
எம்முயர் மொழியே இசைத்திடல் விழைகுதும்'
...... ...... ...... ......

'தமிழக வரைப்பில் தாய்மொழி ஆட்சி
திகழுதல் வேண்டும்; தேவுறு கோவில்
விலக்குடைத் தன்று; மயக்குறல் என்கொல்?
கலைக்கோர் உறைவிடம் கட்டியோர் தமிழர்
உள்ளுறை கடவுளும் உரியவர் நமக்கே
[54]அள்ளுற வணங்குவோர் அயலவர் அல்லர்
இறைவினை புரிவோர் ஏதிலர் அல்லர்
முறைஎது? வழிபடு மொழிஎது? புகல்வீர்!

முன்னோர் நெறியினில் முரண்பா டென்றீர்!
முன்னோர் யாரென முடிந்த முடிபாச்
சொன்னோர் யாரே? முன்னோர் அவரினும்
முற்பட வாழ்ந்தவர் எப்பெய ருடையார்?
அப்பெரு முன்னோர் ஆண்டவன் மாட்டுச்
செப்பிய மொழிஎது? செந்தமி ழன்றோ?
திருவாய் மொழியெனத் திருவா சகமென
இறைவா! இறைவா! என்றவர் ஓதிய
திருவாய் மொழிஎது? தீந்தமி ழன்றோ?
அவரெலாம் முன்னோ ரல்லரோ? இறைவன்
செவிதனில் அம்மொழி சேர்ந்ததும் இலையோ?

அரவணி இறைவனை [55]ஆரூர் நம்பி
இரவிடைப் [56]பரவைபால் ஏவிய தெம்மொழி?
[57]இடங்க ருண்ட இளஞ்சிறு மகனை
உடம்பொடும் உயிரொடும் உய்வித்த தெம்மொழி?
ஒடுங்கிய எலும்பினை உருவெழில் குறைவிலா
மடந்தையின் வடிவா மாற்றிய தெம்மொழி?
அருமறை வினைஞரால் அடைபடு [58]கதவம்
திருமறைக் காட்டில் திறந்ததும் எம்மொழி?
கணிகணன் முன்செல மணிவணன் அடியிணை
பணிதிரு மழிசையர் பதறினர் பின்செலப்
படப்பாய் அணைமேல் பாற்கடல் மிசையே
கிடப்போன் தன்மனைக் கிழத்தியும் உடன்வர
அரவணைச் [59]சுருட்டோ டாங்கவர் தொடர்ந்து
பரிவுடன் ஓடப் பண்ணிய தெம்மொழி?
அம்மொழி நம்மொழி! அத்துணைப் பெருமையும்
செம்மையின் எமக்கெலாம் செப்பியோர் நீவிர்!
இன்றிவை மறந்தீர்! எதிர்ப்புரை கிளந்தீர்!
கன்றிய மனத்தாற் [60]கரவுரை புகன்றீர்!

மந்திர வலிமை செந்தமிழ்க் கிலையெனில்
இந்தநல் லருஞ்செயல் எவ்வணம் இயலும்?

[61]கடகரி உரியன் கடும்புலி [62]யதளன்
சடையினை மறைத்து மணிமுடி தரித்து
[63]விடைக்கொடி விடுத்துக் கயற்கொடி எடுத்து
விடவர வொழித்து [64]வேம்பலர் முடித்துத்
தொடுகழல் [65]மாறன் வடிவொடு வந்ததூஉம்,
[66]மடவரல் மனையாள் மலைமகள் உமையாள்
தடாதகைப் பெயரினைத் தாங்கி வந்ததூஉம்,
மயில்மே லமர்வோன் அயில்வே லுடையோன்
எயில்சூழ் மதுரை எழில்நக ரதனுள்
உக்கிர குமர னுருவொடு வந்ததூஉம்,
தெக்கண மொழியாம் தீந்தமிழ்ச் சுவையைக்
கூட்டுண வெழுந்த வேட்கையால் என்றே
பாட்டினில் [67]குருபரர் பாடி வைத்தனர்;
வடக்கினில் நின்றோன் வரன்முறை யாகக்
[68]கடுக்கவின் [69]கண்டன் தென்றிசை நோக்கி_
அடுக்க வந்துவந் தாடுதல் ஏனெனின்
தொடுக்கும் பழந்தமிழ்ச் சுவையினை மாந்தவே
அறைந்தனர் இவ்வணம் அருட்[70]பரஞ் சோதி;
கண்ணுதற் கடவுள் [71]கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து பசுந்தமிழ் ஆய்ந்தனன்;
[72]வாத வூரன் ஓதிய வாசகம்
தீதுறா வண்ணம் தென்னா டுடையவன்
ஏட்டில் எழுதி நாட்டிற் களித்தனன்;
அர்ச்சனை பாட்டே ஆதலின் நம்மைச்
சொற்றமிழ் பாடெனச் சுந்தரன் றன்பால்
பற்றுடன் சென்று பைந்தமிழ் வேண்டினன்;
வழிபடு தமிழை விழைகுவர் இறைவரென்
றெழிலுற உணர்த்திட இவையிவை சான்றாம்;
முன்னோர் சொன்ன முடிபினைக் கொள்க!
பின்னோர் நம்மைப் பேணுதல் வேண்டும்'
...... ...... ...... .......
'துறைதொறும் துறைதொறும் தூயநற் றமிழே
ஆட்சி புரியும் மாட்சிமை வேண்டும்
ஆட்சியின் பெயரால் அயன்மொழி புகுதலைச்
சான்றோர் வெறுப்பர் தமிழகம் மறுக்கும்
ஆன்றமைந் தடங்கிய அறவோர் கொதிப்பர்
ஆதலின் அரசியல் ஆயத் துள்ளீர்
மேதகு பெரியீர் ஆவன புரிக'

*** *** *** ***

'இருப்பவை யனைத்தும் உருச்சிதை யாமற்
கருத்துடன் பேணிக் காத்திடல் வேண்டும்;
இருப்பது போதும் எனநினை யாமல்
புதுப்புது நூல்கள் படைத்திடல் வேண்டும்
அயன்மொழி புகுந்திவண் அல்லல் கொடாஅவகை
[73]மயலர வொழித்து மதியினைத துலக்கித்
தடுத்துக் காக்கும் [74]தறுகண் வேண்டும்
தொடுக்கும் தமிழ்க்குத் துறைதொறும் ஆட்சி
கொடுத்திடல் வேண்டும்' ...... .....
...... ...... ...... ......
'சமயம் கட்சி சாதியோ டரசியல்
அமையுந் தொழிலால் ஆர்த்தெழு பகைமை
இமயம் போலது எதிருள தாயினும்
கருதா ததனைக் கடிதினில் ஒதுக்கி
ஒருதாய் மக்கள் உணர்வே ஓங்கி
...... ....... ...... .....
பிறப்பால் வழக்கால் பேசும் மொழியால்
இனத்தால் தமிழர் எனுமொரு நினைவே
கருத்தாற் கொண்டுளோம் காலம் நமதே!
தாய்மொழி காக்கும் தணியா வேட்கை
சேய்கள் நம்பாற் செம்மையிற் கிளர்ந்தது;
வாகையும் சூடுவோம் வளர்தமிழ் பாடுவோம்

[75]ஓகையில் ஆடுவோம் ஓங்குக ஓங்குகவே!'

'நாடொறும் [76]நாடொறும் நாடெலாம் போந்து
பாடியும் பேசியும் பட்டி மன்றத்துச்
சொல்லமர் ஆடியும் சொல்வன சொல்லி
நல்லதோர் ஆர்வம் நாட்டிடை மூட்டவும்
மொழியுணர் வூட்டவும் முயன்றனம்; பொங்கிப்
பொழியும் ஆர்வமும் புத்துணர் வெழுச்சியும்
பெருக்கெடுத் தோடும் பெற்றிமை கண்டோம்;
உருக்கொள அதுதான் ஒருநெறிச் செல்லத்
திருப்பலும் வரன்முறைப் படுத்தலும் [77]நங்கடன்;
ஆக்கப் பணியில் அதனைத் தேக்கி
ஊக்கப் படுத்துதல் ஒன்றே இனிமேல்
ஆற்றப் படும்பணி யாகும்; ஆதலின்

செயற்குழு பலவகை சீர்பெற அமைத்துச்
செயற்பட வேண்டுவல்; செந்தமிழ் நூல்களை
அயன்மொழி பலவுளும் அமைத்திடல் வேண்டியும்
நயனுள மொழிகளுள் நல்லன காண்புழிப்
பயனுறப் பெயர்த்துப் பைந்தமிழ் ஆக்கவும்
உலக மொழிகள் பலவும் பயில
இலகும் அறிவினர் இணைந்ததோர் குழுவும்,

தொல்காப் பியமும் தூயநற் குறளும்
பல்கிய பொருள்செறி [78]பாட்டுந் [79]தொகையும்
நாலடி முதலா நயனுரை நூலும்
தோலெனும் வகைப்படும் தொடர்நிலைச் செய்யுளும்
கல்லா மாந்தர்தம் கருத்துட் பாய்ச்ச
வல்லார் சொல்லில் நல்லார் குழுவும்,

இடம்பெறல் வேண்டும்; இவ்வணம் அமைத்துக்
கடமை உணர்வும் கட்டுப் பாடும்
உடையராய்ப் பணிசெயின் உலகில் நம்மொழி
ஒருமொழி யாக ஓங்குதல் ஒருதலை'
...... ...... ...... ......
'தென்மொழி நிலைமை தெற்றென விளக்கி
மன்பதைக் குரைத்தோம்; மன்பதை சார்பில்
எவ்வெவ் வகையால் இயம்புத லொல்லுமோ
அவ்வவ் வகையால் ஆள்வோர்க் கியம்பியும்
தாய்மொழிக் குரிமை தந்திலர் அதனால்
ஆய்ந்தபின் அறப்போர் ஆற்றத் துணிந்தனம்;
போரிட முனைந்து புகுவோர் கேண்மின்!
ஆருயிர் கொடுப்ப தறப்போ ராகும்;
வேறுயிர் எடுப்பது மறப்போ ராகும்;
அதனதன் பெற்றிமை அறிகதில் லம்ம!
முதற்போர் புரிய முனைந்தனம் இன்றே;
போரெனில் உயிர்பல போதலும் இயல்பே;
சீரிய இப்பெரும் போரினில் புகுவோர்
யாரென யாரென இயம்புதிர் இன்றே;
இருப்பதும் ஒருயிர் இறப்பதும் ஓர்முறை
தடுத்திட ஒல்லுமோ? சாவதும் ஒருதலை;
விடுக்குமவ் வோருயிர் வீணிற் செலவிடா
தடுத்தநம் தாய்மொழி அரியணை வீற்றிடத்
தொடுத்திடும் போரில் விடுத்திடத் துணிக!
துணிவோ ரெவரோ அவரே வருக!
துணிவில ராயின் தொலைவிற் செல்க!

செல்வோர் தாமும் செய்வதொன் றுளது
வெல்போர் கருதி விடுதலைப் படையினர்
சிறையகம் புகுந்தும் உறுதுயர் அடைந்தும்
கையுங் காலும் மெய்யும் சிதைந்தும்
நையும் உயிரொடு நடைப்பிண மாகியும்
ஆளுநர் செயலால் அல்லற் பட்டுழிக்
[81]கோளும் குறையும் கூறித் திரியாது

கண்ணீர் ஒருதுளி காட்டுக; இலையெனில்
உண்ணிறை பரிவொடும் ஒருமொழி புகல்க!
அந்நிலை தானும் ஆற்றீ ராயின்
[82]செல்லல் எமக்குச் செய்யா தமைக!
அல்லன கூறுதல் அறவே விடுக!'

*** *** *** ***

'கசடறக் கற்றனர் கற்றவை உரைத்தனர்
நசையினை ஊட்டினர் நற்றமிழ் வளர்த்தனர்;
ஆயினும் உரிமையும் அதற்குரி நிலையும்
ஏயும்நன் மதிப்பும் ஈண்டதற் கிலையே!
உரிமையும் நிலையும் ஒடுங்கி வருங்காற்
பெருமையும் பிறவும் பேசிப் பயனென்?
அரசியல் நெறியால் அயன்மொழி புகுமேல்
வருமொழி ஒன்றே வளம்பெறும் செழிப்புறும்;
செந்தமிழ் ஆட்சி சிறப்புறல் யாங்ஙனம்?'

...... ...... ...... ......

'புழுவும் விலங்கும் மொழியறி வில்லன;
தொழுதகு பிறப்பெனத் தூயவர் ஓதிய
விழுமிய மாந்தர் மொழியறி யுடையரால்
விலங்கினும் புழுவினும் வேற்றுமை தெரிய
நலங்கிளர் மொழியினை நயந்தனர் ஓம்பிட;'

...... ...... ...... ......

*** *** *** ***

---

**அருஞ்சொற் பொருள்:–**

1.உடீஇய – உடுத்த. 2.மேவலர் – பகைவர். 3.கெழுமிய – பொருந்திய. 4.கோலோச்சியது – செங்கோல் செலுத்தியது. 5.நிறீஇ – நிறுவி. 6.கேளிர் – உறவினர். 7.ஆளுகை – ஆட்சி. 8.நாற்றுமின் – தொங்கவிடுவீர். 9.யாண்டும் – எங்கும். 10.உன்னுக – நினைக. 11.கார் – மேகம். 12.நுகர்வார்–அனுபவிப்பார். 13.உள்ளுவோன்–நினைப்போன். 14.நெருநல்–நேற்று. 15.மாற்றார்–பகைவர். 16.கோட்டம்இல்–குற்றமில்லாத. 17.குக்கல்–நாய். 18.உலப்பிலா–அழிவில்லாத. 19.குரக்கினம்–குரங்கினம். 20.வாளா–செயலின்றி. 21.செயிர்–குற்றம். 22.எம்மொழி–எந்தமொழி. 23.எம்மொழி–எமது மொழி. 24.தரியேம்–பொறுக்க மாட்டோம். 25.அவ்விய–பொறாமையுற்ற. 26.சொற்றது–சொல்லியது. 27.பழுநிய–நிறைந்த. 28.வீயுறும்–அழியும். 29.பொற்பணி–அழகியபணி. 30.நாவின் அரசர்–திருநாவுக்கரசர். 31.பிள்ளை திருஞானசம்பந்தர். 32.நாவலூர் நம்பி–சுந்தரர். 33.தேறல்–தேன். 34.மாறன்–நம்மாழ்வார். 35அலர்–மலர். 36.அஞ்சிறை–உள்இறகு. 37.சுரும்பு–வண்டு. 38.உறையுநர்–வாழ்பவர். 39.எண்ணிலர்–கணக்கிலாதவர். 40.செப்புவ–சொல்பவை. 41.மாந்தன்–மனிதன். 42.முனிய–வெறுக்க. 43.பேணாஅர்–பேணாதவர். 44.யாய்–தாய். 45.மேவரும் –விரும்பத்தகாத. 46.புன்மையோ?–இழிவோ?. 47.என்னையோ–ஏனோ?. 48.தணிந்திலர்–அடங்கினாரிலர். 49.நெக்கு நெக்குருகி–மிகஇளகி. 50.சாலுமேல்–போதுமெனின். 51.காற்கூறு–கால்பங்கு. 52.வாய் மதம்–வாய்ச்செருக்கு. 53.ஒருதலை–துணிவு. 54.அள்ளூற–வாயுற. 55.ஆரூர்நம்பி–சுந்தரர். 56.பரவை–பரவை நாச்சியார். 57.இடங்கர்–முதலை. 58.கதவம்–கதவு. 59.சுருட்டு–(படுக்கைச்)சுருள். 60.கரவுரை–வஞ்சனை மொழி. 61.கடகரி–மதயானை;.உரியன். 62.அதளன்–தோலாடைய. 63.விடைக்கொடி–எருதுக்கொடி. 64.வேம்பலர்–வேப்பம்பூ. 65.மாறன்–பாண்டியன். 66.மடவரல்–இளமைமிகும். 67.குருபரர்–குமரகுருபரர். 68.கடுக்கவின்–நஞ்சின் அழகு. 69.கண்டன்–கழுத்தினன். 70.பரஞ்சோதி–திருவிளையாடற் புராண ஆசிரியர். 71.கழகம்–தமிழ்ச்சங்கம். 72.வாதவூரன்–மாணிக்கவாசகர். 73.மயலரவு–மயக்கம். 74.தறுகண்–துணிவு. 75.ஒகை–உவகை. 76.நாடொறும்–நாள்தோறும். 77.நங்கடன்–நம் கடமை. 78.பாட்டு–பத்துப்பாட்டு. 79.தொகை–எட்டுத்தொகை நூல். 80.புரிவியல்–புரிகின்ற. 81.கோள்–புறங்கூறல். 82.செல்லல்–துன்பம்.

## 117. 'ஊன்றுகோல்' காப்பியத்திலிருந்து சில அடிகள்:–

....... ........ ........

பன்மொழி கற்றுத் தேறல்
    பைந்தமிழ்க் காக்கந் தானே

....... ........ ........

இடமுடை ஞாலத் துள்ளார்
    எம்மொழி விழைவ ரேனும்
திடமுடன் முயல்வ ராகின்
    தெள்ளிதின் உணர லாகும்

....... ....... .......

எம்மொழி பயின்றா ரேனும்
    இரும்புலம் பெற்றா ரேனும்
தம்மொழி மறந்தா ரல்லர்
    தமிழராய் வாழ்ந்து நின்றார்

வாய்மொழி கல்லா ராகி
வருமொழி மட்டுங் கற்றுத்
தாய்மொழி பழித்து வாழ்ந்து
தமிழரென் றிருப்பா ருள்ளார்;
ஆய்மொழி பயின்றும் மற்றை
அயன்மொழிக் கடிமை யாகும்
நாய்மனங் கொள்வார் தாமும்
நந்தமிழ் நாட்டில் உள்ளார்
...... ...... ......

பெற்றதாய் மொழியிற் பற்றும்
பிறமொழி தனில்ம திப்பும்
உற்றிடல் வேண்டு ம் ........
...... ...... ......

*** *** *** ***

தமக்காகத் தமிழ்வளர்ப்பார் சிலருண்டு
தமிழ்காக்கத் தமைவளர்ப்பார் சிலரும் உண்டு
நமக்கோஇவ் வுண்மைநிலை தெரியாது
நாவலிமை கொண்டவர்தாம் மயக்கி நிற்பர்;
........ ........ .......

*** *** *** ***

‘கலையறி வார்ந்த நெஞ்சிற்
கருவுறும் கவிதை எண்ணம்,
புலமையிற் செறிந்த பாடல்
புதல்வனாய் வந்து தோன்றும்,
கலையது கருக்கொள் ளாராய்க்
கருவினை உயிர்க்க எண்ணின்
நலமுறும் மகவா தோன்றும்?
நகைப்பன்றோ வந்து தோன்றும்!’

‘நிறைபுலம் செழிக்கப் பெற்றோர்
நிலையுறும் பாடல் யாக்கும்
முறைகளும் தெரிதல் வேண்டும்
முற்றிய புலமை என்றால்
நெறிபிற ழாத பாடல்
நெய்திடுந் திறமை வேண்டும்,
நெறிபெறுந் தமிழ்த் தொண்டாக
நினைத்திதைச் செய்க’ ........

பிழைபடப் பாடல் யாத்தல்
பீடுயர் தமிழ்மொ ழிக்கே
அழிவிலாப் பழியை ஆக்கும்
....... ...... .......

*** *** *** ***

இயலுண்டாம் இசையுண்டாம் கூத்தும் உண்டாம்
இனியதமிழ் மொழியிடத்தே என்பர் மேலோர்
மயலுண்ட அறிவுடையார் கூடி யிங்கு
மறுப்புரைத்தார் இசையில்லை தமிழில் என்றே;
அயல்மொழிக்கே உரியவராய் அம்மொ ழிக்கே
அடிமைகளாய் இருப்பவர்தம் கூற்றே யாகும்;
செயல்மறந்து தமிழ்மாந்தர் உறங்கும் போது
திருடவரும் கயவருக்கு வேட்டை தானே.

தோற்கருவி துளைக்கருவி நரம்பு கட்டித்
தொடுகருவி வெண்கலத்துக் கருவி என்று
நாற்கருவி கண்டவர்நாம்; பாடு தற்கு
நன்மிடறும் ஒருகருவி யாகும் என்றோம்;
ஏற்கமதி யிலராகி வஞ்ச நெஞ்சர்
இசையிலையே தமிழ்மொழியில் என்று சொன்னார்;
வேற்கருவி எடுத்தெம்மைச் சாய்ப்ப தற்கு
விலாவிடையே பாய்ச்சுதல்போற் கேட்ட தம்மா.

இறைவாழுங் கோவிலுக்குள் உரிமை யில்லை

இசையரங்கில் திருமணத்தில் உரிமை யில்லை
துறைதோறும் தமிழ்மொழியின் உரிமை வேண்டித்
தொடருங்கால் மொழிவெறுப்பு, பகமை என்று
பறைசாற்றும் புல்லுருவிக் கூட்ட மொன்று;
பழமரத்தில் அதுவளர விட்டு விட்டோம்;
நறைவாழும் மலரிருக்கக் கள்ளிப் பூவை
நாடியதால் நாம்பெற்ற பலனைப் பாரும்.

தமிழ்மொழியில் வெறுப்புடையோர் அதனி டத்துத்
தணியாத பகையுடையோர் எவ்வி டத்தும்
அமுதனைய மொழிவளர மனமே யில்லோர்
அயன்மொழியில் வெறுப்பென்றும் பகைமை என்றும்
நமையெதிர்த்துப் பழியுரைத்துத் திரிய லுற்றார்
நன்றறிய மாட்டாரும் நம்பு கின்றார்
நமதன்னை நாட்டுக்கு வாழ்வு வேண்டின்
நண்ணுபிற நாட்டின்மேல் வெறுப்பா என்ன?

என்சமயம் வாழ்கவென ஒருவன் சொன்னால்
இருந்துவரும் பிறசமய வெறுப்பா என்ன?
என்மொழியிற் பாட்டிசைக்க வேண்டு மென்றால்
எதனிடத்தும் வெறுப்பில்லை; வேண்டு மென்றே
புன்மொழிகள் உரைக்கின்றார் தமிழை மீண்டும்
பூக்கவிடா தொழிப்பதுதான் அவர்தம் நோக்கம்;
வன்முறையில் வாதிடுவோர் எந்த நாட்டில்
வாழ்கின்றார்? தீமைசெய ஏன்நி னைத்தார்?

பாட்டரங்கம் தமிழ்நாட்டில்; அரங்க மேறிப்
பாடுபவன் தமிழன்தான்; அந்தப் பாட்டைக்
கேட்டிருக்கும் அவையினரும் தமிழ மாந்தர்;
கீர்த்தனையாம் கிருதிகளாம் இவையே கேட்கும்
நாட்டமொடு வந்தவர்க்கோ விளங்க வில்லை
நாமினியும் பொறுத்திருந்தாற் பயனே யில்லை
வேட்டெழுந்து தமிழ்வேண்டும் என்று சொன்னோம்
விளங்குகிற மொழிப்பாடல் வேண்டும் என்றோம்.

இசைக்கிளியை மொழிக்கூண்டில் அடைக்க வேண்டி
எழுகின்றார் என்றுநமைப் [1]பழித்துச் சொன்னார்
இசைக்குயிலைத் தமிழ்வானில் பறக்கா வண்ணம்
இறகொடித்துப் பிறமொழிக்குள் அடைத்து விட்ட
வசைக்குரியார் யாவரெனத் தெரியா வண்ணம்
வழிமாற்றித் திசைதிருப்பிக் காட்டி விட்டுத்
தசைப்பிண்டத் தலையாட்டிப் பொம்மை முன்னர்த்
தமிழ்விடுத்துப் பிறமொழியே பாடி வந்தார்.

கொடுமையிது கொடுமையெனக் கொதித்தெ ழுந்து
கொடையண்ணா மலையரசர் ‘பத்துப் பாட்டில்
விடுகஇனித் தமிழ்ப்பாட்டிற் காறி டங்கள்
வேற்றுமொழிப் பாட்டுக்கு நான்கி டங்கள்
தடைஎனவோ இதற்கு’மெனத் தமிழர் சார்பில்
தமிழ்நாட்டில் தமிழரசர் பிச்சை கேட்டார்
கெடுமதிய ரதன்பின்னு மிரங்க வில்லை
கிளர்ச்சிசெய முனைந்தபினும் திருந்த வில்லை.

நம்முன்னோர் தேடிவைத்துத் தொன்று தொட்டு
நமக்குரிமை யாகிவரும் வீட்டில் வாழ
வம்பென்ன? வழக்கென்ன? அந்த வீட்டில்
வாடகைக்கோ ரிடங்கேட்டோம் எவனி டத்தோ!
அம்மொழியார் விரும்பவில்லை தடைக்கல் லானார்
அடஇனியும் பொறுப்பதுவோ? உரிமை காக்க
இம்மண்ணிற் சிறுபுழுவும் முயலு மன்றோ
இனிநமக்குத் தமிழரெனும் பெயர்தா னேனோ.

........ ...... .......

‘‘பாடுவது தமிழானால் என்ன தீமை

படர்ந்துவிடும்? ஏனச்சம்? யாருக் கென்ன
பாடுவரும்? தமிழாலே தமிழர் நாட்டில்
பாடுவது தவறென்றால் என்ன நீதி?"

"பண்ணமைத்த தேவாரப் பாடல் கேட்டால்
பரமனுக்கும் நெஞ்சுருகும்; செவிம டுத்தோர்
எண்ணத்தை நெக்குருக்கும்; இராம லிங்கர்
இயற்றியநல் லருட்பாடல் தேனும் கைக்கும்
வண்ணத்தை உருவாக்கும்; அயன்ம தத்தில்
வருவேத நாயகனார் வழங்கும் பாடல்
கண்ணொத்த சமரசத்தைப் படைத்துக் காட்டும்;
கனியிருக்கக் காய்கவர்தல் மடமை யன்றோ?"

"தாண்டவனார்[2] பதமிருக்கப் பிறபாட் டுக்குத்
தாளங்கள் இடல்முறையா? கையில் பையில்
வேண்டுபொருள் நிறைந்திருக்கக் கடனுக் காக
வேற்றவர்பின் தொழுதுசெலல் சரியா? பத்தி
வேண்டுமெனில் விளங்குமொழிப் பாடல் வேண்டும்;
விளங்காத மொழிகேட்டால் உணர்வா தோன்றும்?
நீண்டபுகழ் பாரதிகள் [3]குஞ்ச ரங்கள்,
நிலைதமிழில் வீணுக்கா பாடிச் சென்றார்?"

இசைசுவைத்து மகிழ்வதற்கு மொழிவேண் டாவென்
றியம்புகின்றீர்; அறிவுடைய வாதம் அன்று;
வசைமிகுந்த பிடிவாதம்; நீவிர் பாடும்
வடமொழியும் தெலுங்கிசையும் மொழிகள் என்ற
இசைவுமக்கு வரவிலையோ? ஏனோ இந்த
இழிசெயலை மேற்கொண்டீர்? தமிழில் மட்டும்
நசைவிடுத்த காரணமென்? உங்கள் வாழ்வின்
நலிவுக்குத் தமிழ்செய்த தீமை என்ன?

"மொழிவேண்டா என்றுரைத்தீர்; வாதத் துக்கு
மொழிந்ததைநான் ஏற்கின்றேன்; இசைஎ ழுப்பக்
குழலிருக்க யாழிருக்க அவைவி டுத்துக்
குரலெழுப்பிப் பாடுவதேன்? பாடி வாழுந்
தொழிலுடைய பாகவதர் கூட்டந் தான்ஏன்?
தொண்டைகிழித் தலறுவதேன்? அலறும் ஓசை
மொழியன்றோ? இசைக்கருவி யிருக்கும் போது
மொழிஎதற்கோ? அதுமட்டும் வேண்டும் போலும்".

*** *** *** ***

'தமிழ்நாடு தமிழ்மகனே உன்னை யீன்ற
தாய்நாடு; குருதியுடன் கலந்து நிற்கும்
தமிழ்நாடு[4], பிறமொழிக்குத் தொழும்ப னாகித்
தலைகுனிய நாடாதே' ..... .....
....... ...... .......

'அயன்மொழிப் பயிற்சி அன்னை
மொழியிடம் அன்பைக் கூட்டப்
பயன்படும் எனினும் இந்தி
பயின்றிட வற்பு றுத்தின்
இயல்பினிற் றமிழ்வ ளர்ச்சி
தடைப்படும் ஏற்றங் குன்றும்
மயலுளார் திணிப்ப ராயின்
வருபயன் இல்லை' .......

'உரியதன் மொழியில் ஆக்கம்
உயர்ந்திட ஓம்பிக் காத்துத்
தெரிதருஞ் சுவையை மாந்தத்
தெரிகிலா நாடு தானும்
பெரியதே எனினும் யாவும்
பின்னடைந் தழியும்; உள்ள
பெருமையுந் தேயும்' ..........

‘தாய்மொழி என்று சொல்லும்
    தனிமொழி எதுவோ அந்தத்
தூய்மொழி வாயி லாகத்
    தொடங்கிடும் கல்வி தன்னைச்
சேய்களும் முதற்கண் கற்றுத்
    தெளிந்திடல் வேண்டும் இன்றேல்
தேய்வுறும் அறிவு’ ........

‘பிறந்ததன் னாட்டிற் பேசும்
    மொழியினைப் புறக்க ணித்து
மறந்தயல் மொழிக்காட் பட்டு
    மனத்துறக் கற்றா ரேனும்
சிறந்தநன் மொழியாற் கொள்ளும்
    சீர்மையில் முற்றுப் பெற்ற
திறந்தனைக் கொண்டா ரென்று
    செப்பிடல் அரிதே’ .........

‘வருவன எவையும் சொல்லும்
    வல்லமை வாய்ந்த வேர்ச்சொல்
பெருகிய தமிழ்மொ ழிக்கட்
    பிறமொழிச் சொற்க லந்து
சிறுமைகள் செய்து வாழ்தல்
    செந்தமிழ்த் தாய்க்குச் செய்யும்
ஒருபெருந் தீங்கே யாகும்
    ஒதுக்குக’ ...... ......

‘வையகம் ஈன்ற மக்கள்
    முதன்முதல் வாய்தி றந்து
பையவே நாவ சைத்த
    பைந்தமிழ் மொழியை யிங்குப்
பொய்யினால் வடமொ ழிக்கட்
    பிறந்ததாப் புகல்வ ராயின்
மெய்யறி வில்லார் கூறும்
    வெற்றுரை யதுவாம்’ ......

‘பிறமொழிச் சொற்க லந்து
    பீடுறும் இலக்க ணத்தின்
வரன்முறை யழித்து விட்டு
    வழுவுடன் எழுதி யிங்குத்
தருநடை எளிய தென்று
    தமிழனே சொல்வ னாயின்
அறிவது தெளியும் நாளை
    அவன்பெறல் வேண்டு ம்’...

*** *** *** ***

---

**அருஞ்சொற் பொருள்:–**

1. பழித்துச் சொன்னார்–இசைக்கிளியை மொழிக்கூண்டில் அடைப்பது போலப் படம் போட்டு தமிழ் வார இதழொன்று விகடம் செய்தது. 2.தாண்டவனார்–முத்துத்தாண்டவர். 3.பாரதிகள் குஞ்சரங்கள்–சி.சுப்பிரமணிய பாரதியார், கவிகுஞ்சர பாரதியார் போன்றோர். 4.தமிழ்நாடு–தமிழை விரும்பு.

## 118.‘இளம்பெருவழுதி’ நாடகக் காப்பியத்திலிருந்து...:–

**(பழங்கோட்டையுள் ஓரிளைஞனை அழைத்துச் சென்ற முதியவர் ஒருவர், ஆங்குள்ள ஓவியம், சிற்பம் முதலியவற்றைப் பற்றி விளக்கங்களை அளிக்கும் காட்சி–1 இலிருந்து சில அடிகள்)**

முதியவர் : ......... ........ ......... .........
    ஈங்கொரு சிலைகாண் எடுப்பும் மிடுக்கும்
    வீங்கிய தோளும் விளங்குமோர் வீரன்!

இளைஞன் : மன்னனோ? . . . . . . . . .

முதியவர் : . . .    ஆமாம் மணிமுடி யரசன்
மனையா என்றி மற்றவள் தோளிற்
குழையா தாகும் கொற்றவன் தாரே;

இளைஞன் : தயரதன் மைந்தனோ? . . .    . . .

முதியவர் : . . .    . . . தடுமா றுளத்தினை:
அயலவர் தம்மை அறிந்தாங் குன்னினம்
பெருமை தெரிந்து பேணுதல் விடுத்தனை!
நெறிபிறழ் வுற்றது நின்பிழை யன்று;
தென்னவர் திறமெலாம் தெரிவுறா வண்ணம்
ஒன்னலர் மறைத்தனர்; உறங்கினர் தமிழர்.
மூவருள் ஒருவன்நின் முன்னோன் இவன்றான்
காவிரி நாட்டுக் கோநலங் கிள்ளி;

இளைஞன் : புனையா ஓவியப் பொற்புடைச் செல்வி
அனையாள் யாவள்? அரசி போல்வாள்
துறவி போலத் தோற்றமேன் கொண்டனள்?

முதியவர் : பெறலருஞ் செல்வப் பேற்றினள்; இவள்தான்
குறைவறு கற்பின் கோமகள்; தமிழ்மகள்
அறநெறி பிறழா நிறைமனச் செல்வி!

இளைஞன் : பாண்டவர் ஐவர்தம் பத்தினி யோஇவள்?
(முதியவர் தம்முள் நகைக்க)
ஈண்டென் வினாவிற் கேன்நகை செய்தீர்?

முதியவர் : நன்கு வினவினை; நகையெழா தென்செயும்?
தென்புலக் கற்பின் திறமொருங் குணர்த்த
வடபுலப் பெண்ணோ வாய்த்தனள்? எனநின்
மடமையை யெண்ணி மனத்துள் நகைத்தேன்;
கோதறி யாமகள் மாதவி இவள்பேர்!

இளைஞன் : மாதவி யாவிலை மகளிவ ளன்றோ?

முதியவர் : கலைமகள் பிறப்பால் விலைமகள் எனினும்
விலையிலாக் கற்பின் குலமகள்; கொழுநன்
கோவலன் இறந்ததால் கோதை யவளோ
யாவுந் துறந்தனள்; அரும்பெறல் மகட்குந்
துறவு தந்துபார் தொழும்நிலை தந்தனள்;
அறநெறி வழுவா அன்னை யிவளும்
ஐவர் இருந்தும் ஆறாம் ஒருவனை
விழைந்த அவளும் வேறுவே றியல்பினர்;
.......... ........ ......... .........

இளைஞன் : செருக்களஞ் செல்லும் உருக்கொளும் இவர்யார்?
அருச்சுனன் மைந்தன் அபிமன் இவரோ?

முதியவர் : இல்லை அபிமன் இலனவன்; இளையோய்
நல்லைநீ; நினது நாட்டிற் குரியவர்
அறிகிலை நின்னின் அயலவர் தம்மைத்
தெரிந்துளை நன்குன் திருநா டிதனுள்
அவன்சிலை காணல் அறியாப் பேதைமை;

இளைஞன் : எவரெவர் சிலையோ ஈங்குள அவைதாம்
பேதைமைச் செயலோ? . . .    . . .

முதியவர் : . . .    . . .  பேதைமை யொன்றோ?
தீதும் நன்றுந் தெரியா தொழுகும்
அடிமை என்பதன் அறிகுறி யாகும்;
அடிபட அடிபட அரத்தம் சிந்திக்
கொடிவிடா துயிர்விடுங் கொள்கை மறவர்,
அடிமையும் மிடிமையும் அயலவர் ஆட்சியும்

பொடிபட உரிமை பூண்கலஞ் செலுத்திச்
செக்குடன் உழன்று சிறையுள் வாழ்ந்தோர்
இத்தகு செயலோர் எத்தனை மாந்தர்;
அனைத்தும் மறந்தோம் அயலோர்த் தொழுதோம்;

இளைஞன் : நன்றி பெரியீர் நாட்டுணர் வூட்டி
இன்று தமிழனென் றென்னை யுணர்த்தினீர்
......... ........ ......... .........

***** ***** *****

**பாண்டிய அவைக்களப் புலவர் வெண்டலை நாகனாருடன் பாண்டிய இளவரசன் வழுதியும் படைத்தலைவனின் தங்கை குழலியும் உரையாடும் காட்சி–2 இலிருந்து சில அடிகள்:–**

........... ........ ......... .........

குழலி : எளிதின் வாரா இலக்கணப் பயிற்சி
எளியம் எமக்கேன்**?** **. . .** **. . .**

நாகனார் : **. . .** **. . .** என்மொழி புகன்றனை**?**
பொருள்கள் காணக் கருவிழி சாலும்
இருபால் இமைகள் இருப்ப தெதற்கு**?**
பெருகிய வையைக் கிருபால் மேவும்
கரைகள் எதற்கு**?** காத்தற் கன்றோ**?**
வழுவொரீஇ, மொழியை வழாநிலை யாக்கி
எழிலுறக் காப்ப திலக்கண மாகும்;
முயலா திருப்பின் எளிதின் வருமோ**?**
முயலின் வாரா உறுதிகள் உளவோ**?**
அதுதான்
அரிதென் றசைஇ யிருப்பார்க் காணின்
மொழியெனும் நல்லாள் மூடரை நகுவள்;

வழுதி : தக்காங் குரைத்தீர் தாய்மொழி காக்கத்
தக்க நெறியுந் தந்தருள் புரிக;

நாகனார் : புகுவ தடுத்தல் புதுவ படைத்தல்
தகுமிரு வகைத்தே தாய்மொழி காத்தல்;

குழலி : புகுவ தடுத்தலென் றொன்று புகன்றீர்
அஃதும் தெள்ளிதின் அறிய அவாவினம்;

நாகனார் : அயன்மொழிக் காட்பட் டம்மொழிச் சொற்கள்
நயந்து கலந்து நடையிற் புகவிடல்,
பிறமொழி விழைந்து பெறுமொழி மறந்து
வருமொழிக் காளுமை தருதல் எனுமிவை
புகாஅது காத்தல் புகுவ தடுத்தலாம்;

குழலி : தகாஅ அடிமைத் தனத்தர் செயலைச்
செகாஅது விடேஎம் செந்தமிழ் காப்போம்;

நாகனார் : தாய்க்குலம் விழித்தெழின் தாயகஞ் செழிக்கும் தாய்மொழி ஆல்போல் தழைக்கும் கொழிக்கும்
உயர்மொழி தனிமொழி செம்மொழி நம்மொழி
அம்மொழி வளர்க்க அரிவையர் முந்துறின்
எம்மிற் சிறந்தோர் எவருளர் அம்ம;

குழலி : வருமொழிக் காளுமை தருதல் தகாதென்
றொருமொழி புகன்றீர் திருமகன் வழுதி
புகூஉம் யவனர் தரூஉம் இசையில்
மிகூஉம் ஆர்வம் மீதூர்ந் துளரால்;

வழுதி : பிறர்குறை தூற்றும் பெற்றியர் பெண்டிர்,
குறையெனைக் கூறுங் குறியினள் இவளே;

குழலி : புகல்வாய் மொழிதான் புனைவுரை யாமெனிற்
புகல்வாய் ஆணை புலவர் திருமுன்;

நாகனார் : (வழுதியை நோக்கி நகைத்து)
அரவம் உறைகால் அரவே அறியும்
கரவு தவிர்த்துக் கழறுதி வாய்மை;

வழுதி : எளிய மெல்லொலி இன்னிசை நயந்தே
அளிய என்னுளம் அவாவிற் றைய;

நாகனார் : இனிய போலவும் எளிய போலவும்
அணுகு பவைதாம் அடிமை கொள்ளும்
நண்ணுவ எவையும் நமதாக் கோடல்
உள்ளவை மறத்தற் கொருவழி போலும்;

குழலி : வந்து புகூஉம் வம்பலர் இசையில்
உந்தவாக் கோடல் ஒருகுறை கொல்லோ?

நாகனார் : வேற்றவர் இசையை விழைவது தவறிலை
ஊற்றமும் ஏற்றமும் உவந்ததற் கீந்து
மனத்தை யிழந்து மயக்குறிற் பெரும்பிழை;
இனத்தை மொழியை எளிதின் மறந்து
வருவிருந் தோம்பும் வாழ்வினர் தமிழர்;
பின்னை வருவன பேணுங் காலைத்
தன்னை யிழவாத் தகைமை வேண்டும்;
புகூஉம் ஒன்றனுள் இரண்டறக் கலத்தல்
நகூஉம் நிலையொடு நலிவும் நல்கும்;

வழுதி : (வாடிய முகத்துடன்)
உரிய மறத்தல் வருவ புரத்தல்
இரிய மனத்துள் உறுதி கொள்ளுவென்;

நாகனார் : நன்று நன்று; நாளை ஆள்பவர்
நன்றுந் தீதும் நவையறத் தெளிதல்
உரிமை காத்தற் குறுதுணை யன்றோ?
எப்பொருள் கேட்பினும் எவர்வாய்க் கேட்பினும்
அப்பொருட் டன்மை எத்தக வாயினும்
எண்ணித் துணிக இளையோய்; அஃதே
பண்ணத் தகுநற் பகுத்தறி வென்ப;
(வழுதி தலையசைத்து ஓம்புதல் காட்ட)

குழலி : மொழிநலங் காக்கும் முந்தையர் இலக்கண
எழிலும் இயல்பும் இயம்புதிர் இனிதே;

நாகனார் : ஏதம் படாஅ தியங்கும் வாழ்வைக்
காதல், மறமெனக் கண்டிரு பாலா
ஓதி யவற்றின் ஒண்பொரு ளிலக்கணம்
அகமெனப் புறமென ஆன்றோர் வகுத்தனர்;
அணுகி வாழ்க்கை அமைப்பின் கூறு
நுணுகி ஆய்ந்து நுவன்றனர் மேலோர்;
நிலத்திய லுணர்ந்த புலத்துறை யாளர்
இலக்கண நெறியான் உணர்த்தினர் நமக்கு;

வழுதி : நிலத்திய லனைத்தும் இலக்கண நெறியாற்
சொலப்படும் முறைகள் விளக்குக பெரும;

நாகனார் : மலைபடர் குறிஞ்சி, மலர்தரு முல்லை,
கலைவளர் மருதம், கடலின் நெய்தல்
எனநால் வகையா இயம்பி நானிலம்
எனஇவ் வுலகிற் கிட்டனர் பெயரும்;
முல்லை குறிஞ்சி முறைமையிற் றிருந்து
நல்லியல் பழிந்த புல்லிய பாலையும்
இணைத்தந் நிலத்தை ஐவகை யாக்கித்
திணையும் ஐந்தெனத் தெளிவுறக் காட்டினர்;

குழலி : பிரிவுரை பாலை பருவரல் நெய்தல்
மருவும் அகத்திணை வகையென வகுத்தோர்

உடனுயிர் துறக்கும் உயர்மூ தானந்தம்
படரெரிப் பாயும் பாலை நிலையிவை
முற்றிய அன்பின் முதிர்ச்சியே எனினும்
மற்றவை அகத்திணை வகையெனச் சொலாது
புறத்திணைப் படுத்துப் புகன்ற தென்னை?

நாகனார் : இன்ப நுகர்ச்சி அன்பின் வளர்ச்சி
தன்பாற் கொண்டது நன்பால் அகத்திணை;
மூதா னந்தம் முதலா வருபவை
நிலையாத் தன்மை நிகழ்த்துவ ஆகலின்
புறத்திணைப் படுத்துப் புகன்றனர் மேலோர்;

வழுதி : ஒருமை ஒற்றுமை ஆயிரு சொல்லின்
பொருண்மை யொன்றோ . . . . . .

நாகனார் : . . . . . . புகலும் கேண்மின்
ஒன்றுடன் மற்றொன் றிணைவ தொற்றுமை;
ஒன்றினுள் ஒன்று பொன்றுவ தொருமை;
இணைந்தும் தனித்தும் இயங்குவ தொற்றுமை;
அணைந்தபின் ஒன்றா யமைவ தொருமை;
அடுக்குத் தொடர்போல் அமைவ தொற்றுமை;
இரட்டைக் கிளவியென் றிருத்தல் ஒருமை;

வழுதி : இரண்டும் ஒன்றென் றிருந்தோம் தெளிவுறத்
திருத்தும் பொருண்மை தேர்ந்தெமக் களித்தீர்;

நாகனார் : விந்தை மீதூர் வியன்பெறு செல்வம்
முந்தையர் நமக்குத் தந்தவை பலப்பல;
கூம்பாச் செல்வம் ஓம்பா நிலையிற்
சோம்பித் திரியிற் றொகுத்தவை பாழாம்;
போதும் அவையெனப் [1]பொந்திகை பெறுதல்
தீதாம்; ஆதலின் தெள்ளிய புலத்திற்
கூரறி வுக்கலங் கொண்டுழு வோர்தாம்
ஊரினர் உணக்கரு வூலம் நிரப்பிப்
புரத்தல் வேண்டும் புதுவன விளைத்து;

குழலி : முந்தையர் முனைந்து தந்தவை யனைத்தும்
உந்தும் உணர்வின் ஓம்புதும் ஓம்புதும்;

வழுதி : ஈட்டுதுஞ் செல்வம் கூட்டுதும் மிகவே
நாட்டிற் பெரும்புகழ் நாட்டுதும் யாமே
.......... ........ ......... .........
***** ***** *****

**பாண்டியன் தன் அவைக்களத்தில், புலவர் நாகனாருடனும் வேதியன் கணியனுடனும் உரையாடும் காட்சி–4 இலிருந்து சில அடிகள்:–**

......... ........ ......... .........
பாண்டியன் : ஓதுமின் ஓதுமின் வேதியர் பெரும
யாதுநும் முளமென அறியும் விழைவினம்;

கணியன் : முக்கட் செல்வன் முதுபெருங் கோவிலும்
தெற்கின் மேய செவ்வேள் குன்றும்
வடபால் மேய மாலிருஞ் சோலையும்
வடமொழி யோதி வழிபடின் நன்றாம்
இடமகல் நம்நா டேற்றமும் எய்துமால்;

நாகனார் : தென்மொழி யிசைப்பின் தீங்கு வருங்கொல்?

கணியன் : நன்மொழி புகன்றீர்; நானது கருதேன்
தேவ மொழியெனச் செப்பும் இதனைத்
தேவர் உவப்பர் . . . . . .

நாகனார் : . . . . . . திருமறை வல்லீர்
ஒருமொழி தேவன் உவப்ப னாமெனில்

அறிவிற் சிறந்தோர் அச்சொல் ஏலார்;
பிறமொழி வெறுப்பன் இறைவன் என்ப
தறமும் அன்றே; அறிவும் அன்றே
சீனர் யவனர் சிங்களர் சாவகர்
சோனகர் முதலோர் கோநகர் ஈண்டு
வாணிகப் பொருட்டா வைகினர் ஈண்டி;
பேணி அவர்தொழூஉம் பெரும்பெயர்க் கடவுளர்
திருச்செவி மாந்தித் திளைப்ப தெம்மொழி? திருத்தகும் அம்மொழி தேவ
மொழியோ?
எந்நாட் டுறையும் இறைவர் அவரவர்
அந்நாட் டம்மொழி அகமுற உவப்பர்
தென்னா டுடையன் தென்மொழி வெறுப்பனோ?

கணியன் : மன்னன் வாழ்வில் மறுமைப் பயனும்
மன்னுதல் வேண்டி வடமொழி யதனை
ஓதுக என்றனென் உறுபிழை யுளதோ?
நோதகு மொழிகள் நுவலேல் புலவ;

நாகனார் : மறைபுகழ் மொழிகள் மறுவற வுணர்ந்த
நிறைமதி யுடையீர் நெடுமொழி கருதிலேன்;
செந்தமிழ் வளர்க்கும் சீர்சால் வேந்தன்
முந்தையர் சங்கம் மொய்ம்புறக் கண்டு
தாய்மொழி ஆய்ந்தனர் தமிழ்மொழி ஓதினர்
தீய நிரையத்துச் சென்றோ வீழ்ந்தனர்?
இம்மைச் செய்தன மறுமைக் காமென இம்மைக் குரியன
இழப்பது நன்றோ?
இருப்பது மறுத்தலும் வருவது புகுத்தலும்
வெறுப்புறு செயலாம்; விழைவதும் நன்றோ?

கணியன் : மடமைகள் அகற்றும் மாபெரும் புலவீர்
கடவுள் மறுப்பினை யாங்ஙனம் கற்றீர்?

நாகனார் : (நகைத்துக் கொண்டே)
நேர்மை, வாய்மை, நிறைகோ லன்ன
சீர்மை, உரிமை, செந்தமிழ்த் தூய்மை
இவ்வெலாம் கடவுள் மறுப்பென நுங்கள்
செவ்விய மறைகள் செப்பின கொல்லோ?
தகாப்பழி கூறித் தாய்மொழிப் பற்றை
நகாஅ தொழிமின் நான்மறைப் பெரியீர்!
இடுதே ளிட்டென எம்மேற் பழியிடல்
வடுவாம் நுமக்கு; வாய்மை மொழிமின்;

பாண்டியன் : அமைமின் அமைமின் ஆன்றோர் தம்முள்
உமிநுனி யேனும் உறுபகை வேண்டா

நாகனார் : பகையிலை வேந்தே பைந்தமிழ்க் கீங்கோர்
இகல்வரு மாகில் எம்முளஞ் சிவக்கும்;

கணியன் : எமக்குந் தமிழ்க்கும் இடைவெளி காட்டேல்
நுமக்குள கடமை எமக்கும் உளவாம்;

நாகனார் : நன்று மறைவலீர் நயத்தகு கடமை
நின்று நிலவுக நெடிதே வளர்க
கடமை யுணர்வொடு காக்க தமிழைக்
கடவுட் பெயர்சொலிக் கடியேல் அதனை;

பாண்டியன் : அமைதி நிலவுக ஆன்றீர் அனைவரும்
இமையெனத் தமிழ்மொழி ஏத்திக் காக்குவம்;
கலைமலி தமிழைக் காக்குவம் இனிதே
......... ........ ......... .........

***** ***** ******

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. பொந்திகை – திருப்தி.